சுடர்

விஜய 2 மலர்

தில்லித் தமிழ்ச் சங்கம்

Scientific Cultivation to increase the yield of crops requires not only nitrogen but also phosphates. More of phosphatic fertilizers are used the world over in admixture with nitrogenous fertilizers.

We manufacture

SINGLE SUPERPHOSPHATE

containing 16/17% water soluble P_2O_5 according to I. S. I. specification.

For particulars please refer to :—

The Eastern Chemical Co. (India),

Proprietors: J. K. Chemicals Ltd.

BOMBAY 22

(Manufacturers of Acids, Salts, Superphosphate, Disinfectants, Textile Auxiliaries, etc.)

★★★

பயிர்களின் மகசூலை விஞ்ஞான முறையில் பெருக்குவதற்கு நைட்ரஜன் மாத்திரமின்றி, பாஸ்பேட்டுகளும் வேண்டும். உலகம் முழுவதிலும், நைட்ரஜன் உரங்களுடன் பாஸ்பேட் உரங்களும் உபயோகிக்கப்படுகின்றன.

நாங்கள் இந்தியன் ஸ்டாண்டர்ட் இன்ஸ்டிட்யூஷன் ஸ்பெஸிபிகேஷனுக்குச் சரியான 16-17 சதவிகிதம் நீரில் கரையும் **ஸிங்கிள் பாஸ்பேட்** உற்பத்தி செய்கிறோம்.

விவரங்களுக்கு,

The Eastern Chemical Co. (India)

Proprietors: J. K. Chemicals Ltd., BOMBAY 22

என்ற விலாஸத்துக்கு எழுதுங்கள்.

அமிலங்கள், உப்புகள், ஸூப்பர்பாஸ்பேட், துணித் தொழிலுக்கு வேண்டிய பொருள்கள் முதலியவற்றையும் நாங்கள் உற்பத்தி செய்கிறோம்.

GOLD ORNAMENTS
Manufactured by
GIRDHARI LAL BROS.
are made of Genuine 22 ct.
SOVEREIGN GOLD
Countless Satisfied Families Regularly Patronise
GIRDHARI LAL'S
DIAMOND MERCHANTS
Opp. Scindia House — NEW DELHI
1st Quality Diamonds Available

USE P & B WOOLS
TO BE SURE
★
GREENWAYS
India's Leading Wool Specialists
CONNAUGHT PLACE, NEW DELHI
(You can order by post)

Telegram: Megohm
Works: Shamnagar, E. Rly.

Telephone: City 5102
(5 Lines)

THE NATIONAL INSULATED CABLE CO. OF INDIA LTD.

STEPHEN HOUSE,

4, DALHOUSIE SQUARE EAST,

CALCUTTA-I.

★

Manufacturers of :

Bare Copper Conductors, Solid & Stranded

A. C. S. R. & All Aluminium Conductors

Rubber Insulated Cables

Cotton Covered & Enamelled Wires

All for Electrical Purposes conforming to appropriate B.S. and I.S. Specification

Managing Agents :

THE

ASSOCIATED INDUSTRIAL DEVELOPMENT CO., LTD.

UNION DAIRY FARM (Regd.)

PRODUCERS OF HIGH QUALITY DAIRY PRODUCTS

CERTIFIED BY

THE HON'BLE MINISTER OF FOOD & AGRICULTURE, GOVERNMENT OF INDIA (1952).
COMMANDERS-IN-CHIEF OF INDIAN ARMY & THE NAVY, ROYAL HOUSES,
HIGH GOVERNMENT OFFICIALS, EMBASSIES, CLUBS, HOTELS & SCHOOLS

97, BAIRD ROAD, NEW DELHI

TELEGRAPHIC ADDRESS:
"UNION DAIRY"

TELEPHONE NO.
45263

Dear Customer,

According to an international authority, if the advertisements carrying price appeals were laid end to end, they would touch the moon. It is all very well to say that, but the question of quality yet remains to be answered. The people anxiously ask whether purity and discrimination have really disappeared. In a better position as we are to judge them, we can emphatically say, NO.

With pride we reiterate our assurance to our customers that the high standard of quality of our products will be maintained as ever, as also the price level which has always been reasonably lower than the products of similar quality obtained elsewhere in the market. But bear this in mind, that this means sacrifice to ensure the goodwill of our patrons.

Ever since its establishment in 1932, our Dairy Farm has earned the reputation, of course not without effort and sacrifice, of supplying to our clientele pure milk, cream, butter, ghee and cheese at competitive rates — ALL QUALITY PRODUCTS. We have special staff to examine, before our products are issued to the public, that they should be pure and fresh so that we may contribute our mite to the HEALTH and HAPPINESS of our countrymen.

We assure you that all your orders, however small, will, as always, receive our special care and attention.

Yours faithfully,

For UNION DAIRY (Regd.)

Manager.

நியூ ஏஷியாடிக்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

தலைமை ஆபீஸ்: நியூ டெல்லி

சேர்மன்: எல். என். பிர்லா

ஆயுள், நெருப்பு, கப்பல், மோட்டார்,

முதலிய எல்லாவித இன்ஷ்யூரன்ஸ்
திட்டங்களும் உண்டு.

1951ம் வருஷம், டிஸம்பர் 31ம் தேதியோடு முடிவான நான்கு வருஷத்திற்கு,

அஷ்யூரன்ஸ் தொகை ரூ. 1000க்கு,

அளிக்கப்பட்ட

போனஸ்

ஜீவியப் பாலிஸிக்கு — எண்டோமெண்டு பாலிஸிக்கு

ரூ. 9 **ரூ. 7**

தென் டிவிஷன் ஆபீஸ்:

289, லிங்கச் செட்டித் தெரு, மதராஸ்-1.

அ. சுப்பையா,
மானேஜர்.

ஸ்வஸ்திக் வேதாரணியம் புகையிலை சிறந்து விளங்குவதேன் ?

உற்பத்தி ஸ்தலத்திலேயே
உயர்ந்த சரக்குகளால் தயாரிக்கப்படுவதால்.

புகையிலை வாங்கும்போது,

"ஸ்வஸ்திக்" கையே கேளுங்கள்.

குழந்தைகளே வாருங்கள்!

மகிழ்ச்சி ததும்பும் சிறுவர் சிறுமியர் ஐக்யமாகிய
டௌராலா பாலர் சங்கத்தில் சேருங்கள

எழுதவேண்டிய விலாசம்: ஆன்டீ ஸ்வீட்டீ, தபால் பெட்டி நெ. 1039, டில்லி

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானத்தின் வெளியீடுகள்

		ரூ.	அ.
1.	ஸதாசிவேந்த்ர பிரஹ்மம் அருளிய—சிவமானஸிக பூஜா கீர்த்தனங்கள், ஆத்ம வித்யா விலாஸம்: ...	0	15
2.	ஸ்ரீ முகுந்தமாலை—ஸ்ரீ குலசேகரப்பெருமாள் இயற்றியது:	0	6
3.	ஸ்ரீ பஜகோவிந்தம்	0	4
4.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் ...	1	8
5.	ஸ்ரீ சீதலாஷ்டகம்	0	2½
6.	ஸ்ரீ அம்பாஷ்டகம்	0	2½
7.	ஸ்ரீ தேவீஸ்தோத்ர ரத்னாகரம்—தேவநாகரி, க்ரந்த மூலமும், தமிழ் உரையுடனும் கூடியது	0	15
8.	மாத்ருகா புஷ்பமாலா ஸ்துதி	0	15
9.	ஸ்ரீ மூகபஞ்சசதீ—ஸ்ரீமூக கவி காமாக்ஷி தேவியின்மீது இயற்றியது; 500 ச்லோகங்கள் கொண்டது: ...	1	8
10.	கும்பகோணம் அத்வைத ஸபா பொன் விழா மாலை—		
	1. ஸம்ஸ்கிருதம்: 51 கட்டுரைகள் அடங்கியது ...	5	0
	2. தமிழ்: 23 கட்டுரைகள் அடங்கியது ...	3	8
	3. ஆங்கிலம்: 12 கட்டுரைகள் அடங்கியது ...	3	0
11.	ஸ்ரீ தக்ஷிணாமூர்த்யஷ்டகம்—ஸ்ரீ மானஸோல்லாசத்தில் உள்ள கருத்துக்கள் அடங்கிய குறிப்புகளுடன் கூடியது ...	1	12
12.	ஸ்ரீரங்கநாதாஷ்டகம்	0	2
13.	தயாசதகம்—ஸ்ரீதர அய்யாவாள் இயற்றியது ...	0	12
14.	ஸ்ரீ குளிரேசாஷ்டகம்—ஸ்ரீதர அய்யாவாள் அருளியது ...	0	2
15.	ஸ்ரீ ஜம்புநாதாஷ்டகம்—ஸ்ரீதர அய்யாவாள் அருளியது ...	0	2
16.	திருக்குறள்—பொருட்பாலும், காமத்துப்பாலும் ...	5	0
17.	கீதையும் குறளும்	0	3

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான
ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் அவர்கள் அருளிய நன்மொழிகள் :—

18.	நாற்பது ஸம்ஸ்காரங்களும் கர்மானுஷ்டானங்களும் ...	0	10
19.	நமது வேதங்களும் சாஸ்திரங்களும் ...	1	0
20.	நமது ஆலயங்களும் மூர்த்திகளும் ...	0	12
21.	நமது அனுதிமதம் ...	0	6
22.	நமது தர்மம் ...	0	12
23.	ஸ்ரீதர அய்யாவாள் இயற்றிய க்ருஷ்ணத்வாதச மஞ்சரி, ஆர்த்திஹர ஸ்தோத்ரம், தோஷ பரிஹாராஷ்டகம் ...	0	5
24.	ஸ்ரீசங்கர விஜயம்—(19 கலர் படங்களுடன் கூடியது). எளிய நடையில் குழந்தைகளுக்கென்றே எழுதப்பட்டது ...	0	12

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

4, பிரான்ஸிஸ் ஜோஸப்புத் தெரு, சென்னை

பருத்தி நூல்களுக்குப் பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி

லிமிடெட்.

போன் : 250 (4 லைன்) மதுரை   தந்தி : "ஹார்வி"

மதுரை - தூத்துக்குடி - அம்பாசமுத்திரம்

5,00,000
நூற்கும்
கதிர்கள்

நாங்கள்
சப்ளை
செய்வது

நெம்பர்
80 வரை
நூல்கள்

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல்
தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள்,
இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள்,
கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்
கேற்ற மடக்கு இரட்டை நூல்கள் மற்றும்
பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற
மிருதுவான சன்ன நூல்கள்.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

மதுரை.

போன் : 420 (4 லைன்)   தந்தி : "ஹார்வி"

THE UNITED INDIA
LIFE ASSURANCE COMPANY, LTD.

Commend to you

THE LIFE INCOME POLICY

which is tailored to suit your individual needs. Steady & certain monthly income from age 55 And the Sum Assured to heirs on death.

At age 30, a monthly premium of Rs. 42/3, payable till age 55 or earlier death, secures the following benefits.

(a) On death before age 55: Rs. 10,000/- with bonus declared.

(b) On Survival: The bonus declared in cash;

(ii) A monthly pension of Rs. 50/- as long as the Assured is alive and

(iii) Rs. 10,000 to the dependents on the death of the Life Assured.

The monthly pension can also be commuted at ages 55, 60 or 65 for an immediate cash payment of Rs. 6,850/-, Rs. 5,800/- or Rs. 4,860/- respectively.

MINIMUM POLICY Rs. 5,000.

For further particulars, please write to :

THE UNITED INDIA
LIFE ASSURANCE CO., LTD.

Connaught Place, :: Post Box No. 63,

NEW DELHI

புதிய கலைமகள் வெளியீடுகள்

★

நாவல்கள்	ரு.	அ.	பை.
கிரௌஞ்ச வதம் — வி. ஸ. காண்டேகர் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.	5	0	0
இரு மனம் ,, ,,	4	0	0
நிழலும் ஒளியும் — கி. சரஸ்வதி அம்மாள்	4	0	0
பைரவி — சரத்சந்திரர் (இரண்டாம் பதிப்பு)	4	0	0
கருகிய மொட்டு — வி. ஸ. காண்டேகர் (மூன்றும் பதிப்பு)	3	8	0
கன்னிகாதானம் — பி. எம். கண்ணன்	3	8	0
வீடும் வெளியும் — ரவீந்திரர் (இரண்டாம் பதிப்பு)	3	8	0
வெண்முகில் — வி. ஸ. காண்டேகர் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.	3	8	0
கடிவாளம் — கௌரி அம்மாள்	3	0	0
மணல் வீடு — 'அநுத்தமா'	3	0	0
மயூரன் — தி. நா. சுப்பிரமணியன் (சரித்திர நாவல்)	2	0	0
பெண் — அகிலன் (இரண்டாம் பதிப்பு)	1	8	0
நெஞ்சின் அலைகள் — அகிலன்	(அச்சில்)		
லட்சியப் பெண் — சௌரீந்த்ர மோகன் : த. நா. சேனுபதி	,,		
சிறு கதைகள்			
நல்ல பிசாசு — ஆனை. சு. குஞ்சிதபாதம்	2	8	0
கன்னியின் கனவு — க. சந்தானம்	2	4	0
குங்குமச் சிமிழ் — ஆர்வி	2	0	0
மோகினி — ந. பிச்சமூர்த்தி	2	0	0
அரும்பு — வி. ஸ. காண்டேகர் : கா. ஸ்ரீ. ஸ்ரீ.	1	4	0
கூட்டுக்கு வெளியே ,, ,,	1	4	0
விஞ்ஞானம்			
அணுவின் கதை — பெ. நா. அப்புஸ்வாமி & ஜெ. பி. மாணிக்கம்	5	0	0
நாடகம்			
ராஜசுந்தரி — தி. நா. சுப்பிரமணியன்	0	12	0
கட்டுரைகள்			
பொழுது போக்கு — தி. ஜ. ர.	2	8	0
மக்கள் மலர்ச்சி — குமுதினி (இரண்டாம் பதிப்பு)	1	4	0
கலைக் கோவில் — ந. கிருஷ்ணமூர்த்தி (பொது)	1	0	0
குழந்தைகளுக்குரிய வெளியீடுகள்			
கண்ணன் வெளியீடுகள் — (9 புத்தகம் கொண்ட செட்)	2	12	0

* கலைமகள் வெளியீடுகளின் இலக்கிய மதிப்பே தனி *

கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை 4.

RECIPROCATING SHALLOW WELL PUMPS



Motor Powered -
Automatic Control -
Starts at 20 Lbs. and
Stops at 40 Lbs. -
25 ft. Suction-350 G.P.H.

DEMPSTER
U.S.A.

DEEP WELL WATER SYSTEMS



Deep Well Pump I H. P.
Motor Powered—Suction
Lift—325 ft.

Sole Agents:

SOUTH INDIA CORPORATION (MADRAS) LTD.,
P.B.No.113. MADRAS-1.

No. 2, ARMENIAN STREET.

Grams ; "GOODWILL"



Now

Gate Channels

IN PRODUCTION

COLLAPSIBLE GATES FOR—
STRENGTH, SAFETY & ELEGANCE

REMEMBER J. K's GATE CHANNELS
MAKE BETTER GATES

JK

J. K. IRON & STEEL CO. LTD.

KAMLA TOWER, KANPUR

Remember

RANGOON STUDIO

(TALREJA BROS.)

58, QUEENSWAY, NEW DELHI

For

- ★ Photo & Cine Supplies
- ★ 16 mm. Documentaries
- ★ Speed & Quality in Developing, Printing & Enlarging
- ★ Passports, Portraits & Groups

Phone : 7861 **Gram : "PHOTOCINE"**

INDEX TO ADVERTISERS

	PAGE
Arni Silk House	152
Asiatic Government Security Life & Genl. Asnce. Co. Ltd.	154
Atlas Cycle Industries	156
Balbir Bros. Ltd.	106
Bliss & Cotton	141
Brittania Biscuit Co. Ltd.	160
Butterways Dairy	37
Central News Agency	76
Co-operative Photo Service	33
Dass Studio	118
Daurala Sweets (D.C.M.)	5
De Chane, J. & J.	73
Eastern Chemical Co. (India)	*Front Inside Cover*
Girdhari Lal Bros.	1
Greenways	1
Hindustan Breakfast Food Manufacturing Factory	159
Indian Bank Ltd.	106
Jammi Venkataramanayya & Sons	56
J. K. Iron & Steel Co., Ltd.	11
Kalaimagal Kariyalayam	9
Kamakoti Kosasthanam	6
Khanna Stores	114
K. G. K. & Co.	45
Lever Bros. India Ltd.	34
Loyal Textile Mills Ltd.	122
Madras Stores (N. Sundram)	150
Madura Mills Co., Ltd.	7
Mahabeer & Co. Ltd., J.	154
Mahalakshmi Stores	135
Mahatta & Co.	68
Mangharam & Co., J. B.	155
Mani, P. R. B.	118
Mani, S. S.	152
Narayanan, K. (Tailoring House)	135
New Asiatic Insce. Co., Ltd.	4
New Guardian of India Life Insurance Co., Ltd.	157
National Insulated Cable Co. of India Ltd.	2
Nutan Tailors	152
Palai Central Bank Ltd.	72
Pilot Pen Co. (India) Ltd.	*Back Inside Cover*
Prithvi Insurance Co., Ltd.	153
Rangoon Studio	11
Rajee's Agencies	50
Rajkumar, Dr. N.	65
Seshasayee Brothers (Trav.) Ltd.	156
Sivaramakrishnan, V. T.	118
South India Club Co-operative Supply Society Ltd.	76
South India Corporation (Madras) Ltd.	10
South Indian Boarding House	158
Subramaniam, N.	150
Swastik Tobacco Co.	5
Tata Oil Mills Co., Ltd.	46
T. I. Cycles of India Ltd.	68
Union Dairy Farm	3
United India Life Assurance Co., Ltd.	8
United India Provident Assurance Co., Ltd.	151
United Pharmacy	158
West End Rehabilitation Co-operative Stores Ltd.	150

We thank all the above Advertisers for their ready and generous assistance and wish them all success in their undertakings during the 'Vijaya' year.

—*The Editor*, "CHUDAR"

சுடர் விஜய மலர்

பொருளடக்கம்

			பக்கம்
இருளூடு வந்த குரல்	...	பி. ஸ்ரீ.	16
யார் ரிஷி?	...	ஓ. வி. அளகேசன்	21
மாதிருக்கும் பாதியன்	...	தொ. மு. பா. தொண்டைமான்	23
யானைச் சாமியார்	...	"உமாசந்திரன்"	27
கண்ணிலே பெண்	...	"திருக்குறளார்"	35
பஞ்சாமியின் பயணம்	...	பூர்ணம் விச்வநாதன்	38
தேவாரம்—பண் முறை	...	டி. கே. ஜயராம அய்யர்	47
காமவல்லி	...	எஸ். ஸ்ரீநிவாசன்	51
அவள் கொடியவளா	...	"சந்திரிகா"	53
சித்திர பூமி கலிங்கம்	...	மதுரம் பூதலிங்கம்	57
செந்தமிழ் நாடெனும் போதினிலே	...	வர்ணப்படம்—"சந்திரா"	61
பிரயாணம்	...	"ஆனந்தன்"	63
பாசாங்கு பலிக்கவில்லை	...	லக்ஷ்மி ராஜேந்திர சங்கர்	67
வெளியிலே மறைந்துளோன்	...	க. சி. கமலையா	69
பிழை	...	"பாரதீபன்"	71
சயன தத்துவம்	...	"சுகி"	74
கவிக்கோவை	...	16 கவிகள்	77
கி. மு. வா? கி. பி. யா?	...	"கிட்டு"	103
பழியும் பாவமும்	...	ச. மகாதேவன்	107
நீல நதி	...	அ. வே. கிருஷ்ணமூர்த்தி	110
மடல்	...	ரா. அரங்கராஜன்	115
அறியாமையால் வந்த ஆபத்து	...	ஜி. எச். ஜி. ராமன்	119
நூல் சரடு	...	"ராஜு"	123
மனம்போல	...	ஜயலக்ஷ்மி	125
உண்மைக் கதை!	...	கே. எஸ். எஸ். ராகவன்	129
பம்பாயில் தமிழர்கள்	...	ரெ. முருகையா	133
புரட்சிக் கவி	...	ப. ந. தியாகராஜன்	136
சேவையில் இன்பம்	...	தி. கோ. அனந்தஸ்வாமி	139
ஆசாபாசம்	...	"அழகன்"	142
இந்த மலர்	...	—	148

விஜய வருஷம்
சித்திரை மாதம்
முதல் தேதி
விலை ரூபாய் 1.

சுடரில் காணும் கதை கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவன அல்ல. கட்டுரைகளில் தெரிவிக்கப் பட்டுள்ள அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியோரின் அபிப் பிராயங்களே யன்றி, சங்கத்தின் அபிப்பிராயங்கள் அல்ல.

VICE-PRESIDENT

NEW DELHI.
21st February, '53.

I am pleased to know that you will bring out a special number of your literary publication "Chudar" on the Tamil New Year's Day. The Delhi Tamil Sangam has been doing good work for a number of years and enabling the members to keep themselves in touch with their traditions. I hope it will continue to do useful work not only for the members, but for others also who attend its functions, by helping them to appreciate the variety and significance of Tamil Art and Literature.

(S. Radhakrishnan.)

அறிவதற்கு அரிதான நூலறிந்த அரும்புலவர் ;
தெரிவதற்கு அரிதான பொருள்கண்ட பேரறிஞர்.

தத்துவமா கடல்மூழ்கிப் பாரெல்லாம் பயனெய்த,
முத்துமுத்தாய் மெய்ச்செல்வம் ஈந்தபெரும் வள்ளலிவர்.

நல்லறிவும் நல்லறமும் நைந்துவரும் இந்நாளில்,
சொல்லவந்தார் நன்மதிகள் ; வெல்லவந்தார் தீமையினை.

ராதைசேர் மணிக்கிருஷ்ணன், மறைகண்ட ஞானமணி
மேதையினைப் போற்றுவமே! மேன்மையினை நாடுவமே!

இருளூடு வந்த குரல்

பி. ஸ்ரீ.

'ஏன் இந்த ஓட்டம் ஓடுகிறாய்? அல்லும் பகலும் ஓடுகிறாயே, எங்கே?'

'உன்னை அணுகவேண்டாமென்றுதான் அகன்று போகிறேன். எத்தனை வளைவுகள், குறுக்குப் பாதைகள், முள்ளுக் காடுகள், மேடுகள் வழியாகப் போகிறேன் பார்!' என்கிறது நாகரிகம்.

* * * *

சுற்றிச் சுற்றிச் சுழன்று போகிறது சில சமயங்களில். வழி தெரியவில்லை; அழுகை வந்துவிடுகிறது. எனினும் போகப் போக வசதி தெரிகிறது: அழுகண்ணீர் ஆனந்தக் கண்ணீராகிறது. வழிகாட்டியின் குரல் கேட்கிறது. 'அப்படிப் போ, இப்படி வா' என்றெல்லாம். ஆனால் அந்த உருவம் தெரியவில்லை; கண்ணீர் மறைக்கிறது—அழுகண்ணீரும் தான், இன்பக் கண்ணீரும் தான்.

உழைத்து உழைத்துக் களைத்துக் களைத்து, மீண்டும் உழைத்து உழைத்து, எத்தனையோ விபத்துகளிலும், பிழைகளிலும் பிழைத்துப் பிழைத்து, முன்னே முன்னே போகிறது.

நம்பிக்கைச் சிறகு கட்டி மேலே மேலே பறக்கிறது ஒரு சமயம்; அவநம்பிக்கைக் குழியில் விழுந்து அவஸ்தைப்படுகிறது ஒரு சமயம். அச்சம், அறியாமை, பொறாமை, பூசல், கவலை, பயம் முதலான எத்தனை அல்லல்களை, இடையூறுகளை, வஞ்சக் குறும்புகளைக் குழிகளைத் தாண்டி வந்திருக்கிறது! ஆர்ப்பாட்டங்களில், அட்டகாசங்களில், பிரலாபங்களில், அலறல்களில், வழிகாட்டியின் குரல் காதில் விழுவதில்லை.

அபூர்வமாக அந்தக் காலடிச்சத்தம் கூடக் கேட்கிறது. அவசரப்படாமல் கம்பீரமாக அடிவைக்கும் சத்தம். 'இது தான் செம்மைப் பெருநெறி; உன்னுடைய ராஜபாதையை இப்படியே அமைத்துக்கொண்டு வா' என்ற குரலும் கேட்கிறது.

குரலும் காலடியும் மனோபாவம்தான், கற்பனைதான் என்றும் இடையிடையே தோன்றுகிறது. 'வழிகாட்டி வழிகாட்டியல்ல; நமது கனவு காட்டுவதுதான்!' என்றும் படுகிறது. 'வல்லான் வகுத்ததே வழி' என்று நடக்கிறது நாகரிகம்.

நல்லார் - பொல்லார் போராட்டங்களையும் சீராட்டங்களையும் கண்டு செல்லுகிறது. அறம் வெல்லக் காண்கிறது; 'அறமிலா மறவர்' முடி சூடவும் காண்கிறது. முடிகள் உருண்டு ஏகாதிபத்தியங்கள் புரண்டு போவதையும் கண்டு போகிறது. காடு நாடாவதையும், நாடு காடாவதையும் காண்கிறது............இப்படிப் 'பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு.'

* * * *

இது விஞ்ஞான நாகரிகம்; விடுதலை யுகம், அணுக்குண்டு யுகம்; எனினும் கலியுகம் தான். 'விஞ்ஞானத்திற்குள்ளே தான் மெய்ஞ்ஞானமெல்லாம்; எஞ்சி நிற்பதெல்லாம் அஞ்ஞானம் தான்! வா வா, நான் வழிகாட்டுகிறேன்' என்று மடிபிடித்து இழுத்துக்கொண்டு போகிறது பகுத்தறிவு.

'அது என்ன அப்பால்? ஏதோ ஓர் அரவம் கேட்கிறதே!' என்றால், 'அதெல்லாம் மூட நம்பிக்கைதான்; எனக்கு அப்பாலும் ஒன்றுமில்லை, இப்பாலும் ஒன்றுமில்லை' என்கிறது பகுத்தறிவு. குரல் ஒலித்தாலும் அணுக்குண்டு யுகத்தின் ஆரவாரத்திலே, அது தெளிவாய்க் காதில் விழுவது சாத்தியமா?

'இந்த விடுதலையுகத்திலே எல்லாருக்கும் விடுதலை, எல்லாவகைக் கட்டுகளிலிருந்தும் பயங்களிலிருந்தும் விடுதலை வேண்டியதுதானே? அந்தக் குரல் குறித்து அஞ்சாதே' என்று அபயம் தருகிறது தன்மானத் தனிவீரம். 'ஓஹோ, தெய்வ பயத்திலிருந்தும் விடுதலைதானா? விடுதலையினின்றும் விடுதலைகூடக் கிடைத்துவிடுமோ!' என்று அஞ்சுகிறது நாகரிகம்.

தெய்வ பயம் இல்லாவிட்டால், பயமே தெய்வமாகிவிடுகிறது. அடடா, எத்தனை புதுமைத் தெய்வங்கள்! அணுக்குண்டு பயம், பரஸ்பர பயம், வருங்காலம் பற்றிய பயம், பொருள்-போகம்-வேகம் என்னும் மும்மூர்த்திகளிடம் பயபக்தி—இன்னும் புதிய புதிய பயங்கள், பக்திகள்! 'மத நம்பிக்கையை ஒழித்து அவநம்பிக்கைக்கு இறையாகவா நான்? சொர்க்க நரகங்களை மறுத்து இம்மையிலேயே கவலை என்னும் நரகக்குழியில் விழுந்து கிடக்கவா?' என்று பெருமூச்சு விடுகிறது நாகரிகம்.

ஆகாசத்தை நோக்கி அழத்தோன்றுகிறது, தொழத்தோன்றுகிறது.

அலப்பாய் ஆகா சத்தை நோக்கி
அழுவன், தொழு வனே !
[அலப்பாய் - மனக்கலக்கமாய்.]

என்ற நம்மாழ்வாரின் அனுபவத்திற்கிணங்க. ஆனால் 'அந்த அழுகையும் தொழுகையும் பலவீனம். 'அடி, பிடி, உடை, உதை!' என்கிறது ஒரு புதுமை மதம். 'வானம் பார்த்து வழி நடந்தால் இடறி விழுவாய்!' என்று பகுத்தறிவு இடித்துரைக்கிறது.

'மண்ணை நோக்கி நோக்கிக் களைப்புற்றதும், விண்ணை நோக்கி ஆறுதல் பெற உரிமையில்லையா?' என்று கேட்கிறது நாகரிகம். 'விண்ணு? அது வெறும் பாழ், முடிவில்லாத சூனியம், வஞ்ச வெளி' என்கிறது தன்மானத் தனி வீரப் பகுத்தறிவு.

'அந்த ஆழ்வார் பார்த்த ஆகாசத்திலே "இல்லை" என்பது. ஒரு மூலையிலிருந்து ஒரு மூலைக்கு, கொட்டை எழுத்துக்களில் மின்வெட்டைக் கல்வெட்டாக்கியதுபோல் எழுதி வைத்திருக்கிறதே! அவருக்குத்தான் தெரியவில்லை, உனக்கு இன்னும் புரியவில்லையா?' என்று நகையாடுகிறது பகுத்தறிவுப் பெருவீரம்.

அம்பல மாவது ஆகாசம்
உற்றுப் பாரு ;
அருளில்லை பொருளில்லை
கண்டு தேறு !

என்று ஆதனூர் வேதியர் நந்தனுரை நோக்கி அறைகூவிப் பறைசாற்றிய அந்த 'இல்லை' என்பது, இன்று விஞ்ஞானப் படைத்துணையுடன் அட்டகாசம் பண்ணுகிறது. ஆனால் 'கண்டு தேறுவதற்குத்தான் என்ன இருக்கிறது, தெரியவில்லையே?' என்று கேட்கிறது நாகரிகம்.

'வாழ்க்கை களைத்துப் போகிறதே, கசந்து போகிறதே; சுவை இல்லையே!' என்று ஏங்குகிறது. 'ஆண்டான் அடிமை வாழ்விலா நீ சுவை கண்டாய்? ஈச்வர மயமாகியிருந்த உலகம் யந்திரமயமாகி வருகிறதே, போதாதா? ஒரு பொத்தானை அமுக்கித் தேவைகளைத் திருப்தி செய்து கொண்டு, போக வாழ்க்கை வாழலாமே!' என்று எக்களிக்கிறது தன்மானப் பகுத்தறிவு.

'ஆண்டவனுக்கு அடிமை செய்ய மறுக்கும் மனிதன், தான் படைத்துவிடும் யந்திரத்திற்கு அடிமையாகிறானே!' என்று குமுறுகிறது நாகரிகம். மதத்திலே பிறந்து, மதத்திலே இயங்கி மயங்கி, மதத்திலே இறந்து போவது பகுத்தறிவு படைத்த மனிதனுக்கு அடுக்குமா?' என்று கோஷிக்கிறது தன்மான வீரம்.

யந்திரம் இன்னும் மனித - சிருஷ்டி செய்துவிடவில்லை. எனினும் யந்திரம் ஊட்டுகிறது; மனிதனை உலகமெங்கும் ஓட்டுகிறது. யந்திரத்தால் வெல்லுகிறுன், கொல்லுகிருன், கொல்லப்படுகிருன். யந்திரம் மனிதனுக்குச் சக்தி-முடி சூட்டி 'நீயே சக்தி, நீயே தெய்வம்' என்று வாழ்த்துகிறது. அவனே 'அடியேன் யந்திர தாஸன்!' என்கிருன். பிறகு யந்திரமே வதைக்கிறது; புதைக்கிறது; தகன ஸம்ஸ்காரமும் செய்துவிடுகிறது. 'இதைக்காட்டிலும் வேருெரு பேராபத்தும் விரைந்துகொண்டிருக்கிறதோ?' என்று அஞ்சுகிறது நாகரிகம்.

இயற்கையோடு ஒன்றுபட்டு, நிலம், கடல், வானம் ஆகியவற்றுடன் இசைந்து வாழவேண்டிய வாழ்வையும் மறந்து, மனித உள்ளம் யந்திரங்களோடு யந்திரமாய்ச் செயற்கைப் பொருள்களுடன் ஒன்றிபோய்விடுமோ? இந்தக் கேள்விக்கும் பதில் சொல்லுகிறது ஜடமாயப் பகுத்தறிவு.

'அத்தகைய இயற்கை வாதமோ, தத்துவ வாதமோ செல்லாக்காசு, இந்த ஜனநாயக யுகத்திலே. எப்படியும் நாயக உரிமை ஸ்ரீமான் பொதுஜனத்திற்குத்தானே?' என்று வாதிக்கிறது. 'ஜனநாயகம் பணநாயகத்திற்கு அடிமைப்படுகிறதே அமெரிக்காவில்; சர்வாதிகாரத்திற்குச் சலாம் போடுகிறதே ரஷ்யாவில்' என்று சுட்டிக்காட்டுகிறது நாகரிகம்.

இந்த யந்திர நாகரிகத்தின் இருவேறு கூறுகளே ரஷ்யாவும் அமெரிக்காவும். இதில் உண்மைச் சுதந்திரமும் இல்லை; உண்மையின்பமும் இல்லை. 'யந்திரமே கைத்திறன்; எஞ்சினீரே பக்தன்; உல்லாஸ யாத்திரையே தீர்த்த யாத்திரை!' என்று கருதப்படும் இப்புதுமைக் கலியுகத்திலே தொழிலிலும் சுவையில்லை; பொழுது போக்கிலும் இன்பமில்லை. 'ரேடியோ, நாடகம், பத்திரிகை இலக்கியம், சினிமாக்கலை, டப்பா உணவு, டப்பா கீதம், டப்பா சிந்தனைகள்—இந்த நிலையிலே, உள்ளபடி உண்மையுணர்ச்சிக்கோ அழகுணர்ச்சிக்கோ இடமெங்கே?' என்று கேட்கிறது நாகரிகம்.

பகுத்தறிவு திடுக்கிட்டுப் போகிறது. நாகரிகம் தொடர்ந்து கேட்கிறது; 'உண்மையான வாழ்வு எது, உண்மையான இன்பம் எது என்பதையும் மறந்துவிடுகிருர்களல்லவா, பொருள் வேட்டையிலும், போக வேட்கையிலும், வாழ்க்கைப் போராட்டங்களிலும்?' ஆம்;

செல்வம் என்பது
சிந்தையின் நிறைவே.

என்ற உண்மையையும் மறந்து விடுகிருேம். ஆத்ம சம்பத்தைத் துறந்து விடுகிருேம், புறப்பொருள் மோகத்திலே, யந்திர சாகச வேகங்களிலே.

'இந்த ஜனநாயகம் ஆரோக்கியமாக இருக்கிறதா? இதன் இதயத்திலேயே நோய் தொத்திக்கொண்டிருக்கிறதல்லவா?' என்பதும் ஒரு பெருங்கேள்வி. பரந்த பரபரப்பான வாழ்க்கைதானே வாழப் பார்க்கிறூர்கள்? ஆழ்ந்த அமைதியான ஆன்ம சுக வாழ்க்கை இல்லையே?

நன்று தீது நாடலேன்,
தின்று தீய தேடினேன்!

என்ற விராத வாழ்க்கைக்கும் நவநாகரிக வாழ்க்கைக்கும் ஸாராம்சத்தில் வேற்றுமை தென்படுகிறதா?

உண்ணுகிறோம், உழைக்கிறோம்; பூசலிடுகிறோம்; கூச்சல் போடுகிறோம்; உறங்கி விழித்தபின் மீண்டும் ஓடுகிறோம், சாடுகிறோம்; ஒருவரையொருவர் மிதித்துத் தள்ளுகிறோம். நம்முடைய வாழ்க்கைக் கதையும் விராதன் கதை போல் ஆரவாரமும் ஆவேசமும் நிறைந்தது தானே?

'கதையின் பொருள்தான் இன்னதென்று புலப்படவில்லை!' என்று கதறுகிறது நாகரிகம். பகுத்தறிவு பதறுகிறது, 'இதிகாச புராணங்கள் கனவிலும் காணுத ஒருவகை அசுர நாகரிகத்தைத்தான் நாம் உருவாக்கி வருகிறோமோ?' என்று.

ஆனல் இந்த நோய்க்கு மருந்தும் உண்டோ? ஆஸ்திகப் போர்வை போர்த்துச் சிந்தையிலும் செயலிலும் ஆண்டவனை மறுக்கும் ஆஷாடபூதித்தனமும், நாஸ்திகத்திற்கல்லவா படைத்துணையாகி நிற்கிறது?

இந்த இருளிலும் குரல் கேட்கிறது: 'என்னை விட்டு விலகிப் போய்க்கொண்டேயிருந்தால், இப்படியேதான் அனர்த்த பரம்பரை வளர்ந்துகொண்டே போகும்' என்று.

செல்வன் கழல் ஏத்தும்
செல்வம் செல்வமே.

என்றவாறு அருட்செல்வத்தை நாடுவோரைப் பிற செல்வங்களும் தேடி வந்தடையும்.

இறைவன் கழல்ஏத்தும்
இன்பம் இன்பமே.

என்றவாறு பக்தியின்பம் பெறுவோருக்கு 'இன்பமே, எந்நாளும் துன்பம் இல்லை'.

இத்தகைய வாழ்க்கையின்பத்தைத் துறவுநெறியில் அல்ல, கைங்கரியப் பெருநெறியில் பெறவேண்டும் என்பது, 'இந்த உலகின் இருள் நீங்க வந்துதித்து, அந்தமிழால் நற்கலைகள் ஆய்ந்துரைத்த' ஆழ்வார்—நாயன்மார்களின் அருட்குரல்.

இந்த அருட்குரல் பல நூற்றுண்டுகளாக நமது சரித்திரத்தின் இருண்ட பகுதிகளிலும், நள்ளிரவிலும்கூட, நமக்கு வழித்துணையாகி அபயங்கொடுத்து வந்திருக்கிறது.

யார் ரிஷி?

ஓ. வி. அளகேசன்
(மத்திய அரசாங்க அமைச்சர்)

பழைய காலத்தில் ரிஷிகளும் முனிவர்களும் சித்த புருஷர்களும் இருந்ததாகப் படிக்கிறோம். அவர்கள் புலன்களை வெறுத்து, மரவுரி தரித்துக் காய் கிழங்குகளை உண்டு, காடுகளில் வாழ்ந்து வந்ததாகக் கேள்விப் படுகிறோம். இப்போதுகூட, இமயமலைக் காடுகளில், நமது கண்களுக்குத் தெரியாமல் முனிவர்கள் சஞ்சரிப்பதாகச் சொல்லுகிறார்கள்.

விசுவாமித்திர மகாமுனிக்குக் கோபம் மூக்கின்மேல் வரும். துர்வாசர் ரொம்பப் பொல்லாதவர்; கோபிப்பதற்கு யார் கிடைப்பார்கள் என்று பார்த்துக்கொண்டிருப்பார். வசிஷ்டர் சாது. ஜாபாலி வாயாடி. அகஸ்தியர் வல்லமை வாய்ந்தவர்.........இப்படி, கதைகளில் பல ரிஷிகள்.

திருவண்ணாமலையில் சில வருஷங்களுக்கு முன் வரையில் ரமண மகரிஷி வாழ்ந்து வந்தார். நீறுபூத்த நெருப்பைப் போன்றவர். சாந்தமே வடிவானவர், பரம தயை பூண்டவர். புதுச்சேரியில் வாழ்ந்து வந்த அரவிந்தரும் பரம யோகியாக விளங்கினார்.

* * *

உலக ஆரோக்கிய ஸ்தாபனத்தின் சார்பாகப் பதின்மூன்று மேனாட்டு வைத்திய நிபுணர்கள் நம் நாட்டுக்கு வந்திருக்கிறார்கள். சென்னை ஆஸ்பத்திரிகளில் ஒரு மாதம் வேலை செய்துவிட்டு, இப்போது பம்பாய் ஆஸ்பத்திரிகளில் தங்களுடைய கைத்திறனைக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் துறையில் பெரிய மேதாவி. எல்லோரும் சஸ்திர சிகிச்சையில் (ஆபரேஷனில்) அசகாய சூரர்கள். டென்மார்க் தேசத்தைச் சேர்ந்த ஒரு டாக்டர், இருதய ஆபரேஷனில் இணையற்றவர். அவர் மதுரையைச் சேர்ந்த ஒரு தொழிலாளிக்கு இருதய ஆபரேஷன் செய்ததை நேரில் பார்த்தவர்கள், இது மனிதர்கள் செய்யும் காரியமா என்று ஆச்சரியப்படுகிறார்கள். இன்னொருவர் இத்தாலி தேசத்துக்காரர். உடம்பில் எந்த இடத்தையும் அறுத்துக் கொத்திக் குடைந்து தைத்துக் கட்டி விடுவார்; ஏதோ தலையணையைப் பிரித்துப் பஞ்சை வெளியில்

எடுத்து மறுபடியும் அடைத்துத் தைத்துவிடுகிற மாதிரி. இவருடன் நான் ஒருமணி நேரம் பேசிக்கொண்டிருந்தேன். இவருக்கு வயது ஐம்பத்துமூன்று. இருபத்தொன்பது வருஷகாலமாக சஸ்திர சிகிச்சை செய்து வருகிறார். இன்னொருவர்; இவருடைய தேசம் இங்கிலாந்து. இவர் எலும்பு டாக்டர். ஏதோ மரத்தில் தச்சன் வேலை செய்கிறதுபோல, எலும்பைப் பிளந்து செதுக்கித் துண்டுபோட்டு, ஒட்டவைத்துக் கட்டுபோட்டு விடுவார். இப்படி ஒவ்வொருவரைப் பற்றியும் சொல்லிக்கொண்டே போகலாம்.

இவர்கள் யார்? இவர்கள் நம் தேசத்து விசுவாமித்திரர், அகஸ்தியர் ஆகியோருடைய பரம்பரையில் வந்தவர்களே! மேல்நாடுகளில் பிறந்தபடியால் இவர்களுடைய தோல் வெள்ளையாயிருக்கிறது. அதே காரணத்தினால் வேறு பாஷைகள் பேசுகிறார்கள். இருபதாவது நூற்றாண்டில் பிறந்தபடியாலும், காடுகளில் வாழாது நாடுகளில் வாழ்கிறபடியாலும், மரவுரிக்குப் பதிலாகக் கால்சட்டை அணிந்துகொண்டிருக்கிறார்கள். தாடி வைத்துக்கொள்ளாமல், தினசரி முக க்ஷவரம் செய்துகொள்ளுகிறார்கள். இம்மாதிரி சில சில்லறை வெளி வித்தியாசங்களைத் தவிர, இவர்களுக்கும் நமது பழைய காலத்து ரிஷிகளுக்கும் வேறு வித்தியாசமே கிடையாது. இரு சாராரும் ஒன்றே.

நமது ரிஷிகளில் சிலர், ஆத்மாவுக்கு வரும் உபாதிகளுக்கு மருந்து கண்டுபிடித்து வழங்கினார்கள். தன்வந்திரி போன்றவர்கள் உடல் நோய்களுக்கும் மருந்து கண்டார்கள். இவர்களுக்கும் நவீன வெள்ளைக்கார ரிஷிகளுக்கும் பொதுவான குணம், ஐந்து புலன்களையும் ஒருமுகப் படுத்தி உயிர்களுக்கு இதம் செய்வதாகும்.

ரயில் என்ஜினையும், மின்சாரத்தையும், ஆகாய விமானத்தையும், ரேடியோவையும் இன்னும் எண்ணற்ற புதுப்புது விஞ்ஞான சாதனங்களையும் கண்டு வழங்கியவர்கள் ரிஷிகள் அல்லாமல் வேறு யார்? கீழ்நாடுகளில் பிறந்தவர்கள்தான் ரிஷிகளாக முடியும்; மேல் நாடுகளில் பிறப்பவர்கள் ரிஷிகள் ஆக முடியாது என்று சொல்லுவதற்கில்லை. இவர்களை நாம் விஞ்ஞானிகள் என்ற புதுப் பெயரால் அழைக்கிறோம். இவர்கள் உலகத்தை அழிக்கும் அணுகுண்டு போன்ற கொலைக் கருவிகளையும் உண்டாக்குகிறார்கள் என்று சொல்லலாம். இதிலும் இவர்கள் பழைய ரிஷிகளிலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல. விசுவாமித்திரர்தான் ராமனுக்குப் பகைவர்களைக் கொல்லும் அஸ்திர சாஸ்திர வித்தைகளை உபதேசித்ததாக ராமாயணத்தில் படிக்கிறோம் அல்லவா?

பொதுவாகப் பிறர் பாராதததைப் பார்ப்பவர்கள் அனைவரும் ரிஷிகளே. அவர்களுடைய தேசமும், காலமும், பாஷையும், பழக்க வழக்கங்களும் வேறாயிருக்கலாம். ஆயினும் அவர்கள் ஒரே தெய்வீகமான பரம்பரையைச் சேர்ந்தவர்கள். எங்கிருந்தாலும் அவர்களை நாம் அடையாளம் கண்டுகொள்ளலாம்.

மாதிருக்கும் பாதியன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

சமீபத்தில் நான் ஒரு கூட்டத்திற்குச் சென்றிருந்தேன். அங்கு பேசிய அன்பர் ஒருவர், நம் நாடு ஆங்கிலேயர் ஆளுகையில் இருந்த போது, சீமையில் இந்தியா மந்திரியாக இருந்த, பேதிக் லாரேன்ஸ் என்பவரின் பெயருக்கு, விளக்கம் கூறினர். அதாவது லாரேன்ஸும் அவர் மனைவி பேதிக்கும், சமூக சேவையில் தீவிரமாக ஈடுபட்டவர்கள் என்றும், அதனால் இருவரும் தங்கள் பெயரை இணைத்தே தங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்திக் கொண்டார்கள் என்றும் சொன்னர். அம்மாள் பெயர் மிஸஸ் பெதிக் லாரென்ஸ் என்றால், ஐயாவின் பெயர் மிஸ்டர் பெதிக் லாரென்ஸ்—அவ்வளவுதான் என்று குறிப்பிட்டுவிட்டு, 'நம் நாட்டில் எத்தனை ஆண் மக்கள் இப்படி இருவர் பெயரையும் இணைத்து வழங்கத் தயாராயிருக்கிரும்' என்று ஒரு பெரிய கேள்வியைப் போட்டார்.

அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்த நானே, இதற்குச் சளைக்கவில்லை. 'ஆணும் பெண்ணும் சரி நிகர் சமானம் என்பதற்கு, இந்தப் பெயர் இணைப்புத்தான் முக்கியம் என்றால், நமது கடவுளர் இந்த பெதிக் லாரென்ஸுகளுக்கு எல்லாம் எவ்வளவோ காலத்திற்கு முன்னமேயே வழி காட்டியிருக்கிரூர்களே! நம் நாட்டில் நாம் வழிபடும் மூர்த்திகளில் பெரும்பாலர், அம்மையப்பன், உமாசங்கர், லக்ஷ்மி நாராயணன், சீதாராமன் என்று தானே அழைக்கப்படுகிரூர்கள். இம்மட்டோ? தன் தன் மனைவியை, பாகத்தில் வைத்துக் கொள்ளுகிருன் ஒருவன், ஆகத்தில் வைத்துக் கொள்ளுகிருன் ஒருவன், நாவிலேயே வைத்துக் கொள்ளுகிருன் மற்றொருவன். இப்படிப்பட்ட மூர்த்திகளின் பக்தர்களாகிய நாமா, நம் மனைவியரைப் பெயர் அளவிலாவது, சரிநிகர் சமானமாக வைத்துக்கொள்ளத் தயங்கப் போகிறோம், என்று ஒரு போடு போட்டேன்.

உண்மைதானே! இந்த மூர்த்திகள் எல்லாம் நல்ல வழி காட்டியாக அல்லவா அமைந்திருக்கிரூர்கள். அதிலும் பாகத்திலேயே வைத்துக் கொண்டிருக்கிருனே, அந்த மாதிருக்கும் பாதியன், அவனை நினைத்தால், அந்த மூர்த்தியைக் கற்பனைப் பண்ணினனே, அவனை நினைத்தால், அந்த மூர்த்தியைச் சொல்லிலும் சுவரிலும், கல்லிலும் செம்பிலும் உருவாக்கிய கலைஞர்களை நினைத்தால், நமது தமிழ் நாட்டுச் சிந்தனையாளர்களின் திறம் விளங்குமல்லவா?

மனித உடம்பின் அமைப்பையும், மற்றும் பௌதிகங்களின் அமைப்பையும் பார்ப்போமானால், ஒவ்வொரு உடம்பும் இரு வேறு வகை ஒட்டுக்களாக அமைக்கப் பெற்றிருத்தல் விளங்கும். ஆணும் பெண்ணும் ஒன்றுகின்ற வகையிலே அன்றி, ஊர்வன, நடப்பன,

பறப்பன, செயற் கொண்டிருப்பன முதலிய எந்த உயிரும் சிருஷ்டிக் கப்படுவதில்லை. இவ்வாறு சிருஷ்டிக்கப் பெறும் உயிரும் உடலும், தத்தம் தாயும் தந்தையுமாம் இரு வகை இயல்புகளும் பொருந்தி நிற்க வேண்டுவதுதானே பொருத்தம். உலகத்தில் உள்ள எல்லா உயிர்களுக்கும் தாயாகவும் தந்தையாகவும் இருக்கும் இறைவனையும், அந்த உருவில் வழிபடுவதுதானே முறை.

இந்த உருவச் சேர்க்கை, உயிர்ச் சேர்க்கை இருக்கட்டும். குணச் சேர்க்கையாகிய சத்தியை நோக்கலாம். மின்சாரம், இன்றைய உலகிற்கு மிகவும் இன்றியமையாது வேண்டப்படும் ஒரு சக்தி. அங்கும் ஆண், பெண் (Positive and Negative) என்னும் இரண்டு வகைப்படும் சக்திகள் உண்டு. இரண்டும் ஒன்று சேர்ந்தால்தான் மின்சார ஓட்டமே ஏற்படுகிறது.

இவ்வாறு, உருவத்தாலும் சக்தியினாலும் ஒரு பால் ஆணும், ஒரு பால் பெண்ணுமாக ஒட்டிச் சேர்ந்துள்ள உயிரைத்தான், நாம் சராசரங்கள் அனைத்திலும் காண்கின்றோம். உலகமெல்லாம் இறைவன் திரு உருவமாகக் காணுகின்ற உத்தமர்கள், இந்த உண்மையை உணர்கின்றார்கள். இவ்வாறு உலகமெலாம், தானும் தன் தையலுமாய் வியாபித்து நிற்கும் தன்மையை, இறைவனுக்கே ஏற்றுகின்றார்கள். அந்தத் திரு உருவை, அவன் அருளே கண்ணாகக் கொண்டு காண்கின்றார்கள். காதல் மடப்பிடியோடு களிறு வருவதைக் கண்டாலும், பேடை மயிலோடு, கூடிப் பிணைந்து வருவதைக் கண்டாலும், வரிக்குயில் பேடை யோடாடி வைகி வருவதைக் கண்டாலும், ‘கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்டேன்’ என்று எக்களிப்போடு பேசுகிறார்கள்.

இப்படி இறைவனை, ஆண் என்றும் பெண் என்றும் பிரித்துக் காணாது, ஆணும் பெண்ணும் இணைந்து நிற்கும் ஒரே வடிவமாகக் கொண்டு, அம்மையப்பனாக வழிபடுவது, வேறு எந்த நாட்டிலும், எந்த மக்களாலும், எவருடைய சிந்தனையாலும் தொட்டு அறியாததொன்று. ஆனால் இந்த இறைவன் திரு உருவோ, நமது தமிழர்களுக்கு, மிக மிகத் தொன்மையானதாகும்.

“கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
மங்கை உருவாய் மறையேத்த நிற்பாய் நீ.”

என்று இறைவனைக் குறிக்கின்றார் இளங்கோவடிகள். “உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவில் நீ இருத்தி” என்று பாடிய மணிவாசகர், திரும்பவும் திரும்பவும்

தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால் வெள்ளை நீறும் பசுஞ் சாந்தும்
சூலமும் தொக்கவளையும் உடைத் தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பி

என்று தானே பாடிப் பாடி மகிழ்கிறார்.

இந்தத் திரு உருவின் சிறந்ததொரு உருவைக் காண விரும்பினால், நீங்கள், வற்றாது வளம் பெருக்கும் பொன்னி பாயும், சோழ வள நாட்டிற்குத்தான் வரவேண்டும். தஞ்சை ஜில்லாவில் கும்பகோணத்துக்கே போகவேண்டும். அங்கும் கொஞ்சம் கும்பேஸ்வரர், மகாமகக்குளம் இவற்றையெல்லாம் மறந்து, குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும், நாகேஸ்வர சுவாமி கோயிலுக்குள்ளேயே நுழைய வேண்டும். கோபுர வாசல், வெளிப் பிரகாரம், நந்தி மண்டபம், மகா மண்டபம் எல்லாவற்றையும் கடந்து, கோயிலின் தெற்குப் பிரகாரத்தின் வழியாக, மேலைப் பிரகாரத்திற்கே வந்து சேரவேண்டும். அங்கு கர்ப்பக் கிரஹத்தின் மேற்குச் சுவரில், மேற்கே பார்த்த மாடத்தில், சுமார் நாலு அடி உயரத்தில், இந்த மாதிருக்கும் பாதியன் காட்சி தருவான். பக்கத்தில் உள்ள படத்திலுமே காட்சி தருகிறான்.

சமீபத்தில் நான் அங்கு போயிருந்தேன் ஒரு அமெரிக்க நண்பருடன். அங்கிருந்த அர்த்தநாரி மூர்த்தியைப் பார்த்து, 'என்ன! இந்த அமேஸான் நாட்டுப் பெண்ணின் உருவம் இந்தக் கோயிலில் வந்திருப்பானேன்?' என்று வியந்து கேட்டார் அவர்.

ஆம். அமேஸான் நாட்டின் பெண்கள் வில் வித்தையில் வல்லவர்கள் என்றும், வில்லின் நாணை இழுத்து அம்பைப் பாய்ச்சுவதற்கு, தங்கள் வலப்பக்கத்து ஸ்தனம் இடையூறாக இருக்கிறது என்று கருதி, அதைச் சேதித்து விடும் பழக்கம் உடையவர்கள் என்றும், எப்போதோ எங்கோ படித்திருக்கிறோமல்லவா?

சரி, இவருக்கு விஷயம் விளங்கவில்லை என்று தெரிந்து, கொஞ்சம் விளக்கிக் கூறினேன். அரியதொரு தத்துவத்திற்கு அற்புதமான விளக்கம்தான் என்று ஒப்புக் கொண்டார். என்றாலும், அவருக்கு இடப்பாகத்தின் இடுப்பு அப்படிக் கொஞ்சம் பெரிதாய் இருப்பது பிடிக்கவில்லை. அதற்கும் சொன்னேன்: 'அன்பரே,

இந்தச் சிலையை உருவாக்கிய சிற்பி இருக்கிறனே, அவன் ஒரு பெரிய மேதையாக இருக்கவேண்டும். ஆணின் இடப்பாகத்தை விட, குழந்தையை ஏந்தி வளர்க்க அமைந்த பெண்ணின் இடப் பாகம், பெரியது என்பதைத் தெரிந்திருக்கிறன். அதற்காக அந்த இடப்பாகத்திலேயே ஒரு அற்புதமான நெளிவை உண்டாக்கி சரிக் கட்டியிருக்கிறன். இதையெல்லாம்விட, அந்த அன்னையின் ஆலிலை அன்ன வயிற்றில் அற்புதமான சுழிவுகளைக் காட்டி, அந்தச் சிலைக்கே ஒரு உயிர் கொடுத்திருக்கிறன்' என்று முடித்தேன்.

அமெரிக்க அன்பரோ 'பொல்லாதவர்கள் அப்பா உங்கள் தமிழ் கலைஞர்கள்' என்று சொல்லி, என் முதுகில் ஒரு ஷொட்டுக் கொடுத்தார். 'ஆம், நாங்கள் பொல்லாதவர்கள்தாம்; அப்படிப் பொல்லாதவர்களாக இருப்பதினால்தான், எங்களுக்கு இந்தத் திருவுருவங்களின் உண்மை விளங்காமல், இவைகளால் என்ன பயன், இவைகளை உடைத்து விடலாமே என்று வாதிடுகிறேம்' என்றேன். ஆம். நாமெல்லாம் பொல்லாதவர்கள்தானே!

*

நெடுகிலும் குன்றுகளும் பள்ளத்தாக்குகளும் பரவிய தமிழ் நாட்டின் இயற்கை வனப்புக்கள், தம்மை எவ்வாறு கவர்ந்தன என்பதை, தீனபந்து ஸி. எப். ஆண்ட்ரூஸ், எங்கள் ஆச்ரமத்தில் தங்கி இருந்தபோது தெரிவித்தார். எங்கள் சந்தியா வேளையில், இதே பொருள் பற்றி அவர் உரை நிகழ்த்தினர். இதற்கு ஒப்பானது எதையும், வட இந்தியாவில் தாம் கண்டதில்லை என்று அவர் கூறினர். மேற்கிலும் கிழக்கிலும் மாபெரும் மலைத்தொடர்கள்; அவற்றின் ஊடே சிறிய இணைப்புக் குன்றுகள்; குற்றாலம் பாபநாசம் போன்ற இடங்களில் எழில் அருவிகள்—இவையாவும் சேர்ந்த அழகிய தோற்றம். மேற்கிலிருந்து கிழக்கே ஓடும் ஆறுகளும், செழிப்புற்ற வெளிகளும் பச்சை வயல்களும், அழகுக்கு அழகு சேர்க்கின்றன. முப்புறமும் மாகடல்கள்; மூன்று கடல்களும் கூடும் இடத்தில், சுந்தரக் குமரி முனை. இந்த இயற்கைச் செல்வங்கள் யாவும், நெடுங்காலமாய் அவர்களுடைய வரலாற்றினூடே, அவர்களுடைய மனதில் பதிந்து அதைப் பண்படுத்தி வந்திருக்கின்றன.

—Dr. எஸ். ஜேஸுதாஸன்

யானைச் சாமியார்

"உமாசந்திரன்"

"அப்பா! அப்பா! யானைச் சாமியார்! யானைச் சாமியார்!"

மாடித் தாழ்வாரத்தில், பாதித் தூக்கமும் பாதி விழிப்புமாகக் கண் மூடிப் படுத்திருந்த என்னை, நீலாவின் இந்த அழைப்பு, சுய நினைவுக்குக் கொண்டு வந்தது. கண்களைக் கசக்கிக் கொண்டே எழுந்து, வெளியே பார்த்தேன். யானையுடன் சாமியார் வீதி வழியே வந்து கொண்டிருந்தார். நல்ல விழிப்புடன் இருந்திருந்தால் நீலாவின் அறிவிப்பே தேவையா யிருந்திராது. எங்கள் ஊர் வீதிகளில் அந்த மணி யோசை, யானையின் வருகையை மட்டுமல்ல, கூடவே சாமியாரின் வருகையையும் அறிவிப்பதென்று, நேற்றுப் பிறந்த குழந்தைக்குக்கூடத் தெரியும். யானையையும் சாமியாரையும் பிரித்துக் கற்பனை செய்வதுகூட முடியாதபடி, வழிவழியாய் வந்த ஒரு மரபுபோல் அந்த உறவு ஆகி விட்டது. சாமியாரின் சொந்தப் பெயர் என்னவோ தெரியாது. யானைச் சாமியார் என்ற பெயர் அவருக்கு இயற்கையாகவே அமைந்து விட்டது.

"அப்பா, அப்பா! யானைச் சாமியாரைப் பார்க்க நீ வரவி யாப்பா!" என்று நீலா கீழே யிருந்து மீண்டும் கூப்பிட்டாள்.

நீலாவுக்காக அல்ல, என்னுடைய திருப்திக்காகவே, கீழே விரைந்து சென்றேன். அந்தச் சாமியாருடன் பேச்சுக் கொடுப்பதில் எனக்கொரு தனி மகிழ்ச்சி. அவர் பேச்சில் ஒரு அசாதாரணக் கவர்ச்சி இருந்தது. வேஷத்திலும் பெயரிலும்தான் சாமியாரே ஒழிய, வேதாந்தப் பேச்சை அவரிடமிருந்து எதிர்பார்க்க முடியாது. அவர் பேசுவதெல்லாம் உலக சம்பந்தமான சிறு விஷயங்களைப் பற்றித்தான் இருக்கும். அவ்வூரில் ஆப்பக்காரக் கிழவியிலிருந்து, அம்பலக்கார மிராசுவரை, ஒவ்வொருவருடைய சுக துக்கங்களைப் பற்றியும் அவருக்குத் தெரியும். யாருடன் பேசினாலும், எதைப் பற்றிப் பேசினால் அவர்கள் உள்ளத்தைத் தொட முடியும் என்ற ரகசிய வித்தையை, அவர் கற்று வைத்திருந்தார். எப்போதாவது என் மனம் அமைதி யிழந்து தவிக்க ஆரம்பித்தால், அவரிடம் பேசிவிட்டுத் திரும்பும்போது, சலிப்பெல்லாம் எங்கோ மறைந்திருக்கும்.

மூன்றாவது வீட்டு வாயிலில் யானை மட்டும்தான் நின்று கொண்டிருந்தது. சாமியாரைக் காணோம். விவரமறிந்து வருவதற்காக நீலா அந்த வீட்டை நோக்கி ஓடினாள். சட்டென்று எனக்கு ஞாபகம் வந்தது. சாமியாருக்கு வைத்தியம் தெரியுமென்று எல்லோருக்கும் ஒரு நம்பிக்கை. அவர் கையைப் பிடித்துப் பார்த்தாலே வியாதி குணமாகிவிடும் என்று சொல்லிக் கொள்வார்கள். மூன்றாவது வீட்

டில், அன்று காலைதான், குழந்தைக்கு மாந்தம்போல் வந்து, பிரக்ஞை இல்லாமல் கிடக்கிறதென்று பேசிக் கொண்டார்கள். பெரிய உத்யோகஸ்தருடைய குழந்தை. ஆஸ்பத்திரி பெரிய டாக்டரே காரில் நாலைந்து தடவை நேரில் வந்து, குழந்தையைக் கவனித்துவிட்டுப் போனார். ஒன்றும் பயனில்லை போலிருக்கிறது. அதனால்தான் சாமியாரை வரவழைத்திருக்கிறார்கள். நல்ல வெயில் நேரத்தில் சாமியார் வரக் காரணம், இப்போது புரிந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் நீலா மகிழ்ச்சியுடன் ஓடி வந்தாள். "அப்பா! அவங்க வீட்டுக் குழந்தைக்கு உயிர் வந்திடுத்தாம். நம்ம சாமியார் மந்திரம் போட்டு உயிர் வரவழைச்சிட்டாராம்" என்றாள் குதூகலத்துடன். அதற்குள் சாமியாரே எங்களருகே வந்து விட்டார். "க்ஷேமம்தானா தம்பி! எதிர்பாராமல் இந்த நேரத்துக்கு வரும்படி ஆயிற்று," என்றார் என்னைப் பார்த்து.

"ஏன் தாத்தா, உங்களைப் போல சாமியாருக்கெல்லாம் ஞான திருஷ்டி தெரியுமே!— முன்னாலேயே தெரிஞ்சுக்கிட முடியாதா?" என்று குழந்தைத்தனமாகக் கேட்டாள் நீலா.

சாமியார் சிரித்தார். "பாப்பா கேள்விக்கு என்ன பதில் சொல்வது தம்பி! ஞானமே எட்டாத தொலைவில் இருக்கும்போது, ஞான திருஷ்டி எங்கிருந்து வரும்? அஞ்ஞானச் சுழலிலிருந்து இன்னும் விடுபட்டபாடில்லையே! ஏன் தம்பி, ஞானத்தை எட்டிப் பிடித்து விட்டதாக நினைக்கிறதே, ஒரு அஞ்ஞானம் தானே!" என்றார்.

"அதிருக்கட்டும், குழந்தை பிழைத்துவிட்டதா? நிலைமை ரொம்பவும் மோசமாயிருப்பதாகச் சொன்னார்களே!" என்று கேட்டேன்.

"குழந்தைக்கு ஆபத்தில்லை. எல்லாம் அவன் அருள்," என்றார் சாமியார்.

"உங்கள் வைத்தியத்தில் ஜனங்கள் வைத்திருக்கும் நம்பிக்கை வீண் போகுமா?" என்றேன்.

"அந்த நம்பிக்கை எப்படிப் பரவியது என்பது எனக்கே புரியாத ரகசியம். ஒரு நாள், ஒரு மாடு மேய்க்கிற பையன் நடு வழியில் மயங்கிக் கிடந்தான். வேறு திக்கில்லாத அந்தப் பையனைத் தூக்கி வந்து, ஏதோ பாராபரியாகக் காதில் கேட்ட சில மருந்துகளைக் கொடுத்து கவனித்து வந்தேன். உழைப்பாளியின் உடம்புக்கு பிரமாத வைத்தியம் என்ன வேணும்! பையன் சீக்கிரமே திடமாகி எழுந்துவிட்டான். அது முதல் என் வைத்தியத்திலே ஜனங்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுப் போயிற்று. ஆனால், என்னைத் தேடி யார் வந்தாலும், என்ன நோயாயிருந்தாலும், நான் கொடுக்கும் மருந்து, இந்தத் திருநீறு ஒன்றுதான். கடவுள் அருள் இருந்தால் எதுவும் சரியாகும் என்பது, என் அசைக்க முடியாத நம்பிக்கை. அந்த நம்பிக்கை இந்தத் திருநீறு மூலம் மற்றவர்கள் மனதிலும் ஏற்பட்டுப் போகிறது. எந்த வியாதிக்

கும் நம்பிக்கையைவிடச் சிறந்த மருந்து வேறே என்ன இருக்க முடியும்?"

"அந்த வீட்டார் தற்கால நாகரிகத்தில் ஊறிப் போனவர்கள் ஆயிற்றே? உங்கள் மருந்தை ஒப்புக் கொண்டார்களா?"

"யாராயிருந்தால் என்ன தம்பி! சுக துக்கம் எல்லோருக்கும் ஒன்றுதானே? கஷ்ட காலம் வரும்போதுதான், மனிதன் மனதிலிருந்து அகம்பாவம் மறைந்து, தான் எவ்வளவு அற்பப்பிராணி என்ற அறிவு ஏற்படுகிறது.—ஆனால் அவர்கள் எனக்குப் பணம் கொடுக்க வந்தது தான், என மனதுக்குக் கஷ்டமாயிருந்தது. என் தேவைகள் சொற்பம். அவைகளை அவ்வப்போது ஆண்டவன் யார் மூலமாகவாவது தீர்த்து விடுகிறார். அப்படியிருக்கும்போது எனக்குப் பணம் எதற்கு?" என்றார் சாமியார்.

"உங்களை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை, அவ்வளவுதான்," என்றேன்.

நீலா தன் கையிலிருந்த ஒரு பழத்தை, யானைக்குக் கொடுக்கும் ஆவலுடன், அதனருகே ஒரு அடி செல்வதும், பின்பு பயத்தால் பின் வாங்குவதுமாயிருந்தாள். "பயப்படாதே பாப்பா. வேலன் உன்னை ஒன்றும் செய்யாது. என்னைப்போல் சாதுதான் அதுவும்," என்று சிரித்துக்கொண்டே, சாமியார், "வேலா, வாங்கிக்கப்பா!" என்று யானையைப் பார்த்துக் கனிவுடன் கூறினார். வேலன் தன் துதிக்கையை நீட்டி, நீலா கையிலிருந்த பழத்தை நாசூக்காக வாங்கிக்கொண்டது.

"நீங்கள் பேசுவதெல்லாம் இதற்குப் புரியுமா, தாத்தா?" என்று கேட்டாள் நீலா.

"பேசுவது மட்டுமில்லே கண்ணு. நான் பேசாமல் இருந்தால்கூட என் மனதைப் புரிந்து கொள்ளும் சக்தி அதற்கு உண்டு," என்றார் சாமியார்.

"இந்த வாயில்லாப் பிராணிக்கும் உங்களுக்கும் உள்ள நட்பு ஆச்சரியமானது," என்றேன்.

"வாயில்லாப் பிராணிதானே? மனசில்லாப் பிராணி இல்லையே! ஆண்டவன் படைப்பில் மனசில்லாப் பிராணி எதுவுமே கிடையாது."

"ஆனால், அந்த மனசு பேசும் பேச்சு, உங்களைப்போன்ற சில மகான்களுக்குத்தானே புரிய முடியும்!"

"மகான்கள் கோஷ்டியில் என்னையும் சேர்த்து விடாதே, தம்பி. இன்னும் கொஞ்ச நாள் இந்த உலகத்தில் இருக்கவேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறேன்," என்று சிரித்தார் சாமியார்.

இரட்டை மாடு பூட்டிய வில் வண்டி யொன்று, ஜல்ஜல் என்ற சப்தத்துடன் எங்கள் அருகே வந்து நின்றது. மளிகைக்கடை மாணிக்கம், அதிலிருந்து இறங்கி, சாமியாரை வணங்கி நின்றார். "உங்களைத் தேடித்தான் கோயிலுக்குப் போனேன். இங்கு வந்திருப்பதாகத் தெரிந்தது," என்றார்.

"என்ன விசேஷம்? என்று கனிவுடன் விசாரித்தார் சாமியார்.

"ஊரிலே கரும்பு அறுவடையாச்சு. ஆலைக்கு அனுப்பு முன்னே ஒரு கட்டு வேலனுக்குக் கொண்டுபோடப் போனேன்......"

"இப்பக் கரும்பு—பின்னர் ஆடி வந்ததும் வெல்லம். வேலா, யோகம்தான் உனக்கு," என்று சிரித்துக் கொண்டே சாமியார், மாணிக்கத்தைப் பார்த்து, "அதெல்லாம் வேலன் கவனித்துக்கொள்வான். நான் கவனிக்க வேண்டியது ஏதாவது உண்டா?" என்று கேட்டார்.

"வேறே ஒண்ணுமில்லே. என் மகன் அருணாசலம் பரீக்ஷையிலே பாஸ் செய்திட்டு பட்டணத்திலேயிருந்து வந்திருக்கான்....."

"அப்படியா தம்பி! ரொம்ப சந்தோஷம். அப்புறம்! கலியாணத்துக்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டியதுதானே!"

"நம்ப பரமசிவம் பிள்ளை வீட்டிலேதான் சம்பந்தம் செய்துக் கொள்வதாயிருக்கேன். அவர் மக பத்மா......"

"ஓ! அந்தக் குழந்தையா! இந்தப் பாப்பா மாதிரி இருக்கும் போதிருந்தே தெரியுமே! தங்கமான பெண், உன் மகனுக்கு ஏற்ற பெண். சிக்கிரமே கலியாணத்தை முடித்துவிடு தம்பி," என்றார் சாமியார்.

"முடிக்கிற மாதிரித்தான். நிச்சயதார்த்தம் இன்னிக்கு சாயங்காலம். தாங்களும் கூட இருந்து......"

"என்னை இந்த சம்சாரச் சுழலில் ஏன் தம்பி இழுக்கிறாய்? நான் அங்கே வந்து என்ன செய்ய?"

"நீங்களே இப்படிக் கேட்டா நான் என்ன சொல்றது! இவ்வளவு முக்கியமான காரியம் நீங்க வந்து ஆசீர்வதிக்காம நடக்க முடியுமா?"

"அப்படியே ஆகட்டும் தம்பி. உனக்குத்தான் அந்த மனக்குறை எதுக்கு?" என்று சம்மதித்தார் சாமியார்.

"நிச்சயதார்த்தத்துக்கு நீங்களும் வரணுங்க. நான் போய் வரேன்," என்று, வண்டியில் ஏறிப் போய்விட்டார் மாணிக்கம்.

அப்போது அழைத்ததோடு நில்லாமல் மறுபடியும் ஒருதரம் அவரே நேரில் வந்து அழைத்தும், நான் அவர் வீட்டு நிச்சயதார்த்தத்துக்குப் போகமுடியவில்லை. அன்று வடநாட்டிலிருந்து, என் மாமா, முன் அறிவிப்பில்லாமல், எங்கள் வீட்டுக்கு வந்து இறங்கினார். மாமா போலீஸ் இன்ஸ்பெக்டராக வேலை பார்த்தவர். வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பிறகு, சென்ற பத்து வருஷமாக வடநாட்டில் தம் மகனுடன் தங்கிவிட்டார். க்ஷேத்ராடனத்தில் பற்றுள்ளவர். வடநாட்டில் அவர் சுற்றாத க்ஷேத்திரம் பாக்கி கிடையாது. இப்போது தென்னாட்டு க்ஷேத்திரங்களை மறுபடி ஒரு தரம் சுற்றிவிட்டுத் திரும்பும் நோக்கத்துடன் வந்திருந்தார். பழுத்த பெரியவர். யாத்திரைப் பற்று மட்டுமல்ல; ஒவ்வொரு ஊரிலும் உள்ள விசேஷ அம்சங்களைத் தெரிந்து வைத்துக் கொண்டு, அவற்றை வர்ணிக்கும் ஞாபக சக்தியும் அவரிடம் இருந்தது. எங்கள் வீட்டில் வந்து

இறங்கி, சம்பிரதாயமான க்ஷேம விசாரணை முடிந்ததுமே, அவர் கேட்ட கேள்வி யானைச் சாமியாரைப் பற்றித்தான். "யாரப்பா இந்த யானைச்சாமியார்?"

"ஏன் கேட்கிறீர்கள்?"

"ஸ்டேஷனிலிருந்து வரும்போது, வண்டிக்காரனிடம், இந்த ஊர் விசேஷங்களைப்பற்றி விசாரித்தேன். எடுத்த எடுப்பிலேயே யானைச்சாமியார் பெயரைத்தான் சொன்னான்," என்றார் மாமா.

"வண்டிக்காரன் சொன்னது சரிதான். இந்த ஊர் விசேஷங்களில் முதல் இடம் யானைச்சாமியாருக்குத்தான் கொடுக்கவேண்டும்," என்று நான் சொல்லிக் கொண்டிருக்கும்போதே, வீதியில் மணியோசை கேட்டது. "யானைச்சாமியார்! யானைச்சாமியார்!" என்று கத்திக்கொண்டே நீலா வெளியே ஓடினாள். நானும் மாமாவும் அவளுடன் வாயிலுக்கு வந்தோம். சாமியார் வாயிலில் நின்றுகொண்டிருந்தார். நான் வணக்கம் தெரிவித்ததும், என்னைப் பார்த்து புன்னகை புரிந்தார்.

"என் மாமா வடநாட்டிலிருந்து வந்திருக்கிறார்," என்று நான் மாமாவை அறிமுகம் செய்து வைத்ததும், அவர் பக்கம் திரும்பினார் சாமியார். அசைவற்ற பார்வையால் சாமியாரையே பார்த்துக்கொண்டு நின்றார் மாமா. திடீரென்று, "முருகேசம், நீயா! நீயே தானா முருகேசம்!" என்று கூறிவிட்டார்.

அந்தப் பெயர் காதில் விழுந்ததுமே, சாமியார் வேறு மனிதர் ஆகி விட்டார். அமைதி ததும்பிய முகத்தில், திடீரென்று கொந்தளிப்புத் தோன்றியது. கண்களில் கண்ணீர் பொங்கிற்று. புயலில் அகப்பட்ட மரம்போல், அவர் நிலையில் தள்ளாட்டம் கண்டது. என் மாமா பாய்ந்து சென்று, அவரைத் தாங்கிப்பிடித்துக் கொண்டிராவிட்டால், கீழே விழுந்தேயிருப்பார். இந்த நிலை ஒரு கணத்துக்குத்தான். மறு கணம் அவர் முகத்தில் முன்போல் அமைதி நிறைந்த புன்னகை தவழ்ந்தது.

"முருகேசம், உன்னைப் பார்த்து இருபது வருஷங்களாகியும், உன்னுடைய கம்பீரமான முகத்தை நான் மறக்கவில்லை. உன்னுடைய நடையைப் பார்த்ததுமே தெரிந்து கொண்டேன். ஆனால், முருகேசம், இந்தக் கோலத்தில் உன்னைப் பார்க்கப் போகிறோம் என்று, கனவிலும் நான் நினைக்கவில்லை—உன்னுடைய நடேசனை உனக்கு நினைவிருக்கிறதா, மறந்துவிட்டாயா?" என்றார் மாமா.

"மறக்க முடியுமா, நடேசா! தினமும் ஒரு தடவையாவது அந்தப் பெயர் வாயில் வராமல் இருப்பதில்லையே. உடனேயே உன் நினைவும் கூடவே தோன்றும். அதைத் தொடர்ந்து பழைய ஞாபகங்கள்—நடேசா, வேஷத்தில்தான் நான் சந்நியாசி. மனதில் நான் பழைய முருகேசன்தான். என் மனதுக்குள் கொந்தளிக்கும் உணர்ச்சிகள், என்னை ஒரேயடியாக அமுக்கி விடாமல் இருப்பதற்காகத்தான், வேலனைத் துணையாக வைத்துக்

கொண்டிருக்கிறேன்" என்றார் சாமியார்.

"முருகேசா, உலகத்துக்கு நீ சந்நியாசி. உன் வேஷத்துக்காக உலகம் உன்னை வணங்க வரலாம். அந்தக் கூட்டத்தோடு நானும் உன்னை வணங்க வருவேன்.—உன் சந்நியாசி வேஷத்துக்காக அல்ல; இருபது வருஷமாக என் இதயத்தில் பூஜித்து வரும், உத்தமத் தியாகி முருகேசன் நீ என்பதற்காக," என்றார் மாமா, தழுதழுக்கும் குரலில்.

"நேரமாகிறது நடேசா, அப்புறம் தம்பியை அழைத்துக்கொண்டு கோயில் பக்கம் வா. சாவகாசமாகப் பேசலாம்," என்று கூறிவிட்டு, அங்கிருந்து அகன்றார் சாமியார்.

யானையும், சாமியாரும் கண்ணுக்கு மறையும் வரை, வாயிலிலேயே நின்று பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, மாமா கூடத்திற்கு வந்து, ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார். கலங்கிப் போன அவர் மனதில், இன்னும் கலக்கத்தை உண்டாக்க நான் விரும்பவில்லை. அவராக ஆரம்பிக்கும் வரை பொறுமையுடன் காத்திருந்தேன். நான் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

"ஊருக்கே விசேஷம் யானைச் சாமியார். அவர் வேறு யாருமில்லை. முருகேசன்—என்ன விசித்திரம்?—முருகேசனும் நானும் பாலிய சிநேகிதர்கள் தம்பி. ரெண்டு பேரும் ஒண்ணு விளையாடினோம். ஒண்ணுப் படிச்சோம். படிப்பு முடிஞ்சதும் ஒரே இலாகாவிலே வேலைக்குப் போனோம்.—என்ன?—உங்கள் யானைச் சாமியார், ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரா யிருந்தார் என்றால், ஆச்சரியமாயிருக்கிறதா? ஆனால்...உண்மை அதுதான். இலாகாவிலேயே நிலைத்திருந்தால், எவ்வளவோ பெரிய பதவிக்கு வந்திருக்க வேண்டியவன். ஆனால் விதி குறுக்கே நின்றது. சொந்த மகனே சத்துருவாய்த் தோன்றினான். அந்தப் பையன் சிறுவனாய் இருக்கும்போதே, மனைவியை இழந்துவிட்ட முருகேசம், அவனை அளவுக்கு மீறிய செல்லம் குடுத்து வளர்த்து விட்டான். அதன் பலன் விபரீதமாய் முடிந்தது. காலேஜ் படிப்புக்காக பட்டணத்துக்குப் போன பையன், கட்டுக் கடங்காத துஷ்டனாய் மாறிவிட்டான். கொலைக்கும் கொள்ளைக்கும் அஞ்சாத துஷ்டர் கூட்டத்தில் கலந்துகொண்டு, அவர்களுடன் தலைமறைவாய்த் திரியவும் ஆரம்பித்து விட்டான். முருகேசம் அவனைக் கண்டு பிடித்து, நல்லவழிக்குக் கொண்டு வருவதற்காகச் செய்த முயற்சிகளெல்லாம் வீணாயின.

சேலம், கோயமுத்தூர் பிராந்தியங்களில், திடீரென்று கொள்ளை கொலை முதலான துணிகரமான குற்றங்கள் அதிகரித்து விட்டதை உத்தேசித்து, அதிகப்படியாக அநேக போலீஸ் உத்தியோகஸ்தர்களை, அந்தப் பிராந்தியங்களுக்கு மாற்றினார்கள்.

அப்படி மாற்றப்பட்டவர்களில் நானும் முருகேசனும் இருந்தோம். இருவரையும் கோயமுத்தூர் நகருக்கே மாற்றியிருந்தார்கள். ஒரு நாள், பக்கத்துக் கிராமத்திலுள்ள ஒரு மிராசுதார்

வீட்டைக் கொள்ளேயிடத் திட்டமிட்டிருக்கிருர்களென்று உளவு தெரிந்து, ரகசிய பந்தோபஸ்துகள் செய்து வைத்திருந்தோம். எங்கள் முன்னேற்பாட்டை அறியாத கொள்ளைக் கூட்டத்தார், வலுவில் வந்து எங்களிடம் சிக்கிக் கொண்டார்கள். ஒருவன் மட்டும் எப்படியோ தப்பிக் கொண்டு ஓடுவதைக் கண்டதும், நானும் முருகேசனும் அவனைத் துரத்திச் சென்ருேம். தப்ப வழி கிடையாதென்று கண்ட அவன், கையில் துப்பாக்கியுடன் எங்கள் பக்கம் திரும்பினுன். டார்ச்சு வெளிச்சத்தில் அவன் முகத்தைப் பார்க்கவும் நாங்கள் ஸ்தம்பித்து நின்று விட்டோம். முருகேசத்தின் மகனே, எங்கள் எதிரில், கையில் துப்பாக்கியுடன் நின்று கொண்டிருந்தான். "சுடு" என்று கூவினுன் முருகேசன், நான் தயங்கினேன். எதிரியின் கைத் துப்பாக்கியிலிருந்து ஒரு குண்டு, என் தோளை உராய்ந்து கொண்டு சென்றது. மறுகணம் முருகேசன் கைத் துப்பாக்கி வெடித்து, முருகேசத்தின் மகன் அப்படியே சுருண்டு விழுந்துவிட்டான்," என்றுநிறுத்தினுர் மாமா.

"அப்புறம்?" என்றேன் ஆவலுடன்.

"தன் கையாலேயே உயிரிழந்த தன் மகனுடைய உடலெதிரே, முருகேசம் பித்துப் பிடித்தாற்போல் உட்கார்ந்திருந்த காட்சியை,நான் என்றுமே மறக்க முடியாது. அன்றுதான் அவனைக் கடைசியாய்ப் பார்த்தேன். மறுநாளே முருகேசன் வேலையை ராஜிநாமாக் கொடுத்துவிட்டு, எங்கோ மறைந்துவிட்டான். இருபது வருஷம் கழித்து, இன்றுதான் பார்க்கிறேன். எப்படி இருந்த முருகேசம் எப்படி மாறிவிட்டான்?..." என்று, பெருமூச்செறிந்தார் மாமா.

நான் பிரமை பிடித்தாற்போல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தேன். பின்பு, "எவ்வளவு பெரிய வேதனை அவர் மனதை அரித்துக் கொண்டிருக்கும்? அப்படியிருந்தும் எவ்வளவு அமைதியை அவர் முகம் பிரதிபலிக்கிறது...?" என்று ஆச்சரியத்துடன் கூறினேன்.

"யானைச் சாமியார் உங்கள் ஊருக்கு மட்டுமில்லை தம்பி, எல்லாருக்குமே உரிய, மகா புருஷர்," என்ருர் மாமா.

For Developing, Printing and Enlarging
& for everything in
Photography at Competitive rates

Visit :

CO-OPERATIVE PHOTO SERVICE

New Coronation Hotel, Keeling Lane

(Behind Scindia House)

NEW DELHI

"இது சுலபம்...

லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து அதிக அழகுடன் விளங்குங்கள்" என்று கூறுகிறார்

ராகினி.

ராகினி கூறுவதாவது: "நான் வழக்கமாக லக்ஸ் டாய்லட் சோப் உபயோகித்து பெறும் சரும பாதுகாப்பை ஒருபொழுதும் தவறவிடமாட்டேன். லக்ஸ் டாய்லட் சோப்பின் சருமத்திற்கு ஊட்டமளிக்கும் சக்தி என் சருமத்தில் அற்புத மாறுதலை ஏற்படுத்தியிருப்பதைக் காண்கிறேன்... சருமத்திற்கு புது சோபையும், மகிழ்ச்சிதரும் வழவழப்பும் அளித்திருக்கிறது."

லக்ஸ் டாய்லட் சோப்

சினிமா நட்சத்திரங்களின் அழகு தரும் சோப்

LTS. 369-50 TM

கண்ணிலே பெண்!

"திருக்குறளார்"

"காமத்திற்குக் கண்ணில்லை" என்பது ஒரு பழமொழி; நல்ல பழமொழியுங்கூட; ஆனால் இன்றைய நாளில் அது ஒரு நல்ல பழமொழியாகக் கருதப்படுகிறதா என்பது சந்தேகந்தான்.

இப்பழமொழி எவ்வளவு உயர்ந்த, நல்லபடியான இன்பக் கருத்தில் கூறப்பட்டுள்ளது என்பதை, நமது பேராசிரியர் வள்ளுவப் பெருந்தகையின் வாயிலாக அறிந்துகொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் மனதில் பூத்து மலர்ந்த நல்லின்பக் கருத்துக்களில், இப்பழமொழியின் சாரமும் ஒன்றாகும். "காமத்திற்குக் கண்ணில்லை" என்ற பழமொழிக்கு அர்த்தம் பண்ணுவதாகச் சொல்லிக்கொண்டு, காம வேகத்தில் இருப்பவர்கள் சிந்தனையில்லாமல் மனம்போன போக்கில் நடந்து கொள்ளுவார்கள் என்பதுதான், இந்தப் பழமொழியின் பொருள் என்று நினைப்பது, முற்றிலும் தவறும் அபத்தமுமாகும். அது, அந்தப் பழமொழிக்கு அர்த்தமே ஆகாது. அதனுடைய நல்ல பொருளினைத் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இங்குதான், ஆசிரியர் வள்ளுவனாரின் இன்ப உரை வருகின்றது.

'காதல்' ஆரம்பமாவது, பார்வைகளினால்தான். காதல் வேகம் வெளிப்படையில் தெரியுமாறு நடந்து கொள்ளுகிறான் காதலன். காதலியோ, அப்படிக்கில்லாமல், தனது எண்ணங்களை மறைத்து வைத்து நடந்துகொண்டு வருகின்றாள். இது முறையுங்கூட.

தனது இன்பப் பார்வையால்—பார்வைகளினால்—காதலியின் தோற்றத்தினைக் கண்டு கண்டு—நாள்தோறும் இன்ப உணர்ச்சியில் வளர்ந்து வந்த காதலன், முடிவான ஒரு கட்டத்திற்கு வந்துவிடுகின்றான். நாம் மேலே கூறிய பழமொழியின் சிறந்த பொருள் விளக்கமாக்கப்பட வேண்டிய இடம் வந்துவிட்டது. காதலியை, அடிக்கடி சந்தித்தும்கூட, அவனுக்குத் திருப்தி ஏற்படுவதில்லை.

தனது—அருமையான—ஆருயிரினும் சிறந்த காதலியை எப்போதும் சந்தித்துக்கொண்டே இருக்க வேண்டும் என்பதாக வந்து விட்டது காதலனுடைய எண்ணம். என்ன செய்வான்? விரைவில் ஒரு முடிவுக்கும் வந்துவிட்டான். சுருக்கமாகச் சொல்லிவிட வேண்டுமானால், காதலன் தனது காதலியைத் தனது கண்களிலேயே கொண்டு வந்து வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்பதாக அவனுடைய உள்ளம் பேசிவிட்டது. காதலனும் ஏற்றுக்கொண்டான். இந்த முடிவுக்கு ஒரு சிறு தகராறு குறுக்கே நிற்பதையும் காதலன் புரிந்து கொள்ளாமல் இல்லை.

கண்களில் இரண்டு கருமணிகள் இருக்கின்றனவே அங்குதான் காதலியைக் கொண்டுவந்து வைத்துக்கொள்ள வேண்டும். பார்வை தெரிவது அவைகளினாலேதான்! ஆனால், அந்தக் கருமணியில்

கொண்டுவந்து, காதலியை வைத்துக்கொள்ள வேண்டுமென்றால், அங்கே **இடமில்லையே** என்பது, அப்போதுதான் காதலனுக்குத் தெரிந்தது ! ஏன் ?

கண்களில் இருக்கும் இரண்டு கருமணிகளும் மிகமிக இன்றியமையாதவைகளாகும். அவைகள் இல்லையென்றால் பார்வையே கிடையாது. அந்த இரண்டு கருமணிகளிலும் சிறு உருவங்கள் தெரிவதுண்டு. அவைகளைப் 'பாவை' என்று கூறுகின்றோம்—பாவைகள் தெரியவில்லை யென்றால், 'குருடன்' என்றுதான் அர்த்தம் !

நாம் மேலே குறிப்பிட்ட காதலன்—தனது அருமையான காதலியைத் தனது கண்களிலேயே கொண்டுவந்து வைத்துக்கொள்ள வேண்டும்—அந்தக் கருமணியில் தனது காதலி இருக்க வேண்டும்—என்று முடிவுசெய்த காதலன், ஏற்கனவே அந்தக் கருமணிகளில் இருக்கும் **பாவைகளைப்** பார்த்துப் பேச ஆரம்பிக்கின்றான். ஏனெனில், இந்தப் பாவைகள் இருக்கும் வரையில், தான் நினைக்கின்ற மாதிரி தனது காதலியைக் கருமணியில் கொண்டுவந்து வைத்துக் கொள்ள முடியாது. ஆதலால்தான், காதலன் தனது கண்களில் இருக்கும் கருமணிகளைப் பார்த்துப் பேச ஆரம்பிக்கின்றான். பேச்சு மட்டுமல்ல—ஒரு வேண்டுகோள் விடுக்கின்றான். அதாவது—தான் தனது காதலியைக் கொண்டுவந்து கண்களில் வைத்துக்கொள்ள ஆசைப்படுகின்றான் ஆனபடியால், அந்தப் பாவைகளை, **கண்களை விட்டு**, வெளியே போகுமாறு கேட்டுக்கொள்ளுகின்றான். அவைகளும் இருந்துகொண்டு இருந்தால் காதலி வந்து தங்குவதற்கு இடமில்லையாம் ! நன்கு சிந்தித்து அறியவேண்டிய இடம்.

காதலியின்பால் கொண்டிருக்கும் **மிகு ஆர்வத்தால்** தனது கண்களில் இருக்கும் பாவைகளைப் போகச் சொல்லுகின்றான். **'கண்களில் இருக்கும் பாவைகள் போய்விட்டால்—கருமணிகளில் பாவைகள் போய்விட்டால், குருடனாகிவிடுவோமே என்பதையும் மறந்தான் !'** அப்படியே குருடனானாலும் பரவாயில்லை !—காதல் நிறைவேறுவதுதான் அவனுக்குப் பெரிது !

இக்கருத்தினை ஆசிரியர் வள்ளுவனார் உள்ளம், எவ்வாறு கூறுகின்றது என்பதனைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். காதலன் பேசுகின்றான் : "எனது கண்களின் கருமணிகளில் இருக்கும் பாவைகளே, நீங்கள் அந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள் ; ஏனெனில், யான் விரும்பிக் காதலிக்கும் பெண்ணனவள் வந்து தங்குவதற்கு வேறு இடமில்லை—ஆதலால் நீங்கள் இடத்தைக் காலி செய்துவிடுங்கள்"—இவ்வரிய கருத்தினை **ஒரு குறட்பா** விளக்கிக் காட்டுகிறது :—

> **கருமணியில் பாவாய் நீபோதாய்; யாம் வீழும்**
> **திருநுதற்(கு) இல்லை இடம்.**

[வீழும் - விரும்புகின்ற; திருநுதல் - அழகிய நெற்றியையுடைய பெண்.]

For

Good Butter and Ghee

Please remember to

contact

BUTTERWAYS DAIRY

Kashmere Gate, Delhi.

Suppliers to the South India Club Co-operative Supply Society Limited, and several messes.

Telephone : 24357

பஞ்சாமியின் பயணம்

பூர்ணம் விச்வநாதன்

வாடிய முகத்துடன் பஞ்சாமி உள்ளே வந்தான்.

திடீரென்று ஒரு நாள் பஞ்சாமிக்கு யோகம் அடித்தது. யாரும் எதிர்பார்க்கவில்லை. ஆசாமி சரியான ஆளைப் பிடித்து வேலை செய்து விட்டான் என்பது அப்போதுதான் எங்களுக்குத் தெரிந்தது. நாங்களும்தான் இந்த டில்லி மண்ணை உதறிவிட்டுத் தமிழ் நாட்

டுக்கு ஓடிவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தோம். ஆனால் அதிருஷ்ட தேவதை எங்களெல்லோரையும் விட்டுவிட்டு, பஞ்சாமிக்கு மாலையிட்டு மகிழ்ந்தாள். நாங்களெல்லாம் இனியும் துரதிருஷ்டத்தை இறுக அணைத்துக் கொண்டே டில்லியில்தான் பாக்கி நாட்களைத் தள்ளியாக வேண்டும். இந்த எண்ணம் எங்கள் மனதை ஒருபக்கம் வாட்டினாலும், ஏதோ பஞ்சாமிக்காவது அதிருஷ்டம் பிறந்ததே என்று மறுபக்கம் சமாதானமடையவும் தயாராயிருந்தோம்.

அன்று ஆபீஸ் ரூமில் எல்லாம் வழக்கம்போலத்தான் இருந்தது. வேலுச்சாமி ஒரு பக்கம் கட்டைப் பேனா ஒன்றை வைத்துக்கொண்டு, வரிந்து தள்ளிக் கொண்டிருந்தான்; அவன் மேஜையைச் சுற்றிலும், தரையில் எங்கு பார்த்தாலும் ஒரே மைப்பொட்டாயிருந்தது. ஜன்னலருகே சாம்பன் ஒரு டைப்மெஷினை வைத்துக்கொண்டு பொரிந்து கொட்டிக் கொண்டிருந்தான். ஒரு மூலையில் 'ஒடிசல்' முதலியார், ஒரே அம்பாரமாக காகிதக் கட்டுகளைக் குவித்துக் கொண்டு, அவற்றிலிருந்து, ஒரு குறிப்பிட்ட நம்பருள்ள காகிதத்தைத் தேடிப் பிடிப்பதில் முனைந்திருந்தார். சுப்பராயன் ஒரு நிலையில்லாமல் பந்து மாதிரி நாலா பக்கமும் உருண்டு கொண்டிருந்தான், வேலையைத் தட்டிக் கழித்த வண்ணம். எனக்கு எப்போதும் போல் தூக்கம் வந்தது...எல்லோரும் வழக்கப்படி இருந்தோம். ஆனால் பஞ்சாமியை மட்டும் அவனுடைய 'ஸீட்'டில் காணவில்லை. இதுவும் அவன் திரும்பிவரும் வரையில் எங்களுக்கு விபரீத அம்சமாய்ப்படவில்லை.

“அப்பா அருமை நண்பர்களே, நான் போகிறேன் இந்த ஊரை விட்டு” என்று சொல்லிக்கொண்டு அவன் பிரவேசித்ததும், நாங்களனைவரும் துள்ளி எழுந்து அவனைச் சூழ்ந்து கொண்டு, கேள்விகளால் அவனைத் திணற வைத்தோம். தமிழ் நாட்டுக்கு மாற்றல் வாங்கிக்கொண்டு மானேஜர் அறையிலிருந்து வந்திருந்தான் அவன். அங்கு தமிழ் நாட்டில் ஒரு வியாதிக்கார ஆசாமி பெரிய லீவில் போகப்போவதை, பஞ்சாமி முன் கூட்டித் தெரிந்துகொண்டு, சரியான்படி இங்கு மானேஜரைக் 'குழையடித்து' மாற்றல் வாங்கிக் கொண்டு விட்டான். நாங்களும் இருக்கிறோமே, சதா பல்லையிளித்துக்கொண்டு!

“எந்த ஊருக்கு மாத்தலாயிருக்கு பஞ்சாமி?” என்று ஒரு கேள்வியை உருட்டி விட்டான் சுப்பராயன், பொறுமையை சிரமத்துடன் மறைத்துக்கொண்டு.

“பானையூருக்குப் போட்டிருக்கான்” என்று பஞ்சாமி அலட்சியமாய் பதில் சொன்னான்.

'ஒடிசல்' முதலியார், ஆச்சரியத்தில், துணுக்கு துணுக்காய் ஒடிந்து போகப் பார்த்தார். “அடடே பானையூரா? குடுத்து வச்ச ஆளய்யா நீ. 'பானையூர்லே, ஆனை கூட அரையணாத்தான்'னு சொலவம் சொல்லுவாங்களே! அடிச்சே போ!” என்று பொருமினார்.

பஞ்சாமி கர்வத்துடன் 'சூள்' கொட்டினான். “போறும் முதலியார், இந்தத் தொல்லை பிடிச்ச டில்லி ஊர்லே பணக் கஷ்டத்துலே பெரண்டது போறும். பானையூர்லே பைசா மிச்சம் பிடிக்கிறேனா இல்லையோ, பணக்

கஷ்டம் இல்லாமலாவது தப்பிக்கலாம்" என்றான் அலுப்புடன்.

வேலுச்சாமிக்கு மேலும் விவரம் வேண்டியிருந்தது. "அப்போ என்னைக்கி அங்கே போய் வேலை ஏத்துக்கிடணும்?" என்று ஆவலோடு கேட்டான்.

"அது எந்த நிமிஷமும் பொறப்பட ரெடியா இருக்கணும்னு மானேஜர் சொல்லிட்டார். நான் இப்பவே போய் மூட்டைகிட்டையெல்லாம் கட்டி வச்சுடப்போறேன்" என்றான் பஞ்சாமி கர்வத்துடன். கூடவே, "ஒங்களையெல்லாம் விட்டுட்டுப் போகப்போறோம்ங்கறதை நெனைச்சா மனவருத்தம் தாங்க முடியலை" என்றும் உருகினான்.

"அட, மறுபடி சந்திக்காமப் போயிடுவோமா?" என்று நான் சொல்லி வைத்தேன், கண்களை ஈரமாக்கிக் கொண்டு.

உடனே சாம்பன் வெடுக்கென்று, "எங்கே சந்திக்கிறது? நாம இந்தச் சந்தியிலேதான் என்னிக்கும் நிக்கப்போறோம்" என்றான் அழாத குறையாக. அவனைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது.

எனக்கு திடீரென்று முக்கிய விஷயம் ஞாபகத்துக்கு வந்தது. "முதலியார் ஸார், இந்தப் பஞ்சாமிப் பயலுக்கு டீ பார்ட்டி, சீப் பார்ட்டி குடுத்து வெரட்ட வேண்டாமா? இத்தனை நாள் பழகிட்டு, ஒரு பிரிவுபசாரம்கூட இல்லாட்டா..." என்று நான் சொல்லி முடிப்பதற்குள், எல்லோரும் என்னை ஆமோதித்தார்கள்.

வேலுச்சாமி கவலையுடன், "பிரிவுபசாரம்னு வச்சிட்டு, வெறும் சொற்பொளிவா அவன் தலையிலே கொட்டினாப் போதாது; பசி தணியறதுக்கு, மொதல்லே ஏற்பாடாகணும்" என்றான்.

"அது இல்லாமலா? தலைக்கு இத்தனைன்னு வசூல் பண்ணிடலாம்" என்றான் சாம்பன்.

பஞ்சாமி பெருமையால் முகம் சிவக்க, "ஹிஹிஹி, அதெல்லாம் எதுக்கப்பா?" என்று இழுத்தான். "அட சரிதாண்டா, நீ சும்மா இரு" என்று எல்லோரும் அவன் வாயை அடைத்தோம்.

"என்னைக்கி வச்சுக்கிடறது?" என்றான் வேலுச்சாமி.

"நாளைக்கே சாயங்காலம் வச்சுகிடறதுதான் சரி; இந்த ஆளுதான் மூட்டையைக் கட்டிகிட்டுத் திரியறானே" என்று முதலியார் சொன்னார்.

"அப்போ ஒரு லிஸ்ட் போடுவோமா—மொத்தம் எத்தனை பேர், தலைக்கு எத்தனை பணம், இதுக்கெல்லாம்?" என்று சுப்பராயன் கேட்கவே, பஞ்சாமி மெல்ல வெளியே நகர்ந்தான், "நான் இனிமே இங்கே நிக்கறது மரியாதையில்லை" என்று சொல்லிக்கொண்டே.

"பாவம், நல்ல பய, போயிரான்" என்று எல்லோரும் ஒரே குரலில் சொல்லிக் கொண்டோம். எல்லோர் மனதிலும் இருந்த பல விதத் தாபம் அந்த ஒரு வாக்யமாக வெளிப்பட்டது.

* * *

மறுநாள் மாலை பிரிவுபசார விருந்து 'மோக்ளா'வாக நடந்தது. ஆபீஸ் ஆட்கள் அனைவரும் கலந்துகொண்டு மகிழ்ந்தார்கள். டில்லிக்கு வந்து தமிழை மறந்த சில நண்பர்கள், தமிழிலேயே 'சொற்பொழி'வாற்றி விருந்துக் கூட்டத்துக்கு 'திருஷ்டித் திலகம்' இட்டனர். விருந்து முடிந்து வெளியில் வந்தபோது எங்களனைவரின் கடைக்கண்களிலும் நீர் தேங்கியிருந்தது. அருமையான நண்பன் ஒருவனைப் பிரியப் போகி

ளேம் என்ற பாரம் மனத்தை மேன்மேலும் அழுத்திக் கொண்டிருந்தது. நல்ல வேளை, அவன் புறப்பட்டுச் செல்லுமுன் “பார்ட்டி” கொடுக்க முடிந்தது. திடுதிப்பென்று அவன் புறப்பட்டுச் செல்ல நேர்ந்து இந்தப் பிரிவுபசாரம் நடத்த முடியாமல் போயிருந்தால், மனம் எவ்வளவு சங்கடப்பட்டிருக்கும்!

இதற்கு மறுநாள், ஒரு ஞாயிற்றுக்கிழமையாய் போயிற்று. திங்களன்று ஆபீஸில் மீண்டும் சந்தித்த போது எல்லோரும் பஞ்சாமியைப் பற்றியே பேசினோம்.

“நேத்து ராத்திரி பஞ்சாமியைப் பார்த்தேன், அப்பா! நாமல்லாம் டீபார்ட்டி குடுத்ததைப் பத்தி அவனுக்கு ரொம்ப சந்தோசம்” என்றான் வேலுச்சாமி.

“பாவம், நல்ல பய, போயிடறான்” என்று தழுதழுத்தான் சாம்பன்.

“நேத்து அந்த டீ பார்ட்டி குடுத்த பெறகுதான் என் மனசு சந்தோசமாச்சு. அட, கையைவிட்டுக் கொஞ்சம் பைசா போயிரிச்சுன்னாலும், அவனுக்காக எத்தினி நஸ்டமானாலும் நான் சட்டை செய்ய மாட்டேன்” என்று முதலியார் கொள்கை அறிக்கை ஒன்று விடுத்தார்.

“என்ன, கையை விட்டுப் போச்சா?” என்று கேட்டேன் நான் வியப்புடன்.

சுப்பராயன் விளக்கினான். “ஒனக்குத் தெரியாதா விஷயம்? அந்த ஹோட்டல்கார ஆசாமி, கடைசி நிமிஷத்துலே லட்டு ஒவ்வொண்ணும் மும்மூணுன்னு பில் போட்டுட்டான்.”

எனக்கு ஒரே கோபம் வந்தது, இதைக் கேட்டு. “மொதல்லே ஆர்டர் குடுக்கறபோது ரெண்டணாத்தான்னு 'நயிச்சியம்' பண்ணினானே! இது தெரிஞ்சிருந்தா நம்ப 'வேம்பு விலாஸ்'லே ஆர்டர் கொடுத்திருக்கலாமே” என்றேன்.

சுப்பராயன் மேலும் விளக்கினான் விஷயத்தை: “நல்லெண்ணெய்க்கு பதிலா லட்டுவை நெய்யிலே தயார் பண்ணிட்டானாம்; அதனாலே நந்நாலணா வேணும்னான். 'சரிடா, ஒனக்கும் வேண்டாம், எங்களுக்கும் வேண்டாம், மும்மூணணாவா எடுத்துண்டு தொலை'ன்னு பணத்தை வீசியடிச்சுப் போகச் சொன்னோம். துண்டு விழுந்த $2\frac{1}{2}$ ரூபாய் சிலுவானத்தை, முதலியார்தான் தன் கையிலேருந்து போட்டார். அதிலே அவருக்கு ஒரு சந்தோஷம்.”

முதலியார் அசட்டுச் சிரிப்புடன், “அட, இதுலே என்ன? நல்ல உசிருக்குசிரான சிநேகிதனே ஊரை விட்டுப் போகும் போது, பைசாதானா பெரிசு?” என்றார்.

இதற்குள் வேலுச்சாமி, ரூமுக்கு வெளியே பார்த்த வண்ணம், “மொதலியார் சார், அந்த உசிருக்குசிரான சிநேகிதரு இந்தப் பக்கமா வந்துகிட்டிருக்காரு” என்று எச்சரித்தான்.

பஞ்சாமி உள்ளே வந்தான். அவன் முகம் வாடியிருந்தது.

“என்ன பஞ்சாமி! நீ பொறப்படற விஷயம் என்ன ஆச்சு?” என்று நான் பரிவுடன் கேட்டேன்.

பஞ்சாமியின் குரலில் அவ்வளவு 'சுரத்'தில்லை. “அதைப்பத்தித்தான் இப்போ மானேஜரைப் பார்த்துப் பேசிட்டு வரேன். அவர் திடீர்னு கல்லைத் தூக்கிப் போடறார்” என்று அவன் சொல்லி முடிக்குமுன், நாங்களெல்லோரும் ஆவலுடன் “ஐயையோ, என்னது

பஞ்சாமி?" என்று ஒரு கூட்டுக் கேள்வி போட்டோம்.

பஞ்சாமி உடனே பொது ஜனங்களுக்கு சமாதானம் கூறினான்: "மானேஜர் போட்ட கல்லு சின்னதுதான்...விஷயம் என்னன்னு, எனக்குப் பதிலா இங்கே வேலை பார்க்க வேண்டிய ஆள், கல்கத்தாவிலிருந்து வந்தாகணுமாம். அவனுக்கும் மாத்தல் ஆர்டர் போயிருக்கு. அவன் இங்கே வந்து சேர்ர வரைக்கும் நான் நகர முடியாதாம்."

முதலியார், உடம்பில் ஒவ்வொரு கணுவையும் குலுக்கிக்கொண்டு சிரித்தார். "பூ! இவ்வளவுதானா இதெல்லாம் ரெண்டே நாளுலே முடியற விசயமாச்சே! நாளையே நீ கௌம்பவேண்டியிருந்தாலும் இருக்கும். தயாராகவே இருந்துக்க" என்று எச்சரித்தார்.

பஞ்சாமி விழிகளைச் சுழற்றிக்கொண்டு, "ஓ, நான் எந்த நிமிஷமும் கௌம்ப 'ரெடி'யாத்தான் இருக்கேன்" என்றான்.

* * *

இதற்கு இரண்டு வாரத்துக்குப் பின்னரும், ஆபீஸில், நாங்கள் பஞ்சாமியைப் பற்றித்தான் பேசிக்கொண்டிருந்தோம். அவன்தான் எவ்வளவு அருமையான நண்பன்!...ஆனால் இன்னமும் அவன் பானையூருக்குப் புறப்பட்டுச் செல்லவில்லை. காரணத்தை நீங்களே ஊகிக்கலாம். அந்தக் கல்கத்தா ஆசாமி இன்னமும் டில்லி வந்து சேர்ந்தபாடில்லை; என்ன வெல்லாமோ சாக்குப் போக்குச் சொல்லிக்கொண்டு, அவன் கல்கத்தாவிலேயே, நல்ல உயர்ரக கோந்து மாதிரி ஒட்டிக்கொண்டிருந்தான். இங்கிருந்து சூடு சூடாய்க் கல்கத்தாவுக்குக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தும், அந்த ஆள், 'சீக்கு, அது இது' என்று சொல்லித் தப்பித்துக் கொண்டிருந்தான். பாவம், பஞ்சாமியின் நிலைமை பரிதாபமாயிருந்தது.

முதலியாருக்கு நம்பிக்கை போகவில்லை. "அந்தக் கல்கத்தா ஆளு எத்தினி நாளுக்குத்தான் இப்படித் தட்டிக்களிக்க முடியும்? எண்ணைக்காவது ஒருநா வந்துதானே ஆகணும்" என்று வாதித்தார்.

"பாவம், பஞ்சாமிக்கு, இனிமே பானையூருக்குப் போகத்தான் போறோமான்னு அலுப்புத் தட்டிப் போச்சு. கெடந்து தவிக்கறான்" என்றான் வேலுச்சாமி.

"'மாத்தல்தான் ஆயிடுத்தே, இனிமே என்ன கவலை'ங்கறாராம் மானேஜர், எப்படியிருக்கு?" என்று சுப்பராயன், தன் கண்டனத்தைத் தெரிவித்தான்.

"பஞ்சாமி என்னமோ லீவுகூட போடப் போறதாச் சொல்லிண்டிருக்கான்" என்றான் சாம்பன்.

இதற்குள் வேலுச்சாமி, ரூமுக்கு வெளியில் பார்த்து, "அதோ வர்ரானே ஆளு, ஒடிஞ்சுபோயி" என்று 'பராக்' கூறினான்.

வாடிய முகத்துடன் பஞ்சாமி உள்ளே வந்தான்.

இந்த சுப்பராயனுக்கு வாய் சும்மா இராது. "ஏம்பா பஞ்சாமி, நீ என்ன, பிரிவுபசாரத்தையும், பூமாலையையும் வாங்கிண்டுட்டு பிரியாம இங்கேயே சுத்திண்டிருக்கே? என்னிக்கி பயணம்?" என்றான் இரக்கமில்லாமல்.

பஞ்சாமி அசட்டுச் சிரிப்புடன், 'அட இன்னம் அந்தக் கல்கத்தா ஆள் வந்து சேரலை அப்பா. சேச்சே, எனக்குப் படுவெக்கமா இருக்கு" என்றான்.

முதலியார், பரிவுடன், "அட இதுலே என்னய்யா வெக்கம்? அந்தக்கல்கத்தா ஆளுக்கு, மாத்தல்

ஆர்டர்போயிருக்கும் போது அவுருடபாய்ச் சிருவாரோ? அப்புறம் வேலை தூள் பறந்துடாதா!" என்று ஆர்ப்பரித்தார்.

பஞ்சாமிக்கு சங்கடம் தீர வில்லை. "என்ன ஸார், எம் பாட்டுக்கு பிரிவுபசாரத்தை அள்ளி வாங்கிண்டுட்டு நகராமே இருக்கேன். நீங்கள்ளாம் என்ன நெனைக்கறேளோ என்னைப்பத்தி?"

"சேச்சே, நாங்கள்ளாம் எவ்வளவு சந்தோஷப்படறோம்! நீ ஒண்ணு" என்று நான் மழுப்பிக் கொண்டிருக்கும்போதே, இந்த சுப்பராயன், நாக்கில் அடக்கமில்லாமல், "அட மிஞ்சிப்போனா, பஞ்சாமி பதிலுக்கு ஒரு 'டீ பார்ட்டி' வச்சு கடனைத் தீத்துட்டாப் போச்சு" என்றான், உருண்டையாய்ச் சிரித்துக் கொண்டே.

"அடிரா நச்சுனு அவனை!" என்று முதலியார் சுப்பராயனைக் கண்டித்துவிட்டுப் பஞ்சாமியிடம் "நீ மூட்டை யெல்லாம் கட்டித் தயாராவே இருந்து கிட்டிரு எப்பமும்" என்று தைரியமூட்டினார்.

"ஓ, அதெல்லாம் எப்பொவோ கட்டிவச்சாச்சு. இப்பல்லாம் அடுத்த வீட்டுலேருந்து பாத்திரம் பண்டம் எரவல் வாங்கித்தான் சமையலாயிண்டிருக்கு, என் வீட்டுலே" என்று பதிலளித்துப் பல்லை யிளித்தான் பஞ்சாமி.

* * *

மேலும் ஒரு பதினைந்து நாளாயிற்று. மறுபடி அதே ஆபீஸ் ரூம் தான். மறுபடி அதே பஞ்சாமிப் பேச்சுதான்.

இந்த சுப்பராயனை என்ன செய்தாலும் தகும். ஒரு பெரு மூச்சு விட்டுச் சொல்கிறான். "ஹூம்ம்ம், சனியோடு சனி இருவத்தொம்பது, ஞாயர் முப்பது, திங்கள் முப்பத்தொண்ணு...எ அப்பா, நாம டீபார்ட்டி குடுத்து ஒரு முழுமாசத்துக்கு மேலே ஆறது-நாம என்னமோ, அவன் மறுநாளே கௌம்பப் போறான்னு, நெய்லட்டு எல்லாம் குடுத்து பார்ட்டி வச்சுட்டோம். கொஞ்சநாள் பொறுத்துப்பாத்திருந் திருக்கலாம்."

எனக்குக் கோபம் தாங்க முடியவில்லை. "டேய் சுப்பராயா. ஒன்னைப்போல ஆள்கள் இப்படிப் பேசறதுனாலேதான் அவன் நம்பளையெல்லாம் பாக்கவே வெக்கப்படறான், பாவம்" என்று அனுதாபப்பட்டேன்.

இதற்குள் வேலுச்சாமி ரூமுக்கு வெளியே பார்த்தபடி 'பாக்' கொடுத்தான், வழக்கம்போல். "அதா வர்ரான் அப்பா, பஞ்சாமி. இப்பவாச்சியும் அதைப் பத்திப் பேசாம, வேறே பொதுவா ஒலக விசயங்களைப் பத்திப் பேசலாம்" என்று எச்சரித்தான்.

பஞ்சாமி முகத்தில் இத்தனை நாட்களுக்குப் பின்னர் முதல்த் தடவையாக மகிழ்ச்சிக் குறி காணப்பட்டது. வரும்போதே, "இன்னிக்கு ராத்திரி ஒங்க எல்லாருக்கும் என் வீட்டுலே விருந்துச் சாப்பாடு" என்று கூச்சல் போட்டு எங்களெல்லோரையும் துள்ள வைத்தான். முதலியார் ஒரே மகிழ்ச்சியுடன் "ஏன் அய்யா, என்ன ஆயிப் போச்சு? பானை யூருக்குப் பயணமா?' என்று கேட்டார்.

பஞ்சாமி தலையை ஆட்டினான். "பயணமாவது, ஒண்ணுவது! இன்னிக்குத்தான் மூட்டையெல்லாம் பிரிச்சுப் போட்டேன். அந்த கல்கத்தா ஆசாமி வருவன்னு தோணலை" என்றான்.

"அப்பிடின்னா விருந்து எதுக்கு?" என்று நாங்களனைவரும் ஒரு கோரஸ்-கேள்வி போட்டோம். பஞ்சாமி சளைக்காமல்,

"உம், சும்மாத்தான்...அட நீங்க குடுத்த 'பார்ட்டி'க்கு இது பதில் 'பார்ட்டி'ன்னு வச்சிண்டாப் போச்சு" என்றான். எங்களுக்கு மிக்க ரோசம் வந்தது. ஆனால் பஞ்சாமி எங்களைப் பேசவிடாமல், தானே பேசிக்கொண்டு போனான். "இந்த ஒரு மாசமா, ஒவ்வொரு ஆள்கிட்டயும், நான் ஏன் இன்னமும் பானையூருக்குக் கௌம்பலேங்கறதை, வௌக்கி வௌக்கியே உளுத்துப் போயிட்டேன். இந்த பதில் விருந்து வச்சாத்தான் மனசு நிம்மதிப்படும். இல்லாட்டா, ஏதோ குத்தம் பண்ணினாப்லே இருக்கும்...அச்சா, நான் ஏற்பாடெல்லாம் பண்ணி முடிச்சாச்சு. எல்லாரும் வந்து சேந்துருங்கோ... நான் மத்தவங்க எல்லாரையும் கூப்பிட்டுட்டு வந்தூர்ரேன்" என்று சொல்லிக் கொண்டே வெளியே போய்விட்டான்.

நாங்கள் பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தோம். அறையிலிருந்த ஈக்களெல்லாம் எங்கள் முகங்களை உற்றுப் பார்த்துவிட்டு, வெருண்டு ஓட்டம் பிடித்தன.

* * *

பஞ்சாமி ஒரே உற்சாகத்துடன், ரொம்பப் பிரமாதமாய் விருந்து வைத்தான். குற்றவாளிகள்போல் நாங்களனைவரும் சாப்பிட்டுவிட்டு வந்தோம்.

மறுநாட் காலையும் ஆபீசில் பஞ்சாமியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம். வேலுச்சாமி இன்னமும் ஆபீசுக்கு வரவில்லை.

"கிட்டத்தட்ட அம்பது ரூவா செலவாயிருக்கும், நம்ம பஞ்சாமிக்கு" என்று கணக்குப் போட்டான் சுப்பராயன். முதலியார் நாக்கைச் சொடுக்கினார். "சேச்சே, இதே விருந்து பானையூர்லே வச்சா, பத்துரூவாய்க்கு மேலே இருக்காது" என்று வருந்தினார் அவர். இதற்குள் சாம்பன், "ஏதேது, நம்ப பஞ்சாமி கிட்ட சரியானபடி 'தாங்க்ஸ்' சொல்லலாம்னுபாத்தா, அவனையும் காணலே, இந்த வேலுச்சாமியையும் காணலியே! மணி பத்தரை ஆறது" என்று சொல்லி வந்தவன், ரூமுக்கு வெளியே வேலுச்சாமி வருவதைப் பார்த்து நிறுத்தினான்.

வேலுச்சாமிக்கு ஒரேயடியாய் வியர்த்திருந்தது. கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக் கொண்டே அவன் ஒரு பெருமூச்சு விட்டு, "ஸ்ஸ்ஸ், அப்பப்பா, ரயில் ஸ்டேசன்லிருந்து நேராவர்ரேன், அந்தப் பஞ்சாமியை வளியனுப்பிட்டு" என்றான் சாவதானமாக.

"பஞ்சாமியையா!" என்ற கோரஸ்-கேள்வி ரூமில் எதிரொலித்த போது, நானும், மற்றோரும் ஆகாயத்தில் இருந்தோம்.

"ஆமாம், பானையூருக்குப் பொறப்பட்டுப் போயிட்டான், கடாசிலே. ஒங்ககிட்டல்லாம் சொல்லிக்கிட முடியலியேன்னு ஒரொம்ப வருத்தப்பட்டான். நானும், அவனும் ஒரே தெருவிலே இருந்ததுனாலேதான்,எனக்காவது அவனை வளியனுப்ப முடிஞ்சிச்சு... ஹூம், பாவம், நல்லபய, போயிட்டான்" என்று வேலுச்சாமி சாவதானமாய்ச் சொல்லிக்கொண்டு போகவே, நாங்களனைவரும், மிஞ்சியிருந்த பொறுமையை உதறிவிட்டு, "என்ன நடந்துதுன்னு சொல்லப் போறியா, இல்லியா?" என்று கதறினோம்.

வேலுச்சாமி சொன்னான்: "இண்ணைக்கி அதிகாலையிலே அந்தக் கல்கத்தா ஆளு திடுதிப்புனு வந்து சேந்தானும். ஒடனே பஞ்சாமி என்னையும் அளைச்சுகிட்டுமானேசர்வீட்டுக்கு ஓடினான். அங்கே அவுருகிட்ட

'பெர்மிசன்' வாங்கி, சாமானை யெல்லாம் ரெண்டுமூணு வண்டியிலே அப்பிடி அப்பிடியே அள்ளிப் போட்டுக்கிட்டு, ஸ்டேசனுக்கு ஓடி ரயிலைப் புடிச்சான். 'பம்பாய் வளியா பானையூருக்குப் போயிர்ரேன்; இந்த டில்லி ஊர்லே இனி அரை நிமிசம் கூடத் தங்கமாட்டேன்'னு சொல்லிட்டுப் போறான், பாவம்...நாங்க சாமான்களையெல்லாம் ரயிலுக்குள்ர அள்ளிப் போட்டு முடிக்கறதுக்கும், ரயிலு பொறப்படறதுக்கும் சரியா இருந்திச்சு...ரயிலு வண்டி பொறப்பட்ட பெறகு, அதுக்குள்ரதான் பஞ்சாமி சாமானையெல்லாம் ஒளுங்கா மூட்டைகட்ட ஆரம்பிச்சிருக்கான். அதுக்கே நாளுபூரா சரியாயிருக்கும்...... ஊருக்குப் போயி ஒங்களுக்கெல்லாம் லெட்டரு போடுவாணும்..."

வேலுச்சாமி பேசிக்கொண்டே போனான். நாங்கள் அனைவரும் திகிலடைந்து உட்கார்ந்திருந்தோம். மறுபடி ஈக்களெல்லாம் ரூமிலிருந்து வெருண்டோடின.

சந்தனாதி, அரைக்கீரை விதைத் தைலங்கள்

சில்லரையாகவும் மொத்தமாகவும் கிடைக்குமிடம்:

(South Indian Boarding House Building.)

இத்தனை துணிகளும்

. . . இந்தச் சிறு 501 பார் சோப் துண்டினால் சலவை யாகியிருக்கின்றன. மலிவான சோப்புக்களைவிட, 501-ல், சோப்பு அம்சம் அதிகமாய் இருக்கிறது. இது விரைவிலே கரையாமலிருந்து, குறைந்த செலவில், நிறையத் துணிகளை வெளுக்கிறது.



A TATA PRODUCT

மெல்லிய துணிகளை, 501 ஸ்பெஷல் சோப்பினால் சலவை செய்தால், அவை பளிச்சென்று வெளுப்பாகவும், புத்தம் புதியன போலவும் நீடித்திருக்கும்.

501 சலவை சோப்புக்கள்

வீட்டிலேயே மிக சுலபமாயும், குறைந்த செலவிலும் சலவை செய்ய உதவுகின்றன.

டாட்டா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

தேவாரம் - பண்முறை

டி. கே. ஜயராம அய்யர்

சிறு பிராயத்திலிருந்தே, எனக்குத் தேவாரம் என்றால், மிகவும் பிரியம். அதன் இன்னிசை என் மனதை மிகவும் கவரும். திருவிழாக் காலங்களில், இரவில் மூர்த்திகள் உலா வரும்போது, நான் வெகு நேரம் கண் விழித்திருந்து, தேவார இன்னிசையில் ஈடுபட்டிருப்பேன். வயது வந்த பின்னர், தேவாரத்தின் இசையால் ஏற்படும் இனபத்துடன், அதன் ஸாஹித்யமும் என் மனதைத் தொட்டு, அதை பக்தியில் ஈடுபடச் செய்யலாயிற்று.

மேலான இன்பம் பயக்கும் தேவாரப் பண்களை, சிறிது ஆராய்வோம் :

சிலப்பதிகாரம், கல்லாடம், தண்டியலங்காரம், இசை மரபுடையார் முதலிய நூல்களில், பழந்தமிழ் மக்களுடைய இசைக் கலையின் சீரிய இலக்கண இலக்கிய சிறப்புகள் பொதிந்திருக்கின்றன. சிலப்பதிகாரக் காதையின் காலத்திலே, 'ஈரேழ் தொடுத்த செம்முறைக் கேள்வி' எனக் குறிப்பிடப்பட்ட, பதினன்கு நரம்புடைய **சகோட யாழ்** என்னும் இசைக் கருவி, வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அந்த யாழில், செம்பாலை, படுமலைப்பாலை, செவ்வழிப்பாலை முதலிய ஏழு வகை மேளங்கள் எழுந்தன என்று அறிகிறோம்.

கர்னாடக சங்கீதத்திலும், இரு வீணைகளின் உதவியால், ஸ்வரஸ்தானங்கள் நிர்ணயமாயின என்பதை, இசை இலக்கண வடமொழி நூல்களில் காண்கிறோம். இந்த ஸ்வரங்களின் நியதியான சேர்க்கையால், க்ராமம், மூர்ச்சனை ஆகியவற்றிலிருந்து, ஜாதிகள் என்ற தற்காலத்திய ராகங்கள் எண்ணிலா விதமாய் உண்டாயின.

இதே போல, மேலேசொன்ன, செம்பாலை, படுமலைப்பாலை முதலிய ஏழுவகை மேளங்களிலிருந்தும், எண்ணிலாப் பண்கள் உண்டாயின எனலாம். பண்கள் என்பவை, தற்காலத்திய ராகங்களுக்கு நிகரானவை.

இசையின் சரித்திரத்தில், முதலில் ஐந்து ஸ்வரங்கள் கொண்ட ராகங்கள் வழங்கின என்றும், பிறகு, ஆராய்ச்சியின் விளைவாக, ஏழு ஸ்வரங்களுள்ள சம்பூர்ண ராகங்கள் ஏற்பட்டன என்றும் கூறுவர்.

பண்டைத் தமிழரின் இசைமுறையில், ஐந்து ஸ்வரங்களாலான இசை, **திறம்** என்றும், ஏழு ஸ்வரங்களுள்ள இசை, **பண்** என்றும் வழங்கின. நாளடைவில், இசைவழி முன்னேற முன்னேற, பாலை யாழ்த் திறங்கள், குறிஞ்சியாழ்த் திறங்கள், மருத யாழ்த் திறங்கள், செவ்வழி யாழ்த் திறங்கள் என்பதாக, மொத்தம் 103 இசைவடிவங்கள் தோன்றினவாம். பிற்காலத்தில் அவற்றை, பண்கள், திறங்கள், பண்ணியல்-திறங்கள் என்ற பாகுபாடு இல்லாமல், 103 பண்கள் என்றே குறிப்பிட லாயினர்.......

தேச சரித்திரத்தில், அவ்வப்போது பிரசாரத்திலிருக்கும் பௌதிக தத்துவங்கள், இசை நுணுக்கங்கள் முதலிய நாகரிகச் சின்னங்கள் பல, பழைய சம்பிரதாயங்களுடன் கலந்து கொள்ளுவது சகஜம். இதே விதமாய், பண்முறையும், தற்போதுள்ள சம்பிரதாயத்துடன் ஒன்றாகக் கலந்துவிட்டது எனலாம். ஆயினும் தேவாரங்களில் மாத்திரம், பண்முறை நிலைத்து இருந்து வந்திருக்கிறது. தேவாரங்கள், பண் முறையை அநுசரித்துப் பாடப்பட்டவை என்பதற்கு, ஒரு சான்று :

மண் பொருந்தி வாழ்பவர்க்கும் மாதீர்த்த வேதியர்க்கும்,
விண் பொருந்து தேவர்க்கும், வீடுபேருய் நின்ருனே ;
பண் பொருந்த இசைபாடும் பழனஞ்சேர் அப்பனை
கண் பொருந்து போதத்தும் கைவிட நான் கடவேனே.

இது ஞானசம்பந்தர் வாக்கு. அப்பர், உமா தேவியாரை, "பண்ணினேர் மொழியாள்" என்கிருர்.......

இந்தப் பண்கள் இப்போது சுமார், இருபத்தெட்டே உள்ளன. இவற்றை, சம்பிரதாயப்படி, தொன்றுதொட்டுப் பாடிவரும் தேவாரங்களிலும், வைஷ்ணவ இசைப் பாக்களான திருவாய்மொழியிலும் காணலாம்..

தேவாரப் பண்களைப் பெரிதும் ஒத்திருக்கும் ராகங்கள் பல, கர்ஞடக சங்கீதத்தில் இருக்கின்றன. இவற்றிற்கு சில உதாரணங்கள் :

தேவாரப் பண்	கர்ஞடக ராகம்
நட்ட பாடை	நாட்டை, நாட்டக்குறிஞ்சி
தக்க ராகம், தக்கேசி	காம்போதி
மேகராகக் குறிஞ்சி	நீலாம்பரி
நட்ட ராகம், சாதாரி	பந்துவராளி
வியாழக் குறிஞ்சி	ஸௌராஷ்ட்ரம், சக்கரவாகம்
இந்தளம், சீகாமரம்	நாத நாமக்கிரியா
புறநீர்மை	பூபாளம்
செந்துருத்தி	மத்யமாவதி
காந்தாரம் }	நவரோஸ்
கொல்லி }	நவரோஸ்
கொல்லிக் கௌவாணம் }	நவரோஸ்

தற்காலத்தில் வழங்கும் சில பாட்டுக்களில், ராகத்தின் பெயரையும் அமைத்து இயற்றி இருப்பதைக் காண்கிருேம். இந்த உத்தியை, அப்பர் சுவாமிகள், "கல்லினுல் எறிந்தும்" என்று துவங்கும் நேரிசையில், "**கொல்லியாம் பண்ணமைத்தார் குறுக்கை வீரட்டனுரே**", என்று பண்ணின் பெயரை அமைத்துப் பாடி முடிக்கிருர். மற்ருேரிடத்தில்,

" விளேவறியாமையாலே வேதனேக் குழியிலாழ்ந்து
கலேகணுமில்லே னெந்தாய் கரமரன் கற்றுமில்லேன் "

என்று பாடி இருக்கிருர். காமரன் என்பது சிகாமரம்......

தேவாரப் பண்களேப் பாடும் முறை பற்றி, ஒரு வார்த்தை. தேவாரம் என்பது தமிழ் மறை; வேதத்துக்கு ஒப்பானது. வேத பாராயணத்தைப் போலவே, தேவாரமும், ஒரு நியதியான முறையில் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது; வழி வழியாக அதைப் பயில் கிருர்கள்; ஓதுகிருர்கள். சில பண்களுக்கு நிகரான கர்ஞடக ராகங்கள் கொடுக்கப்பட்டிருந்தாலும், சில பண்களில் அந்நிய ஸ்வரச் சேர்க்கையும் புலப்படுகிறது. அது ஒரு குற்றமல்ல. ஒருக்கால் அது, பரம்பரையாய் வந்த அந்தப் பண்ணின் விசேஷ அம்சமாய் இருக்கலாம். பல பண்களில், அடுக்கடுக்கான ஸங்கதிகள் போன்ற சஞ்சாரங்கள், தாளக்கட்டுடன் அமைந்திருக்கின்றன. ஆகையால், தேவாரம் பாடும்போது, தற்காலத்திய இசை இலக்கணங்களின்படி அவற்றைத் திருத்தாமல், பெரியோர் கையாண்ட முறையின்படி பாடுவதுதான் சாலச் சிறந்தது. உயரிய ஓதுவார்களும் இதை ஆமோதிப்பார்கள் என்று நம்புகிறேன்.

தமிழ்ச் சங்கம், தென்னிந்தியக் கழகத்துடனும், கர்நாடக சங்கீத சபையுடனும் சேர்ந்து, பாரதி தினம் கொண்டாடிய போது எடுத்த படம். தலைமைவகித்த நீதிபதி ஸ்ரீ சந்திர சேகரய்யரையும், பரிசு பெற்ற குழந்தைகளேயும் இதில் காணலாம்.

Shop No. 77, Irwin Road,
NEW DELHI.

காமவல்லி

எஸ். ஸ்ரீநிவாசன்

மனித சஞ்சாரமில்லாத தனிக்காடு. அதில் ஒரு தனி வீடு. வீட்டிற்குள் ஒரு பெண் நிற்கிறுள்.

சிறிது நேரத்திற்கெல்லாம் வெளியே இரங்கி இராம லக்ஷ்மணர்கள் இருக்கும் திக்கை நோக்கி வருகிறுள். பூரண அழகு வாய்ந்தவள். காலில் செம்பஞ்சுக் குழம்பு தீட்டியிருக்கிறுள். செக்கச்செவேல் என்றிருக்கும் தனது பாதங்களை அடிமேல் அடியெடுத்து வைக்கிறுள். கீழே உதிர்ந்திருக்கும் பூவிதழ்கள், வருந்தப் போகின்றனவே என்ற எண்ணமோ என்னவோ! அவ்வளவு மெல்ல நடந்து வருகிறுள்.

மயிலைப் பார்த்திருக்கிறேம், அது காலெ யெடுத்து வைப்பதையும் பார்த்திருக்கிறேம். அது கழுத்தை நிமிர்த்தி, தலையைத் தூக்கி நிறுத்தி, கொண்டையை அசைத்து, தோகையை அப்படியும் இப்படியுமாக வீச்சுவதையும், முகத்தைத் திருப்பி, கழுத்தை வளைத்து இறகுகளைக் கோதுகிற பாங்கையும் பார்த்திருக்கிறேம்! இப்போது பார்க்கும் மயில் மாந்தளிர் வர்ணமுடையது. 'மயில்' என்னும் போது, குரல் சற்றுமட்டம் என்ற நினைப்பு வருகிறதா? வேண்டாம்; இனிய குரல்! அன்னத்தைப்போல் சல சலப்பில்லாமல் வருகிறுள். பார்க்கப் பார்க்க காமவெறி ஊட்டுவது போன்ற மெல்லிய உருவம். மின்னலைவிட மெல்லியதாம்! வஞ்சிக் கொடிபோல் துவள்வது.

ஆனல், இவ்வளவு அழகும் திரண்டு வருபவள் நல்லதுக்காகவா வருகிறுள்? நல்ல பாலில் ஒரு சொட்டு விஷம் போலல்லவா இவள் அமைகிறுள்! இவளது இந்த சௌந்தரிய வடிவம், உண்மையாக அமைந்ததா அல்லது எதோ வஞ்சகச் செயலா? கம்பரே சொல்லட்டும்.

> **பஞ்சு ஒளிர் விஞ்சு குளிர்**
> **பல்லவம் அநுங்க,**
> **செஞ்செவிய கஞ்சநிமிர்**
> **சீறடி பெயர்ப்பாள்;**
> **அஞ்சொல் இள மஞ்ஞையென**
> **அன்னமென மின்னும்**
> **வஞ்சியென நஞ்சமென**
> **வஞ்ச மகள் வந்தாள்.**

சூர்ப்பநகை மட்டுமா சீறடி பெயர்க்கிறுள்; பாட்டிலும் சீர் அடி பெயரவில்லையா?......

இதுவும் சூர்ப்பநகைதான்; ஆனால் நிலைக்களம் வேறு. இராவணன் தர்பார். மூக்கும் காதும் அறுபட்டு இரத்தம் சொட்ட ஓடிவந்து விழுகிறாள். நடந்த விவரத்தை அண்ணாவுக்கு எடுத்துரைக்கிறாள்.

"அண்ணா! உனக்காக அரும்பாடுபட்டு ஒரு 'வஸ்து'வை எடுத்துவர முயன்றேன். ஆனால் இரண்டு 'வெறும்' மானிடர்கள் என்னைத் தடைப்படுத்தி எனக்கு இந்த சிக்ஷையைத் தந்தனர். இருந்த போதிலும் என் மனதில் அவ்வுருவம் ஒரு பெரிய இடத்தைப் பெற்றுவிட்டது.

"அண்ணா! நான் உனக்கென்று கொண்டுவர விழைந்த அச்சீதை யென்பாள் என்ன அழகு! மும்மூர்த்திகளையும் நீ நன்கறிவாய் அல்லவா; அவர்கள் துணைவியர் தான் உனக்குத் தெரியாதவர்களா? இத் திருமூர்த்திகளும் தங்கள் தங்கள் மனைவிமார்களை எங்கெங்கே எவ்வளவு பத்திரமாக வைத்திருக்கிறார்கள்! பரமசிவன் தன் உடம்பில் பாதி மறைந்தாலும் மறையட்டும் என்று உமையைத் தன் இடது பக்கத்தில் இருத்திக்கொண்டான். விஷ்ணுவோ, இலக்குமியைத் தன் மார் பகத்தே அமைத்துக்கொண்டான். பிறர் கண்ணால் கூட பார்க்க முடியாதபடி பிரமன், தன் ஸரஸ்வதியைத் தன் நாவிலேயே வைத்து மூடிக்கொண்டான். அண்ணா! நீயோ, மும்மூர்த்திகளிலும் பராக்கிரமசாலி; உமை, லக்ஷ்மி, ஸரஸ்வதி இம்மூவரையும்விட எவ்வளவோ அழகு வாய்ந்த இச்சீதையை நீ பெற்றால், எங்கே யண்ணா வைத்துக் காப்பாற்றுவாய்? அதைச் சொல்லண்ணா!

"பாகத்தில் ஒருவன் வைத்தான்;
பங்கயத் திருந்த பொன்னை
ஆகத்தில் ஒருவன் வைத்தான்; அந்தணன்
நாவில் வைத்தான்;
மேகத்தின் மின்னை முன்னே வென்ற
நுண்ணிடையை, நீயும்
மாகத் தோள்வீர! பெற்றால்
எங்ஙனம் வைத்து வாழ்தி"

ஒவ்வொரு அடியிலும் "அண்ணா, அண்ணா" என்று கொஞ்சுவது நம் காதில் ஒலிக்க வில்லையா?

✲

ரஸிகமணி டி. கே. சி. கூறுகிறார்:

"கம்பருடைய கவிகளுக்குத் தனியான ஒரு சுவையுண்டு. செய்யுளினங்கள் பூர்வமானவைதான். ஆனால், இதய பாவத்தை உட்கொண்ட செய்யுள்கள் அடியெடுத்து வைக்கும்போது, தனியான கதிநயங்களைக் காண்கிறோம். அவைகளின் பாவமும் வேகமும், எங்கேயோ இருந்து வந்தமாதிரி, புத்தம் புதியவையாய் இருக்கும். ஒவ்வொரு செய்யுளிலும் ஒரு தனி ரஸம். கவிக்கு ஏதோ நவரஸம் என்கிறார்கள்: ஆனால், கம்பருடைய கவிகளைப் பார்க்கும்போது, ஆயிரக்கணக்கான ரஸங்கள் உண்டென்று சொல்லவேண்டியிருக்கிறது."

அவள் கொடியவளா?

“சந்திரிகா”

அரைமணி நேரம் காலையில் தாமதித்துச் சென்ற காரணத்தால், மாலை ஏழு மணி வரை ராகவனைக் காரியாலயத்தில் இருத்தி விட்டது. வயிற்றைக் கிள்ளிய பசி, கடுமையான வேலையால் உண்டான களைப்பின் தளர்ச்சி, பொருளாதார நெருக்கடியின் உச்ச நிலையை எட்டிப் பிடிக்கும் இருபத்தெட்டாம் தேதி, முடிவில் எட்டிப்பிடித்த பஸ்ஸில் இடமில்லாமல் இறங்க நேர்ந்தது—எல்லாம் சேர்ந்து சதி செய்து கொண்டு, ராகவனுக்குக் காரணமற்ற கோபத்தையும், கசந்து வழியும் வெறுப்பையும் மூட்டின.

புழுங்கும் உள்ளத்துடன் வாசற்படி ஏறிய ராகவன், அழுத கண்ணும், சிந்திய மூக்குமாய் நிற்கும் குழந்தை லலிதாவைப் பார்த்ததும் திடுக்கிட்டான். பரபரக்கக் குழந்தையைத் தூக்கியவாறே, “லல்லு...எம்மா அழறே...யார் என்ன சொன்னு?...” என்று கேட்கவே, லலிதாவின் விசிப்பு அதிகமாகியது. “அப்பா...சித்தி ...வந்து...” என்று சொல்லுவதற்குள், அவன் கோபம் எல்லை மீறியது.

மடமடவென்று குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தவன், “பத்மா...ஆ...” என்று வீடு அதிரக் கூப்பிட்டான். தான் எதிர்பார்த்தது நடந்துவிட்டது என்று அஞ்சிய வண்ணம், சமையலறையிலிருந்து வந்த பத்மாவை சுட்டு விடுவது போல் விழித்துப் பார்த்தான் ராகவன். “சண்டாளி, ஏன் குழந்தையை அடித்தாய்?” என்று முதல் அம்பு விழவே, பத்மாவுக்கு அழுகை பொத்துக் கொண்டு வந்தது. “பதில் சொல்ல என்ன வாயில் கொழுக்கட்டையா அடைத்திருக்கிறது?” என்று மறுபடியும் இரையவே “ஏன் இப்படிக் கூச்சல் இடுகிறீர்கள்?...எல்லார் வீட்டிலும் மாலாடுவும் மைசூர்ப்பாகும் பண்ணினுல் அது போல் நம் வீட்டிலும் நடக்குமா? நம் நிலைமை தெரிய வேண்டாமா? நாளை பண்ணித்தருகிறேன் என்று சொன்னேன். இப்பொழுதே வேண்டும் என்று அடம் செய்தாள். இதோ என் நைந்து போன ரவிக்கையைக் கூடப் பிராண்டிக் கிழித்து விட்டாள்” என்று சொல்லும் போதே, துக்கம் அவள் தொண்டையை அடைத்துக் கொண்டது.

“அதற்காகக் குழந்தையை அறைந்தாயோ? சாகஸம் செய்யாதே, கள்ளி. இதமாகப் பேசத் தெரியாதவள் எப்படி என் குழந்தையை வளர்க்கப் போகிருய்? உனக்குக் குழந்தை பிறக்கவில்லை என்ற அசூசையால், என் கண்ணையே ஒழித்துக் கட்டி விடுவாய் இன்னும் கொஞ்ச நாளில்...”

அவன் வீசிய இரண்டாவது அம்பு நெஞ்சின் நடுமையத்தில் பாய்ந்தது.

பொங்கும் கண்ணீருடன், “என்ன வார்த்தை சொல்லிவிட்டீர்கள்? உங்கள் வாயால் சாபம் இடுகிறீர்களே...நானும் எவ்வளவோ கற்பனையுடன் தான், இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தேன். வாழக் கொடுத்து வைக்

காத ஒருத்தியின் ஸ்தானத்தில் அமர்ந்தாலும், உங்கள் வாழ்வைச் சோபிக்கச் செய்யலாம் என்ற நம்பிக்கையுடன் தான்......" என்றாள் அவள். "போதும் உன் பிரசங்கம். இந்த ஜால வார்த்தைகளால் மயங்கி விடமாட்டேன். கண்ணான என் குழந்தையை, நான் இல்லாத சமயத்தில் இன்னும் என்னவெல்லாம் செய்கிறாயோ......"

பத்மாவால் பொறுக்க முடியவில்லை. அளவுக்கு மிஞ்சிய மனவேதனை அவளுக்கு ஒரு அசாதாரண தைரியத்தை அளித்தது. "ஏன், என்னிடம் நம்பிக்கை இல்லாவிட்டால், உங்கள் குழந்தையை ஆபீசுக்குப் போகும்போது நீங்களே......"

'பளீர்' என்று அவள் கன்னத்தில் ஒரு அறை விட்டான் ராகவன். "சீ...நம்பிக்கையா...உன்னைக் கைப்பிடித்த அந்த நாள் முதலே, அது என்னைக் கைவிட்டு விட்டது." என்று வெறுப்புடன் கூறிவிட்டு வெளியே போய்விட்டான்.

* * *

இளையாளாகத்தான் வாழ்க்கைப் பட்டாள் பத்மா. ஆனாலும் அவளையும் ராகவனையும் சேர்ந்து பார்த்தவர்கள், அவளை இரண்டாந்தாரம் என்று கருதவே மாட்டார்கள். ஒன்றரை வயதில், பெற்றவளை இழந்த லலிதாவிற்குத் தாய் என்ற ஸ்தானத்துக்கு, ஒருத்தி வேண்டும் என்ற ஒரே ஆசையினால் தான், அவன் பத்மாவைக் கைப்பிடித்தான். ஆனால் அதே சமயம் பத்மாவும் ஒரு பெண், அவளுக்கும் ஆசை உண்டு, கனவுண்டு, கற்பனை உண்டு என்ற எண்ணம், அவன் மனதில் எழவே இல்லை.

இல்வாழ்க்கையில், தான் விரும்பிய சுகம் முழுவதும் கிடைக்கும் என்ற நம்பிக்கை, தேய்பிறைபோல் அவள் மனத்தினின்றும் அழியத் தொடங்கிய போதும், தன்னுடைய புனித சேவை மூலம், தன் இல்லற ஸ்தானத்திற்கு ஒட்டிய மாசு அறவே அழிந்து விடவேண்டும் என்ற உயர்ந்த லக்ஷயத்துடன், லலிதாவைத் தான் பெற்ற பெண்ணுக்கும் மேலாகக் கருதி வந்தாள் பத்மா. வருங்காலப் பெண்ணினத்திற்கே லலிதா ஒரு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என்ற ஆசையின் காரணமாக, தான் வந்தது முதலே, அவளுக்கு ஒழுங்கு, மரியாதை போன்ற விதிகளைப் போதித்து, சிறந்த அறிவுப் பாடங்களை ஊட்டி வந்தாள். ஆனால் பிறந்தது முதலே, மிகவும் செல்லமாக வளர்க்கப்பட்ட லலிதாவுக்கு, சித்தியின் 'தண்டனை'கள் பிடிக்கவில்லை. இதன் காரணமாகச் சித்தியின் மேல் ஏற்பட்ட வெறுப்பும் கசப்பும், ஒவ்வொரு தினமும் ராகவனிடம் பத்மாவைப்பற்றி கோள் சொல்லிக் கொடுக்கும் வரை கொண்டுவிட்டது. ஆரம்பத்தில் இதை லக்ஷியம் செய்யாதிருந்த ராகவனுக்கும், நாளாக ஆக, பத்மாவிடம் சந்தேகம் ஏற்படலாயிற்று. பச்சைக் குழந்தை பொய் சொல்லாதே...பின் ஏன் லலிதா பத்மாவிடம் ஒட்டமாட்டேன் என்கிறாள்? என்று, ஆரம்பத்தில் உள்ளத்தின் ஒரு மூலையில் முளைத்த சந்தேகப் பொறி, காலத்தின் சலனத்தால் கோரத் தீயாக மாறியது. பதியின் அன்பைப் பெறலாம் என்ற ஒரு பேதைப் பெண்ணின் ஆசைக் கனவு அழிந்து போய், அருமைக் குழந்தையைச் சமர்த்தாகப் பழக்க வேண்டும் என்ற லக்ஷியம் சிதைந்து

போயிற்று. உருகி உருக்குலைந்து போனாள்.

காலம் ஓடியது. கருத்தில் எவ்வித மாற்றமும் இன்றி, ராகவன் நாட்களைக் கடத்தினன். பத்மாவை ஏன் கைப்பிடித்தோம் என்று மனம் கலங்கும் வேளையில், தாயற்ற லலிதாவின் களங்கமற்ற முகம், அவன் கண்முன் நிழலாடி அவன் மனதை இளகச் செய்யும். நிம்மதி என்பதே இல்லாமல் அலைபாய்ந்துகொண்டிருந்தது அவன் மனம்.

அன்ருெருநாள் ஆபீஸ்விட்டு வந்ததும், மேஜையின்மேல் கிடந்த கடிதம் அவன் கவனத்தைக் கவர்ந்தது. பிரிந்து கிடந்த கடிதத்தை வாசிக்கையிலேயே, புருவம் நெற்றிக்கு ஏறியது. பத்மாவின் அப்பா ராமனுதய்யர் எழுதியிருந்தார்: "பத்மாவுக்கு ஆசீர்வாதம். நீ அனுப்பிய பணம் நல்ல சமயத்தில் உன் தம்பிக்குச் சம்பளம் கட்ட உதவியது. மாப்பிள்ளைக்குத் தெரியாமல் பணம் சேர்த்து வைத்தது நல்லதுதான். அடுத்த வெள்ளிக்கிழமை பொங்கலுக்குள் அனுப்பி விடுகிறேன். விஷயம் ரகசியமாகவே இருக்கும்......"

ராகவன் கண்கள் கோவைப் பழம்போல் சிவந்தன. 'எனக்குத் தெரியாமல் பணம் சேர்த்து வைத்து, அப்பாவுக்கு அனுப்பி இருக்கிருள் திருடி.....அப்பாவுக்கு அனுப்பப் பணம் இருக்கிறது. குழந்தைக்கு வாய்க்குப் பிடித்ததைப் பண்ணிக்கொடுக்கப் பணம் இல்லை. திருட்டு வஞ்சகி!' "பத்மா" என்று கூவியவாறே உள்ளறைக்குள் நுழைந்தவனுக்குத் தூக்கி வாரிப்போட்டது பத்மாவின் நிலை.

படுக்கையில் சோர்ந்து விழுந்து கிடந்தாள் பத்மா. கனல் வீசும் கண்களுடன் நுழைந்த ராகவனுக்குப் பத்மாவின் சோக நிலை பெரிய மன மாற்றத்தை கொடுத்து விட்டது. இருந்தாலும், குரலில் வெறுப்பு தொனிக்க, "ஏன் படுத்துக் கொண்டிருக்கிருய்? குழந்தை எங்கே?......டாக்டரைக் கூட்டி வர வேண்டுமா?" என்று கேட்டான்.

சிரமத்துடன் திரும்பிய பத்மா, "ஒன்றுமில்லை, மத்தியானம் பூராவும் தலைவலி. காப்பி குடிக்கலாம் என்று டப்பாவைத் திறந்தால்..... பொடி இல்லை......பத்து அறைத்துப் போட்டுக் கொண்டேன்...... பாவம், நீங்கள் பசியுடன் வந்திருப்பீர்களே......" என்று எழுந்திருக்கலானாள்.

ராகவன் மனதில் இரக்கம் தோன்றினாலும், பத்மாவின் சொல்லில் உண்மை இருப்பதாக அவன் நம்பத் தயாராய் இல்லை. 'தம்பிக்குச் சம்பளம் கட்டப் பணம் இருக்க, காப்பிப்பொடி வாங்கப் பணம் இல்லையாம். பொய்யைச் சொல்வதுடன், அதை நிலை நாட்டவும் நல்ல நாடகம் ஆடுகிருள்' என்று எண்ணினன். அந்த நிலையில் அவளை ஏச விரும்பவில்லை. எதற்கும் பொங்கல் அன்று அவளைக் கையும் களவுமாகப் பிடித்து விட வேண்டும் என்று திட்டமிட்டுக் கொண்டான்.

அன்று வெள்ளிக்கிழமை. ராகவன் சீக்கிரமே திரும்பி விட்டான். அவன் தெருமுனை திரும்புவதற்கும், தபால்காரன் தன் வீட்டிலிருந்து இறங்குவதற்கும் சரியாய் இருந்தது.

மடமட வென்று வாசற்படி ஏறினன். குதூகலமாய் எதிர் நோக்கி வந்த குழந்தை லலிதாவை அப்புறப்படுத்திவிட்டு, கூடத்திற்குள் வந்தவனை, மேஜை

யினின்று பறந்துவந்த கடிதம் தடுத்து நிறுத்தியது.

"பத்மாவுக்கு அப்பா ஆசீர்வாதம். நீ சமயத்தில் அனுப்பிய நூறுரூபாய் சீனுவின் சம்பளம் கட்டுவதற்கு நன்கு உதவியது. பொங்கலின் நிமித்தம், ஒருவாரம் பாங்கி விடுமுறையாதலால், பணம் எடுக்க முடியவில்லை. எந்தச் சிறு காரணமானாலும், பொது ஜனங்களின் பணத்திலிருந்து சல்லிக் காசுகூட எடுக்கக் கூடாது என்ற ஒரே எண்ணத்தினால்தான், கிஸ்துப் பணத்தைத் தொட மனம் இடம் தரவில்லை. நேர்மை தவறாத கிராம முனிசீப் என்று, இத்தனை நாள்வரை பெயர் வாங்கிவிட்டேன்.

"தன் வயிற்றில் ஒரு 'பொறி' ஏற்படவில்லையே என்ற எண்ணம் சிறிதும் தோன்றாமல், பெற்ற தாய்க்கும் மேலாக, கண்ணும் கருத்துமாகப் பார்த்துவரும், உன் சுயநலமற்ற உள்ளத்தின் பிரதிபலிப்புக் கேற்றாற்போல், குழந்தை லல்லுவின் பிஞ்சு மனதில் தோன்றிய ஆசையை நிறைவேற்ற வேண்டும் என்ற நினைவுடன், சிறிது சிறிதாக நீ சேர்த்து வைத்த பணத்திலிருந்து, லலிதாவுக்கு நக்ஷத்திர மாலை பண்ணிப்போட்டு, மாப்பிள்ளையைத் திகைக்க வைக்க வேண்டும் என்ற உனது கனவு தெய்வீகமானது. அத்துடன் என் பங்குக்காக, ரூபாய் நூறு சேர்த்துப் போட்டு, இரட்டைவடம் மாலை பண்ணி, இத்துடன் அனுப்பி இருக்கிறேன். சௌகரியப்படுமானால், அவளை என்னிடம் ஒரு முறை காட்டினால், இந்தக் கிழவனின் மனம் திருப்தி அடையும்......"

ராகவனுக்குத் தலை கிறுகிறுத்தது. 'பத்மா' என்று குழைவுடன் கூப்பிட்ட ராகவனின் குரல் கேட்டு, பூஜையறையில் விளக்கேற்றிக்கொண்டிருந்த பத்மா, தலை நிமிர்ந்து பார்த்தாள்.

"பத்மா, என்னை மன்னித்துவிடு. என் குழந்தை 'அம்மா' என்று ஏங்கும்போது காட்டுவதற்காகவே உன்னை ஏற்றாலும், இளையாள் என்பதால், என் குழந்தையை இகழ்ந்து விடுவாயோ என்று அஞ்சினேன். கைப்பிடித்த நாள் முதல், உன்னை நான் வெறுத்தேன். ஆனால் அந்த வெறுப்பை நீ உதறித் தள்ளி, என் குடும்ப நலனையே, எதற்கும் உயர்ந்ததாகக் கருதினாய். உன்னிடம் மட்டும் நான் சிறிது அன்பைச் செலுத்தியிருந்தால்......"

அவள் மௌனமாய் நின்றாள்.

ஜம்மியின் "லிவர் க்யூர்"

குழந்தைகளின் ஈரல், குலைக்கட்டி வியாதிகளை குணப்படுத்தும்; வராமலும் தடுக்கும்.

டில்லியிலும், அதன் அருகாமையிலுமுள்ள இடங்களிலிருப்பவர்களின் நலத்தைக் கருதி, டில்லியில் அடியில் கண்ட விலாசத்தில் எமது ஆபீஸும், க்ளினிக்கும் திறக்கப்பட்டிருக்கிறது. குழந்தைகளின் வியாதிகளைப்பற்றி (பொதுவாக ஈரல், குலை நோயைப்பற்றி) எமது டாக்டரை கலந்து ஆலோசிக்கலாம்.

ஆலோசனை நேரம்: பகல் 9 முதல் 12 மணி வரையில்
மாலை 3 முதல் 5 மணி வரையில்
ஞாயிறு, மற்றும் விடுமுறை தினங்களில்: பகல் 9 முதல் 12 வரை மட்டும்.

ஜம்மி வேங்கடரமணய்யா அண்டு சன்ஸ்,

5-A, கமலாநகர், G. T. ரோட், சப்ஜிமண்டி, டில்லி-6

சித்திர பூமி கலிங்கம்.

மதுரம் பூதலிங்கம்

நான் புவநேச்வரத்தில் போயிறங்கிய போது காலைவேளை. பனி காலத்து சூரியன் தன் வெண்மையான காந்தியை மிருதுவாக வீசிக் கொண்டிருந்தான். முதலில் உதயகிரி குகைகளைப் பார்த்துவிட்டு, பிறகு புவநேச்வரத்திலுள்ள கோயில்களைப் பார்க்கலாம் வாவென்று, என்னை வரவேற்ற, என்னுடைய அத்தான் கூறினார். உடனே நாங்கள் உதயகிரி மலையை நோக்கிப் புறப்பட்டோம்.

புராணத்தில் கலிங்க ராஜ்யமென்று கேட்டிருக்கிறேன்; சரித்திரத்தில் கலிங்க ராஜா கரவேலரைப் பற்றி வாசித்திருக்கிறேன், பத்திரிகையில் ஒரிஸாவைப் பற்றிய செய்திகளை கவனித்திருக்கிறேன்; ஆனால் உண்மைக் கலிங்கம் எப்படிப்பட்ட தென்று அன்றுதான் தெரிந்துகொண்டேன். பல வருஷங்களாகத் தபஸிருக்கும் ஒருவனுக்கு, திடீரென்று ஒரு நாள் ஞானோதயம் ஆவதுபோல், அன்று உதயகிரி மலையில்தான், எனக்கு ஒரிஸா கலாரஸத்தின் நுண்பொருள் உதயமாயிற்று.

உதயகிரிக் குகைகள் மிக்க பழமை வாய்ந்தவை. மகாவீர காலத்தில், ஜைன பிக்ஷுக்கள், அக்குகைகளிலுள்ள கல்லறைகளில் வசித்து வந்ததாகக் கேள்வி; ஆனால் அக்குகைகளைச் சிற்பங்களால் நிரப்பி, அவைகளுக்கு உயிரளித்தவர், பிரசித்திபெற்ற கரவேல மகாராஜாவே யாகும். இவர், பாடலீபுத்திர அசோகா சக்கரவர்த்திக்கு சுமார் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, கலிங்க ராஜ பட்டத்திற்கு வந்தார். திக்விஜயம் செய்து, மௌரிய ராஜ்யத்திலிருந்து "கலிங்க ஜைன விக்கிரகத்துடன் திரும்பி வந்த பிறகு, அவர் தம் சரித்திரத்தை சிற்பங்கள் மூலமாக இக்குகைகளில் அமைத்தார். அரசருடைய வீரப் போர்கள், அவர் கொண்டுவந்த "கலிங்க ஜைனம்," அவருடைய இன்ப வாழ்க்கை, அவருடைய அந்தப்புர அழகிகள்......... இப்படி கரவேலருடைய வாழ்க்கைச் சரித்திரம் பூராவும், கல்லால் செதுக்கிவிடப் பட்டிருப்பதை, அக்குகைகளில் நாம் காணலாம். அச்சிற்பங்களின் உண்மைத் தோற்றத்தில், அந்த அரசனின் வைபோக வாழ்க்கை என் கண்முன் நின்றது. அரசன் ஒரு தீவிர ஜைன பக்தர். தூய்மையான பக்தி யிருக்குமிடத்தில், கலைராணியும் பொலிவுடன் சோபிப்பாளல்லவா? பரிசுத்தமான பக்தியில்லாத இடத்தில், நாம் உயர்தர சங்கீதமோ, சிற்பமோ, ஓவியமோ எதிர்பார்க்க வேண்டாம். பூர்ண மனதுடன் கலிங்க ஜைனத்தை உபாஸித்துவந்த கரவேலரும் அவர் சிஷ்யர்களும், பொங்கிவந்த தங்கள் பக்தி வெள்ளத்தை, சிற்பங்கள் மூலம் வெளியிட்டார்கள்.

அங்குள்ள வாசிகைகள் "சாஞ்சி"யை நினைவூட்டின; கம்பங்கள், மறைந்துபோன பாரஸீக மகாத்மியத்தை ஞாபகப்படுத்தின.

கலிங்க ஜைனத்தைத் திரும்பிக் கொண்டுவந்த அரசனின் பெருமிதம் ததும்பும் முகம், அபூர்வமாக வாய்த்திருந்தது. அரசன் ஜைன பிக்ஷுவாகப் போக யத்தனித்தபோது, அரசி அதைத் தடுக்கும் காக்ஷியில், இன்பமும் துன்பமும் கலந்து ஓடுகின்றன. இரண்டாயிரம் வருஷங்களுக்குப் பிறகுகூட, அந்த சம்பவத்தின் சித்திரக் காக்ஷி, நம் மனதை உருக்குகிறது. போலி நம்பிக்கைகளுக்கு இடமில்லாமல், தூய பக்தியினால் ஏற்பட்ட இச்சிற்பங்களின் உயிர்த் துடிப்பும், தெளிவும், திருத்தமும், பார்ப்போர் மனதைக் கவரும்படி அமைந்திருக்கின்றன. மற்ற இடங்களிலுள்ள, பிற்பாடு செய்யப்பட்ட ஜைன சிற்பங்களில், இந்த உள்ளத் துடிப்போ, ஆர்வமோ காணவில்லை.

புவநேச்வரத்திலுள்ள ஒவ்வொரு கோயிலும் ஒரு அழகு வடிவே. அவைகளில் மிகவும் சிறந்தவை முக்டேச்வரர் கோயிலும், ராஜாராணி கோயிலுமேயாகும். சென்னிறக் கல்லால், திருத்தமாகச் செதுக்கியிருந்த முக்டேச்வரர் கோயிலின் அழகைச் சொல்லிமுடியாது. அலங்காரக் கொடிகளுடன், யானைகள் துள்ளி விளையாட, நாஸூக்கான அந்தத் தோரண வாசலின் அழகே அழகு! அதன் வேலைப்பாடோ அசாத்தியமானது. அதைப் பார்த்தவுடன் எனக்கு மறுபடியும் சான்சித் தோரணம் நினைவுக்கு வந்தது.

கங்காராஜன் நாட்களில், அரசனுடைய அரண்மனைத் தோட்டத்திலேயே, ஒரு கோயில் கட்டியிருந்தார்களாம். சாயங்கால வேளையில், மகாராணி அங்கே தரிசனத்திற்காகப் போவது வழக்கமாம். விநோதச் சித்திரங்களுடன் நேர்த்தியாக விளங்கிய இந்தக் கோயிலே, ராஜாராணிக் கோயிலாகும். கோபுர அமைப்பு கஜுராஹோவை ஒத்திருந்தது. சிற்பங்கள் சிறியவையானாலும், அவைகளின் அமைப்பு அழகாய் இருந்தது. ஒரு ஆலய கன்னிகை, தளர்ந்த இடையுடனும், தாழ்ந்த முகத்துடனும் காக்ஷியளித்தாள். அவளுடைய இளம் புன்னகையும், கொஞ்சும் பார்வையும், யௌவனத்தின் பூரிப்பும், பார்ப்போர் மனதைக் கவர்ந்தன. அவளுடைய கூந்தல் சொருக்கின் அழகையும், ஒய்யார இடைவளைவின் வசீகரத்தையும் என்னவென்று சொல்லுவது? ராஜாராணிக் கோயிலின் சிற்பங்கள் யாவுமே, இப்படி அபூர்வமாக அமைந்தவை.

பூரி ஜகந்நாதம்! பிரசித்திப்பெற்ற இந்தக் கோயிலில், கோபுரம் விசேஷமானது. அதை வெள்ளை கோபுரமென்று சொல்லுவார்கள். இருளடைந்த மண்டபத்தில் நுழைந்தவுடன், ஜகத்ஜோதிமயமான பெருமாளைக் கண்டு நான் பரவசம் கொள்ளவில்லை. காரணம், எளியேனுக்குப் பூரண ஞானோதயம் ஆகவில்லை யென்பதுதான். என்னிடத்தில் தேக சம்பந்தமான உணர்ச்சிகளே மேலோங்கி நின்றன. அழுகின வாழைப்பழம், வாடின பூ, இவைகளுடன் குழைத்த புளித்த பாலும் சந்தனமும், என் கால்களில் பட்டவுடன், என் மனதில் அருவருப்பு உண்டாயிற்று.

கொனாரக் போனவுடன், இதற்கு நேர் மாறாக என் மனதில் நிம்மதி ஏற்பட்டது. வெள்ளை மணல் வெளியில், சூர்ய பகவானுடைய ஜோதி மயமான ஸ்வரூபம், என் மனதில் சாந்தியை உண்டாக்கிற்று. இதுவே சக்தி வடிவு—இதுவே பரம்பொருள்—இதுவே சகல ஜீவராசிகளுக்கும் உயிர் கொடுக்கும் ஒளிச்சுடர்!

கொனாரக் கோயில் கட்டிடம், சூரியனுடைய ரதத்தைப்போல் செய்யப்பட்டது. அது இடிந்த, பாழடைந்த கோயில். ஆனால், இப்போதுங்கூட, அதனுடைய அமைப்பும் சிற்பங்களும், சூரிய பகவானைப்போல், காந்தியுடனும், உறுதியுடனும் இருக்கின்றன. எழிலுடன் அங்கே செதுக்கி விட்டிருக்கும் கற்சிலைகளைப் பார்க்க, எனக்குப் போதுமான நேரம் கிடைக்கவில்லை. எங்கு திரும்பினாலும் அழகுச் சிற்பங்களே கண்ணில் பட்டன. திறந்த வெளியில் வலிமையின் வடிவாக நின்றது, ஒரு பிரம்மாண்டமான குதிரை! வீரச் செருக்கினால் அதனுடைய நாசிகள் அகண்டு விரிந்திருந்தன.



அதனைப் பின்பற்றி இழுக்கும் வாலிப வீரனுடைய அங்க அமைப்பும், உடம்பின் வளைவும் அதே கம்பீரத் தோற்றமளித்தன. சிற்ப சிகரங்கள் பலவற்றை இங்கே கண்டு மகிழ்ந்தேன். ஆனால் காமரஸத்துடன் அமைந்திருந்த மிதுன சிலைகளில், கஜீராஹோவிலுள்ள இன்பமோ, ஆகர்ஷிக்கும் சக்தியோ இருக்கவில்லை. கோயில் சுவரோரமாக நாலுபக்கத்திலும், யானைகள் துள்ளிக் குதித்து களியாட்டத்துடன் விளையாடின. அவைகளுடைய உருண்டை தேகத்தின் தளதளப்பைக் கண்டு, அவை நிஜ யானைகளோ வென்று சந்தேகங் கொண்டேன்.

கலிங்கச் சிற்பத்தில், தாமரைக்கும் யானைக்கும் அதிக இடமுண்டு. காரணம், இயற்கை தேவிதான்! அவள் தன் இருகரங்களாலும், அந்த பூமியில் அழகை வாரி வாரி இறைத்திருந்தாள். தாமரைக் குளங்கள்தான் அங்கு எத்தனை? மாலதி, அரளியென்று பூமரங்கள் தான் எவ்வளவு விதம்? செம்மண் பூமியில், தாமரையின் சிகப்பும், பச்சிலையின் நிறமும் மிகுதியாக சோபித்தன. அங்குள்ள மனிதர்களின் அழகான மான்தோல் நிறமும், இந்த இயற்கை வைபவத்திற்கு ஏற்றுப்போலிருந்தது. அந்த பூமியின் அழகைக் கண்ட போதுதான், எனக்கு, இத் தேசத்தவர்களுக்கு கலைஞானம் எப்படி ஏற்பட்டது என்பது புலனாயிற்று. இயற்கையாகவே அவர்களுக்கு வர்ண அமைப்பின் தாரதரமும், சிற்பத்தைக் கலைஞர் கண்களுடன் பார்க்கும் சக்தியும், உண்டென்று நான் அறிந்தேன்.

தமிழக நினைவு—வர்ணப் படம்

தில்லியிலோ, தமிழ் நாட்டுக்கு வெளியே வேறு எந்த ஊரிலோ, நாட்டிலோ வசிக்கும் தமிழன் ஒருவன், தமிழகத்தை நினைக்கையில், அவனுடைய மனக் கண்ணிலே, என்னென்ன காட்சிகள், ஒரு **இன்பக் கலவையாய்த்** தோன்றுகின்றன! அவனுடைய நெஞ்சிலே, என்னென்ன உணர்ச்சிகள், ஒரு '**இன்பக் குழப்பமாய்**' நிகழ்கின்றன! இவற்றை யெல்லாம், கலைஞர் '**சந்திரா**,' கற்பனையில் கண்டு, எழிலும் பொருளும் நிறைந்ததொரு சித்திரமாய் வரைந்திருக்கிறார்.

நமது அருமைத் தமிழகம், எத்தனை தனி - அழகுகள் நிறைந்த **எழிலகம்** என்பதை, இந்தச் சித்திரம், ஒரே பார்வையில் காணும் விதத்தில், எடுத்துக் காட்டுகிறது.

தமிழகம் எழிலகம்

செந்தமிழ் நாடெனும் போதினி லே!



பிரயாணம்

"ஆனந்தன்"

பிரயாணம் என்றால் எனக்கு மிகவும் பிரியம். பிரயாண வரலாற்றுப் புத்தகங்கள் படிப்பது என்றால் அதைவிடப் பிரியம். ஏனெனில் காசு, பணம் செலவின்றி, உடம்புச் சிரமமின்றி, ஆப்பிரிக்காவின் அந்தகாரக் காட்டினூடேயும், வடதுருவத்தின் பனிப் பாறைகளின் மேலேயும் நடமாடி வரலாம். ஆழ்கடலைச் சுற்றியும், வறண்ட தீவுகளைப் பார்வையிட்டும், ராட்சச அலைகளுடன் போராடியும் வரலாம். ஆனால் நேரடிப் பிரயாணத்தில் ஏற்படும் அநுபவமும், பயிற்சியும் எந்தப் புத்தகம் படிப்பதினாலும், எந்தப் பிரசங்கம் கேட்பதினாலும் ஏற்பட்டுவிடாது என்று நண்பர்கள் சொல்லுகிறார்கள். அந்த அநுபவத்திற்கும், பயிற்சிக்கும் காசு பணத்தைச் செலவிட்டு, உடம்புச் சிரமத்தைப் பெற்றுக்கொண்டு அசல் பிரயாணம் செய்ய நான் தயாராகயில்லை.

சோம்பேறி நாற்காலியில் படுத்துக்கொண்டு, இருநூறு, முந்நூறு பக்கங்கள் கொண்ட பெரிய பெரிய பிரயாண நூல்களைப் படித்தால் பெரிய பெரிய ஆசாமிகளின் பிரயாண அநுபவத்தை அவை மிகவும் சுலபமாகச் சொல்லிவிடுகின்றன. புத்தகம் எழுதிய நபர்களுடன் நாமும் பிரயாணம் செய்கிறோம். இது தவிர பிரயாணம் செய்த நண்பர்களோ வாரத்திற்கு ஒரு தடவை விடுமுறை நாட்களில் நம் வீட்டிற்கு வந்து தாங்கள் போய்வந்த இடங்களைப்பற்றிச் சவிஸ்தாரமாகச் சொல்லுகிறார்கள். இதை யெல்லாம் கேட்டும் படித்தும் நான் பிரயாண அநுபவம் அடைகிறேன்.

ஒரு நண்பர், தாம் கன்னியா குமரி போய்வந்த அநுபவத்தைக் கதையாய்ச் சொன்னார். 'பஸ்ஸில் போகும்போது எட்டுப்பேரில் ஒருவர் சாய்ந்துகொண்டு உட்காரவேண்டும்; மற்றவர் முன்பக்கம் குனிந்த நிலையில் உட்காரவேண்டும்; அடுத்தவர் சாய்ந்தும், அதற்கடுத்தவர் குனிந்த நிலையிலுமாக, இப்படியே பாசுபதாஸ்திரத்திற்காக அர்ச்சுனன் தவம் செய்ததற்கு மேலாக உடம்பைச் சிரமத்திற்கு உள்ளாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த அவஸ்தையில் பாட்டையின் இரு கரைகளிலுமிருக்கும் காட்சிகளைப் பார்த்து அநுபவிக்க முடியவில்லை. பச்சைப் பசேலென்று அலை அலையாக மோதிக்கொண்டிருந்த நெற்பயிர்களையும், அப்பால் கரடு முரடாக வளர்ந்து நின்ற காட்டு மரங்களையும் கவனிக்க முடியவில்லை. ஆனால் ஒன்று மட்டும் கவனிக்க முடிந்தது. பஸ் ஓடிக்கொண்டிருந்த ரஸ்தா தன்னிடத்தே கொண்டிருந்த குண்டு குழிகளுக்கு எங்களை இழுத்து அவற்றைக் கவனிக்கும்படி செய்தது.'

பாவம், கன்னியாகுமரி தீர்த்தம் ஆடுவதற்கோ, இந்தியாவின் தென் முனையைப் பார்ப்பதற்கோ, குமரி அன்னையைத் தரிசிப்பதற்கோ புறப்பட்ட நண்பருக்கு எவ்வளவு சிரமம்! இன்னொரு தடவை பஸ் மூலமாக கன்னியாகுமரிக்கு அவரைப் போகச் சொல்லிக் கெஞ்சினாலும் அவர் போகமாட்டார். ஆனால் எனக்கு அப்படிச் சிரமம் ஒன்றும் ஏற்படாது. எத்தனை தடவை வேண்டுமானாலும் எவரஸ்ட் சிகரத்தைப் பார்த்துவிட்டு வருவேன். நினைத்த மாத்திரத்தில் எகிப்துபோய் பிரமிட்டை வலம் வருவேன். பர்மா சென்று பகோடாக்களையும், புத்த விகாரங்களையும் தரிசித்துவிட்டு வருவேன். இலங்கை சென்று பிரசித்திபெற்ற ஸிக்ரி மலைச் சித்திரங்களைக்கண்டு களித்து வருவேன். நைல் நதியில் உல்லாசப் படகிலும், ஸ்விட்ஜர்லந்து மலையில் செங்குத்தாக ஏறும் ரயிலிலும், சகாரா பாலைவனத்தில் ஒட்டகத்தின் மீதும் போய் வருவேன். ஒரு சிரமம் உண்டா, பணச்செலவு ஆகுமா? ஒன்றுமே கிடையாது. டிக்கட் இல்லாமல் நான் ஆகாய விமானங்களில் செல்லுவேன். ஒரு செல்லாக் காசுகூட இல்லாமல் அமரிக்க நகரங்களை ஊடுருவிச் செல்லுவேன். என்னை, 'யார்?' என்றோ, 'ஏன்' என்றோ கேட்பாரில்லை.

"இருந்தாலும் விஜயவாடாவிலுள்ள உயரமான ரயில்ப் பாலத்தின் மேல் நின்றுகொண்டு கிருஷ்ணாநதி கொந்தளிப்போடு ஓடிப்போகும் பயங்கர சௌந்தர்யத்தைப் புத்தகத்தில் பார்க்க முடியாதே; நெல்லூரில் பெண்ணாறு வறண்டுபோய், நூலிழைபோல் ஓடிக்கொண்டிருக்கும் மனத்தை உருக்கும் காட்சியைப் பிரயாண நூலில் காண முடியாதே; நயாகரா நீர் வீழ்ச்சியின் கம்பீரமான சப்தத்தை நேரில் கேட்கவேண்டாமா?" என்று ஒரு நண்பர் அங்கலாய்க்கின்றார். இவர் ஒரு பென்ஷன்தார். சர்க்கார் உத்தியோகத்திலிருக்கும்போது சம்பாத்தியம் செய்த பணத்தை ரயில்க்காரனுக்கும், ஆகாய விமானக் கம்பனிக்கும், ஹோட்டல்களுக்குமாகக் கொடுத்துக்கொண்டு வருகிறார். இடை இடையே உடல் சிரமத்தைப் போக்குவதற்காக குற்றாலத்திற்கும், கோடைக்கானலுக்கும், உதகமண்டலத்திற்கும் போய்வருகிறார். இந்த மாதிரியான நண்பர்கள் எப்பொழுதும் அங்கலாய்த்துக்கொண்டுதான் இருப்பார்கள். நாம் நெல்லூரையும், விஜயவாடாவையும், சிரமப்பட்டு நயாகராவையும் பார்த்துவிட்டோமென்று வைத்துக்கொள்ளுவோம். "ஐயோ, நீங்கள் தசராகாலத்தில் மைசூரைப் பார்க்கவில்லையே, கண்டிப்பாகப் பார்க்கவேண்டும். அஜந்தா குகைச் சித்திரங்களைப் பார்த்துவிட்டீர்களா? அவசியம் பார்க்க வேண்டிய இடம். சிந்து வெளிப்பிரதேசத்தில் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டிய கட்டிடம் ஒன்றைச் சமீபத்தில் தோண்டிக் கண்டு பிடித்திருக்கிறார்களாம். அதைப் பார்க்க வேண்டாமா?" இப்படியே அடுக்கிக்கொண்டே போவார்கள். இவர்கள் அங்கலாய்த்துச் சொல்லுமிடங்களை யெல்லாம் நாம் பார்க்கமுடியுமா? நம் வாழ்நாள் போதுமா? பணவசதிதான் இருக்கிறதா?

இவர்கள் கெஞ்சுகிறபடியெல்லாம் கேட்க வேண்டுமென்றிருந்தால், மார்க்கோ போலோவைப்போல பிரயாணம் ஆரம்பிக்க வேண்டியதுதான். பிரசித்திபெற்ற சீனச்சுவரையும், திபெத்து தலைலாமாவையும், கைபர் கணவாயையும், காஷ்மீர் காட்சிகளையும், பாரசீக ரோஜாக்களையும், அரேபிய மணற்பரப்பையும் காணுவதற்குப் புறப்பட வேண்டும். செங்கடலையும், கிரேக்க ஸ்தூபிகளையும், ரோமாபுரியையும், உறுதியான ஜிப்ரால்டர் குன்றையும், பிரஞ்சு திராட்சை வனங்களையும் பார்க்கத் தயாராக யிருக்கவேண்டும். நார்வேயின் விசித்திரக் கடல் குகைகளையும், நள்ளிரவு சூரியனையும், சைபீரியா வனக் கொடுமைகளையும் கண்டு வரவேண்டும். லண்டன் சுரங்க ரயில்வேயையும், வெஸ்ட்மின்ஸ்டர் தேவாலயத்தையும், பெர்ட்ரண்ட் ரஸலையும் பார்க்கவேண்டும். இத்தனை இடங்களையும் பார்த்துவிட்டு வந்தாலும், நண்பர் நடப்பு மாத பென்ஷனைப் பெற்றுக்கொண்டு வந்து, மறுபடியும் அங்கலாய்க்கத் தொடங்கிவிடுவார்.

“ஆப்பிரிக்காவின் தென்பகுதியில் இன்னும் நீங்கள் சுற்றவில்லையே. கங்காருவை அதன் ஜன்ம பூமியிலேயே பார்க்க வேண்டாமா? சமீப யுத்தத்தில் ஜப்பானியர் முதன் முதலில் குண்டுவீசிய ‘முத்து’த் துறைமுகத்தைப் பார்க்கவேண்டாமா?” இப்படியே அங்கலாய்த்துக் கொண்டே போவார்கள். படித்துப் படித்து அனுபவம் பெறலாமேயொழிய நேரில் பார்க்க வேண்டுமானால் ஏழு ஜன்மம் போதாதே!

‘உலகம் சுற்றும் தமிழன்’ ஒருவரோ இருவரோதான் இருக்க முடியும். தமிழர்கள் எல்லோரும் உலகம் சுற்றி வரமுடியாது. சுண்டைக்காய் இங்கிலாந்திலிருக்கும் நூற்றுக்கு தொண்ணூற்றென்பது பேருக்கு இந்தியா எங்கிருக்கிறதென்று தெரியாதாமே! அப்படியிருக்க நாம் எம்மாத்திரம்! அப்படிச் சுற்றிவந்தாலும் தமிழ் நாட்டில் அமேஸான் நதி பாயும்படி செய்யமுடியாது. அமரிக்க எம்பயர் ஸ்டேட் கட்டிடத்தை நகர்த்திச் சென்னைக்குக் கொண்டு வரமுடியாது. “குயின்மேரி”க் கப்பலை கட்டி இழுத்து நமது துறைமுகத்திற்குக் கொண்டு வரமுடியாது. உலகம் சுற்றும் தமிழர்கள் புத்தகம் எழுதுகிறார்கள். உலகம் சுற்றாத தமிழர்கள் அதைப் படித்து இன்புறுகிறார்கள்.

புத்தி தெளிவடைவதற்கும், மனம் விசாலமடைவதற்கும், சித்தம் பலப்படுவதற்கும், புலன்கள் பயிற்சி பெறுவதற்கும் பிரயாணம்

Remember to obtain reliable, prompt & less expensive services :

Dr. N. RAJKUMAR, D.O.Sc.

Sight Testing Specialist & Optician,

127, IRWIN ROAD :: NEW DELHI

அவசியமென்று சில நண்பர்கள் அழகாகச் சொல்லுகிறார்கள். மற்றவர்களுடைய புத்தி, மனம், சித்தம், புலன்களில் அவ்வளவு அக்கறையாக யிருக்கிறார்கள். வீட்டிலிருந்து ஜட்காவிலோ, வேறு வண்டியிலோ புறப்பட்டுப் போய் ரயில்வே ஸ்டேஷனை அடையவேண்டும். அங்கே 'க்யூ'வில் நின்று டிக்கட் வாங்கவேண்டும். இடிபட்டுக் கொண்டு ஒரு இடத்தைப் பிடித்து உட்காரவேண்டும். இப்படியாகவே பல வாகனங்களில் பல அவஸ்தைப்பட்டு அந்த புத்தி, மனம், சித்தம், புலன்களுக்குப் பயிற்சி கொடுப்பதை நான் வெறுக்கிறேன். குத்துச் சண்டை செய்யாமல் பயில்வானாவது போலவும், பணமில்லாமல் வியாபாரம் செய்து சம்பாத்தியம் செய்வது போலவும் நான் பிரயாணம் செய்யாமலே ஒரு பிரயாண நூல் எழுதப் போகிறேன். அதில் என்னுடைய புத்தக அநுபவம் முழுவதும் இருக்கும். வரிக்கு வரி திடுக்கிடும் சம்பவங்கள்! பக்கத்திற்குப் பக்கம் வாரிப் போடும் அநுபவங்கள்! யாருக்கும் தெரிந்திராத புத்தம் புதிய, அதிசயமான, ஆனால் உண்மையான குறிப்புக்கள், கண்டும் கேட்டுமிராத மிருகங்களுடனும், பட்சிகளுடனும் கை கலப்புக்கள் முதலியன மேற்படி புத்தகத்தில் மிளிரும். நான் சாய்வு நாற்காலியில் சாய்ந்து, புத்தகங்களில் படித்த அநுபவங்களை யொட்டி மேஜை முன் உட்கார்ந்து எழுதினபடியால், நீங்கள் அந்தப் புத்தகத்தை கட்டிலில் படுத்துக்கொண்டு ஆனந்தமாகப் படிக்கலாம். பயங்கரமான நிகழ்ச்சிகளைப் படிக்கும்போது மனந்தளராமல் படித்துவிட்டு, புத்தகத்தை, தலையணையாக உபயோகித்துத் தூங்கிவிடுங்கள். பிரயாண அனுபவம் உங்களுக்கு ஏற்படுகிறதா இல்லையா, பாருங்கள்!

பார்லிமெண்டின் தமிழ் நாட்டு அங்கத்தினர்களுக்கு சங்கம் வரவேற்பு அளித்தபோது எடுத்த படம். ஸ்ரீ அவிநாசிலிங்கம் பேசுகிறார்.

பாசாங்கு பலிக்கவில்லை

லக்ஷ்மி ராஜேந்திர சங்கர்

பக்கத்து வீட்டில் குடியிருக்கும் தாராசரண், ஒரு பெரிய தட்டு நிறைய மிட்டாய்களுடன் வந்தார். அன்று ஹோலி. ஹோலி என்பது வட நாட்டாருக்கு ஒரு பெரிய பண்டிகை. பல நிறப் பொடிகளை நீரில் கரைத்து ஒருவர் மேல் ஒருவர் வாரி இறைத்துக் கொண்டு, பல வர்ணங்களில் பூத்துக் குலுங்கும் செடிகளைப் போல் விளங்குவார்கள். வரம்பு மீறி, போவோர் வருவோர் மீதெல்லாம் கூடப் பொடிகளையும் கரைத்த நீரையும் எறிந்து விடுவார்கள். வசந்த காலத்தின் ஆரம்பத்தை இவ்வளவு ஆர்ப்பாட்டமாகக் கொண்டாடும் வழக்கம், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இருந்து வருகிறது.

தாராசரண் நல்ல நண்பர். காலையில் வேலைக்குப் போனல் இரவுதான் திரும்புவார். அவர் மனைவி குஷிப் பேர்வழி. வாயாடி. சிரிப்பும் ஹாஸ்யமும் பேச்சுக்குப் பேச்சு வரும். ஒரு சினிமா தவறுமல் சிநேகிதிகளுடன் பார்த்து விட்டு வருவாள். அவர்கள் வீட்டில் எப்பொழுதும் பாட்டும் பேச்சும்தான். அவளுக்குக் குழந்தை குட்டி யில்லையாலுைம், தம்பி தங்கை என்று யாராவது அவளுடன் இருந்துகொண்டே இருப்பார்கள்.

தாராசரண் தட்டை மேஜை மேல் வைத்துவிட்டு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

“என்ன, இந்தத் தடவை ஹோலி தடபுடல்போலிருக்கே!” என்றேன்.

“ஆமாம்! ஏதோ வருஷத்தில் ஒரு நாள். ஊரோடு சேர்ந்து நாமும் கொண்டாட வேண்டியது தானே!” என்ருர்.

“போன வருஷம் உங்களுக்கு உடம்பு குணமில்லாதிருந்ததால் ஒன்றும் சரியாக செய்ய முடியவில்லை என்று மன்னி சொன்னுர்கள்!” என்றேன்.

“அப்படியா சொன்னுள்? அது ஒரு வேடிக்கை. எனக்கு உடம்புக்கு ஒன்றுமிருக்கவில்லை. வேணுமென்றேதான் உடம்பு சரியில்லை என்று பாசாங்கு செய்து படுத்துக் கொண்டிருந்தேன்!”

“அப்படியா! ஏன்?”

“இந்தக் கஷ்ட காலத்தில் அதிகம் செலவு செய்யக்கூடாது என்று எவ்வளவோ சொல்லியும் அவள் கேட்கவில்லை. ஹாஸ்டலில் படிக்கும் ஐந்தாறு பிள்ளைகளுடன் அவள் தம்பி வேறு வந்துவிட்டான். எல்லோருமாக சேர்ந்து கொட்டம் அடித்தார்கள். ஹோலி அன்று, ‘எனக்கு உடம்பு சரியாயில்லை, சாப்பாடே வேண்டாம்’ என்று பொய் சொல்லிவிட்டுப் படுத்தேன்—அப்படிச் செய்தால் பண்டிகைச் செலவு குறையும் என்ற எண்ணத்துடன். ஆனல் அவர்களோ ஒன்றையும் குறைக்கவில்லை. எனக்கு என் மனைவி கஞ்சி வைத்துக் கொடுத்தாள். அவர்களெல்லாரும் பழங்களையும் பக்ஷணங்களையும் அள்ளி அள்ளித் தின்ருர்கள். அவர்களை நான் ஏமாற்றப்போக நானே ஏமாறும்படி ஆயிற்று! உப்பில்லாக் கஞ்சிதான் எனக்குக் கிடைத்த பலன்.” இவ்வாறு கூறிச் சிரித்தார் தாராசரண்.

CAMERAS!

ALL MAKES TO SUIT ALL POCKETS

AND

ALL OTHER PHOTOGRAPHIC REQUISITES

MAHATTA & CO.

The Premier House for Photo Goods

BEHIND ODEON CINEMA

NEW DELHI

PHONE : **44588**

Hercules-India

CYCLES BUILT FOR SERVICE

HERCULES · INDIA

MADE BY T.I. CYCLES OF INDIA LTD. MADRAS

வெளியிலே மறைந்துளோன்

க. சி. கமலையா

கடவுள் எப்படிப்பட்டவர் என்பதைப் பலர் பலவிதமாய்ச் சொல்வார்கள். 'எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்டவர்,' என்பது ஒப்புக் கொள்ளப்பட்ட கருத்து. நிலம், நீர், ஆகாயம், நெருப்பு, காற்று, என்ற ஐந்து பூதங்களா? இல்லை; அவைகட்கும் அப்பாற்பட்டவர். ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி என்பவைகளா? இல்லை; அதையும் கடந்தவர். ஐம்புலன்களாகிய காண்டல், கேட்டல், நுகர்தல், உண்ணல், முகர்தல் ஆகிய இவைகளுக்கும் அதீதமானவர். இப்படியே உலகத்தின் பொருள்கள் எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு, "இது இல்லை; இது இல்லை; இதற்கும் அப்பாற்பட்டவர்; அதீதமானவர்," என்று கழித்துக் கொண்டே போனால், மிஞ்சி நிற்பது யாவரும் அறிய முடியா வெட்ட வெறும் வெளி. அது மாயப் பெரும் வெளி. வேதங்களும் காண முடியாமல் நிலை தடுமாறுகின்றன.

'வெட்டவெளி தன்னை மெய்யென்று' நிற்போர் சகலமும் அறிந்த ஞானிகள், வெளியை நம்பியிருப்போர்—வெளியே பார்ப்போர், வெளியிலே இரண்டறக் கலந்தவர், உள்ளும் புறமும் அறிந்தவர். வெளியென்பது சூன்யமில்லை. சூன்யமாய்த் தோன்றும் வெளியில், பலவிதக் காற்றுக்கள் இருக்கின்றன. வெளியின் எல்லைகளை நிர்ணயித்தவன் யார்? எழு கடலைத் தாண்டிச் சென்றாலும், அடிவானத்தைப் பிடிக்க முடியாது. நம்முடன் ஒட்டிக் கொண்டிருக்கும் வெளி, சூரிய மண்டலம், சந்திர மண்டலம், வெள்ளி, செவ்வாய், வியாழன் ஆகிய நட்சத்திர மண்டலங்களையும் தாண்டிச் செல்கிறது. அத்தகைய வெளியைப் பார்ப்பதென்றாலும், அதைப் பற்றிச் சிந்திப்பதென்றாலும், நம் அறிவு சுடர் விட்டு எரியும்; உணர்வு பெருகும்; ஊக்கம் நிறையும். இந்த அகண்ட வெளியில்தானே சூரியன், சந்திரன், பூமி, நட்சத்திரக் கூட்டங்கள் எல்லாம், அடியிலும் முடியிலும் பற்றில்லாமல் அனுயாசமாய் நின்று கொண்டிருக்கின்றன!

> "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி,
> பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகி,
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்,
> வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்,
> செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த"

நம்மைப் பார்த்து, இவ்வெளி முறுவலிக்கிறது. 'விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய் எண்ணிறந்தெல்லையிலாத' ஏகப் பெரும் வெளிமுன், மனிதன் அற்பத்தினும் அற்பம்.

இவைகளையெல்லாம் அலசிப்பார்த்துக் 'கடவுள் யார்?' என்பதை வெகு அழகாகத் தெரிவிக்கும் பாடல் ஒன்று திருவிளையாடற் புராணத்தில் இருக்கிறது :

பூதங்களல்ல ; பொறியல்ல ;
வேறு புலனல்ல ; உள்ள மதியின்
பேதங்களல்ல ; இவையன்றி
நின்றி பிறிதல்ல ; என்று பெருநூல்
வேதங் கிடந்து தடுமாறும்
வஞ்ச வெளி யென்ப, கூடல் மறுகில்,
பாதங்கள் நோவ வளை இந்தனதி
பகர்வாரை ஆயும் அவரே.

[கூடல் - மதுரை. மறுகு - தெரு. வளை - வளையல். இந்தனம் - விறகு. பகர்வார் - விற்பவர். ஆயும் - ஆராயும்.]

கடவுளை ஆராயப் புகுந்தவர்கள் இவ்வாறு சொல்வர் என்று சுருங்கக் கூறலாம். மனிதன் தோன்றிய அன்று முதல் இன்று வரை, 'சும்மாயிருக்கின்ற திறன்' படைத்த ஞானிகள், இவ்வஞ்ச வெளியுடன் தீரா நட்பும் ஆருக் காதலும் கொண்டு, 'பல்லாண்டென்னும் பதங்கடந் தானுக்கே' பல்லாண்டு கூறி வருகின்றார்கள்.

✲

மாசம் பத்து

ஒருசமயம் மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்களைப் பார்க்க, அன்பர் ஒருவர் வந்தார். வந்தவர் முகத்தில் மகிழ்ச்சியும், கவலையும் பின்னி ஓடியவண்ணமிருந்தன.

வந்தவர் : நமஸ்காரம். தங்களுடைய ஆசிர்வாதத்தால் என் பையனுக்கு, பள்ளிக்கூடத்தில் உபகாரச் சம்பளம் கொடுக்க உத்தரவாகியிருக்கிறது.

சாமிநாதய்யர் : அப்படியா, ரொம்ப சந்தோஷம். என்ன கொடுக்கிறார்கள் ?

வ : (சற்று உற்சாகக் குறைவுடன்) ஏதோ மாசம் பத்து ரூபா.........

சாமி : (மிகுந்த ஆனந்தத்துடன்) ஆஹா, **மா சம்பத்தல்லவா.** குழந்தை அதிர்ஷ்டசாலி. நிச்சயம் முன்னுக்கு வருவான்.

வ : (மிக்க களிப்புடன்) எல்லாம் பெரியவாள் ஆசீர்வாதம். நான் வருகிறேன். இச்சந்தோஷ சமாசாரத்தைத் தங்களிடம் தெரிவிக்கவே வந்தேன். நமஸ்காரம்.

அருகிலிருந்த அன்பர்கள் இச்சிலேடை நயத்தைப் பாராட்டி, இனிய தமிழையும், அரிய தமிழ்த் தாத்தாவையும் போற்றினர்.

பிழை

"பாரதீயன்"

நள்ளிரவு நமனுடன் போராடிக் கொண்டிருந்தது ஒரு உயிர்ப் பிஞ்சு. பழுத்த கிழமாக இருந்தால், பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஓரிரு உள்ளங்களில் அந்த உயிரின் விடுதலைக்கு வேண்டுகோள் ஓடியிருக்கும்—கடவுளை நோக்கி, எண்ண அலைகளின் மூலம்.

ஆனால் அவனோ குழந்தை. வயது பன்னிரண்டு. சுரம் கண்டு அன்று இருபத்தோரு நாட்கள் ஆகியிருந்தன. அவனைச் சுற்றி உட்கார்ந்திருந்தவர்கள், அவன் அம்மா, அப்பா, தாத்தா ஆகியோர்.

டாக்டர் சுரத்திற்குப் பெயர் சொல்லி விட்டார்—'டைபாயிடு' என்று. மருந்துச் செலவு மளமள வென்று ஏறிக்கொண்டிருந்தது. கடந்த இரண்டு நாட்களாகப் பிள்ளையின் நினைவு தவறிவிட்டது. அம்மா அழுதாள். அப்பா புலம்பினார். தாத்தா நிதானம் தவறாமல், டாக்டரிடம் பேரப்பிள்ளையின் உண்மை நிலையைத் தெளிவாகக் கூற வேண்டினார்.

"என் கையில் ஒன்றுமில்லை. 'குளோரோமைஸிடின்' மாத்திரைகள் சுரத்தை இறக்கிவிடும். சுயநினைவு வந்துவிட்டால் நல்லது," என்று மாத்திரைக்குச் சீட்டு எழுதிக் கொடுத்தார் டாக்டர்.

அந்த மாத்திரைக்குப் பயன் இருந்தது. சுரத்தின் கடுமை குறைந்தது. பொழுது விடிய விடிய, பிள்ளையின் சுரம் குறைந்து, சுற்றி உட்கார்ந்திருந்த பெரியோர்களின் உள்ளத்தைக் குளிர வைத்தது.

"ராஜப்பா!" என்று அன்போடு அழைத்தாள் அம்மா. சுரம் குறைந்தாலும் பிள்ளையின் நினைவு திரும்பவில்லை. டாக்டரின் உதவியை நாடினர். டாக்டர் புதிய மருந்தொன்றை ஊசி கொண்டு உட்செலுத்தினார். மேலும் இரண்டு நாட்கள் யுகம் போலக் கழிந்தன.

நினைவு திரும்பியது. ராஜு பேசினான். நன்றாகத்தான் பேசினான். ஆனால்.........? அவனுக்கு முன்பிருந்த புத்தி மழுங்கி விட்டாற்போல் தோன்றியது.

அம்மாவை அடிக்கடி கூப்பிட்டான். "அம்மா! உலகம் தன்னைத்தானே ஒரு தடவை சுற்றுகிறது ஒரு நாளில். ஒரு வருடத்தில் சூரியனை ஒரு தடவை சுற்றுகிறது. ஆனால் இந்த உலகத்திலுள்ள நாம் சுற்றுவதில்லையே. ஏன்?" "அப்படித்தான்!" அவளுக்கு மண்டையைச் சுற்றியது. பிள்ளை தன் கேள்விகளைத்தான் விடுத்தானே ஒழிய, நினைவு பெற்ற தன் பயனாக ஒரு வார்த்தைகூட அவளுக்கு பதில் சொல்லவில்லை.

பிள்ளை பிழைத்தால் போதும் என்று நினைத்தாள் அன்று. பிழைத்த பிள்ளை பித்தாகிவிட்டது. அவனுடைய மனதில் படித்த பழைய பாடங்களும் அவனுக்குப் பாடத்தில் புதிராகத் தோன்றிய கேள்விகளுமே நிலைத்து நின்றிருந்தன. நிதானம் தவறிவிட்டது.

சுரம் ராஜுவின் மூளையைத் தாக்கிவிட்டது என்றார் டாக்டர். அவன் தாத்தா "ஆமாம்! கூடவே சேர்த்து என் பிள்ளையின் பையையும் தாக்கி பணத்தையெல்லாம் பிடுங்கி உன் கையில் கொடுத்து

"4 SIMPLE PLANS

to help you live a happier life!"

This booklet tells you of four interesting savings and investment plans offered by the Palai Bank. One or other of these schemes is sure to suit your needs. Ask our Branch Manager for your FREE copy today!

PALAI CENTRAL BANK LTD.

ESTD. 1927

(Incorporated in Travancore-Cochin with Limited Liability).

Branches :

461, CHANDNI CHOWK, DELHI

★

CONNAUGHT CIRCUS, NEW DELHI

விட்டது !" என்று தமக்குள் புலம்பிக்கொண்டு, தலையில் அடித்துக் கொண்டார்.

மேலும் பத்து நாட்கள் ஓடின.

பித்தான பிள்ளையுடன் அவதிப் பட்டாள் அம்மா. அப்பா மனம் உருகினார். தாத்தா திண்ணையில் போட்டிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு "பிராப்தம் அவ்வளவுதான்! ஒரே ஒரு பிள்ளை. எத்தனை புத்திசாலி. ஊருக்கெல்லாம் பதில் சொல்லும். பித்தாகப் போய்விட்டது. எப்படியாவது சரியாகிவிட்டால் நான் நிம்மதியாகக் கண்ணை மூடுவேன்!" என்று அடிக்கடி தனக்குத்தானே அங்கலாய்த்துக்கொண்டார்.

அன்று ராஜுவுக்கு மறுபடியும் சுரம் கண்டுவிட்டது. டாக்டர் மறுபடியும் வந்தார். வைத்தியம் தொடங்கியது.

அம்மா கண் கலங்கி நின்றாள். "என் ராஜப்பா இந்தத் தடவை பிழைப்பது கஷ்டம்தான்! பித்தாகவே இருந்தாலும் பரவாயில்லை, பிள்ளை பிழைக்க வேண்டுமே!" என்று, அவளுக்குத் தெரிந்த தெய்வங்களுக்கெல்லாம் வேண்டிக்கொண்டு, பிள்ளையின் அருகிலேயே பித்தாக உட்கார்ந்திருந்தாள், இராப்பகலாக.

இரண்டாவது முறை சுரம் கண்டு, அன்றோடு இருபது நாட்கள் ஆகியிருந்தன. இந்த முறையும் பிள்ளையின் நினைவு தவறிவிட்டது.

டாக்டர் பொய் நம்பிக்கைகள் கொடுக்காமல் சொல்லிவிட்டார், இரண்டாவது முறை 'டைபாயிடு' திரும்பி விட்டால் குணமாவது சற்றுக் கடினந்தான், எப்படியும் இருபத்திரண்டாம் நாளைத் தாண்டிவிட்டால், பிறகு பிள்ளையின் உயிருக்குப் பங்கமில்லை என்று.

13848

டாக்டர் கொடுத்த கெடு இருபத்திரண்டாம் நாள். அன்று கழிந்துவிட்டால் ராஜு பிழைத்து விடுவான். அம்மா, அப்பா, தாத்தா மூவரும் குழந்தையின் அருகிலேயே உட்கார்ந்து விட்டனர்.

இரவு பத்து மணி இருக்கும். ராஜு கண்களைத் திறந்து ஒரு மாதிரியாக மிரள மிரள விழித்தான். சுரம் பொறிந்து கொண்டிருந்தது. "ராஜப்பா!" என்றனர் மூவரும் ஏககாலத்தில். அவன் பேசவில்லை. சற்று நேரத்திற்கெல்லாம் விழிகள் நிலைக்குத்தி நின்றன. "ஐயோ! என்னடா வந்தது உனக்கு......? என் ராஜு, ராஜப்பா.........!" என்று அவனுடைய உடலை உலுக்கிவிட்டாள் தாயார் துக்கம் தாளாமல். தாத்தா எழுந்து ஓடிவிட்டார், டாக்டரை அழைத்துவர. ராஜுவின் அப்பா மதியிழந்து உட்கார்ந்துவிட்டார்.

அரை மணிக்குள் டாக்டர் வந்துசேர்ந்தார். ஊசி மருந்து உட்புகுந்தது. 'காலையில் வருகிறேன்!' என்று டாக்டர் சென்றுவிட்டார். பிள்ளை பிழைக்காவிட்டால் அந்தத் தெருப் பக்கம்கூட வர அபிப்பிராயமில்லை அவருக்கு! வந்துதான் அவருக்கென்ன வேலை அங்கே?

மறுநாள் பொழுது புலர்ந்தது. மூன்று ஆத்மாக்கள் "பிள்ளை வயிற்றில் பாலை வார்த்தான்" என்ற சொல்லை ஏகோபித்துச் சொல்லிக்கொண்டன.

டாக்டர் வந்தார். ராஜுவிடம் பேச்சுக்கொடுத்தார். அவன் நன்ருகப் பேசினன். பூரண நினைவை அடைந்துவிட்டான். ஆமாம், இந்தத் தடவையும் சுரம் மூளையைத் தாக்கிற்று. ஆனல் அந்தத் தாக்குதல் முந்தைய பிழையைத் திருத்திவிட்டது!

8 சுலபமான சக்தியுள்ள சிகிச்சைகள்

1. அஜீரணக் கோளாறுகளுக்கு
2. மலேரியா முதலிய ஜுரத்துக்கு
3. வயிற்றுக் கடுப்பு, காலராவுக்கு
4. ஜலதோஷம், இன்புளுயன்ஸா
5. இருமலுக்கு
6. எல்லாவித பிடிப்பு, வலிகளுக்கு
7. நரம்பு வியாதிகளுக்கு
8. இரத்த நோய்களுக்கு



டி சேனின்
மருந்து பெட்டி

அடிக்கடி மிகவும் அபாயகரமான வியாதிகளை உண்டாக்கும் அன்றாட சாதாரண உபாதைகளுக்கு ஓர் சிறந்த நிவாரணி. இந்த மருந்துப் பெட்டியில் எட்டுவிதமான மருந்துகள் அடங்கியுள்ளது. அவைகளைத் தனித்தும் சேர்த்தும் உட்கொள்ளலாம். விபரங்களடங்கிய குறிப்பு கேட்பவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

PRICES
Size 1. Rs. 3/- Size 3. Rs. 9/-
Size 2. Rs. 5/- Size 4. Rs. 17/-

J. & J. DeChane India

J. & J. De Chane
RESIDENCY ROAD-HYDERABAD-Dn

சயன தத்துவம்!

"சுகி"

காலை நேரத்தைவிட மாலை நேரத்துப்பொழுதும், வானக் காட்சியும் ரம்மியமானவை என்பதாகச் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால் நானோ காலைப் பொழுதையும், உதயக்காட்சி பற்றிய கவிதையையும் வெகுவாக ரசிக்கிறவன். இத்தனைக்கும் காலைப் பொழுதையோ உதய சூரியனையோ நான் பார்த்தது கிடையாது. காரணம் எனது படுக்கைதான். உலகத்து இன்பங்களில், இமயமலை உயரத்தை எவ்வியது, படுக்கையில் சுருட்டி முடக்கித் தூங்குவது. ஆற்று மணல், ஓடும் ரயில் வண்டி, வெறும் தரை, மொட்டை வண்டி எதையும், பாயாகவும் பஞ்சணையாகவும் நான் மாற்றிவிடுவேன். விவசாயிக்கு, வைக்கோலே பஞ்சு மெத்தை, வரப்பே தலையணை என்பார்கள். சொல்லேர் உழவனாகிய எனக்கு, உண்மையான மெத்தையும் தலையணையும் இருந்தால், அதுதான் கதை, கட்டுரை, நாவல் முதலியன விளையும் நன்னிலம்.

மற்றத்தொழிலாளர்களுக்கு இல்லாத வசதி எனக்கு இருக்கிறது. படுக்கையே என் உலகம். விரிந்த உலகைவிட, சுருட்டிய படுக்கை விரிவானது. வானத்திலும் பூமியிலும் உள்ள அதிசயங்களையெல்லாம், என் படுக்கையின் விளக்கொளியில் காண்கிறேன். உலகத்தையும் அறிவுச் சுரங்கத்தையும் மகாத்மாவின் அஹிம்சா தத்துவத்தையும் நான் புரிந்துகொண்ட இடம் படுக்கையென்றால் நம்பமாட்டீர்கள். பகலோ, இரவோ, என் முதுகை நிமிர்த்தி விட்டால் என் கற்பனைக் குதிரை, கால் முறிந்து படுத்துக் கொள்ளும்; நான் படுத்துக் கொண்டால் அது மனோ வேகமாய்ப் பாயும். நான் படுத்துக் கொண்டால் என் சிந்தனை எழுந்துவிடும்; நான் எழுந்தால் என் சிந்தனை என்ன செய்யும் என்பதை நீங்களே ஊகித்துக்கொள்ளலாம்.

படுக்கையில் ஆயுளைக் கழிக்கிறவன் நான். படுக்கையில் இருந்தவாறே சாப்பிடுவது, எழுதுவது, அரட்டை யடிப்பது, காரம் ஆடுவது, சீட்டுப் போடுவது, கம்பரோடு அளவளாவுவது, ஷேக்ஸ்பியரோடு நடிப்பது, ஷாவோடு சம்பாஷணை செய்வது—இன்னும் எத்தனையோ அடுக்கலாம். என் பொழுதின் பலிபீடம் படுக்கை; கற்பனையின் புதைபீடம் படுக்கை; சிருஷ்டியின் ஊற்றுச்சுனை படுக்கை.

சோம்பேறியாகப் படுத்துப் படுத்துப் பொழுதைக் கழிப்பதை, உலகோர், முக்கியமாக முன்னேற்ற அறிவுடைமைவாதிகள், ஒப்புக் கொள்ள மாட்டார்கள். ஆயினும் என் கட்சியை ஆதரிக்கிறான், உலகம் மெச்சும் நெப்போலியன். "'என்னிடம் உலகத்து அரியாசனம் வேண்டுமா? தூங்குவதற்குப் படுக்கை வேண்டுமா?' என்றால், நான் கேட்பது படுக்கையே!" என்றான் வீர நெப்போலியன். அரியாசனங்கள் நிலையற்றவை; படுத்துறங்கும் கட்டில் நிலையானது என்பது வீரர்களுக்குப் புரியக்கூடியது.

பொழுதோடு படுத்துப் பொழுதோடு எழுவோர், தழுவுவர் பணம், குணம்......என்றெல்லாம் காலையில் விழிப்பதைக் குறித்துப் பாடுகிறார்கள். காலைப்பொழுதைத் தங்கக் கட்டியாக கருதுவோரும் உண்டு. ஆனால் என் தொழிலுக்குக் காலைப் பொழுதே வேண்டாம். 'நல்ல பேர்' வாங்கக் காலையில் எழவேண்டும் என்பார்கள். காலைப் பொழுதில் எழுந்து வருகிறவர் எல்லோரும் பணம், குணம் தழுவி விட்டார்களா? லோபிகளும் திருடர்களும் காலையில்கூட விழித்திருக்கிறார்கள். கோழிக்கு முன்னாக எழுந்து, காலைப் பொழுதின் பொற்காட்சியைக் காணாது, கருப்பு மார்க்கெட் செய்யப் போகிறவர்கள் எத்தனை எத்தனை பேர்! காலையில் எழுந்து விட்டதைக் கொண்டோ, தூங்கிவிட்டதைக் கொண்டோ, மனிதனை எடைபோட வேண்டாம். அவனவன் வாழ்கின்ற தொழில் முறையை பொறுத்தது, இந்த விவகாரம். படுக்கையை எந்த நிமிஷமும் முட் பத்தையாக எண்ணமல், மலர்ச் செண்டாக எண்ணுகிறவன் மக்களின் மாணிக்கம். தூக்கத்தை வரவழைக்க முயலாமல், அதை உடன்பிறப்பாகக் கொண்டவர்களே வாழப் பிறந்தவர்கள். இட மாற்றத்திலும் ஏமாறுமல் தூங்கக்கூடியவர்களே, இதயங் கவரும் இராசப் பிறவிகள்.

படுக்கையின் உயர்ந்த ரகத்தாலும், நறுமண மலர்களின் வாசத்தாலும், காற்றோட்டத்தாலும், சுகம் கிடைத்து விடுமென நம்புவது, ஆகாயத் தாமரையில் அத்தர் எடுக்கிற கதை. நினைத்த மாத்திரத்தில் நினைத்த இடத்தைப் படுக்கையாக மாற்றுகிறவன், என்னைப் பொருத்தவரை பெரிய ரசவாதி. படுக்கையைப் போன்ற இன்பப் பொருள் எதுவுமே உலகில் இல்லை. கணி கண்ணனுக்காக, விஷ்ணு படுக்கையைச் சுருட்டியதும், பைநாகப் பாய் விரித்ததும்......இதிலுள்ள தத்துவம் பாற்கடலில் பள்ளி கொண்ட பெருமாளுக்கும், ஸ்ரீரங்கநாதருக்கும், எனக்குமே தெரியும்.

'நீர் மேல் குமிழி காயம், இதை நினைத்தாலும் அபாயம்', 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா', 'வாழ்க்கை மெல்லிய அன்னத்தூவியடைத்த பஞ்சு மெத்தையன்று, அது காடு முரடான காட்டு முட்கத்தை' என்பன போன்ற இருதுருவ கொள்கைகளை எனக்கு உணர்த்தியது என் படுக்கைதான்.

ராம கதையைச் சொல்ல வந்த கம்பன், ஆசைபற்றிச்சொன்னான். பாற்கடலைக் குடிக்க நினைத்த பூனையைப் போல, ஓரளவு தானே சொல்ல முடிகிறது என்றான். அந்தப் பூனையோடு, என்னையும் சேர்த்துக் கொள்ளுங்கள். படுக்கை ஒரு இதிகாசப் பொருள், அது கட்டுரைக்குள் அடங்காதது என்பதை அறிந்து கொண்டேன்.

✲

தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த நூலான குறள், மனித எண்ணத்தில் மிக உயரிய, மிகத் தூய்மையான வெளியீடுகளில் ஒன்று. —எம். ஏரியல்.

FOR

THE HINDU (Air Mail Edition)

&

SPORT & PASTIME

(the Leading Sports Weekly)

Contact :

CENTRAL NEWS AGENCY,

12/90, CONNAUGHT CIRCUS,

NEW DELHI

Telephone { **44762** / **43799** }

Shortly Entering the Silver Jubilee Year

Cloth Branch Strengthened—

—New Schemes in operation

1929	**28 members :**	**Sales Rs.**	**6,000**
1952	**350 members :**	**Sales over Rs.**	**1,60,000**

Never too late to release yourself from shopkeepers

Never too late to rely on yourself

JOIN

THE SOUTH INDIA CLUB CO-OPERATIVE SUPPLY SOCIETY LTD.

No. 9, JANTAR MANTAR ROAD,

NEW DELHI

சுடர்

விஜய மலர்

கவிக் கோவை

தமிழ் இலக்கியம் மறுமலர்ச்சி அடைந்திருக்கும் இக் காலத்தில், வசன வளம் மாத்திரமின்றி கவிதை வளமும் பெருகி இருக்கிறது. இந்த வளம் எத்தகையது என்பதை ஓரளவு ஒருங்கே புலப்படுத்தும் நோக்கத்துடன், மிக்க பெருமையுடன் இந்தக் கோவையை வெளியிடுகிறோம். ஆஸ்தானகவி முதல், இளம் கவிகள் வரை, பதினறு கவிஞர்கள், பின்வரும் பக்கங்களில் தத்தம் தனிநயங்களைக் காட்டி இருக்கிறார்கள். மூன்று மாதர்களின் கவிமணமும் இந்தக் கோவையில் கமழ்வது ஒரு தனிச் சிறப்பாகும்.

ஆஸ்தான கவி வெ. ராமலிங்கம் பிள்ளை	தமிழ்ச் சுடர் வாழ்க
யோகி சுத்தானந்த பாரதியார்	துள்ளித்துள்ளி ஓடிவா
பாலபாரதி ச. து. சு. யோகி	துளிச்சுடர்
கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை	வாழ்த்து வெண்பா
" கம்ப தாஸன் "	புலர்வு
கி. வா. ஜகந்நாதன்	கதிரவன்
" சோமு "	மலரும் சுடரும்
ந. சிங்காரம்	புது வாழ்வு
மு. ஸ்ரீனிவாசன்	கன்னி சிரிக்கையிலே
அரங்க—ஸ்ரீனிவாசன்	இயற்கையின் ஆற்றுமை
" வேணு "	வேறு எங்கே?
இளைஞர், என். கோபால சுந்தரம்	கவிதை அன்னை
சுந்தா	எப்படித்தான் பாடினையோ
ஸ்ரீமதி. ஹா. கி. வாலம்	வாழ்க தமிழ் மொழி
,, ஹா. பார்வதி	ஏனே மயக்கம்?
,, பாக்யம் சங்கர்	பாப்பா பாடல்கள்

தமிழ்ச் சுடர் வாழ்க

(1) சுடர்விட்டு ஒளிர்கின்ற சூடற்ற தீபம்
சுகமிக்குப் புகையற்ற வெகுசாந்த சோட்டம்
இடர்விட்டுக் கறையேற இணையற்ற புணையாம்
இன்பத்தை அழகுக்குத் தென்புற்ற துணையாம்
படர்கின்ற துயரங்கள் பலவான போதும்
பயமற்று எதிர்நிற்கப் பரிகாரம் சீதும்
தொடர்கின்ற யாவர்க்கும் மிகநல்ல வழியாம்
தொலைவற்ற அறிவுள்ள தமிழென்ற மொழியே

(2) அன்பென்ற ஒன்றன்றி அறமில்லை யென்றும்
அருள்மிக்க நெறிகண்டு அகிலத்தில் மின்னும்
இன்பங்கள் நிறைகின்ற இசைபாடி எங்கும்
இனமென்று எவரோடும் மனமொன்றி தங்கும்
வம்பற்ற நமையென்றும் வாழ்விக்கும் அமிழ்தம்
வரையற்ற வயதுற்றும் நரையுற்ற தமிழின்
தென்புற்ற அறிவோடு திசையெட்டும் சூழ்க
தெளிவான ஒளிவீசி 'சுடர்' என்றும் வாழ்க.

(3) கொல்லாமை பொய்யாமை எனுமிவ்விரண்டும்
குறையாத மதிநல்கும் பலநூல்கள் மண்டும்
சொல்லாண்மை மிகவுள்ள சுவைமிக்க தமிழின்
சொந்தத்தை என்றென்றும் வந்தித்து அமையும்
நல்லோர்கள் எனநம்மை எல்லாரும் புகழும்
நடைகொண்டு பொதுநன்மை பணிசெய்து மகிழும்
வல்லாண்மை வரஈசன் வழிபாடு செய்வோம்
வரமுற்று மெய்ஞ்ஞானச் 'சுடர்' ஓங்கி உய்வோம்

வெ. இராமலிங்கன்
4-2-53

துள்ளித் துள்ளி ஓடிவா

யோகி சுத்தானந்த பாரதியார்

1

துள்ளித் துள்ளி ஓடிவா
தோள்புடைத் தெழுந்துவா!
வெள்ளம்போல வேகமாக
வீறுகொண்ட தமிழனே!
உள்ளமெல்லாம் வீரசக்தி
ஊற்றெழுந்து பொங்கவே

2

சிலைவடித்த அழகனே
சிந்தனையின் சிற்பியே
கலைகுலுங்கும் செல்வனே
கவிகளுக்கு மன்னனே!
மலையெனத் தலைநிமிர்ந்து
வாகைமார்பு விம்மவே
உலகைவெற்றி கொள்ளவே—நீ
ஓட்டமாக ஓடிவா!

3

தங்கமான தமிழனே
சாதிபேத மேதடா?
வங்கம் ஒன்றில் ஏறினேம்
மனிதராக முன்செல்வோம்;
துங்கமான ஆன்மநேய
ஒற்றுமை துலங்கவே
சிங்கம்போலத் திக்கதிரச்
செயமுழக்கம் செய்துவா!

4

கூர்ந்த நல்லறிவுடன்
கொள்கையிற் செறிவுடன்
தேர்ந்தநல் லுழைப்புடன்சு
தேசபக்திக் கனலுடன்
சேர்ந்ததெய்வ வாழ்வுடன்
தியாகவீரப் புகழுடன்
சார்ந்துலகு போற்றவே
தருமபேரி கொட்டிவா!

துளிச்சுடர்

பாலபாரதி
ச. து. சு. யோகி

✲

1

ஆன்மக் கடலின் ஆழத்து வெடித்த
வெள்ளிமீன் முத்த வியப்புக் கனவுகள்
ஒருகணம் தோன்றி ஒளிநடம் புரிந்து
மறுகணம் மறையும் மாயத் தூசிபோல்.

2

கருத்துக் கருங்குகை தன்னிற் கனவுகள்,
பகல்யாத் திரையில் சிதறிய பலதுகள்
கொண்டு, தம்முடைக் கூடுகள் முடையும்;
கற்பனை காட்டிக் கவின்செயும்; எனினும்
சொற்பனர் தானே சுகமிலை என்பார்.

3

காலக் கடலின் அலைமேல் மிதக்கும்
மெல்லிய துல்லிய மென்மைக் கவிதைகள்,
இழுத்துப் பிடித்து இலக்கணங் கோத்துப்
பழுத்த சொல்லுடன் பாயும் கவிதைகள்,
ஆழத் தமுங்கும்; அழியும்; மறையும்.

4

மேகப் பலகைமேல் விரிவான் தீட்டிய
மோனக் கவிதையின் மோஹன மெல்லாம்
ஆயிரம் பேரலை வாய்திறந் தாற்றும்
ஓசைக் கருங்கடல், ஒவ்வோ ரலையும்
பேசுமுன் மற்றொன்று பேசுவ தால்வெறும்
ஓசையல் லால்மற் றொன்றுமே காணோம்!

5

வார்த்தை வெறுங்காற்று என்பான் வழிப்போக்கன்;
காற்றே வலிமைக் கடவுளென்பான் கவிராயன்.

6

வார்த்தை கருத்துரைத்தால் வசனமாம்; அவ்வார்த்தைக்
கருத்துப் பலபடைத்துக் கனவெழுப்பில் கவிதையன்றோ!

7

ஆன்மக் கற்பனை அதிசயக் கனவுகள்
வாழ்க்கைக் கண்ணாடியில் மலருதல் கவிதை.

8

ஏதோ ரகசியம் இயம்பப் புவனமேல்,
சூழ்ந்து கவிந்திடும் சூல்கொளும் முகில்கள்
ஆயினும் ஆர்த்தெழும் அளவிலாத் துளிகளில்
தரையிடைத் தத்தடி கொட்டியே சிதைந்த
வெற்றுரை யன்றி வேறறி யாதே.

9

மதிபா டுவதோ என்றுன் மதிக்கலைஞன்;
இல்லை குயில்என்பான் ஏழை வழிப்போக்கன்.

10

மலர்சிறிதாம், வாசனையோ வனமெல்லாம் வீசிவரும்;
குழல் சிறிதாம், குழலிசைக்கோ குறைவில்லை; அதுபோலக்
கருத்துச் சிறிதெனினும், கவிதை அதற்காக
வார்த்தைப் பொருள்கோக்கும் வளமைக் களவில்லை.

11

குட்டை வானத்துக்கோல மெல்லாங் கண்டுவக்கும்
வெட்டிச் சிரிப்பினிலே விரைந்தோடும் சிற்றூறு.

12

வான்மரம் குலுக்கிய மறிசுழற் காற்றுப்
புல்லின் மெல்லணை மெல்லவே தழுவும்.

13

ஆயிர முட்களி னுல்வருந் துன்பம்
பெரிதல, ஒருமலர்ப் பிரியமுண் டாமேல்!

14

காலம்போம்; செயலழியும்; வார்த்தைநிற்கும்! கண்டாயே
ராமனில்லை, வான்மீகி ராமகதை செப்பாக்கால்.

15

இருட்கடல் வெட்டும் மின்னலின் எரிவாள்
குரங்குகள் ஏரியைக் கொம்பினுற் புடைத்தென,
இருட்கடல் விலகா, ஏரிநீர் கலையா!
எனினும்,
மின்வாள் வெட்டலின் வியப்பே பெரிதுகாண்.

16

இத்தகை யனவே என்கவி மின்மினி,
பளிச்சுப் பளிச்சென வெளிச்சங் காட்டும்
துளிச்சுடர், ஆயினும் தோன்றியும் மறைந்தும்
வெளிப்படும்; அதனுல் வியப்பேன்.

வாழ்த்து வெண்பா

கவிமணி. தேசிக விநாயகம் பிள்ளை

செந்தமிழ்ச் சங்கம் சிறந்தபுது டில்லியிலே
வந்தொளி வீசு'சுடர்' வாழியவே—சந்ததமும்
தாண்டவம் ஆடுகின்ற தையலொரு பாகனெம்
ஆண்டவன் செய்யும்அரு ளால்.

புலர்வு

"கம்ப தாஸன்"

இரவினிலே தாரகையின் சிரிப்புக் காட்டி
இறங்கியது தெய்வம்தான் பனியின் சொட்டாய்,
சரம்பலவே தைத்திட்ட பரத்தை ரத்த
தண்மலர்ச்சி காட்டியது முள்ளின் ரோஜா!
'வருக'வென தெய்வத்தை வாழ்த்துக் கூறி,
வண்ண இதழ் புன்னகையை வழங்கும் வேளை,
"மறைவினிலே இருப்பதற்கு மதிப்பு உண்டு
மதியெனினும் தேய்ந்தழியும்" என்ற, தென்றல்!

தெய்வத்தின் சித்தந்தான் சிலிர்க்க லாச்சு,
சிறுபுற்கள் பூமியிலே சிலிர்த்தல் போல;
மெய்காண தெய்வம்தான் சிசுவாய் மாறி
மென்குரலில் 'பசி'என்று அழுத நேரம்
பொய்போன்ற இருட்திரையைப் போக்கி, காலைப்
புதுச்சுடரே கடல்மீது தோன்ற லானன்!
வையத்தில் மனிதவடி வெடுத்த தெய்வம்
வருந்துவதைக் கண்டுடலம் நெருப்பாய் வெந்தான்!

கதிரவன்

கி. வா. ஜகந்நாதன்

வானத் தெழுஞ் சுடரே—உன்னை
வணங்கி வாழ்த்துகிறேன் ;
ஞானச் சுடரினைப் போல்—இருளை
நாசஞ்செய் தேவருவாய்.

✲

கண்ணுக் கொளி யிருந்தும்—உன்
கதிரிலை யேற்பயன் என் ?
விண்ணுக் கலங்காரம்—நின்
விந்தை உருவமன்றோ ?

✲

ஐம்பெரும் பூதத்தினுள்—புவி
ஆனதென் றேசொல்லுவார்.
இம்பருன் சோதியின்றேல்—இங்கே
ஏதுயி ருக்குநலம் ?

✲

மேகம் மழைபொழியும்—பல
வித்து முளைத்துவரும்
காகம் கரைந்துவரும்—நின்
கதிரின் விளைவல்லவோ ?

✲

உலகம் விழிப்பதுவும்—தொழில்
ஊக்கம் படைப்பதுவும்
இலகும் கமலமலர்—மலர்ந்
தெழிலுற லும்எதனால் ?

✲

சந்திரன் தண்ணொளியும்—நீ
தந்து படர்வதன்றோ ?
இந்திர னைனலும்—ஒளி
இல்லையேல் என்னபயன் ?

✲

வாழி கதிரவனே—நிதம்
வாழி சுடருருவே
வாழிநற் சூரியனே—நிதம்
வாழிய நின்புகழே !

மலரும் சுடரும்

"சோமு"

அல்லிப் பூவும் தாமரையும்—நிதம்
ஆயிரம் மலரும் பொய்கையிலே
அல்லும் பகலும் அனுதினமும்—சுடர்
அழகுக் கொலுவில் அமர்ந்திருக்கும்.

*

விந்தை அழகு வீற்றிருக்கும்—அதை
விண்ணகம் கண்டு வியந்திருக்கும்
சந்திர சூரியர் சந்ததமும்—அதில்
சாடிக் குதித்தே நீந்திடுவர்.

*

சிந்துரத் தலையை நீட்டிநிற்பள்—வண்ணச்
செம்மலர்த் தாமரைச் செல்வியவள்
அந்தர வெளியில் இதழ்கோதி—இளம்
அல்லி மகள்தலை ஆட்டிநிற்பள்.

*

வெய்ய கதிரின் வெயில் விழவும்—இதழ்
விரிந்து நகைப்பள் தாமரையாள்
செய்ய மதியின் சிறுநிலவில்—முகம்
சிரித்து மலர்வள் அல்லிமகள்.

*

காலை மாலை இரவெல்லாம்—மணம்
கமழும் திருமணப் பொய்கையிலே
வாலைப் பருவ வண்டினங்கள்—வந்து
வந்தே காதல் பயின்றிடுமாம்.

*

ஓயா இன்பம் அலைவீசும்—அந்த
உன்னதக் காதல் அரங்கினிலே
மாயா என்னும் மயக்கியவள்—ஒரு
மந்திர லீலை செய்யலுற்றாள்.

நட்ட நடுநிசி வேளையிலே—அல்லி
நங்கை நிலவொடு கொஞ்சையிலே
பட்டப் பகலைப் பரிதியினை—எண்ணி
பங்கய மங்கை ஏங்கலுற்ருள்.

*

"கொடிய வெந்தழல் கொட்டுதியே—ஓ! ஓ!
கூன மதியே, கூற்றுவனே!
விடியும் வேளை விரையாதோ—என்றன்
வேதனை நோயும் விடியாதோ?"

*

என்றே தாமரை ஏதேதோ—வெகு
ஏக்க மொழிகள் இயம்பிடவும்
சென்றே அருகில் தலைசாய்த்து—அல்லி
செவியொடு செவியாய்ச் செப்பலுறும்.

*

"குளிர்மதி கண்டு கொதிக்கின்ருய்—அனல்
கொட்டும் வெயிலில் குளிர்கின்ருய்
தளிர்இளம் புனலில் பூத்திடினும்—உன்
தன்மை தண்மை காணலையோ!

*

"சொந்த நலனே சுகமோடி—அடி!
சூரியன் ஒருவனே தேவனேடி
இந்த உலகில் அல்லிக்கும்—ஓர்
இதயம் என்பதும் இல்லையோடி?"

*

மலர்கள் மொழியும் மறுமொழியும்—இங்ஙன்
மாறி மாறி உரைசெய்ய
புலர்கொள் வானும் முகம்மாறி—ஒரு
பொன்னிறப் பூவைப் பூத்ததம்மா!

*

வானில் நிலவு செலவாகி—பொய்கை
வரம்பில் கதிரோன் வரவாக
ஊனில் உயிர்ப்பு வந்தவள்போல்—புனல்
உதறி எழுந்தனள் தாமரையாள்.

"அல்லிப் பெண்ணே ஆரணங்கே!"—என
ஆசியம் பேசினள் தாமரையாள்
கொல்லி வெயிலில் நின்றுநின்று—இதழ்
கூம்பி வாடினள் அல்லிமகள்.

1384

*

பகலின் பொழுதும் பாறிற்று—பையப்
பாற்குடம் ஏந்தி மதிவந்தான்
இகலின் உவகை எவ்வினளாய்—அல்லி
எக்களிப் போடே பேசலுற்ருள்.

*

"மன்னன் வந்தான் மதிநாதன்—எனை
மாலை யிட்ட மணவாளன்
கன்னல் மொழியே கண்மணியே—அடி
கமலப் பெண்ணே கண்திறவாய்!"

*

தலையைத் தணித்தனள் தாமரையாள்—உடன்
தையல் அல்லி நகைத்திடவே
அலையை வீசி வந்தபுனல்—"சண்டை
அமரும்" என்றுகை அமர்த்தியதால்.

*

தண்ணீர் பொங்கவும் தலைகுனிந்து—மலர்த்
தையலர் இருவரும் தாழ்ந்திட்டார்
கண்ணீர் பொங்கும் கண்களுடன்—இதைக்
கண்டு வண்டினம் ஓலமிடும்.

*

"தேனைச் சொரிந்து தித்தித்தீர்—எனினும்
சேரா திருவரும் கைத்திட்டீர்
வானை நோக்கி வாழ்ந்திர்நீர்—அந்த
வானம் உரைசெய் மொழிகேளீர்.

*

"உரிமை என்பதும் ஒருபிணைப்பாம்—மற்(று)
ஒன்றின் உரிமை அதில்இணைப்பாம்
உரிமை பேசும் உலகத்தே—கண்ட
ஊழி நாளின் உண்மையிது!"

புது வாழ்வு

ந. சிங்காரம்

1. இனியதாம் விஜயநல் லாண்டுதிக்கும்
இன்றுநாம் இறைவன் கழல்வணங்கிப்
புனிதநற் செயலறி விச்சையுடன்
புதுவாழ் வினைப்பெற் றுயர்ந்திடவே
கனிவுடன் பெரியோர் மொழிந்ததனைக்
கவனமாய் மனத்தில் ஊன்றவைத்து
மனிதனும் தன்மை வாய்ந்துமிக
மதிநலம் ஓங்கி வாழ்ந்திடுவோம்

2. சுயநலம் ஒன்றையே மிகக்கருதித்
துணிந்திடும் செயல்கள் விரும்பியநற்
பயன்தரும் வகையில் அமைந்திடினும்
பாவச் சுமையாய் முடியுமென்ற
பயத்துடன் நன்னெறி கடைப்பிடித்தே
பாங்குடன் பொதுநலந் தனைமறவா
தியற்றுதல் இறைபணி எனவுணர்ந்தே
இன்பமாய் என்றும் வாழ்ந்திடுவோம்.

3. அறிவினைப் பயக்கும் நூல்பலவும்
ஆய்ந்தவை நல்கும் பொருளுணர்ந்து
குறிக்கோள் ஒன்றினைப் பற்றியன்பு
குன்று மலேஅத னைத்தொடர்ந்து
பொறிபுலன் யாவும்நம் வசப்படுத்திப்
பொறுமையோ டுயர்சா தனைபுரியும்
நெறியினில் வழுவா தேயிருந்து
நின்மல வாழ்வு வாழ்ந்திடுவோம்.

கன்னி சிரிக்கையிலே

மு. ஸ்ரீனிவாசன்

கன்னத்தில் குழிவிழவே
கன்னியேநீ சிரிக்கையிலே
என்னென்ன எண்ணுதடி
என்மனம்நீ அறிவாயோ!
பொன்னொத்த மேனியள்நீ
புன்முறுவல் செய்கையிலே,
என்னொத்த பேதையர்கள்
எண்ணுவதும் அறிவாயோ!

நெற்றியிலே சிற்றலையாய்
நின்கூந்தல் தவழ்கையிலே,
ஒற்றியதை ஒதுக்கிடவே
உன்விரல்கள் முயல்கையிலே,
சுற்றியெவர் நின்றிடினும்
சோதரர்தாம் பார்த்திடினும்
பற்றியுனை அணைத்திடவே
பதைக்குதடி என்மனமே!

மதிகோடிக் கிணையாகும்
மான்விழியாள் உன்னெதிரில்,
நிதிகோடி வைத்திங்கு,
நினக்கெதடா வேண்டுமெனில்,
ரதிகோடி வெட்கிடுமென்
ராஜாத்தி உனக்கே நான்
பதியாகும் பாக்கியமே
பாரினிலே வேண்டிடுவேன்.

இங்கேநான் இருந்தாலும்
அங்கேநான் சென்றாலும்
எங்கேநான் நின்றாலும்
என்றென்றும் ஓயாமல்,
அங்கெல்லாம் அகக்கண்ணில்
அன்பொழுகத் தோன்றுதடி,
பொங்குமின்பப் பொலிவுடையாய்
பொன்முகமாம் உன்முகமே!

கவிதைக்கும் காதலுக்கும்
கண்டதொரு பொருத்தமென்பர் ;
எவ்விதமோ என்றேநான்
எண்ணியெண்ணித் தோற்றேன்காண்;
கவ்வுகின்ற காதலினல்
கவிதைவெறி மூளவைத்து,
இவ்விதந்தான் என்றேநீ
இன்றெனக்குக் காட்டுகின்ருய்.

மின்சக்தி உடையாயோ
மேனியெழில் மிகவுடையாய் ?
உன்கண்கள் சிரிக்கையிலே
உவகையிங்கு ஓங்குதடி !
நின்கண்ணில் துயர்கண்டால்
நிற்குதடி என்னுள்ளம் ;
என்சக்தி நீகொண்டாய்
ஈதென்ன விந்தையடி !

புள்ளினங்கள் பாடுமிசை
புதியதோர் இன்பந்தான் ;
தெள்ளியநீர் ஓடையிசை
செவிக்குநல் இன்பந்தான் ;
வெள்ளிடையே தோன்றுகின்ற
மின்னலுமோர் இன்பந்தான் ;
மெள்ளமெள்ள வீசு மிந்தத்
தென்றலுமோர் இன்பந்தான்.

அள்ளுமுள்ளம் இவையெல்லாம்
அழகுளதாம் என்ருலும்,
அள்ளியவை அனைத்தையுமே
அணைத்தொன்ருய்க் கலந்தாலும்,
கள்ளெனவே மயக்குகின்ற
கன்னியுன்றன் காதலைப்போல்,
துள்ளுமின்பம் தந்திடுமோ
தோகையுடைப் பெண்மயிலே !

வேறு எங்கே?

" வேணு "

மெய்மறந்தும் பொய்புகலா
 மேன்மைஅரிச் சந்திரன்போல்
வையமிதில் நாடெதிலும்
 வாழ்ந்ததையே கண்டதுண்டோ ?

அறமுயிராய் அன்புருவாய்
 அருமையிந்த நாட்டினிலே
பரதனவன் வாழ்ந்ததுபோல்
 பலவேதும் கேட்டதுண்டோ ?

அழகியதன் பதியுடலே
 அன்புடனே பேணியதோர்
பழுதிலள் நளாயினிபோல்
 பத்தினியைக் கண்டதுண்டோ ?

இல்லையென்று சொன்னதந்தை
 இல்லையென்றே ஆகவென்றே
கல்தூணில் கடவுளரைக்
 காட்டியதைக் கேட்டதுண்டோ ?

பால்மணக்கும் வாயுடையான்
 பண்டொருநாள் காட்டினிலே
மால்நினைந்து வேண்டியதை
 மற்றெவரும் கண்டதுண்டோ ?

காலனையே வென்றஅந்தக்
 காளைபதி ஞானுடைய
சீலன்சிவ சித்தனைப்போல்
 செகமதிலே கேட்டதுண்டோ ?

புத்தனது துறவதைப்போல்
 எத்தனைபேர் கண்டதுண்டு ?
உத்தமன் பிருதிவியைப்போல்
 உளக்கருணை கேட்டதுண்டோ ?

'நெற்றிக்கண் திறந்திடினும்
 குற்றமதே' என்றுசொன்ன
பெற்றியுடைப் புலவனைப்போல்
 புவியிலெங்கும் கண்டதுண்டோ ?

அவமதித்த அரசினையும்
அடைப்பம்தான் கொண்டுவிட்ட
கவிப்பெரியன் கம்பனைப்போல்
காசினியில் கேட்டதுண்டோ ?

இறுகத்துணி மூடியிட்டே
இருகண்ணும் பார்வையற்று
குருடன்பதி யுடன்வாழ்ந்த
குலவதிபோல் கண்டதுண்டோ ?

சந்திரகுப் தன்தனக்கே
சாம்ராஜ்யம் சேர்த்தரச
தந்திரசி காமணிசா
ணக்கியன்போல் கேட்டதுண்டோ ?

தாஜ்மகால், அன்பினிற்கு
அழியாத சின்னமதாய்
ஷாஜகான் செய்ததற்கோர்
சரியீடு கண்டதுண்டோ ?

ஈசனையே நேரினில்யான்
காட்டிடுவேன் பாருமென
(இ)லேசினிலே சொன்னராம
கிருஷ்ணரைப்போல் கேட்டதுண்டோ ?

ஆயுதமே இல்லாமல்
அஹிம்சைமுறைப் போரதனுல்
தாயகத்தில் விடுதலையைத்
தந்திட்ட தந்தையினை,

பணப்பித்தை மதவெறியை
பகைவனையும் அன்பனுமாய்
குணமாறச் செய்தபெரும்
தத்துவனும் காந்தியைப்போல்

இந்தியநா டிதுதவிர்த்தே
எவ்வேறு நாடெதிலும்
கண்டதுண்டோ அல்லதுநீர்
கேட்டதுண்டோ சொல்லிடுவீர் ?

[அறிஞர் வ. ரா.-வின் 'இந்த தேசம்' என்ற கட்டுரையைத் தழுவியது.]

(3818

இயற்கையின் ஆற்றாமை

அரங்க—ஸ்ரீனிவாசன்

1. வானமுகிற் கண்திறந்து, வாரிதிபோல் நீர்பெருக்கி,
ஏனழுதாய்? எங்கள் இயற்கைப் பெருந்திருவே!
ஆனபயன் வீணர் அபகரிக்க, அம்புவியில்
மேனி வருந்துபவர் வேதனையைக் கண்டாயோ?

2. வெடிபடப்பே ரண்டமெலாம், மின்னலெனும் பல்இலகக்,
கடகடென நீசிரித்த காரணத்தைக் கூறாயோ?
அடிவயிறு காயவிட்டே, அவருழைப்பை அபகரிக்கும்
கொடியவரைக் கண்டதனால் கோபமிகக் கொண்டாயோ?

3. வெடிக்கின்ற சிரிப்படங்கி, மின்எயிறு நெறுநெறெனக்
கடிக்கின்ற காரணம்என்? காசினிக்குப் பாரமெனத்
தடிக்கின்ற தொந்தியினும் தடிப்பதற்கே, தாம்அவர்கள்
எடுக்கின்ற முயற்சிதனை எதிர்கண்டு பொங்கினையோ?

4. அருகிலுள பொருளெல்லாம் அழிவடையப், புகைகதுவ,
எரிமலைமூக் கினிலனலை ஏனோநீ உயிர்க்கின்றாய்?
பொருபசியால் பாட்டாளி பூச்சியெனச் சாம்போது,
திருஅடையப் பணம்குவிப்பார் சூழ்ச்சிகண்டு வெதும்பினையோ?

5. நடுங்கநிலம், மரங்கள்விழ, நல்லுயிர்கள் பதைபதைக்கக்,
கடும்புயலே உருவாகக் கடலாடை குலுங்கியதேன்?
குடும்பமெனும் நாடிதனைக் குலைத்துப்,பல் பிரிவாக்கும்
கொடுங்கயவர் தமைஒழிக்கக் கொதித்தெழுந்த வேகமோ?

கவிதை அன்னை

இளைஞர், என். கோபாலசுந்தரம்

உள்ளமாம் வானத்துள் உருவற்று விரிந்துள்ள
உணர்வென்னும் பெருவெளியில்,—வேக
வெள்ளலை களைவீசி வருந்திமிக ஓய்ந்தலையும்
வெறுமெண்ண வேலைதனில்—தோன்றும்
தெள்ளியநற் செவ்வொளியில் செறிந்தயிருட் சிந்தையுமே
செம்மையுடன் பொலிந்திருக்க—நெஞ்சை
அள்ளுங்கவிக் கிரணமுடன், அகன்றவொளிக் கற்றையுடன்
அன்னை வந்தாள் ஆதவனாய் !

அந்தியுமே மயங்கிடவும், அகமதனில் மருளென்னும்
அடரிருளும் படர்ந்திடவே,—வெம்மைச்
செந்திரளாந் தினகரனும் சாகரத்தைச் சேர்ந்திடவும்
சிறுவொளியாம் அறிவகல,—வானஞ்
சிந்தையுமே தடுமாறி வனப்பிழந்து திருநீங்க,
அகவிருளைத் தகர்த்தெறிந்து,—மேலாஞ்
சந்தங்களாந் தாரகைகள் தாஞ்சூழக் கவிதையன்னை
வந்தனளே சந்திரனாய் !

இருள்நிறைந்த இதயத்தை இகலவைத் தொளிசேர்க்க
இனிதமைந்த இன்விளக்காய்,—இன்னும்
மருள்நிறைந்த மதியதற்கு மென்மேலு மறிவூட்டும்
மங்காத மின்னொளியாய்,—மேலும்
தெருள்ஞானம் தனைத்தந்து, சிந்தைதனின் சிற்றொளியைப்
பேரொளியாய்ப் படரவைத்து,—அங்கே
அருள்சேர்ந்த இருசுடராய் அமைந்தகவி அன்னையவள்
அரும்புகழை அறிவரிதே !

வறுமையால் மிகவருந்தி
வாடிநின்ற அரும்புலவா,
பெருஞ்செல்வ எழிற்பாடல்
எப்படித்தான் பாடினையோ ?

துன்பத்தால் உடல்நோவ,
துயரத்தால் உளம்நைய,
இன்பமிகு இனியகவி
எப்படித்தான் பாடினையோ ?

அடிமையுற்ற நாட்டினிலே
அல்லலுற்ற பாரதியே !
விடுதலையின் களிவெறியை
எப்படித்தான் பாடினையோ ?

ஆங்கிலமாம் மோகினியாள்
ஆட்சிசெய்த அந்நாளில்,
பாங்குடனே பைந்தமிழில்
எப்படித்தான் பாடினையோ ?

முந்தயதைப் பழியாமல்,
முன்னோரை இகழாமல்,
விந்தைப் புதுமைகளை
எப்படித்தான் பாடினையோ ?

சுந்தா

வாழ்க தமிழ் மொழி

ஸ்ரீமதி. ஹா. கி. வாலம்

தமிழக நாயகி, தாய் மொழித்தாயகி
தண்டமிழ் வஞ்சி மணிக்கொடியே!
அமுதகலாமய அன்னை புராதனி
ஆரணி காரணி நாரணியே!
சமரஸ பாவமும் சாத்விக போதமும்
ஜகத்துக்களித்திடும் அம்பிகையே!
அமரமனோன்மணி அம்ப சிரோமணி
அந்தரி சுந்தரி வந்தனமே!

இயலிசை என்றிரு கழல்விழி கொஞ்சிடு
இன்கலைக்கடலுதி இந்துமதி!
அயில் விழிக்குயில் மொழி மயிலியலனநடை
பயில்ஒயில் பாஷைகள் தெய்வதமே!
சயிலதுரந்தரன் மலய மலைபெறு
செந்தமிழ் சுந்தரக் கன்னிகையே!
வெயிலிடை மணியென ஒளிவிடு முகமதி
வண்டமிழ் ஒண்டொடி வந்தனமே!

சீரிய ஆரியம் தோழி எனப்புகழ்
சீர்மை விளங்கிடு செம்மொழியே!
பாரினில் பண்டையச் சீரினில் வேறொரு
நேரிணையில் மொழிக் காரிகையே!
பேரினில், பேறினில், பெற்றி துலங்கிடு
பேசரும் தெய்விக மெய்ச் சுடரே!
யாருனைப்போலுளர் கூறிடு தேமொழி!
பூரணி! பூங்கொடி! வந்தனமே!

திராவிட மென்றுயர் பேர்பெரு நாட்டினில்
குலவி நிறைந்திடு கொற்றவையே!
பூவினில் ஈடிணை யற்ற பெரும் புகழ்
புண்ணிய கண்ணியப் பொன்மணியே!
நாவினில் தேன்பொழி நாமகளே உயர்
நாவலர் பாவலர் நாயகமே!
ஆவிகலந்திடு ஆரமுதே வளர்
அன்னையருந்தமிழ் வந்தனமே!

கம்பனளித்த கவின் மொழி இன்சுவை
கொண்டு சிலம்பளி ஒண்டொடியே!
உம்பர் உவந்திடு ஒண்குறள் பாடிய
உத்தமன் பொத்திய ரத்தினமே!
அம்புவி மேலர சாட்சி விலக்கிய
தம்பியுவந்திடு கொம்பனையே!
நம்பிய தொண்டர்கள் நாவகலாதொளிர்
வஞ்சி நிரஞ்சனி வந்தனமே!

தென்றிசை நின்று சிறந்திடு தேன் மொழி
தெய்விகப்புலமை திகழ் திருவே!
குன்றில் பிறந்தனை; மன்றில் வளர்ந்தனை:
கொண்டனை கோயில் தென்பதியே!
என்றுமிலங்கிடு இன்ப மகாநிதி
எம்மவர் காவிய ஓவியமே!
வென்று விளங்குவை; வெற்றிமுழக்குவை:
வாழ்க தமிழ் மொழி, வாழியவே!

ஏனோ மயக்கம்?

ஹா. பார்வதி

1

தாமரைக்கன்னி, தாமரைக்கன்னி,
ஏமருஞ்செல்வீ, இன்பவிளக்கமே,
கமலே, நிறையே, திருவின் உறைவே,
சேற்றில் பிறந்த செழிய ஜலஜமே,
ஏற்றம் மிகப்பெற வளர்ந்தனைமலரே!
நீரினில் பிறந்தாய் நீரினில் வளர்ந்தாய்,
நீரே நின்தன் உயிரின் ஊன்றுகோல்,
நீரே நின்தன் நின்மலத் தாயகம்.
அங்கண் விசும்பில் செங்கதிர் பரப்பி
தங்கிடு சோதிப் பிழம்பாய் தகிக்கும்
ஆதவன் கண்டு மலர்ந்தது ஏனோ?
ஏதவன் மறைந்தால் இதழ்களைக் குவித்தனை?
பகலவன் பித்தம் கற்றது எதனால்?
பகலவன் பித்தம் கற்றது எதனால்?

2

நதிமா தேவீ, நதிமா தேவீ,
குதித்தே பாயும் நதிமாதேவீ,
துதிபெற ஒலிக்கும் நதிமாதேவீ,
மலையிற் தோன்றிய மாதே, மகிழ்ந்து
அலைகளை வீசி அனுதினம் வளர்ந்தனை,
மலையின் மழையால் அங்கம் பெருகினை,
மலையினை விட்டுத் தாவுதல் ஏனோ?
நிலத்திலே விரிந்து ஓடினை ஏனோ?
அல்லல்கள் தன்னை அணுவாய் நினைந்து
பல்வளம் பெருக்கிப் பசுமை வளர்த்து
கல்லினைத் தேய்த்து உருட்டி உருண்டு

நில்லா தோடும் தத்துவம் என்ன ?
எல்லையி லாநின் நாமம் அழிக்கும்
நிலைமிசைநின்னைத் தன்னுள்ளே அடக்கும்
நீலக்கடலில் வீழ்ந்தனை ஏனோ ?
அலைகடல் பிரேமை ஏனோ தேவீ ?
அலைகடல் பிரேமை ஏனோ தேவீ ?

3

அலைமாகடலே, அலைமாகடலே !
ஓலம் செய்யும் உயரியகடலே !
கோலமாய்த் தோன்றும் குணமிகுகடலே,
நீலக்கடலே, நெடுந்திரைக்கடலே,
புவியிற் தோன்றினை, பூமிதாங்கினுள்,
புவியே கரையாய் போற்றி வளர்த்தாள்.
அங்கம் நடுங்க அலைக்கரம்வீசி
சங்கமும் முத்தும் தரைமிசை தூவினை,
இங்கே பிறந்து இனிமையாய் வளர்ந்தும்
செங்கதிர் ஒளியை சிறிதே பெற்று
மங்கியும் வளர்ந்தும் மாறிநீ மாறி
கங்குலில் சிலநாள் ககனம் தோன்றிடு
திங்களைக்கண்டு பொங்குவதேனோ ?
சந்திர நாட்டம் ஏனோகடலே !
சந்திர நாட்டம் ஏனோகடலே !

4

பச்சைமாமயிலே, பச்சைமாமயிலே !
மெச்சிடு எழில்பெறு மரகத மயிலே !
வனத்திடை தோன்றினை, வளமிகுகானம்
தினமும் வளர்க்க இனிமையாய் இருந்தனை !
அன்பினை அளித்தது அரணிய விருட்சம் ;
துன்பம் தடுத்தன நிழல்பெறு தருக்கள் ;

அன்னதோர் அழகெல்லாம் கருத்திடை எண்ணிலே.
சொன்ன பூமியின் சுவையைத் தேர்ந்திலே.
மின்னலேக்காட்டி மேனி கறுத்து
திடுக்கிட இடித்து தேகம் குளிர
நடுங்கிடப் பொழியும் மேகம் கண்டால்
அழகிய தோகையை விரித்தனே ஏனே ?
பொழியும் மேகம் கண்டால் மலர்ந்து
எழில் மிகுதோகையை விரித்தனே ஏனே ?
மேக மோஹம் ஏனே மயிலே ?
மேக மோஹம் ஏனே மயிலே ?

5

விட்டிலே ! விட்டிலே ! விடாதுசுற்றும்
துட்டப் பூச்சியே ! துள்ளித்திரிந்தாய் !
நீங்காது சிறகை ஓயாது வீசுவாய்;
அங்கும் இங்கும் அலேயும்புள்ளே,
எங்குநீ தோன்றினய், பொங்கி வளர்ந்தாய் ?
நின்னை எரித்துச் சாம்பலாய்க் கருக்கும்
மின்னெளி தீப எழிலில் மயங்கி
தன்னுடல் மறந்து வீழ்ந்தனே ஏனே ?
ஒளியின் மயக்கம் ஏனே விட்டிலே ?
ஒளியின் மயக்கம் ஏனே விட்டிலே ?

6

பிறப்பை மறந்து வளர்ப்பைத் துறந்து,
சிறப்பைவிட்டு தன்னலம் இகழ்ந்து,
இறப்பினும் இருப்பினும் என்னதான் நேரினும்,
பெறுவதற்கரிய தனியிடம் வசிப்பினும்,
அருநிலமதனில் அடைவது அன்பு !
அன்பினல் உள்ளம் மகிழ்வது மேனே ?
அன்பினல் உள்ளம் மகிழ்வது மேனே ?

13818

பாப்பா பாடல்கள்

பாக்யம் சங்கர்

1. நந்தவனம்

நகைக்கும் முல்லை
நாணும் ரோஜா
தாரை ஊதும்
தங்க அரளி
பாய் விரிக்கும்
பன்னீர்ப் பூவு
பவளத் தண்டு
பாரிஜாதம்
வாச மாரி
வீசு மகிழம்
மலர விழிக்கும்
மஞ்ச சாமந்தி

மணக்கும் மருவு
மருக் கொழுந்து
குண்டல மாடு
கொடி சம் பங்கி
சிவந்து குலுங்கும்
செவ் வரளி
மரசம் பங்கி
சரத்துக் கொன்றை
கதிரவன் காதலி
செந்தா மரைப்பூ......
நந்தவனம் உண்டாக்க
வாரீரோ வாரீரோ!

2. புதிர்

வெள்ளி மனையைப் பார்த்தியா
வெள்ளை நீல வானிலே?
கண்ணைக் கவரும் கட்டிடம்,
கட்ட வாரம் ரெண்டுதான்;
இடிக்க வாரம் ரெண்டுதான்
இதுவும் ஒரு அதிசயம்!

குண்டு மல்லி போலிருக்கும்
குள்ள முயல் குடியிருக்கும்;
ஆப்பக்காரி தோசை வார்ப்பாள்,
ஆனால் வாங்க ஆள்களில்லை.
ஊரும் பேரும் ஒன்றும் இல்லை—
உனக்கும் எனக்கும் தெரியுமே!

—சந்திரன்! சந்திரன்!

3. சூரிய ஜாலம்

தா, தா, ஆதித்தா!
ஜாலம் எல்லாம் ஓதித்தா
காலைமேகம் கறுத்திட்டால்.
செம்பொன் னாக மாறிடவே, (தா, தா)

கறுத்து மேகம் உறுமவே,
சாட்டை சுடக்கி ஒடுங்கவே,
வெள்ளிப் பட்டி மின்னிடவே,
கட்டிப் பின்னே கரைந்திடவே, (தா, தா)

மாலை மேகம் மஞ்சளாய்
குங்குமச் சிவப்புங் குழைந்திடவே,
ஆரஞ்சுச் சந்தனம் சேர்ந்திடவே
ஜாலம் எல்லாம் ஓதித்தா (தா, தா)

ஆடும் மயிலும், ஓடை, ஏரி
தேரும் குதிரையும் தோன்றிடவே;
கணமும் மாறி மறைந்திடவே
ஜாலம் எல்லாம் ஓதித்தா (தா, தா)

கி. மு. வா? கி. பி. யா?

"கிட்டு"

காலத்திற்குத்தான் உலகத்தில் அதிக விரோதிகள் இருக்கிறார்கள். காலத்தைத் தூற்றாதவர்களே கிடையாது. நாட்டுப்புறத்தில் உள்ள கிராமக் காவலன் முதற்கொண்டு, நாடக மேடையில் மடியுந் தருவாயில் இருக்கும் தொண்டு கிழவர்வரை, காலத்தைச் சதா சர்வ காலம் சபித்துக்கொண்டேதான் இருக்கிறார்கள். காலம் மனிதனின் ஆயுளைக் கபளீகாம் செய்து விடுகிறதாம். பிருமாண்டமான மதிள்களை அது அழித்து விடுகிறதாம். மனிதனின் சிருஷ்டிகளை, அழிக்கவோ, அரிக்கவோ, பழுதுபடுத்தவோ, காலம் கொஞ்சம் கூடத் தயங்குவதில்லையாம். காலத்திற்கு உற்றதுணைவன் மறதியாம். காலம் விட்டாலும் மறதி விடாதாம். இப்படியெல்லாம் காலத்தைக் கைதிக் கூண்டிலேற்றி, குற்றப் பத்திரிகை படிப்பவர்கள் பலர்.

காவியங்கள் காலத்தைப் பழித்தன. கவிகள், காலத்தைப் படாதபாடு படுத்திவைத்தார்கள். எழுத்தாளர்கள், காலதூஷணை தான், கதை கட்டுரைகளின் பூஷணை என்று கருதினார்களோ, என்னமோ? நாவலாசிரியர்களோ, கதை ஓடாவிட்டால், காலத்தை இரண்டு சாட்டையடி கொடுத்து, காலத்தை ஓட்டப் பார்ப்பதுடன் கதையையும் ஓட்டப்பார்க்கிறார்கள். போதாக் குறைக்கு, கண்ணில் ஒளிந்து கிடக்கும் காலத்தை, **காலன்** என்று ஏசுகிறார்கள்.

ஒரு சம்பவத்தின் உண்மையை நிரூபிப்பதற்காக அதற்கு கி. மு. முத்திரையையோ, கி. பி. முத்திரையையோ போடப்பாடுபடுகிறார்கள் சிலர். ஆனால் காலத்வேஷிகளோ கி. மு. வையும், கி. பி. யையும் வெறுத்து, "'கி. மு.' என்றால் கிறுக்குப் பிடிப்பதற்கு முன், 'கி. பி.' என்றால் கிறுக்குப் பிடிப்பதற்குப்பின்" என்று சரித்திர ஆசிரியர்களை நையாண்டிச் செய்யத் தொடங்கி விடுகிறார்கள்.

"காலம் கடந்த நிலை" தான், நமது லட்சியம் என்று, ஞானிகள், காலத்தைக் கடந்துபோக வழி தேடினார்கள். 'காலத்தைக் கடக்க மனதை அடக்கு' என்றார் ஒருவர். "காலத்தைக் கடக்க காயாகற்பம் செய்" என்றார் ஒரு பத்திரிகை விளம்பரப் பித்தர். காலங் கடந்து சஞ்சரிக்க ஒரு யந்திரத்தையே சிருஷ்டிக்க மனக்கோட்டை கட்டினார், ஓர் ஆசிரியர். அவர் காலத்தைக் கடந்தேவிட்டார்! இவ்வாறு காலத்தை எதிர்த்துப் போராடும் மாபெரும் இயக்கமொன்று, காலம் பிறந்த அன்றே கூடப்பிறந்தது.

காலத்தை ஆதரித்தவர்களும் சிலர் இல்லாமற்போகவில்லை. ஆனால் அவர்களுடைய அனுதாபம், காலத்திற்கு நீடித்த ஆதரவு அளிக்கவில்லை. அந்தந்தக் காலத்தோடு அவையவை தீர்ந்து போயின. கலியாணத் தேதியை எதிர்பார்க்கும் காதலர்கள், காலத்தின் வேகத்தின் மீதும் காதல் கொள்கிறார்கள். "காலமே நீ ஓட்டப்

பந்தயத்தில் முதற் பரிசு பெற்றவனுச்சே, ஏன் ஊர்ந்து போகிறுய்?" என்று முடுக்கிவிடுகிறுர்கள். ஆனல் அவர்களுடைய ஆதரவெல்லாம் தலை தீபாவளியோடு தீர்ந்துபோகிறது.

காலத்தை லட்சியம் செய்பவர்கள் உண்டு; செய்யாதவர்களும் உண்டு. "ஔரங்கஜேப் எப்பொழுதடா இறந்துபோனுர்?" "எப்பொழுது இறந்தால் என்ன? மனுஷன் போய் விட்டான் என்பது நிச்சயமாய்த் தெரிந்தால் போதாதா?" என்று பதில் வருகிறது. என்ன நடந்தது என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்கிறுமே தவிர, எப்பொழுது நடந்தது என்பதை லட்சியம் செய்வதில்லை.

"குடத்து விளக்கேபோல்க் கோம்பன்னுர் காமம் புறப்படா" என்ற கவிதை வரிகளைப்படித்து, மெய்ம்மறந்து அர்த்தம் சொல்லிக் கொண்டே போகிறுர் ஒரு ரஸிகர். எல்லோரும் சிரக்கம்பம் கரக்கம்பம் செய்கிறும். முத்தொள்ளாயிரக்காட்சி முழுவதும் கண்முன்னுல் எழுகிறது. திரும்பத் திரும்ப அந்த வரிகளைப் படிக்கிறும். ரஸிகர் சொல்லும் அர்த்தங்களுக்குப் அதிகமாக, அந்த வரிகளில், பொருள் புதைந்து கிடைக்கிறதா என்று தோண்டிப் பார்க்கிறும், எழுத்து எழுத்தாக. இப்படி ரஸனையோகத்தில் ஆழ்ந்து கிடக்கையில் ஓர் அதிகப்பிரசங்கி, மெதுவாகத் தலையைத்தூக்கி, "அதுசரி ஐயா, முதலில் முத்தொள்ளாயிரம் எப்பொழுது எழுதப்பட்டது?" என்று கேட்கிறுர். ரஸிகர் ஐயாவின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்கின்றன. குட்டி ஐயாக்களோ "என்ன துணிச்சல்?" என்று துடிக்கிறுர்கள். "யார் எழுதினுல் என்ன? எப்பொழுது எழுதினுல் என்ன? இதோ கவிதை, படித்து அனுபவி. செலவுக்குப் பணம் தானே வேண்டும்? பணம் வைக்கும் பெட்டி எதற்கு?" என்று உவமான உபமேயங்களோடு, தட்டிக் கழித்து விடுகிறுர்கள்.

உண்மையைக் கண்டுபிடிக்க முயலுபவர்களுக்கெல்லாம் உலகம் பைத்தியக்காரப் பட்டம் கட்டிவிடுகிறது. "உண்மையை நாடுபவர்கள் உன்மத்தர்கள். சத்தியத்தைத் தேடுபவர்கள் பித்தர்கள்"— இதில்தான் உலகத்தின் உறைகல் அடங்கியிருக்கிறது. முதலில் தூற்றுவது, பின்னர் போற்றுவது, உலகின் இயல்பு. இந்த இயல்பு கி. மு.-விலும் உண்டு; கி. பி.-யிலும் உண்டு.

நான் காலத்திற்கு வக்காலத்து வாங்கவரவில்லை. எனக்கும் காலம், ஜன்ம விரோதிதான். இருந்தாலும் எதையும் அதற்குரிய உண்மையான நிலையில் வைத்துப் பார்ப்பதுதான் உண்மையான மகிழ்ச்சி. அந்த மகிழ்ச்சியே அலாதிதான். ஆயிரம் நாவல்கள் படிக்கிறும். அற்புதமான கற்பனை. அழகான நடை. உள்ளத்தைத் தொடும் சொற்கள். நெஞ்சைக் கலக்கும் வாக்கியங்கள், வழவழப்பான காகிதம். சரிதான். ஆனல் உள்ளது உள்ளபடி உரைக்கும் ஒரு தீரனின் சுயசரிதைக்கு ஈடு ஆகுமா? காரணம் அவை கட்டுக்கதைகள்; இது உண்மை. உண்மையான சம்பவங்களுக்கே அலாதி மதிப்புண்டு. "ஹனுமார் இலங்கைக்குச் சென்று,

சீதாப்பிராட்டியைச் சந்தித்து, சூடாமணியைப் பெற்று, ராமரிடம் வந்து 'கண்டேன் சீதையை' என்று ஆனந்த பரவசத்துடன் அஞ்சலி ஹஸ்தராய் நின்ருர்" என்று பௌராணிகர், ஆனந்தக் கண்ணீரை வரவழைத்துக்கொண்டுதான் படிக்கிருர். இருந்தாலும், "ஹிந்து மதத்தின் பெருமையை மேனாடெங்கும் முழக்கம் செய்து வெற்றியுடன் மீண்ட தியாக புருஷர் விவேகாநந்தர், கப்பலிலிருந்து பாரத பூமியில் காலடி வைத்ததும், அவரையும் அறியாமல் அவருடைய கண்களில் இன்பக்கண்ணீர் துளிர்த்தன" என்று விவேகாநந்தர் சரித்திரத்தில் படிக்கும்போது, நமக்கு உண்டாகும் ஒரு உணர்ச்சி, திரும்பிவந்த ஹநுமாரைக் கண்டதும் ஏற்படவில்லை. காரணம் அது கதை; இது உண்மை. திருக்குறள் தமிழ்வேதம் என்று புகழ்கிறோம். 1330 குறளையும் அல்லும் பகலும் படிக்கிறோம். பரிமேலழகருடன் போட்டி போட்டுக்கொண்டு நாமும் வியாக்யானம் செய்கிறோம். ஆனால், குறளை இப்படி ஆச்ரயிக்கும் அதன் ஆசிரியரைத்தான் மறந்து விடுகிறோம். ஆசிரியர் இயல்போடு, அவரது வாழ்க்கையோடு அவருடைய நூலைப் பொருத்திப் படிக்காமல், ஆசிரியரையும் அவர் நூலையும் பிரித்துவிடுகிறோம். திருவள்ளுவரும் நமது நாட்டில் பிறந்தவர்தான். நாம் இன்று பதினெட்டாம் பெருக்கும் அறுபத்துமூவர் விழாவும் பார்க்கும் மைலாப்பூரில்தான் வாழ்ந்தவர். கி. மு. நூறு வருஷங்களுக்கு முன்பு வாழ்ந்தவர் அவர் என்று நாம் அறிந்துகொண்டு படித்தால், அப்பொழுது நமக்கு ஏற்படும் உற்சாகமும் திருப்தியும் அலாதிதான்.

இந்தக் கால நிர்ணயமானது பல ஆராய்ச்சிக்காரர்களின் மூளையை வாட்டிவருகிறது. புத்தர் காலமும் அசோகர் காலமும் ஒருகாலத்தில் சரித்திர ஆசிரியர்களுக்குள்ளேயே சண்டை மூட்டிவிட்டன. ஸம்ஸ்கிருத நாடக இலக்கியத்தைக் கற்கும் மாணவர்கள் "கடவுளே, கலியுகமாக இருந்தபோதிலும் எங்களுக்காக மனமிரங்கி, உங்களுக்கு சௌகரியப்பட்டபோது ஒருநாள் பிரத்யக்ஷமாகி, காளிதாஸர் எப்பொழுது வாழ்ந்திருந்தார் என்பதை மட்டும் தெரிவித்துப் போகமாட்டீரா" என்று பிரார்த்தனை செய்துகொள்கிருர்கள். தமிழ் இலக்கியத்திலோ நாலைந்து நக்கீரர்களும், ஐந்தாறு ஔவையார்களும், இரண்டு மூன்று அகஸ்தியர்களும், ஆங்காங்கு புலவர்களால், அவரவர்களுடைய பாடல்களில் நேர்முகமாகவோ மறைமுகமாகவோ குறிப்பிடப்பட்டு, ஆராய்ச்சிக்காரர்களுக்கு கடுமையான சோதனைக் காலத்தை ஏற்படுத்தி யிருக்கிருர்கள். பல்லவர்கள் காலம் என்ன என்பதுபற்றி, பன்னிரண்டு அபிப்பிராயங்கள். திருவள்ளுவரைப் பெற்றெடுத்தது கி. மு. வா? கி. பி. யா? என்பது பற்றி ஐந்தேமுக்கால் அனுமானங்கள். இவ்வாறு காலநிர்ணய ஆராய்ச்சிக்காரர்களின் உற்சாகமும், வேட்கையும் சொல்லிமுடியாது. அதை அலட்சியம் செய்யவும் முடியாது. இறையனர் அகப்பொருளை இறைவன் எழுதிய காலந்தெரிந்தால் அதனல் தமிழகத்திற்கு எவ்வளவு மதிப்பு?

A Reputed House

PHONE: 24254
TELEGRAM: BALBIRCO

For

★ **ALUMINIUM**

SHEETS, COILS, STRIPS, INGOTS, CIRCLES

★ **PRINTING MACHINERY**

OFFSETS, WHARFEDALES, TREADLES & ALLIED MATERIAL

★ **PAPER**

WRITING, PRINTING, ETC.

Balbir Bros Ltd

JAMA MASJID, DELHI.

Agents *INDIAN ALUMINIUM CO., LTD.*

A VISIT SOLICITED SATISFACTION ASSURED.

இந்தியன் பாங்க் லிமிடெட்

தலைமை ஆபீஸ்:

மதராஸ்

புது டெல்லி கிளை: எம். 5, கன்னாட் சர்கஸ்

மூலதனம்

அங்கீகரிக்கப்பட்டது	...	...	ரூ.	1,00,00,000
வழங்கப்பட்டது	...	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்டது	...	...	ரூ.	55,40,000
ரிஸர்வ் & இதர நிதிகள்	...	...	ரூ.	73,50,000
31-12-1952ல் உள்ள டெபாஸிட்டுகள்			ரூ.	20,30,62,750

எல்லாவிதமான பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்.

என். கோபால அய்யர், செக்ரடரி.

பழியும் பாவமும்

ச. மகாதேவன்

1

ஒரே ஏமாற்றத்துடன் வீடு திரும்பினான் விச்வநாதன். கண்களில் நீர் ததும்பியது. கொட்டும் மழையில் நனைந்த வேஷ்டியும், ஷர்ட்டும். சேறு பூசிய பாதங்கள். வானில் ஒரே இடியும் மின்னலும். அவன் மனதிலும் பெரிய இடி.

"என்ன, எங்கேயாவது பார்த்தீர்களா ?"

"நிர்மலா, எல்லாம் நான் செய்த பாபம். என்ன செய்வேன் ! எங்கெல்லாம் தேடினேன் ! செல்லத்தைக் காணவில்லையே !"

விச்வநாதன் சோகம் தாங்காமல் கீழே சாய்ந்தான். நிர்மலா அவனைத் தாங்கிக் கொண்டாள்.

2

விச்வநாதன் தரையில் கிடந்தான். அருகில் நிர்மலா அமர்ந்திருந்தாள்.

பன்னிரண்டு வருஷங்களுக்கு முன் நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது. அந்த சம்பவத்திற்குப் பிறகு, அவர்கள் வாழ்க்கை எப்படி ஆகிவிட்டது ! ஏன் ?

கல்யாணம் ஆகி, நிர்மலாவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும் சமயம். அவர்கள் மதுரையிலிருந்து திருச்சிக்கு ரயிலில் போய்க் கொண்டிருந்தனர்.

மாலை நேரம். வானம் இருண்டு மழை பெய்யக் காத்திருந்தது. ரயில் புறப்பட்டது. மழையும் பெய்யத் தொடங்கியது. சடசட வென்று பிரயாணிகள் வண்டிகளில் பதுங்கிக் கொண்டனர். அவசர அவசரமாக ஒரு சிறு பையனும், அவர்கள் இருந்த வண்டியில் ஏறினான்.

"டே, ஏறாதே இதில். 'ரிஸர்வெட்' ஆக்கும் தெரியுமா ?"

"ஐயா, மழை. அடுத்த ஸ்டேஷனில் இறங்கி விடுகிறேன்."

"போடா, காசு குடுத்தவன் மாதிரி பேசறயா ?"

"கெஞ்சிக் கேட்கிறேன் சாமி ! என்னால் போக முடியாது சாமி."

"ஏண்டா, போறயா, பல்லை உடைக்கட்டுமா ?"

"சாமி கொஞ்சம் பொறுத்துக்குங்கோ. என்னால் தனியாய்ப் போக முடியாது. நான் கண்ணில்லாத கபோதி."

"கண்ணும் ஆச்சு, காதும் ஆச்சு. குருட்டு நாயே, இறங்குடா." கன்னத்தில் ஒரு அறை விட்டான் விச்வநாதன். பையன் "அம்மா" என்று அலறினான். இன்னும் இறங்காமல் இருந்தால் மேலும் அடி விழும் என்று பயந்து, அவன் கீழே குதித்து விட்டான். கீழே விழுந்ததில் அவன் அடிபட்டானோ என்னமோ ! விச்வநாதன் கவனிக்கவில்லை.

"ஐயோ, பாவம் என்னத்திற்கு அடித்தீர்கள் ?"

"இவங்களுக்கு எல்லாம் கொஞ்சமும் இரக்கப்படக் கூடாது."

"கண் கூடத் தெரியாது. சின்னப் பையன். அடித்திருக்க வேண்டாம்."

"நீ சும்மா இரு. போகட்டும் எக்கேடுங்கெட்டு."

"அவனுக்கென்ன தெரியும். கண் தெரியாது. மழைக்கு பயந்து வண்டியில் ஏறிக் கொண்டான்."

"போறும் நிறுத்து."

நிர்மலா பேசாது இருந்தாள். அவளுடைய மனதில் பெரிய கவலை குடி கொண்டது. அந்தப் பையனுடைய முகம், திருச்சி செல்லும் வரை—ஏன் சென்ற பின் கூட—இன்னும் கூட, நிர்மலாவின் மனதைவிட்டு அகலவில்லை.

3

விச்வநாதன் புரண்டு படுத்துக் கொண்டான். இன்னும் மழை விட்டபாடில்லை. இடி இடித்துக் கொண்டிருந்தது. அவன் கன்னத்தை வருடிக் கொண்டிருந்தான்.

"ஈசா. இந்தக் கன்னத்தில் ஓர் அறை கொடேன்."

"என்ன புலம்புகிறீர்கள் ?"

விச்வநாதன் பதில் சொல்லவில்லை. அவனுடைய எண்ணங்கள் இன்னும் பழைய காலச் சம்பவங்களில் சென்று கொண்டிருந்தன.......

நிர்மலா கர்ப்பம் தரித்திருந்தாள். விச்வநாதனின் மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. இன்னும் இரண்டு மாதத்தில் அவள் தாயாகி விடுவாள். அவன் ஒரு தந்தை. அந்த நாளை இருவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

அந்த நாளும் வந்தது. குழந்தையும் பிறந்தது. அதுவும் அழகாய்த்தானிருந்தது. ஆனால் இது என்ன பரிதாபம்! கண்கள் திறக்கவில்லையே!

4

விச்வநாதனும் நிர்மலாவும் குழந்தைக்கு எவ்வளவோ வைத்தியம் செய்தனர். ஆனால் நிபுணர்களெல்லாம் கைவிட்டனர். பெற்றோர் அனுஷ்டிக்காத நோன்புகள் இல்லை. செய்யாத தர்மமில்லை, போகாத கோவில்களில்லை. குருடர்கள் பள்ளிக்கூடம் என்ன, கண்ணிழந்தோர் சம்ரட்சண விடுதிகள் என்ன, இப்படிப் பற்பல ஸ்தாபனங்களுக்கெல்லாம் பண உதவி அளித்தனர். இம்மாதிரியான கைங்கர்யங்களில் தான் விச்வநாதனின் மனம் சாந்தியைக் கண்டது.

குழந்தைக்குக் கண் இல்லாவிட்டாலும், பெற்றோர்க்கு அவன் செல்லம். செல்வமும் அவனே! பழக்கத்தால், தனியாகவே பல இடங்களுக்குப் போய் வருவான் அவன். அன்றும் மாலையில், தனியே உலாவச் சென்றான். போன சிறிது நேரத்துக்கெல்லாம் மழை பெய்யத் தொடங்கியது. இடியும் மின்னலும் பயங்கரமாயிருந்தன. பையன் எவ்வாறு வீடு திரும்புவான்? அங்கேயே ஓர் மரத்தடியில் ஒதுங்கிக் கொண்டான்.

5

விச்வநாதன் இன்னும் படுத்துத்தான் இருந்தான். கண்ணீர் தாரையாய் வழிந்தது. நிர்மலாவின் கண்ணீரைப்பற்றிக் கேட்க வேண்டுமா? பெற்றவள் அல்

லவா? அவர்கள் இருவருக்கும் ஒரே சமயத்தில், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன் ரயிலில் நடந்த சம்பவம் ஞாபகத்துக்கு வந்தது.

"நிர்மலா, என்ன அறியாமை! கண் இல்லாத ஒரு பாலனை— மழைக்கு ஒதுங்கவந்த குழந்தையை, இரக்கமின்றி அடித்துத் துரத்தினேனே! அதன் பலன், நம் செல்வத்துக்கு கண் இல்லை. அன்றும், இன்று மாதிரிதான் மழை பெய்தது...ஆம். அந்தச் சிறுவனுக்கும் நம் செல்வன் வயதுதானே இருக்கும்? அவனும் அவன் பெற்றோர்க்கு செல்வன் தானே?..."

"சும்மா அலட்டிக்காதேங்கோ.—நம் செல்வன் சுகமாய்த் திரும்புவான்—கடவுள் அவன் கண்ணைத் திறப்பார்," என்று நிர்மலா தேம்பினாள்.

6

மனதைச் சற்று திடப்படுத்திக் கொண்டு, நிர்மலா விளக்கேற்றினாள். விளக்கு சுடர்விட்டு பிரகாசித்தது. விச்வநாதனும் ஈசன் அருள் வராதா என்று ஏங்கினான்.

வாசல் கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. வாசலில் மூன்று நான்கு பேர்கள் இருந்தனர். அவர்களுடன் செல்லமும் நின்றான்.

நிர்மலா வியப்புடன் பார்த்தாள். அவள் காண்பது கனவா? நினைவா? அவள் காண்பது அவளுடைய அருமைச் செல்வமேதான்.

"என்னு, நம் செல்லம் வந்துவிட்டான்." விச்வநாதனும் நிர்மலாவும் செல்வக் குமாரனை அணைத்துக் கொண்டனர். செல்வனும் அவர்களை ஒரே பார்வையாய் அண்ணாந்து பார்த்து நின்றான்! செல்வன் கண்கள் ஒளியைப் பெற்றுவிட்டன! விச்வநாதனுக்கும் நிர்மலாவுக்கும் சோதனைக்காலம் முடிந்தது. ஈசன் கடைக்கண் பார்த்துவிட்டார். செல்லம் கண்ணனானான்!

7

வாசலில் நின்ற ஜனங்கள் ஒருவருக் கொருவர் பேசிக்கொண்டார்கள்.

"என்ன ஆச்சரியம்! விச்வநாதன் செய்த தர்மம், பையனுக்குக் கண் திறந்ததையா!"

"அது என்னவோ எங்க பாட்டி சொல்வாள், அது நடந்துவிட்டது."

"உங்கள் பாட்டி என்ன சொல்வாள்?"

"எங்கள் பாட்டி சொல்வாள்: மின்னல் கண்களைப் பறிப்பது போல் சில சமயம் மின்னல் வெட்டிக் கண்கள் இல்லாதவர்களுக்குப் பார்வை அளிக்கும் என்று."

"அதெல்லாம் இல்லை. இது ஒரு 'ஷாக்'கினால் ஏற்பட்டது. பையன் தலையில், ஒடிந்த கிளை விழுந்ததால், அதிர்ச்சி ஏற்பட்டு, கண்கள் திறந்துகொண்டன" என்றார், விக்ஞானம் அறிந்த ஒருவர்.

எப்படியானால் என்ன?

வீட்டில், நிர்மலா, கண்ணன், விச்வநாதன் மூவரும் விளக்கின் முன் நமஸ்கரித்து எழுந்தனர். விச்வநாதன் மனம் மட்டும் "பழியும் பாவமும்" என்று முணுமுணுத்தது.

நீல நதி

அ.வே.கிருஷ்ணமூர்த்தி



"லில்லூ! லல்லூ! லியா அவுர் லியா!" என்று உட்புறம் பார்த்துச் சொல்லிவிட்டு, 'குட குட' சப்தத்துடன் தன் ஹுக்காவையும் ஒரு கணம் இழுத்து விட்டு, ராம்சரன், தான் சொல்லிக் கொண்டு வந்த கதையை மேலும் தொடர்ந்தான்.

உள்ளிருந்து, ஒரு தட்டு நிறைய 'சகோத்ரா' என்ற இனிப்பு நார்த்தம் பழங்களையும், ஒரு ஈயச் செம்பு நிறைய ஆடைத் தயிரையும் கொண்டுவந்து, எங்கள் எதிரே வைத்தாள் லல்லூ. அவள் ஆறு வயதுப் பெண். இடுப்பிலே ஒரு சிவப்புத் துண்டைச் சுற்றிக்கொண்டு, கன்னங் குழியச் சிரிப்புடன், அவள் வந்த காக்ஷியை, 'கிளிக்'கென்று அப்படியே தன் 'காமரா'வில் பதித்துக் கொண்டுவிட்டான் சூரி. சிம்ளாவுக்கு வடமேற்கே இருபத்தேழு மைல் தூரத்தில், தத்தாபானீ (तत्तापानी) இருக்கிறது. சிம்ளாவைவிட ஆறாயிரம் அடி தாழ்ந்துள்ள தத்தாபானியில், சதத்ரு (शतद्रू) நதி (ஸட்லஜ்), சமுத்திரம் போல் ஆழமாகவும், அலைகளோடு நுரைத்துக்கொண்டும், கருநீல நிறத்தோடு ஓடும் அழகு, பார்ப்பவர் மனதை நாகபாசம் போல் கட்டுப்படுத்த வல்லது. அந்த இடத்தின் ஒரு அதிசயம் என்னவெனில், குளிர்ந்த நீர் ஓடும் நதிக் கரையில், எங்கு தோண்டினாலும், கொதிக்கும் வெந்நீர் வெளிப்படுவதே. ஓடுகால் வெட்டி, நதி ஜலத்துடன் கலக்கச் செய்த பிறகே, அந்த வெந்நீரில் ஸ்னானம் செய்ய இயலும். 'தத்தாபானீ' என்றால் 'கொதிக்கும் நீர்' என்று பொருள். அவ்விடத்திற்கே இப்பொழுது, 'தத்தாபானீ' என்ற பெயர் வழங்குகிறது. சுற்றுப்புறமெங்கிலும் ரமணீயமான இமயமலைச் சாரல், கனலும் புனலும் கலந்துறையும் அவ்விடத்தின் எழிலை, இன்பமயமாக்குகிறது.

உல்லாஸ யாத்திரையாகக் கால் நடையாகவே தத்தாபானிக்குச் சென்று திரும்புகையில் பஸந்த்பூரில், (வஸந்தபுரம்) சூரியின் உறவினரான ராம்சரன் வீட்டில் இளைப்பாறினோம். எங்களுடன் மிச்ராவும் வந்திருந்தான். பஸந்த்பூரிலிருந்து உயரே நால்டேராவுக்கு நாலாயிரம் அடி ஏறவேண்டுமாதலால், தாகசாந்திக்காக சில 'சகோத்ரா' பழங்களை எடுத்துக் கொண்டு, ராம்சரனிடம் விடை பெற்று, சிம்ளாவை நோக்கி நடந்தோம்.

'லல்லூ' என்ன விசித்திரமான பெயர் என்று, நான் ராம்சரனின் குழந்தைப் பெண்ணைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கையில், "மூர்த்தி, ராம்சரன் சொன்ன கதை உனக்கு புரிந்ததா? பஞ்சாபி பாஷை தெரியாமலிருந்தும் நீ என்னமோ ரொம்பவும் ரஸித்துக் கேட்டாயே?" என்றான் மிச்ரா. "நான் நன்றாகப் புரிந்துகொள்ள முடியவில்லைதான். தத்தாபானிக்கும் லல்லுவுக்கும் சம்பந்தமுள்ள கதை என்பது ஒருவாறு தெரிந்து கொண்டேன். இப்பொழுது நீங்கள் தான் சொல்லுங்களேன்" என்றேன். "சூரிதான், கதை சொல்வதில் கெட்டிக்காரன். தவிர எனக்கும் பஞ்சாபி சுமா

13818

ராகத் தான் தெரியும். ஆதலால் அவன்தான் நன்ருகக் கேட்டிருக்கிருன். அவனே சொல்லட்டும்" என்று மிச்ரா கூறவும், சூரி, ராம் சரன் சொன்ன கதையை மறுபடியும் சொன்னுன்.

* * *

நீலக் கழுத்துச் சாமியார், ஸட்லஜ் நதிக்கரையில் இப்பொழுது தத்தாபானி உள்ள இடத்தில், வெகு நாட்களுக்கு முன் தவம் செய்து வந்தார். அவரை எல்லோரும் பாலயோகி என்றும் அழைத்தனர். ஸட்லஜ் நதி தீரத்தில் பல இடங்களில், ஒரே நாளில் ஒரே சமயத்தில் பலர் அவரைப் பார்த்ததாகக் கூறுவர். நிறம் நல்ல சிவப்பு. கழுத்து மட்டும் கருநீலம். அதில் ஸ்படிகக்கல் மாலை மின்னியது. தலையில் செம்பட்டையான சடை. அவர் கையிலும் மார்பிலும் கரு நாகங்கள் தவழ்ந்து விளையாடின. அறையிலே புலித்தோல். நதிக் கரையில் உள்ள ஒரு அரச மரத் தடியிலே அவர் தவக்கோலம். நவ யவ்வன முகத்தில் தவழும் புன்னகை, தரிசிப்போர் உள்ளத்தைக் குழந்தை யாக்கி, அவர் முன் தவழச் செய்தது.

அந்தக் கிராமத்தில் 'லல்லூ' என்ற பெயருடன் ஒரு மலைப் பெண் இருந்தாள்.

["அப்பெயரைத்தான் இப்பொழுது எல்லோரும் பெண் குழந்தைகளுக்கு ஆசையுடன் இடுகிருர்கள், இந்த இடங்களில்" என்று, நடுவில் மிச்ரா சொல்லவும், "அதுதான் ராம்சரன் பெண்ணுக்கும் பெயராக்கும்." என்று நான் கூறிவிட்டு, மிக்க கவனமாக, சூரி மேலும் தொடர்ந்து சொன்ன கதையைக் கேட்டேன்.]

என்ன அதிசயமெனில், சாதாரணமாக எல்லோரும் சிவப்பு நிறமாயிருக்கும் இப்பிரதேசத்தில் அந்த லல்லுவின் மேனியோ, பச்சை கலந்த கருப்பாக இருந்தது. அவள் கரிய விழிகளில் குளுமையான கவர்ச்சி. அதரங்களிலே பவளச் சிவப்பு. அவை மெல்லத் திறக்கும் பொழுது முத்துப் பல் வரிசையாலான இள நகை. ஏழு வயதுக் குழந்தையாயிருந்த பொழுது, ஒரு நாள் அவள், சுயேச்சையாகச் சுற்றிக் கொண்டிருந்த சமயம், நீலக் கழுத்துச் சாமியைப் பார்த்து விட்டாள். பாலயோகி அவளைத் தூக்கித் தம் மடிமீது அமர்த்திக் கொண்டார். கொஞ்சி விளையாடினுர். என்ன ஆச்சரியம்! யோகியின் மீதிருந்த பாம்புகளும் குழந்தையுடன் விளையாடின. அன்றிலிருந்து, நாள் தவறுமோ என்னமோ, லல்லு நீலக்கழுத்துச் சாமியிடம் வந்துபோவது தவறுது. வீட்டிலிருந்து பக்ஷணங்களும், ரொட்டியும், பழங்களும், பாலும், சாமிக்குக் கொண்டுவந்து தருவாள். வஸந்தகாலம் வந்து, நாவல் பழங்கள் கிடைக்க ஆரம்பித்து விட்டால், அவளுக்கு ஒரே உத்ஸாகம். நேரே பாலயோகியிடம் ஓடிவந்து, அவர் கழுத்தோடு ஒட்டியவாறு நாவல் பழத்தை வைப்பாள்; எடுப்பாள். மறுபடி வைப்பாள்; மறுபடி எடுப்பாள். "அப்பப்பா, கருநீல நாவல் பழத்தின் நிறத்துக்கும், உங்கள் கழுத்துக்கும் வித்யாசமே தெரியவில்லையே" என்

யாள். "அதைப் பிடித்திருக்கும் உன் கைக்கும் கூடத்தான் வித்யாசம் தெரியவில்லை" என்பார் யோகி. இருவரும் சேர்ந்து சிரிக்கும் ஆனந்தச் சிரிப்பொலி, அருகிலே ஓடும் ஸட்லஜ்ஜின் அலை பேரொலியிலே கலந்து கொள்ளும்.

சதத்ரு அப்பொழுது நீல நதியாயிருக்கவில்லை. பளிங்கு போன்ற பனிஜலம் அதில் நிறைந்தோடிக் கொண்டிருந்தது. இப்பொழுதிருப்பதைப் போல், நதிக்கரையில், கொதிக்கும் வெந்நீரும் அப்பொழுதிருக்கவில்லை.

லல்லுவுக்கும் பாலயோகிக்கும் உறவு வளர்ந்து வந்தது. லல்லு வளர்ந்து மங்கைப் பருவமடைந்துவிட்டாள். ஆனால், பாலயோகியிடம் குழந்தையைப் போலவே நடந்துகொண்டாள். ஊரில் உள்ளவர்கள் சும்மா இருப்பார்களா? நாலுபேர் நாலுவிதம் பேசத் தலைப்பட்டார்கள். இவற்றையெல்லாம் புரிந்துகொள்ளக் கூடிய உடலறிவு, மலைமங்கைக்கு இன்னும் ஏற்படவில்லை. ஆனால், பாலயோகியின் தவத்துக்குக் கேடு ஒன்றுமில்லை. எனினும், உலக அபவாதத்துக்கு ஆளாக அவர் விரும்பவில்லை. ஊரும், பேரும், உணர்வுமில்லாமல் இவ்வளவு காலம் தவம் செய்துவந்த அவருக்கு, இவ்வுணர்வு வந்ததுமே யோசனை செய்தார். 'மங்கைப் பருவம் அடைந்துவிட்ட லல்லுவுடைய சேர்க்கையே, இவ்வுணர்வைக் கொடுத்திருக்கிறது. அவளுடைய உறவு என் தவத்தைக் கெடுக்காதுதான். ஆயினும் அதனால் என் தவத்தின் பெருமை பாழாகிவிடும் என்ற சுய உணர்வு வந்திருக்கிறதே! இதற்குக் காரணம்? அவள் குழந்தைப்பருவம் மாறிவிட்டது தானே?' நீலக்கழுத்துச் சாமி கண்ணை மூடியபடியே இவ்வாறு எண்ணமிட்டுக் கொண்டிருந்தார்.

அன்று பால்குன சுத்த பௌர்ணமி. சந்திர உதயமாகிவிட்டது. மலர்க்கணையோன் முன் ஒரு சமயம் எரிக்கப்பட்ட அதே தினம். அரைமணி நேரமாக, லல்லு, புதிய ஆடை அணிகளுடன் அங்கு வந்து நின்று கொண்டிருந்தாள். பாலயோகி கண்ணைத் திறக்கவில்லை. வழக்கம்போல், அவள் வருவதற்கு முன் எதிர்கொண்டழைப்பவர், இன்று கண் மூடியிருக்கும் விந்தை, அவளுக்குப் புரியவில்லை. நிலவொளியில் அவர் முக மண்டலம் ஜொலித்தது. வெகுநேரம் அதன் சௌந்தர்யத்திலே லயித்திருந்தபிறகு, தைரியமாக அவரை நெருங்கி, தன் மலர்க் கரத்தால் அவர் காத்தைத் தொட்டாள். என்ன ஆச்சரியம்! அவள் உள்ளத்தில் மின்னல் பாய்ந்தது போன்ற ஒரு உணர்ச்சி! பாலயோகி கண்ணைத் திறக்க, இருவர் கண்களும், ஒன்றையொன்று கவ்விக்கொண்டன. இது நிகழ ஒரு கணமே ஆயிற்றெனினும், அவ்வின்பம், ஒரு யுகத்திலும் கிடைக்கப் பெறுததாய் இருந்தது. அடுத்த விநாடி லல்லு நாணத்தால் தலை குனிந்தாள்.

எழுந்தார் பாலயோகி. "இனிமையாக 'லல்லூ' என்று கூப்பிடுவார்; அச்சொல்லின்பம் காதில் கேட்டால் தைரியமாய்த் தலை நிமிரலாம்" என்று ஏங்கியிருந்

தாள் மலைச்செல்வி. ஆனால் அவரோ, லல்லு என்று கூப்பிடவில்லை. அவர் காலடிச் சத்தம் நதியை நோக்கி விரைவதைக் கேட்டு, சட்டென்று திரும்பிப் பார்த்தாள் லல்லு. நதி ஓரத்தை நெருங்கி விட்டார் நீலக்கழுத்துச் சாமியார். மலைமகள் வெறி கொண்டு பின்னே ஓடினாள். இதுவரை அவள் சொல்லி அறியாத ஒரு வார்த்தை அவள் வாயினின்றும் வெளிப்பட்டது. 'நாதா!' என்று அலறிக்கொண்டே, அலைமோதும் ஆற்றின் கரைக்கு விரைந்தாள். அவள் அருகே வரவும், நீலகண்டர் திடீரென்று நதியில் இறங்கி மறைந்து விட்டார்! அதிர்ச்சியினால் கரையிலேயே ஒரு கணம் நின்றாள் லல்லு. நதியின் நிறம் திடீரென்று நீலமாக மாறிவிட்டதைக் கண்டாள். நீரின் அலைகள் 'லல்லூ', 'லல்லூ' என்று ஓலமிடுவது போல் அவளுக்குத் தோன்றியது. 'நாதா! இதோ வருகிறேன்' என்று சொல்லி, அவள் ஆற்றில் இறங்க முற்பட்டபோது, எங்கிருந்தோ ஒரு பெரிய சூறாவளிக் காற்று வந்து, அவளைப் பின்னுக்கு உந்தியது. பூமி நடுங்கிற்று. அப்பொழுது நிலத்தில் ஏற்பட்ட பிளவு ஒன்று, லல்லுவை உள்ளுக்குள் இழுத்துச் சென்றுவிட்டது.

அன்றிலிருந்து தான், அந்தக் கரையில் 'கொதிக்கும் வெந்நீர்' ஊற்று, தரையின் அடியிலிருந்து பொங்கிவருகிறது. நீலநதியின் குளிர்நீரும், கரையின் ஊற்றில் உள்ள சுடுநீரும் கலந்த பின்னரே, அதில் குளித்து இன்பம் துய்க்கலாம். காதலியாகிய லல்லுவின் காமக் கனலைத் தணிக்க, காதலனாகிய நீலக்கழுத்தரின் அருட்புனல் தேவையல்லவா!

* * *

இவ்வாறு சூரி கதையை முடித்ததும், மிச்ரா, "அவர்களை, பார்வதி பரமேச்வரர்களாக இம்மலைநாட்டு மக்கள் கருதுகிறார்கள்" என்றான்.

"ஒருவேளை, ஸ்ரீமாதா லலிதா தேவியே 'லல்லு' என்ற பெயரடைந்தாளோ" என்று நான் எண்ணினேன்.

"இதோ நீல நதியைக் கடைசியாகப் பார்த்துவிடுங்கள்!" என்றான் சூரி. பஸந்த்பூரிலிருந்து மூவாயிரம் அடி உயரே, நால்டேராவுக்கு நாங்கள் ஏறிவிட்டோம். வெகுதொலைவில், மூவாயிரம் அடிகளுக்குக் கீழே, பள்ளத்தாக்கில், நீலநிறப் பாம்பு ஒன்று படுத்திருப்பதுபோல, மாலை வெயிலொளியில், நீலநதி காக்ஷியளித்தது.

Please Try

KHANNA STORES,

68-70, BAIRD LANE MARKET

For all your household requirements, specially South Indian Specialities—

Gingelly Oil, Provisions, Kariana, Soapnut Powder, Asafoetida, Agar Bathis.

RATES MODERATE :: *SERVICE BEST*

மடல்

(ரா. அரங்கராஜன்)

தமிழ் இலக்கியத்தில் சிறிது பயிற்சி உடையவர்களும் 'மடல்' என்னும் அகப்பொருள் துறையின் விசேஷத்தை அறிவர். ஒரு பெண்ணிடம் காதல் கொண்டவன் அவளை மணக்க விரும்புகிறான். ஆனால் அவளது பெற்றோர் அதற்கு உடன்படவில்லை. அப்பெண்ணிடம் தான் கொண்டிருக்கும் அன்பு உண்மையென்று காட்டுதற்காக, பனங்கருக்கினால் செய்த குதிரையின்மேல் அமர்ந்து வீதி வழியே (பலரால் இழுக்கப்பட்டு) வருகிறான். அதைக் கண்ட ஊராரும், பெண்ணின் பெற்றோரும், அவன் படும் துயரத்தைக் கண்டு வருந்தி, அப்பெண்ணை அவனுக்கு மணமுடிக்க இசைகின்றனர். இம் மடல் வழக்கு ஆண்களுக்கேயன்றி ஏனையோர்க்கு இல்லை என்பது தமிழ் நூல் முடிபு. இதனால் தேறிய பொருள் என்னையெனின் தான் விரும்பியவரை அடைவதற்கு 'மடல்' ஒரு சாதனமாக அமைந்தது என்க.

ஆழ்வார்களும் நாயன்மார்களும் இறைவனிடம் கொண்ட அன்பைப் பெரும்பாலும் நாயக—நாயகி அனுபவத்திலேயே உலகிற்கு உணர்த்தினர். இந்த அனுபவம் மற்றவர்களுக்கு ஏற்படுவதில்லை என்பது அறிஞர் வ. வே. சு. ஐயர் அவர்கள் துணிபு. இவ்வாழ்வார்கள் இறைவனை எண்ணி ஆடி ஆடி அகங்கரைந்தவர். அவனது இசையைப் பாடிப் பாடிக் கண்ணீர் மல்கியவர். தம் பிறப்பால் பயனெய்தியவர்கள். சாதுசனங்கள். அவருள் 'அருள்மாரி' என்ற திருமங்கை மன்னனும் ஒருவர். அவர் தன்னை ஒரு பெண்ணாகப் பாவித்து, கோவிந்தனது குடமாடு கூத்தைக் கண்டபின் தான் பெற்ற அனுபவத்தையும், எம்முறையினும் திருமாலை அடைவதற்காகத் தான் மடலூரவும் தயங்கேன் எனக் கூறும் விதத்தையும் சிறிது நோக்குவோம். இன்றும் தமிழ் நாட்டில் 'கரகம் ஆடுதல்' என்னும் வழக்கு நிலவி வருகிறது. இதில் வல்லவன் திருமால்.

நல்ல பருவத்தினளான நங்கை தனது ஆடை ஆபரணங்களை நன்கு திருத்திக்கொண்டு, பந்து விளையாடுகிறாள்.

> **"காரார் குழலெடுத்துக் கட்டி......**
> **.........மணிமேகலை திருத்தி**
> **ஆராரயில் வேல்கண் அஞ்சனத்தின் நீரணிந்து**
> **சீரார் செழும் பந்துகொண்டு அடியா நின்றேன் நான்."**

அப்படி விளையாடிக் கொண்டிருக்கும் மகளை, தாயார், "அம்மா, கரகம் பார்க்க வா" என்று அழைக்கின்றனர்.

> **" ....செங்கண்மால் என்று ஒருவன்**
> **பாரோர்கள் எல்லாம் மகிழப் பறைகறங்க**
> **சீரார் குடமிரண்டேந்தி, செழுந்தெருவே**

ஆரார் எனச் சொல்லி ஆடும் அதுகண்டு
...
வாராயோ என்றூர்க்குச் சென்றேன்."

அவனது மாமலைபோல் தோளும், மின்னும் மணி மகர குண்டலங்களும் கண்ட கண்கள் மற்றொன்றினை எங்ஙனம் நோக்கும்? அக்கோவிந்தனை, அக்கோவலனை, அக்குடக்கூத்தனை அடைய வேண்டும் என்ற ஏக்கத்தினால் உடல் மெலிந்து பசலை ஏற்படுகிறது. மகளுக்கு உற்ற வாட்டத்தைக் கண்டு தாய் வருந்துகிறாள். சாத்தனுக்கும் ஏனைத் தெய்வங்கட்கும் பூசை இடுகிறாள். ஆயினும் மகளது நோய் தீரவில்லை. வயது முதிர்ந்த சிலர், குறி கேட்டால், காரணம் விளங்கும் என்று கூறுகின்றனர். குறத்திக்கு என்ன ஏற்றம்! மற்றவர்களால் அறிய முடியாததை அவள் எளிதில் உணர்கிறாள். அவளிடம் இறையொளி தங்கி நிற்கிறது. அவளைக் 'கட்டுவிச்சி' என்றும் அழைப்பர். அவள் வருகிறாள். அவளுக்கு ஆவேசம் வருகிறது. அவள், யாரால் இப்பெண்ணிற்கு மன நோய் ஏற்பட்டது என்று விவரமாகக் கூறுகிறாள்.

" ....கட்டுவிச்சி கட்டேறி
சீரார் சுளகில் சிலநெல் பிடித்தெரியா
வேரா விதிர் விதிரா மெய்சிலிராக் கைமேவா
பேர் ஆயிரம் உடையான் என்றாள், பேர்த்தேயும்
காரார் திருமேனி காட்டினாள், கையதுவும்
சீரார் வலம்புரியே என்றாள்."

இவ்வளவு கூறியும் தாய் அறிந்தாளோ இல்லையோ என்ற ஐயம் குறத்திக்கு ஏற்படுகிறது. மேலும் கூறுகிறாள்,

" நீர் ஏதும் அஞ்சேல்மின் நும்மகளை நோய் செய்தான்
ஆரானும் அல்லன் அவனை அறிந்தேன் நான்
....................உமக்கு அறிய கூறுகேனே.
...
ஆரால் இலங்கை பொடிபொடியா வீழ்ந்தது மற்று
ஆராலே கல்மாரி காத்ததுதான் ஆழி நீர்
ஆரால் கடைந்திடப்பட்டது..............
...
சீரார் தயிர் கடைந்து வெண்ணை திரண்டதனை
வேரார் நுதல் மடவாள் வேறோர் கலத்திட்டு
நாரார் உறியேற்றி நன்கமைய வைத்ததனை
போரார்வேற் கண்மடவாள் போந்தனையும் பொய்யுறக்கம்
ஓராதவன் போல் உறங்கி, அறிவுற்று
தாரார் தடந்தோள்கள் உள்ளளவும் கைநீட்டி
ஆராத வெண்ணெய் விழுங்கி, அருகிருந்த
மோரார் குடமுருட்டி முன்கிடந்த தானத்தே
ஓராதவன்போல் கடந்தான்........... "

மேலும்,

> "போரானை பொய்கைவாய்க் கோட்பட்டு நின்று அலறி
> நாராயணா ! ஓ ! மணிவண்ணா ! நாகணையாய் !
> வாராய் என் ஆரிடரை நீக்காய், என வெகுண்டு
> ....
> ....இடர்கடிந்தான் எம்பெருமான்
> ....நும்மகளைத்
> தீராநோய் செய்தான் "

என்று முடிக்கிறாள் குறத்தி.

இனி என் செய்வது? இந்நோய்க்கு வேறு மாற்று இல்லையே! அவன் சிந்தை அல்லவா இறங்க வேண்டும். பொறுத்துப் பார்க்கலாம் என்று எண்ணுகிறாள் மங்கை. அவனது தாமரைக் கண்களை எண்ணியே நைகின்றதே தவிர மனம் தன் வசப்பட மறுக்கிறது.

> "............அழல்வாய் மெழுகுபோல்
> நீராய் உருகும் என் ஆவி, நெடுங்கண்கள்
> ஊரார் உறங்கிலும் தான் உறங்கா உத்தமன் தன்
> பேராயினவே பிதற்றுவன்."

அவன் அருள் கிட்டும். அப்படி இல்லையெனின் கட்டாயம் மடல் ஊரவேண்டியதுதான். அவன் இருக்கும் ஊரெல்லாம் சென்று, பாரோர்கள் அறிய மடலூர்ந்து, அவனை அடைவது என்று தீர்மானிக்கிறாள் பெண். எங்கெல்லாம் போகவேண்டும்?

> "சீரார் திருவேங்கடமே, திருக்கோவலூரே
> மதிள்கச்சி ஊரகமே பேரகமே,
> ....வெள்ளறையே வெஃகாவே,
> பேராலி தண்கால், நறையூர் திருப்புலியூர்,
> ஆராமம் சூழ்ந்த அரங்கம்............
> ....கண்ணனூர் விண்ணகரம்
> சீரார் கணபுரம், சேறை, திருவழுந்தூர்
> காரார் குடந்தை, கடிகை, கடல் மல்லை,
> ....
> சீராரும் மாலிருஞ்சோலை, திருமோகூர்
> பாரோர் புகழும் வதரி, வடமதுரை,
> ஊர் ஆயவெல்லாம் ஒழியாமே
> ....
> ....பெருந்தெருவே
> ஊரார் இகழிலும் ஊராது ஒழியேன் நான்
> வாரார் பூம் பெண்ணை மடல்."

திருமால் உகந்து இருந்த ஊர்களெல்லாம் எவ்வளவு அழகாக அடுக்கப்பட்டிருக்கின்றன!

இல்வாழ்வார் இன்பமுடன் படித்து, இறையன்பைப் பெறுதற்கு, வாய்த்த புகழ் மங்கையர்கோன் மறைப் பொருளை எளிதில் எடுத்துரைத்தார். அத்திரு மொழிகளைப் பயின்று, உண்ணும் சோறு, பருகு நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் என்ற பேரின்ப நிலையை அடைய முயல்வோமாக.

★ *EXPERT DIAMOND SETTER*
★ *LOVELY & MODERN STYLED GUARANTEED JEWELLERY*
★ *GOLD & SILVER ARTWARES' CRAFTSMAN*



For Reliable & Prompt Service, Contact :

V. T. SIVARAMAKRISHNAN

997, Shivaji St., Karol Bagh, New Delhi

Everything & Anything

in

PHOTOGRAPHY

★

Contact

DASS STUDIO

(L. DASS & SONS)

12-F, Connaught Place

NEW DELHI

Phone : 8083.

Remember

SOUTH INDIAN MART

(Prop. P. R. B. MANI)

A/3, Lady Hardinge Road

For all South Indian Magazines

&

Commodities

Free Prompt Home Delivery

அறியாமையால் வந்த ஆபத்து

ஜி. எச். ஜி. ராமன்

என் நண்பர் விசுவநாதனுக்கு மனோதத்துவ ஆராய்ச்சியென்றால் ...ர். இதுவரை வெளியாகியுள்ள மனோதத்துவ நூல்களில், ஒன்று கூட பாக்கியில்லாமல் அவருடைய புஸ்தக அலமாரியில் காணலாம். நான்கூட, சில சமயங்களில் அவரைக் கடிந்துகொண்டிருக்கிறேன் —எதற்கு இந்த வீண்வேலை என்று.

அவருடைய பதில் எப்பொழுதும் ஒரேமாதிரியாகத்தான் இருக்கும். "இதோ பாருங்கள், உங்களுக்கு இது பிரயோசனமற்ற விஷயமாகத் தோன்றலாம். ஆனால், நான் சம்பந்தப்பட்டவரையில், மனோதத்துவ ஆராய்ச்சி நாம் ஒவ்வொருவரும் அவசியம் செய்ய வேண்டியது. ஏனென்றால், மனிதன் தன்னுடைய மனதைப்பற்றி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் தெரிந்து கொள்ளுகிறானோ, அவ்வளவுக்கவ்வளவு அவனால், வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்களை விலக்கி, இன்பங்களை அதிகமாக அநுபவிக்க முடியும்."

இவ்வாறு இன்ப சாதனையில் ஈடுபட்டிருந்த விசுவநாதனுக்கு, மிக மிக துன்பமயமான அநுபவம் ஒன்று முந்தா நாள் காலையில் ஏற்பட்டதைக்கேட்டதும், நான் மனம் கலங்கினேன். அவருடைய ஐந்து வயதுக் குழந்தை பாலு, கிணற்றுக்குள் விழுந்து விட்டான்! பொழுது விடிந்த போது, படுக்கையில்தானிருந்தானும். ஆனால், விசுவநாதனின் சம்சாரம், வாசலுக்குச் சென்று ஜலம் தெளித்துக் கோலம் போட்டுக்கொண்டிருந்த சமயம், கிணற்றின் கைபிடிச் சுவரில் வைக்கப்பட்டிருந்த வாளி, தடதட வென்று, கிணற்றுக்குள் விழுந்த சத்தம் கேட்டதாம். அநேக தடவைகள், குழந்தை பாலுவே இவ்வாறு வாளியைக் கிணற்றுக்குள் தள்ளிவிட்டு வேடிக்கை பார்ப்பானாதலால், அவன் எழுந்திருந்து விஷமம் செய்ய ஆரம்பித்து விட்டான்போலிருக்கிறது என்று, அந்த அம்மாள் எண்ணிக்கொண்டு, கோலம் போடும் வேலையைத் தொடர்ந்து கவனித்தாளாம். சற்று நேரம் சென்று, உள்ளே வந்தபோது, எங்கு தேடியும் பாலுவைக் காணவில்லை. ஒருவேளை வாளியுடன் சேர்ந்து அவனும்...... என்று சந்தேகப்பட்டுக்கொண்டே கிணற்றுக்குள் எட்டிப்பார்த்த போது, அவள் நெஞ்சம் படபடத்தது. அவளுடைய சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. குழந்தை ஜலத்தில் தத்தளித்துக் கொண்டிருந்தான். இன்னும் ஒன்றிரண்டு நிமிஷங்களில் அவனை உயிருடன் காண்பது அரிது. அந்த நெருக்கடியிலும், அவள் "என் பிள்ளையார், என் பிள்ளையார்!" என்று கூவியது காது கேட்டதாம்...... கடைசியில், பாலுவை வெளியில் எடுத்தபோது வெறும் உடல் மாத்திரம் மிஞ்சியது.........

விசுவநாதன் சொல்லி முடித்ததும், என் மனதில் பெரிய கிளர்ச்சி ஏற்பட்டுவிட்டது. பாலு ரொம்பவும் சுருசுருப்பான குழந்தை. சதா விஷமம் செய்து கொண்டேயிருப்பான். பொம்மைகளின் பேரில் அவனுக்கு ரொம்பவும் பிரியம். நான்கூட அவனுக்கு ஒரு நாய்க்குட்டி பொம்மை

வாங்கிக் கொடுத்திருக்கிறேன். அவனுக்கு, அது ஒரு உண்மை நாய்க்குட்டி என்றே நினைப்பு. அதனுடன் பேசுவான். அது பதில் பேசாதது கண்டு, "கோபமோ? சரி, சாப்பிட்டபிறகு பேசலாம்!" என்று அதற்குச் சாதம் ஊட்டு வான். இரவு படுத்துக்கொள்ளும் போதுகூட, நாய்க்குட்டியை விட்டுப் பிரியமாட்டான். தன்னுடன் படுக்க வைப்பான். இதெல்லாம், விசுவநாதனுக்கும், அவருடைய சம்சாரத்திற்கும் ரொம்பத் தொந்திரவாயிருந்தது என்று எனக்குத் தெரியும்.

என்னிடம் பாலு ஒரு விநாயகர் பொம்மை வாங்கித்தரும்படி ரொம்ப நாளாகச் சொல்லிவந்தான். ஐந்தாறு நாட்களுக்கு முன்புதான் விநாயக சதுர்த்தி வந்தது. அதையொட்டி, வர்ணம் பூசிய ஒரு விநாயகர் பொம்மை வாங்கிக் கொடுத்தேன். அதை வைத்துக்கொண்டு அவன் படுத்திய பாடு சொல்லி முடியாது. முடிவில், விசுவநாதன் என் பேரில் பாய ஆரம்பித்துவிட்டார்.

"நீர் செய்த வேலை இது. பிள்ளையார் சாப்பிட்டால்தான் அவன் சாப்பிடுவானும். பிள்ளையாராவது சாப்பிடுவதாவது? ஆகையினால், இரண்டு நாட்களாகப் பட்டினி," என்றார்.

"என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?"

"அந்த பொம்மையைத் திரும்ப எடுத்துக்கொண்டு போய்விடும்."

"குழந்தை ஏமாந்து போவான்."

"அப்படியானால், நானே அதைக் கண் காணாத இடத்தில் வீசி எறிய வேண்டும்."

இதைக்கேட்டதும் என் மனம் துணுக்குற்றது.

"தனியே சரியாகப் போய் விடும். பொம்மையை மட்டிலும் தூர எறிந்து விடாதீர்கள்" என்று சொல்லிவிட்டு விடை பெற்றுக்கொண்டேன்.

நேற்று, முழுவதும், குழந்தை பாலு கூறின கடைசி வார்த்தைகள் என்னை வாட்டிக்கொண்டேயிருந்தன. கலங்கிய மனதுடன் இரவில் படுத்துக்கொண்டேன்.

நான் கனவு காண்பது ரொம்பவும் சகஜம். ஆனால், நேற்று இரவு நான் கண்டது கனவா, உண்மையான நிகழ்ச்சியின் பிரதிபலிப்பா என்று எனக்கே பிடிபடவில்லை.

குழந்தை பாலுவை, அவனுடைய பெற்றோர்கள் சாப்பிடுமாறு வற்புறுத்திக் கொண்டிருந்தனர். இரவு ஒன்பது மணியிருக்கும். பிள்ளையார் சாப்பிடாததால், தானும் சாப்பிட மாட்டேன் என்று பிடிவாதம் செய்தான் பாலு. பெற்றோர் என்ன முயன்றும் பயனில்லை. கடைசியில், உணவருந்தாமலேயே, பிள்ளையாருடன் படுத்துக் கொண்டான். சற்று நேரம், கணவனும் மனைவியும் எதோ படித்துக்கொண்டிருந்தனர். அவன் தூங்கிவிட்டான் என்று தோன்றிய பிறகு, அவர்களிடையே கீழ்க்கண்ட சம்பாஷணை நடந்தது.

"சரஸ்வதி, என்ன செய்யலாமென்கிறாய்? இந்தப் பிள்ளையார் பொம்மையை ஒழித்துக் கட்டினாலொழிய, அவன் சாப்பிட மாட்டான் போலிருக்கிறது." என்றார் விசுவநாதன்.

"ஆமாம். நாளைக்காலையிலேயே, முதல் காரியமாக அந்தக் கிணற்றுக்குள் எறிந்து விடுகிறேன்" என்றாள் அவர் மனைவி.

அவர்களுடைய பேச்சு, பாலுவின் காதுகளில் விழுந்திருக்காது என்பது அவர்களுடைய எண்ணம்.

ஆனால், பாலுவோ, தூங்காமல் தன் தாயாரின் கோரிக்கையை கவனித்துக் கொண்டிருந்தான். பயத்தின் சாயல் அவன் முகத்தில் படர்ந்தது. தன்னுடைய விநாயகர் பொம்மையை இறுகத் தழுவிக் கொண்டான்.

இந்தக் காட்சிக்குப்பிறகு இருள் சூழ்ந்து கொண்டது. ஆனால், மறுபடியும் ஒரு நிமிஷத்தில் கனவு தொடர்ந்தது......பலபலவென்று விடியும் நேரம். விசுவநாதனின் மனைவி படுக்கையைவிட்டு எழுந்திருந்து, பாலுவின் பிடியிலிருந்து, பொம்மையை மெதுவாக விடுவித்து, கிணற்றுக்குக் கொண்டு போய், "பொத்" தென்று ஜலத்திற்குள் போட்டு விட்டாள். தூங்கிக்கொண்டிருந்த பாலு, அதிகாலையின் அமைதியில், பொம்மை ஜலத்தில் விழுந்த ஓசையைக் கேட்டு, விழித்துக்கொண்டான். பிள்ளையாரைத்தான் உடன் தேடினான். அவரைக் காணோம். அவனுக்கு என்ன தோன்றிற்றோ, நேரே கிணற்றடிக்குச் சென்றான். கைப்பிடிச் சுவர் உயரமாயிருந்தது. வாளியைக் குப்புறக் கவிழ்த்து, அதன்மேல் காலை வைத்து, எப்படியோ சமாளித்து, சுவரில் ஏறி நின்று கொண்டான். அவன், கிணற்றடியில் பிள்ளையார் இருக்கிறாரா என்று ஆராய்ந்தான். கிணற்று ஜலம் சுத்தமாயும், தெளிவாயும் இருக்கவே, பிள்ளையார் கீழே உட்கார்ந்து கொண்டிருந்ததை நன்றாகக் காண முடிந்தது.

"நீ அங்கிருக்கிறாயா? என்னால் வரமுடியாதே?" என்று கேட்டான்.

"ஏன் முடியாது? பயப்படாமல் குதித்துவிடு. நான் பார்த்துக் கொள்ளுகிறேன்" என்று விநாயகர் சொல்லுவதுபோலிருந்தது.

பிள்ளையாரின் அழைப்புக் கிணங்கி, பாலு கிணற்றுக்குள் குதித்துவிட்டான். அவன் காலில் கயிறு சுற்றிக்கொள்ளவே, அவனுடன் வாளியும் சேர்ந்து இழுக்கப்பட்டு, கிணற்றுக்குள் விழுந்தது ......இத்துடன் என் கனவு கலைந்தது. "ஐயோ!" என்று கூச்சலிட்டுக்கொண்டு விழித்தேன். இப்படியும் நடந்திருக்குமா என்று வியந்தேன்.

இன்று காலை விசுவநாதனின் வீட்டிற்குச் சென்று, கிணற்று ஜலத்தை ஆராய்ந்தேன். நான் தேடிய பிள்ளையார் பொம்மை அங்கு இருந்தது. எனக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நேரே விசுவநாதனிடம் ஓடி, ஒன்றுமே தெரியாதவன் போல, "அந்தப் பிள்ளையார் பொம்மை எங்கே?" என்று விசாரித்தேன்.

"அதைத்தான் சுக்கு நூறாக உடைத்து, நேற்று சாயந்திரம் வாசலில் இருக்கும் முனிசிபல் குப்பைத் தொட்டியில் போட்டுவிட்டேனே" என்றார்.

"இல்லை. நீர் பொய் சொல்லுகிறீர். உம் மனைவி மட்டும், குழந்தையை ஏமாற்றி, பொம்மையைக் கிணற்றில் போட்டிராவிட்டால், இன்று பாலு உயிருடனிருப்பான்" என்றேன்.

அவருக்குத் தேள் கொட்டியது போலிருந்தது. "உமக்கு எப்படித் தெரியும்?" என்றார்.

என் கனவை அவருக்கு எடுத்துரைத்தேன். கடைசியில் அவரே ஒப்புக்கொண்டார். "என் மனோதத்துவ ஆராய்ச்சி எனக்குப் பயன்படவில்லை. குழந்தையின் மனோபாவத்தை அறியாமல், அதைப் பறிகொடுத்துவிட்டேன்" என்றார்.

LOYAL TEXTILE MILLS LTD.,

MADRAS

Telegrams : **SITAVOR, Madras.** Telephone Nos. **4915 & 4916.**

★

CAPITAL :

Authorised	**Rs. 1,00,00,000**
Issued, Subscribed and Paid-up	**Rs. 48,42,000**

Spindleage : 24242 Looms : 224

Board of Directors :

A. V. Thomas, Esq., M.P. *(Chairman)*

S. S. Natarajan, Esq.

S. G. Jayaraj Nadar, Esq.

A. Subramaniam Chettiar, Esq.

S. Ponnuswamy Nadar, Esq.

MILLS AT :

KOVILPATTI

(Tinnevelly Dist.)

Telegrams : **"MILLS", Kovilpatti.**

Manufacturing :

MULLS, LONGCLOTHS AND YARNS (20s to 40s)

★

BUY LOYAL FABRICS

For Comfort Quality Durability and Utility

★

Managing Agents :

SOUTHERN AGENCIES LIMITED

2/21, First Line Beach, :: MADRAS-1

நூல் சரடு 13818

'ராஜு'

ரங்கராவுக்கு அவருடைய பிறந்த நாள் பரிசாக, நல்ல பீரோ ஒன்று கொடுக்கத் தீர்மானித்திருக்கிறோம். நூற்றுக் கணக்கான இரவல் புத்தகங்களை வைத்துக்கொள்வதற்கு இடம் இல்லாமல் மனுஷன் சிரமப்படுகிறார். இரவல் கொடுத்தவர்கள் நாங்கள்தான். அந்தப் புத்தகங்கள் திரும்பி வரும் என்ற அசட்டு நினைப்புக்கே இடம் இல்லை. பத்து வருஷமாகப் பழகியிருக்கிறோம். அவருடைய சுபாவம்தான் எங்களுக்குத் தெரியுமே! பாவம் ரங்கராவ், அவர் ஒரு புத்தகப் பைத்தியம்!

கொண்டு போகும் புத்தகங்களை ரங்கராவ் படிக்கிறாரா? அவரைக் கேட்டால்தான் தெரியும். கண்களில் ஒரு புத்தகம் பட்டுவிட்டால் போதும். படித்ததாக இருந்தால், 'நீங்கள்தான் படித்து முடித்தாயிற்றே!' என்பார். படிக்காததாக இருந்தாலோ, 'நீங்கள் இனிமேல் படித்தாற்போல்தான்!' என்பார். ஆகக்கூடி, ரங்கராவ் போகும்போது, மேஜையின்மீது அந்தப் புத்தகம் இராது.

இரவல் போகும் எல்லா புத்தகங்களுக்குமே யஜமான விசுவாசம் கிடையாது என்று ஒதுக்குவதற்கில்லை. ஒரு புத்தகம் யாரிடம் கொடுத்தோம் என்பது எனக்கு ஞாபகம் இல்லை. பல வருஷங்கள் கழித்து என் நண்பர் பசுபதியிடமிருந்து இரவலாக வாங்கிவந்த புத்தகத்தைப் பிரித்துப் பார்க்கிறேன்: 82-வது பக்கத்தில் என் கையெழுத்து போட்டிருந்தது! புலன் விசாரணையில் துப்புத் துலங்கிவிட்டது. எப்பவோ ராமஸ்வாமியிடம் கொடுத்திருக்கிறேன்; அவரிடமிருந்து மிஸஸ் செளந்தரராஜன் எடுத்துப் போயிருக்கிறார்; பின்னர் அந்தப் புத்தகம் பல கைகள் மாறி பசுபதியிடம் தஞ்சம் புகுந்திருந்த சமயம், நான் போய்ச் சேர்ந்தேன்!

படிக்கிறவர்களின் சுபாவத்தைப் போல, படிக்கும் விதரணையும் அலாதியாக இருக்கிறது. 'ரெஜிஸ்டர் நம்பரில்' ஆரம்பித்து 'பிரசுர கர்த்தா'வைக் குறிப்பிடும் கடைசிப் பத்தி வரை, ஒரு வரி விடாமல் படிக்கும் ரிடையர்டு போஸ்ட் மாஸ்டர் கிருஷ்ணசாமி போல் எத்தனை பேர்! ஆதியும் அந்தமும் பார்த்துவிட்டு 'ஒரே மூச்சில்' முடித்துவிட்டதாக சந்தோஷப்பட்டுக் கொள்வோரும் இருக்கிறார்கள். "இந்த 'விமர்சகர் டெக்னிக்' சரிப்படாது. அப்புறம் 'ஸஸ்பென்ஸ்' எங்கே ஸார் இருக்கும்?" என்று வேறு சிலர் கேட்கிறார்கள். ஒரு சிலர் முகவுரையை ரசிக்கிறார்கள். கதையைவிட முகவுரையை நீளமாய்க் கொண்ட புத்தகங்களுக்கு 'சபாஷ்' கொடுப்பார்கள். பெர்னார்ட் ஷாவின் 'முகவுரைகள்' தான் உலகப் பிரசித்தம் ஆயிற்றே! ஆனால் ஒன்று சொல்ல வேண்டும். சில சமயங்களில், புத்தகத்தின் எஞ்சிய பகுதியையும் படித்த பிறகு 'த்ஸொ! த்ஸொ!

முகவுரையோடு நிறுத்திக் கொண்டிருக்கலாமே!' என்று தோன்றி விடும்.

பெர்னார்ட்ஷா என்ன, எத்தனையோ ஆசிரியர்கள் காத்திருக்கிறார்கள்—யாருக்கு பேட்டி அளிப்பது? பதில் சொல்வது சற்று கடினம்தான். இதில் ஒரு நியதி இருக்க முடியாது. "'ஓட்ஹவுஸ்' படிக்காத ஜன்மம் என்ன ஜன்மம்!" என்கிறார் ஒரு நண்பர். "நீங்கள் 'மாபஸானை' படித்ததில்லை போலிருக்கிறது" என்று இன்னொருவர் குறுக்கிடுகிறார். "கோல்ட்ஸ்மித் எழுதிய 'விகார் ஆப் வேக்பீல்ட்' படித்திருக்கிறீர்களா? இல்லையா? அடடா! முதலில் அதைப் படித்துவிட்டு மறுகாரியம் பாருங்கள். இனிமேல் அந்த மாதிரி எழுதுவதற்கு இன்னொரு கோல்ட்ஸ்மித் பிறக்க வேண்டும்!" என்று வியப்புக் கடலில் அமிழ்ந்து விடுகிறார் மூன்றாம் நபர். இதையெல்லாம் கேட்டால் எங்களுடைய பாட்டி, காதைப் பொத்திக் கொள்ளுகிறாள். "இதெல்லாம் வேணாம். நான் சொல்வதைக் கேளு. உங்க தாத்தா நாளிலே ராமாயணத்தை அறுபது தடவை பாராயணம் செஞ்சு பட்டாபிஷேகம் நடத்தியிருக்கார், அதைச் செய். போகிற இடத்துக்குப் புண்யமுண்டு" என்று உபதேசம் செய்கிறாள்!

போகிற இடத்தில் புண்ணியம் இருக்கிறதோ இல்லையோ, குஷியாகப் பொழுது போனால் சரி என்று, இருபதாம் நூற்றாண்டு நினைக்கிறது. இஷ்டம்போல் பிரயாண டிக்கெட் எடுத்துக்கொண்டு பூலோகத்தைச் சுற்றிவருகிறாள், 'மிஸ் உலகம்'. ஆனால் விமானமோ ரயிலோ மோட்டாரோ தேவையில்லாமலே, உலகத்தைச் சுற்றிவந்து விட்டேன் நான்! இவ்வளவும், இருந்த இடத்தைவிட்டு நகராமல்! தேம்ஸ் நதியின் லாவண்யம், பாரிஸ் நகர நாகரிகம், ஸ்விட்ஜர்லாந்தின் வனப்பு ஆகியவற்றைக் கண்டேன். ஹவாய் நடனங்கள் என் மனதைப் பரவசத்தில் ஆழ்த்தின. ரிவீரா கடற்கரையில் எவ்வளவு நேரம் பொழுது போக்கியிருக்கிறேன்!

காலக் கடலையும் கடந்து செல்லும் அற்புதக் கப்பலில் பல நூற்றாண்டுகளுக்கு முன் தாவியிருக்கிறேன். போன மாதம் விக்டோரியா ராணியின் தர்பாருக்குப் போயிருந்தேன். முந்தாநாள் சர்ச்சிலும் ரூஸ்வெல்ட்டும் உரையாடக் கண்டேன். நேற்று கம்பனும் காளிதாசனும் என்னோடு பேசிக் கொண்டிருந்தார்கள். இந்த இருபதாம் நூற்றாண்டை சற்று மறந்து அக்கடாவென்று நிம்மதியுடன் இருக்க முடிந்தது.

இவை எல்லாம், அச்சு யந்திரத்தின் தயவினால்!

✲

தமிழானது, அதன் கவி வடிவில், கிரேக்க மொழியை விட அதிக மெருகு கொண்டதாயும் துல்லியமானதாயும் இருக்கிறது என்று சொல்வது மிகையாகாது.........நிறைவிலும், வேகத்திலும், இம்மொழி, வேறெந்த வழங்கு-மொழிகளையும்விட ஆங்கிலத்துக்கும் ஜெர்மனிக்கும் ஒப்பாக இருக்கிறது.

—வின்ஸ்லோ

மனம் போல......

ஜயலக்ஷ்மி

கண்ணையும், கருத்தையும் கையிலிருந்த போட்டோவின் மேல் பதிக்கவிட்டு, மெய்மறந்து நின்றாள் கீதா.

"என்ன கீதா, அப்போ உனக்கு இந்த வரன் பிடித்துப்போய் விட்டதென்று சொல்லு" என்றார் சர்மா, புன்னகையுடன்.

"ஆமாம் அப்பா," என்றாள் கீதா, சங்கோஜமில்லாமல்.

"நன்றாக யோசித்துச் சொல்லு கீதா. கல்யாணம் என்பது சாதாரண விஷயமில்லை. நீ ஏதோ லக்ஷியம், லக்ஷியம் என்று குதிக்கிறாயே என்பதற்காக, இந்த வரனைத் தேர்ந்தெடுத்திருக்கிறேனே ஒழிய, என் மனதிற்கு இந்த வரன் அவ்வளவாகப் பிடிக்கவில்லை," என்றார் சர்மா.

"என் வாழ்க்கைக்கு எது நல்லது, எது இல்லை என்று பகுத்தறியும் சக்தி எனக்கு இருக்கிறதென்று நினைக்கிறேன் அப்பா" என்றாள் கீதா.

"நாட்டுப்புறக் கணவன், கிராம வாழ்க்கை, ஒரு தொணதொணப்புக்கார அத்தை, இவைகளெல்லாவற்றையும், நீ ஏககாலத்தில் எப்படித்தான் சமாளிக்கப் போகிறாயோ என்று, எனக்கு ஒரே பயமாயிருக்கம்மா," என்று நமட்டுச்சிரிப்புச் சிரித்தார் சர்மா.

"நல்ல அப்பா நீங்கள்" என்று முகத்தைத் திருப்பிக்கொண்டாள் கீதா.

"அது சரி கீதா. ஒரு விஷயத்தில் உனக்குக்கூட இந்த வரன் சற்று அதிருப்தியாகத்தான் இருக்குமோ என்று,—எனக்குக் கவலையாக இருக்கிறது."

"எதைச் சொல்கிறீர்கள் அப்பா?"

"ஒன்றுமில்லை.........நீ, கிராம வாழ்க்கையைத்தான் மேற்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறபடி, உனக்கு வரப் போகும் கணவனுக்கு, காதில் கடுக்கனும், கட்டுக் குடுமியும் இருக்க வேண்டுமென்றாயானால், மாப்பிள்ளைப் பிள்ளையாண்டான் குடுமி வைத்துக்கொள்ளச் சம்மதிக்க வேண்டுமே என்று, எனக்குக் கவலையாயிருக்கம்மா" என்றார் சர்மா.

"ஐயோ அப்பாவே! உங்களுக்கு இவ்வளவு வயசாகியும், குறும்பு மட்டும் விடமாட்டேனென்கிறதே!" என்றவாறு, சிரிப்பை அடக்கமாட்டாமல் திணறினாள் கீதா.

* * *

கீதா, 'ரிடையர்ட்' சப்-ஜட்ஜ் நடேச சர்மாவின் ஒரே செல்லப் பெண். தாயில்லாக் குழந்தை என்கிற பரிவில், அவளுக்கு சர்மா எல்லாவிதச் சலுகைகளும் அளித்திருந்தார்.

கீதாவின் வயது வளர, வளர, அவளுடைய அபிலாஷைகளும், லக்ஷியங்களும் புதுப்புது உருவங்களெடுத்தன.

சிறுமி கீதா, குமாரி கீதாவாகி, ஹைஸ்கூலைக் கடந்து, காலேஜை அடைந்தபொழுது, அவளுடைய லக்ஷியம் 'கிராமப் புனருத்தாரணம்' என்ற புது உருவெடுத்தது.

காலேஜ் 'டிபேட்'டுகளிலும், இன்னும் சமயம் அகப்பட்ட இடங்களிலும், கிராமச் சீர்திருத்தத்தைப் பற்றி ஓயாமல் பேசினாள்.

கிராமத்தில் வசித்து, அங்கிருக்கும் பாமர மக்களுக்குக் கல்வியறிவூட்டி, கிராமத்திற்குப் புத்துயிரளிக்க வேண்டுமென்பது, அவளுடைய தீவிரமான அபிலாஷை. தன்னுடைய லக்ஷியத்திற்காக, தன் வாழ்க்கையையே தியாகம் செய்யத் தயாராயிருந்தாள் கீதா. அவளுடைய கையையும், நடேச சர்மாவின் ஆஸ்தியையும் எதிர்பார்த்து, ஏமாந்து போன இளைஞர்கள் எத்தனை பேர்களோ பாவம்!

பிடிவாதக்காரப் பெண்ணுக்கு, வரன் தேடித் தேடிக் காலும் மனமும் சலித்துப் போனார் சர்மா. கடைசியில், தாம் தேர்ந்தெடுத்த, ஐம்பதாவது வரனை வாசுவை மணப்பதற்கு, கீதா சம்மதித்த பொழுது, அவர் அளவிலா ஆனந்தம் அடைந்தார்.

கீதா - வாசுதேவனின் விவாகம் 'ஜாம், ஜா'மென்று நடந்தேறியது. தன் லக்ஷியப்படியே, கண் நிறைந்த அழகுடன், தாவர சாஸ்திரத்தில் தேறிக் கிராம வாழ்க்கையை மேற்கொண்ட வாசுவை, தான் கணவனாய் அடைந்ததில், கீதாவின் சந்தோஷம் கட்டுக்கடங்கவில்லை.

கணவனுடன், தன்னுடைய புக்ககமான பவளக்குடிக்குப் பிரயாணமானாள் கீதா. நினைவு தெரிந்தது முதல், நகரத்தைவிட்டு அசைந்திராத அவளுக்கு, கிராமத்தின் அமைதி நிறைந்த அழகு, மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ரயிலை விட்டிறங்கி, வண்டியிலேறி வீடு போய்ச் சேரும் வரையில், "இதென்ன மரம்? இந்தச் செடிக்குப் பெயரென்ன? இது எந்த ரகத்தைச் சேர்ந்த கொடி?" என்பது போன்ற கேள்விகளைப் போட்டு, வாசுவைத் துளைத்தெடுத்து விட்டாள் கீதா.

அவளுக்குப் பதில் சொல்லிச் சொல்லிப் பொறுமையற்றுப் போன வாசுதேவன், "என்ன. கீதா, ஒவ்வொரு புல், பூண்டின் பெயரையுமா நான் தெரிந்து வைத்திருக்க முடியும்?" என்று அலுத்துக் கொண்டான்.

"இல்லை... நீங்கள் தாவர சாஸ்திரத்தில் பட்டம் பெற்றவராயிற்றே என்று கேட்டேன்" என்றாள் கீதா.

"ஏன் கீதா, உனக்குப் பாகற்காய் பாயசம் செய்யத் தெரியுமா?" என்று கேட்டான் வாசு.

"பாகற்காய் பாயசமா?" என்று வியப்பினால், கண்களை அகல விரித்தாள் கீதா.

"இல்லை... நீ பெண்ணாய்ப் பிறந்தவளாயிற்றே என்று கேட்டேன்" என்று குறும்பாகக் கண்ணைச் சிமிட்டினான் வாசு.

அவன் தன்னை நன்றாக மட்டம் தட்டி விட்டதை உணர்ந்த கீதாவின் முகத்தில், அசடு தட்டிற்று.

வண்டி, வீட்டு வாசலையடைந்ததும், குனிந்த தலையுடன் வண்டியை விட்டிறங்கி, உள்ளே நின்று கொண்டிருந்த அத்தைக்கு நமஸ்காரம் செய்தாள் கீதா.

* * *

கீதா பவளக்குடிக்கு வந்து, ஒரு வாரம் ஓடிப்போய் விட்டது. இதற்குள், அவளுக்குக் கிராம வாழ்க்கை கசந்து போகும்படியான சம்பவங்கள், எத்தனையோ நிகழ்ந்து விட்டன.

சித்திரைக் கோடையில், பாளம் பாளமாக வெடித்துக் கிடந்த வயல் வரப்புகள், அவள் கண்களை உறுத்தின. காற்றுடன் கலந்து வீசிய மாங்காய், புளி இவைகளின் மணம், அவளுக்கு திவட்டலெடுத்துப் போயிற்று.

பாடம் சொல்லிக்கொடுக்கலா மென்று, மத்தியான்ன வேளை களில், அவள் கூட்டிவந்த பெண்க ளின் மனதை, அவள் கையிலிருந்த பாடப் புஸ்தகத்தைவிட, அவள் அணிந்திருந்த புடவையும், நகை களும் அதிகமாகக் கவர்ந்ததைக் கண்ட, அவளுக்கு அருவருப்பா யிருந்தது.

எல்லாவற்றையும்விட அவளுக்கு அதிக எரிச்சலைக் கொடுத்தது, வம்புக்கார அத்தைதான். "இப் படியா, எந்தக் காரியம் செய் தாலும் 'கிரிடிசைஸ்' செய்வது, வெறும் அநாகரீகம்!" என்று பல் லைக் கடித்துக் கொண்டாள் கீதா.

ஆகக்கூடி, "ஏண்டாப்பா இந்த அவஸ்தையில் அகப்பட்டுக்கொண் டோம்" என்று, ஏங்க ஆரம்பித்து விட்டாள் கீதா.

"கீதா, ஏ கீதா, இங்கே சித்தே வாயேன்" என்ற அத்தையின் குரலைக் கேட்டு, 'விதியே' என்று சமையற்கட்டிற்குச் சென்றாள் கீதா.

"கீதா, இந்தக் குழம்பைக் கொதிக்கவிட்டு, மாக்குத்தி இறக்கிவிடு. நான் அடுத்தகம் வரைக்கும் போயுட்டு ஒரு க்ஷணத் திலே வந்துடறேன்" என்றவாறு, கீதாவின் பதிலுக்காகக்கூடக் காத் திராமல், வாசலைப் பார்க்க நடை யைக் கட்டினாள் அத்தை.

அத்தை இருக்கிறவரையில், திகு, திகுவென்று எரிந்துகொண்டிருந்த அடுப்பு, கீதாவைக் கண்டதும், மக்கர் செய்ய ஆரம்பித்துவிட்டது.

அடுப்பை ஊதி, ஊதி கீதாவின் சுவாசப் பையே வெடித்துவிடும் போலாகி விட்டது. கண்ணும், மூக்கும் வேறு, தாரை, தாரை யாக ஜல வர்ஷம் செய்ய ஆரம் பித்து விட்டன. அடுப்பை எரிய விடும் முயற்சியில், அதன் மேலி ருந்த குழம்பை மறந்தே போய் விட்டாள் கீதா.

"ஐயய்யோ!" என்று அத்தை போட்ட கூக்குரலைக் கேட்டு, அல றிப் புடைத்துக்கொண்டு எழுந் தாள் கீதா.

"அரைக் கல்சட்டிக் குழம்பும் வத்தி, அரைக் காண்டியாகப் போயுடுத்தேடி! சட்டுனு குழம் பைக் கீழே இறக்கு. கல்சட்டி வெடிச்சுப் போயிடப் போறது." என்று அலறினாள் அத்தை.

அவசரம், அவசரமாகப் புட வைத் தலைப்பைப் பிடித்துக் குழம்பை இறக்கினவள், கை வழுக் கிப் 'படீ' ரென்று கல்சட்டியைக் கீழே போட்டாள் கீதா.

"ஐயையோ! அஞ்சு தலை முறையா ஆண்டு அனுபவித்து 'ஆகி' வந்த கல்சட்டியை, அஞ்சு நிமிஷத்திலெ போட்டு உடைச் சுட்டையேடி" என்று பிரலாபிக்க ஆரம்பித்தாள் அத்தை.

முழ உயரம் தலையைப் பறக்க விட்டுக்கொண்டு, முகம், கை, காலெல்லாம் கரியும், சாம்பலு மாகக் கூடத்திற்கு வந்த கீதாவை, எதிர்கொண்டான் வாசு.

"இதென்ன அமளி?" என்று கர்ஜனை செய்தான் வாசு.

"நான் ஒரு அமளியும் செய்து விடவில்லை. எல்லாம் உங்கள் அத்தை செய்யற அட்டகாசந் தான்" என்றாள் கீதா, பல்லைக் கடித்துக்கொண்டு.

"என்ன! என் அத்தையா!" என்றான் வாசு, குரலில் வியப்புத் தொனிக்க.

"எல்லாம் உங்கள் அத்தையே தான்," என்றாள் கீதா அழுத்தந் திருத்தமாக.

"உன்னுடைய அத்தையென்று சொல்லு" என்று அவளைத் திருத் தினான் வாசு.

"உங்கள் அத்தை எப்படி என் அத்தையாக முடியும்?" என்று அதட்டினுள் கீதா.

"என்னுடைய அத்தையில்லை. உன் அத்தையேதான்" என்ருன் வாசு, உச்ச ஸ்தாயியில்.

அதே சுருதி, அதே ஸ்தாயி, அதே பாணியில், "இல்லவே இல்லை. என்னுடைய அத்தையில்லை. உங்கள் அத்தையேதான்," என்று இரைந்தாள் கீதா. அவள் முகம் கோபத்தால் சிவந்து, உதடுகள் 'படபட' வென்று துடித்தன.

இந்த அருமையான சந்தர்ப்பத்தில், விவாதத்துக்குக் காரணமான அத்தையே குறுக்கிட்டாள்.

"நான் உங்கள்ளே ஒருத்தருக்கும் அத்தை இல்லை. என்னமோ பெரிய மனுஷாளாத்துப் பொண்ணுச்சே, 'குழந்தை கிராமத்தைப் பாக்கணும்னு ஆசைப்பட'ருன்னு நடேசன் சொன்னுனே, ஏதோ, வந்திருந்துட்டுப் போகட்டும்னு பாத்தா, எங்காத்திலேயே இருந்துண்டு, என்னையும் தூத்தறேளா? உம்?" என்று, நீருண்ட மேகம் போல் கர்ஜித்தாள் "அத்தை".

"அப்படியானல், இதெல்லாம் அந்தப் போக்கிரி மனுஷருடைய வேலையா!" என்று அதிசயித்து நின்ருள் கீதா.

"போக்கிரியா! நீ கிராமத்திலே வசிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிருய் என்று பொய் சொல்லி, ஒரு வாரமா என்னை வேலைக்கும் போக விடாமல், பாடாய்ப் படுத்தி விட்டாரே! அவரை என்ன செய்தால் தேவலை! நீ எப்படிச் செய்வாயோ எனக்குத் தெரியாது. இன்று சாயங்கால வண்டியில் மதருஸ் போய், அங்கிருந்து கல்கத்தா மெயிலேற வேண்டும். சொல்லி விட்டேன்" என்று மூச்சு விடாமல் 'சடபட' வென்று, ஆலங்கட்டி மழை போலப் பொழிந்து தள்ளினுன் வாசு.

"நீங்களா! வேலைக்குப் போகிறீர்களா? கல்கத்தாவுக்கா?" என்று வியப்புடன் கேட்டாள் கீதா.

"பின் என்னவென்று நினைத்துக் கொண்டாய்? தாவர சாஸ்திரம் படித்தவனென்ருல், பட்டிக்காட்டில் உட்கார்ந்து, சீட்டாடிக் கொண்டிருக்கிறவனென்று நினைத்துக் கொண்டாயா? நான் கல்கத்தா விவசாய இலாகாவில் ரிஸர்ச் ஆபீசராக்கும்" என்று பெருமையுடன் நிமிர்ந்து நின்ருன் வாசு.

"நிஜமாகவா! ஓ டியர்! டியர்! வாட் எ ஸ்வீட் ஸர்ப்ரைஸ்" என்று 'அக்கூ'ப் பக்ஷியைப் போல் கூவிக் கொண்டு, கண்களால் ஆனந்த பாஷ்பத்தைப் பெருக விட்டு, வண்ணாத்திப் பூச்சியைப் போல் வாசுவை நோக்கிப் பறந்தாள் கீதா.

"ஐயோ கீதா, கையெல்லாம் கரிடீ...கரி, கரி.. ஐயைய்யோ அசடே! சாம்பலை யெல்லாம் என் மேல் வச்சுத் தேச்சுட்டயே" என்று அவஸ்தைப்பட்டான் வாசு.

அதே சமயம், அடுத்தகத்து அலமேலுப் பாட்டியிடம் கீழ்க்கண்டவாறு, தன்னுடைய அபிப்பிராயத்தை வெளியிட்டுக்கொண்டிருந்தாள் அத்தை:

"ஏண்டி அலமேலு! இப்படிக் கூட ஒரு கூச்சம், நாச்சம் இல்லாத பெண் ஒலகத்துலே உண்டோடி! ஐயேம்மா! நீ என்னதான் சொல்லு. இந்தப் பட்டணத்து ஜனங்களே, ஆணுகட்டும், பெண்ணுகட்டும், மகா அவலங்களம்மா!"

உண்மைக் கதை!

ே. எஸ். எஸ். ராகவன்

உண்மைக் கதைகளை வெளியிடுவதில் ஊக்கமுடைய என் தலைமை ஆசிரியர், "பிச்சைக்காரன் கதை ஒன்றைத் திரட்டிக்கொண்டு வா" என்று எனக்குக் கட்டளை இட்டார். அவருடைய கட்டளை எதுவும் கண்டிப்பானது. "ஆகட்டும்" என்றேன் நான். "ஜாக்ரதை! உன் சொந்தக் கற்பனைக் கதை ஏதும் வேண்டியதில்லை. அசல் பிச்சைக்காரன் ஒருவனைக் கண்டு, அவனுடைய அசல் கதையைக் கேட்டு எழுதிக்கொண்டு வா," என்று அவர் மேலும் உத்தரவிட்டார்.

கட்டளையை நிறைவேற்றும் பொருட்டு, தெருத் தெருவாய் அலைந்தேன். சில பிச்சைக்காரர்கள் என்னைக் கண்டு பயந்தோடினார்கள்; வேறு சிலர் முறைத்தார்கள்; இன்னும் சிலர் உளறிக் கொட்டி என் மூளையைக் குழப்பினார்கள்.

தோல்வியை ஒப்புக்கொண்டு பேசாமல் திரும்பி விடுவதா, அல்லது ராபர்ட் ப்ரூஸ் மாதிரி, மறுபடியும் மறுபடியும் முயற்சி செய்வதா என்பதாக, யோசித்துக் கொண்டே நடந்தேன். பாதை ஓரத்தில் ஒருவன் நின்று கொண்டிருந்தான். பாவம், கண் தெரியாதவன் போலிருக்கிறது. பாதையைத் தாண்டுவதற்கு யாருடைய உதவியையாவது வேண்டி நிற்கிறான் என்று நினைத்து, அவன் அருகில் சென்று "நான் கொண்டு விடட்டுமா?" என்று கேட்டேன். அவன் கையில் வைத்திருந்த பாத்திரத்தையும் அவன் நடை உடை பாவனையையும் பார்த்தபோது, எனக்கு அவன் ஒரு 'கிராக்கி' என்றுதான் பட்டது. சமீப அனுபவங்களால் நான் அவசரப்பட விரும்பவில்லை. அவன் கையைப் பிடித்து ஜாக்கிரதையாக சாலையின் மறுபக்கத்தில் கொண்டு போய்ச் சேர்த்தேன். அவனை விடுவதற்கு எனக்கு மனமில்லை. "ஏனப்பா, மிகவும் களைப்பாக இருக்கிறாய் போலிருக்கிறதே? வருகிறாயா, டீ சாப்பிடலாம்?" என்று மிருதுவாகக் கேட்டேன்.

"நீ மகாராஜனாக இருப்பாய் அப்பா! உன் போல் உலகத்தில் எல்லோருமே இருந்தால் இது ஸ்வர்க்கமாக மாறிவிடும்" என்றான் அவன்.

அவனை ஒரு இரானி கடைக்குள் கூட்டிச் சென்றேன். வெண்ணெய் தடவின ரொட்டித் துண்டும், டீயும் 'ஆர்டர்' செய்தேன். நான் கேள்விகள் கேட்பதற்கு முன், அவனே தன் தொழில் சம்பந்தமாகப் பேச ஆரம்பித்துவிட்டான்.

"வருஷக் கணக்காக பிச்சையெடுக்கும் எனக்கு, வாழ்க்கையில் வெறுப்புத் தோன்றி, ஒரொரு சமயம், உயிரை விட்டு விடலாமா என்று தோன்றும். அந்தச் சமயத்தில் இப்படி யாராவது ஒருவர் தோன்றி, வாழ்க்கை முழுவதுமே ஒரு பாலைவனம் அல்ல என்று தோன்றும்படிச் செய்கிறார்கள்" என்று ஆரம்பித்தான்.

நானும் மெதுவாக, அவன் சந்தேகப்படாத விதம் கேள்விகளைப் போட்டு, அவன் வாழ்க்கை வரலாற்றை ஒருவாறு அறிந்துகொண்டேன். சுருக்கமாக அவன் சொன்னது இதுதான்:

பிறக்கும்போதே நான் குருடனாகப் பிறந்தவன்தான். என்னைப் பெற்றெடுத்த தாய் என் துர்ப்பாக்கியத்தினால் மனமுடைந்தோ—அல்லது நான் பாபத்தில் பிறந்து விட்டேன் என்ற பயத்தினாலோ—என்னை ஒரு 'பார்க்'கில் விட்டுவிட்டுப் போய்விட்டாள். யாரோ ஒரு நல்ல மனிதர் என்னை அங்கே கண்டு, ஒரு அநாதை ஆசிரமத்தில் கொண்டு போய் விட்டார். தந்தையும் தாயும் போல் அவர்கள் என்னைக் காப்பாற்றினார்கள்.

ஒரு சக்தியை இழந்தவனுக்கு, இயற்கை வேறு எந்த விதத்திலாவது ஈடு செய்து விடுகிறது. எனக்குப் பார்வையில்லை; ஆனால் ஞாபக சக்தி அசாத்தியம். குழந்தையாக இருந்தபோதே ஒரு தடவை கேட்ட கதையையோ, பாட்டையோ அப்படியே திருப்பிச் சொல்லி விடுவேனாம். கண்ணில்லாதவன் கைகள்தாம் எவ்வளவு நுண்ணறிவு படைத்துவிடுகின்றன! அவன் காதுகள் எவ்வளவு கூர்மையாகி விடுகின்றன! ஸ்பரிசத்தாலேயே நான் பலரை அடையாளம் கண்டு கொள்வேன். காலடிச் சத்தத்திலிருந்தே வருவது யாரென்று சொல்லி விடுவேன். ஒரு விதத்தில் இவைகளே எனக்குச் சத்துருவாக முடிந்தன. என்னுடைய இந்த சக்தியை நம்பி நான் அனாதை விடுதியை விட்டு வெளியே போய் வருவேன். யாருடைய உதவியும் இல்லாமல், நான் சாலையோரமாக நடந்து செல்வேன். ஏன், ஒரு கல்கூட என் கால்களைத் தடுக்கியது கிடையாது. ஒரு நாள் சாயந்திரம் இப்படியும் அப்படியுமாக வழக்கமான தூரத்தைவிட அதிகம் போய்விட்டேன். இதை அறிந்தவுடன், நான் யாரையாவது கேட்டு, விடுதிக்குத் திரும்பவேண்டும் என்று எண்ணினேன். முதலில் கூச்சமாக இருந்தது. இருந்தாலும் வேறு என்ன செய்வது? 'கண் தெரியாத கபோதி' என்று மெதுவாகச் சொன்னேன். யாரோ மகானுபாவன் என் கையைப் பிடித்துக்கொண்டார். 'அனாதை விடுதிக்குப் போகவேண்டும்' என்று சொன்னவுடன், அவர், 'என்னுடன் வா' என்றார். பேசாமல் அவரைப் பின் தொடர்ந்தேன். கொஞ்ச தூரம் போனவுடன் எனக்குச் சந்தேகம் தட்டிற்று. பழகின பாதையாக இல்லை. சீக்கிரத்திலேயே சூது வெளிப்பட்டு விட்டது. எனக்குக் கை கொடுத்து உதவியவன், இம்மாதிரி அங்கஹீனம் அடைந்த அனாதைகளைக் கொண்டு போகும் கூட்டத்தைச் சேர்ந்தவன். அவன் இடத்திற்குப் போய்ச் சேர்ந்ததும் சொன்னான். "நீ சத்தம் சித்தம் போட்டுப் பிரயோசனமில்லை. என்னோடு இருப்பதால் உனக்குக் குறைவு ஒன்றும் இருக்காது. அங்கு போட்ட சாப்பாட்டைவிட நல்ல சாப்பாடு நான் போடுகிறேன். தப்பியோட முயற்சித்தால், அவ்வளவுதான், நீ உயிருடன் இருக்க முடியாது" என்று பயமுறுத்தினான். என் மாதிரி இன்னும் நான்கு பேர் இருந்தார்கள். எல்லாரும் காலையில் எழுந்து கந்தல் துணியை உடுத்திக்கொண்டு, கையில் ஒரு பாத்திரத்துடன் ஜன நடமாட்டமுள்ள இடத்தில் இருக்கவேண்டியது. அந்தக் கிராதகனும் அருகில்தான் இருப்பான். அன்றாடம் வரும் வரும்படியை அவன் எடுத்துக் கொள்வான். ஒரு நாளைக்கு எவ்வளவு கிடைக்கும் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. கண்ணில்லாத கபோதிக்கு இரங்

கிப் பிச்சை போடுகிறவர்களுக்குக் குறைவில்லை. அவர்களுக்கு எங்கே தெரியப் போகிறது என் மனதிலிருக்கும் ஆசை? "ஐயா! எனக்குப் பிச்சை வேண்டாம். என்னை அந்தக் கிராதகன் பிடியிலிருந்து விடுவித்து விடுங்கள். நான் மானமாகப் பிழைக்க விரும்புகிறேன்," என்று சொல்ல என் நெஞ்சம் துடிக்கும். ஆனால் அத்துடன் என் மனதுக்குள் சொல்ல முடியாத கோர சொரூபத்தில் அந்தக் கிராதகன் காட்சி அளிப்பான். பயந்து கொண்டே, 'ஐயா! பிச்சை போடுங்கள்!' என்பதோடு நிறுத்திக் கொள்வேன்.

'இந்த நரகத்திலிருந்து கதி மோக்ஷம் கிடையாதா?' என்று நான் ஏங்கிக் கொண்டிருந்த போதுதான் என் வாழ்வில்—என் அகத்தில்தான்—ஒரு ஒளி தோன்றிற்று. அதுதான் அவள்! அவளும் என் மாதிரி அந்தக் கிராதகனுக்காகப் பிச்சை எடுப்பவள்தான். ஒரு நாள் அவன் எங்கள் இருவரையும் தனியே விட்டு விட்டு, எங்கேயோ போயிருந்தான். நான் என் மனதிலிருந்ததை அவளிடம் சொன்னேன். அவளும் விடுதலைக்காகத் துடித்தாள். நல்ல வேளை, ஈச்வரன் அவள் கண் பார்வையை எடுத்துக் கொள்ளவில்லை. பிச்சை யெடுக்கும் பணத்தில் கொஞ்சம் கொஞ்சமாக எடுத்து வைத்து, அறையின் மூலையில் பதுக்கி வைத்திருந்தாள். ஒரு நாள் கடையிலிருந்து அவள் ஒருகடப்பாறையைவாங்கி ஒளித்து வைத்துக்கொண்டாள். கிராதகனிடம் பணம் சேரச்சேர அவன் அக்கிரமங்களும் அதிகமாக வளர்ந்தன. சில நாள் குடி மயக்கத்தில் எங்களை அடித்துத் துன்புறுத்துவதும் உண்டு. நான் இதற்காக அவனை மனதிற்குள் திட்டிக் கொண்டே இருப்பேன். ஆனால் அவள் இவனுடைய கெட்ட வழக்கத்தைக் கண்டு சந்தோஷம் அடைந்தாள். ஏன், அவனுக்கு மதுபானங்களை வாங்கி வருவதில் அவள் உதவியாகக் கூட இருந்தாள். ஒரு நாள் வழக்கத்தைவிட அதிகமான போதையில் கிராதகன் படுத்து விட்டான். அவளும் நானும் சேர்ந்துகொண்டு, நொடிப்பொழுதில், எங்களை உள்ளே வைத்துப் பூட்டியிருந்த பூட்டை, கடப்பாறையின் உதவியால் உடைத்து விட்டோம்!

விடுதலை! அவ்விடத்தை விட்டு, திக்குப் பார்க்காமல் ஓடினோம். ரயிலேறி வெகு தூரம் பிரயாணம் செய்து விட்டோம். அப்போதே நான் முடிவு செய்துவிட்டேன்.—எனக்குப் புத்துயிர் கொடுத்த அவளையே மணக்கவேண்டுமென்று.

ஒரு இடத்தில் போய் உட்கார்ந்தோம். தைரியத்தை வரவழைத்துக்கொண்டு நான் கேட்டுவிட்டேன், "என்னை நீ கல்யாணம் செய்து கொள்கிறாயா?" என்று.

பதிலுக்கு அவள் அழ ஆரம்பித்து விட்டாள். "அண்ணா! உனக்குக் கண்ணில்லை. கண்ணிருந்தால் என்னோடு ஒரு அடி கூட எடுத்து வைத்திருக்க மாட்டாய். என்னோடு பேசுவதற்குக்கூட சங்கோஜப்படுவாய்! அண்ணா! நான் ஒரு குஷ்டரோகி! அதற்காகத் தான் அந்தக் கிராதகனும் என்னையும் பிடித்து வைத்திருந்தான்!"

உண்மையில் அன்றுதான் என் வாழ்க்கையில் இருள் படர்ந்தது. என் நெஞ்சில் ஒரு பாராங்கல்லைத் தூக்கிப் போட்டது போலிருந்தது.

நான் ஏதோ சொல்லவாயெடுத்தேன். ஆனால் விம்மும் சத்தம்

எட்டிப் போய்க் கொண்டேயிருந்தது. அதற்குப் பிறகு அந்தப் பெண்ணை நான் சந்திக்கவேயில்லை.

அவன் கதை எவ்வளவு உருக்கமாயிருந்தது என்பதை இதைப் படிக்கிறவர்களுக்கு ஒருக்கால் தெரியாது. அதை நேரில் கேட்டபோது என் கண்ணில் தாரை தாரையாக நீர் வந்ததைப் பார்த்து, அந்த இரானிக் கடைக்காரனே, "என்ன?" என்று கேட்க ஆரம்பித்து விட்டான்.

* * *

எங்கள் பத்திரிகையின் அடுத்த இதழில், நான் திரட்டிய உண்மைக் கதை வெளியாயிற்று. கையில் ஒரு பிரதியுடன், நான் வெளியே போய்க் கொண்டிருந்தேன்—ஒருக்கால் அந்தப் பிச்சைக்காரன் மறுபடியும் கண்ணில் தென்படக் கூடும் என்ற எண்ணத்துடன். நான் நினைத்தது வீணாகவில்லை. அவன் எதிரே வந்து கொண்டிருந்தான்.

ஆனால் இதென்ன! அவன் இந்தக் கூட்டத்திலும் என்னை அடையாளம் புரிந்துகொண்டு விட்டானே! அவன் உணர்ச்சிகள் மிகவும் கூர்மையாகத்தான் இருக்கவேண்டும்.

"பேஷ்! கதை அபாரம். நான் இரண்டு தடவை படித்தாகி விட்டது!" என்றதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என் அதிர்ச்சியைக் கண்டதும் அவன் சிரித்துக் கொண்டே, "பதறாதே, தம்பி! நேரமிருந்தால் என்னுடன் வா!" என்றான். ஏதோ ஒரு மந்திர சக்தியால் இழுக்கப்பட்டவன் போல், அவனைப் பின் தொடர்ந்தேன். எலெக்டிரிக் ரயிலில் ஏறி அந்தேரியில் இறங்கினோம். பத்து நிமிஷம் நடந்த பிறகு, ஒரு வீட்டிற்குப் போய், ஸ்வாதீனமாக மணியை அடித்தான். ஒரு பெண் கதவைத் திறந்தாள். "என்ன அப்பா, இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டீர்களே?" என்று அவள் கேட்டாள்.

"இன்றைக்கு விடுமுறை எடுத்துக் கொண்டிருக்கிறேன்," என்று அவன் சொல்லி விட்டு, எங்கள் பத்திரிகைப் பிரதி ஒன்றை அவள் முன் போட்டான்.

"அடாடா, நீ தப்பான தொழிலையல்லவா எடுத்துக்கொண்டிருக்கிறாய்! கதை சொல்லுவதில் உனக்கு உள்ள திறமைக்கு, நீ ஒரு கதாசிரியனாக அல்லவா இருக்க வேணும்!" என்றேன் நான்.

"தம்பி! எவ்வளவு பேர் கதை எழுதி சம்பாதித்து சொந்த வீட்டில் சுதந்திரமாக இருக்கிறார்கள் சொல் பார்க்கலாம்," என்று கேட்டு விட்டு, பெருமையாகத் தன்னைச் சுற்றிப் பார்த்துக் கொண்டான்.

அவன் ஒரு கலைஞன் மட்டும் அல்ல, பொருளாதார அறிஞன் கூட என்பது எனக்குத் தெரிந்தது.

அன்றும் இன்றும்

1903 தாயின் ஆசி :

ஆண்டொரு மகவு பெற்று
ஆயிரம் பிறை காணடியோ!

1953 தாயின் ஆசி :

முத்துப்போ லிருபிள்ளை பெற்றே
முற்றுப்புள்ளி வைத்திடடி! —தி. கோ. அ.

தமிழ்க் குடிகள் இல்லாத பகுதியே இல்லையெனச் சொல்லி விடலாம்.

வாணிபம் நிறைந்த இந்நகரில், வளமான செல்வந்தர்கள் தான் வாழ்கிறார்கள் என்பது, வெளியேயுள்ளவர்களது எண்ணமாக இருக்கலாம். இதற்கு மாறாக, பம்பாய், ஏழைகளும் மலிந்த நகரம் என்பதுபற்றி ஆச்சரியப்படத் தேவையில்லை. இவ்விரு கூட்டத்தினருக்கும் இடையினராகவுள்ள, நடுத்தர வகுப்பினரும், பெரும் பான்மையோர் உள்ளனர். சமுதாய வாழ்வில், இம்மூன்று வகுப்பாளரும், சரிசமமான கலப்படமாக விரவி நிற்பது, பம்பாய்க்குப் பிறிதாகவுள்ள பட்டணங்களிலே பார்க்க முடியாத மாறுதல்.

வியாபாரத் தலங்களிலும், சர்க்கார் காரியாலயங்களிலும் முக்கிய ஸ்தானம் வகிக்கும் தமிழ் உத்தியோகஸ்தர்கள், ஒரு சிலரே. ஆனல், பத்திரிகைத் துறையில், முழுக்க முழுக்க இவர்கள் ஆதிக்கம் தான். வணிகர்களாக விளங்குபவர்கள், விரல்விட்டு எண்ணக்கூடிய தொகையினரே. பொதுவாகப் பார்க்குமிடத்து, தமிழன் இல்லாத அலுவல்துறை ஏதுமே இல்லை, பம்பாயிலே. இவை வருமானத் துறையிலே உள்ள நிலை.

வாழ்க்கைத் துறையை எடுத்துக் கொண்டால், என்றைக் கேனும் பிறந்த நாட்டிற்குத் திரும்பவேண்டியவன்தானே என்ற பிடிப்பற்ற மனப்பான்மையாலோ, அல்லது எதற்கும் பணம் வேண்டாமா என்ற பசையற்ற செல்வநிலை காரணமாகவோ, பம்பாயில், சொந்த வீட்டில் வாழும் தமிழ் மக்கள் மிகமிகக் குறைவு.

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்பது பழமொழி. தமிழகத்தின் எல்லைகடந்து, பம்பாய் வந்துள்ள தமிழர்கள், சம்பளம் தேடி வந்தவர்கள்; செல்வத்தை சேர்த்துவைக்கும் நிலை அவர்களுக்கு இல்லை.

நிலையற்ற பொருளாதாரச் சூழ்நிலையிலும், யந்திர வாழ்க்கையிலும்கூட, தமிழ் மக்கள், தங்கள் மொழி, கலாசாரம் பண்பாடு முதலியவற்றை மறக்கவே இல்லை என்பது பெருமைப் படக்கூடிய விஷயம். ஒரே இடத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பஜனை மடங்களின் பெருக்கு, இவர்களது பக்திப் பெருக்குக்கு எடுத்துக் காட்டு போலும். தமிழர்களின் மத்திய கேந்திரமான மாதுங்காவிலும், மற்றுமுள்ள சுற்றுப்பிரதேசங்களிலும், மற்ற எந்த ஸ்தாபனங்களும் இல்லாதபோனலும், பஜனை மடங்கள் மாத்திரம் இருக்கத் தவறுவதே இல்லை. புராணப் பிரசங்கங்கள், கடவுளது விழாக்கள், இன்று தமிழகத்திலே ஒருக்கால் குறைந்திருப்பினும், பம்பாயில் நாளுக்கு நாள் வளர்ந்துவருவது, இந்த பக்திப் பெருக்குக்கு எடுத்துக் காட்டு.

கூட்டுறவுப் பண்டக சாலைகள், உணவு விடுதிகள், வீடுகட்டும் ஸ்தாபனங்கள், சங்கீதப்பள்ளிகள், நாட்டிய மன்றங்கள், உடற் பயிற்சிக் கழகங்கள், கேளிக்கைக் கூடங்கள், சங்கீத சபைகள்,

தமிழ், இந்தி, வடமொழி வளர்க்கும் இலக்கிய சங்கங்கள், நாடகக் கழகங்கள் முதலியன, இவர்கள் செய்துகொண்டுள்ள சாதனைகள்.

உடலுக்கும் உள்ளத்திற்கும் உணவளிக்கும் முறையில், முன் சொன்னவைகளைத் தவிர, அறிவை வளர்க்கும் பல ஆரம்பப் பள்ளிகளும், இரு உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில், தேசீய ஸ்தாபனமான காங்கிரஸ் மகா சபைக்கு ஆதரவுதந்து, அதுவும் ஒரு தமிழரையே சட்ட சபைக்கு அனுப்பி வைத்தது, பம்பாய்த் தமிழர்கள் பெருமை கொள்ளக்கூடிய விஷயம்.

பல நூறு மைல்கள், தமிழ் நாட்டினின்று வாழும் பம்பாய்த் தமிழ்மக்கள், அந்தப் புதுச் சூழ்நிலையிலும், தங்களுக்குச் சாதகமான முறையில் வாழ்வை அமைத்துக்கொண்டு வாழ்வது, நல்ல முயற்சி தான். ஆயினும், ஒரேயடியாய் தனித்து நின்று வாழாமல், தமிழரல்லாதாருடனும் ஊடுருவி வாழ்ந்து, தமிழ்க் குரலை, தமிழ் நாட்டினரது உயர் வாழ்வின் உயிரை அவர்கள் அறிந்து பெருமைதர, பம்பாய்த் தமிழர்கள் செயல் புரியலாம். அதுதான் அவர்கள், பிறந்த பொன்னாட்டிற்குச் சேர்த்து வைக்கக் கூடிய பெருமை.

Telephone: 7328

Please Visit

TAILORING HOUSE

(South Indian Boarding House)

Connaught Circus,

NEW DELHI

★

PROMPT SERVICE
NEAT EXECUTION
MODERATE CHARGES

K. NARAYANAN

Tailor Master

ஸ்ரீ மஹாலெக்ஷ்மி ஸ்டோர்

52, கான் மார்க்கெட், புது டெல்லி.

குறைந்த விலையில், தாமத மற்ற சேவை. பலசரக்குகள் மட்டுமின்றி, பத்திரிகைகள், வெண்ணை, காப்பி பௌடர், உரல், அம்மி முதலிய சாமான்கள் சகாயமாய் எங்களிடம் கிடைக்கும்.

குறிப்பு: நாங்கள் நடத்தும் Mess இலிருந்து எடுப்பு சாப்பாடு சப்ளை செய்கிறோம்.

கலியாணம் முதலிய விசேஷங்களை, மளிகை சாமான்களுடன் வந்து நடத்திக் கொடுக்கிறோம்.

புரட்சிக் கவி பாரதி தாஸன்

ப. ந. தியாகராஜன்
(நிர்வாக ஆசிரியர் : "ஜோதி", கல்கத்தா)

புரட்சிக் கவி பாரதி தாஸன் அவர்கள், பாரதியின் வாரிசு; பாரதியார் புதுவையில் மறைவாக வாழ்ந்திருந்த காலத்தில், அவருடன் தொடர்பு கொண்டவர்; பாரதியின் அருமைச் சிடர்; இவருக்கு பாரதி யிடமுள்ள மதிப்பு அபாரம். பாரதியின் வழி நின்று, தமிழன்னைக்குத் தொண்டாற்றி வருகிறார்.

கவிஞர் பாரதி தாஸனின் இயற்பெயர் கனக-சுப்பு ரத்தனம். சுதந்திர மோகமுடைய கனக-சுப்புரத்தனம், பாரதியிடம் தமக்குள்ள அபார அன்பின் காரணமாகவே பாரதி தாஸனாக இருக்கிறார். இவர் குழந்தைப் பருவமுதலே, கவியுள்ளம் படைத்தவர். இவருடைய கவிதை ஆர்வத்தைக் கண்டு, உற்சாகமூட்டி, தமிழுலகுக்குக் கவியாக அறிமுகப்படுத்தியவர் பாரதியார். இவருடைய முதற்கவி, பாரதியாராலேயே "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் கவிதா மண்டலத்தைச் சேர்ந்த—கனக-சுப்பு ரத்தனம் எழுதியது" என்றெழுதப் பட்டு "சுதேசமித்திரன்" இதழுக்கு அனுப்பப்பட்டதாம். இவருடைய மேதையும், கவிதா சக்தியும் பாரதியாராலேயே புகழப்பட்டன.

கவிஞர் பாரதிதாஸனுடைய கவிகளில், பாரதியாரின் எதிரொலியைக் காணலாம். இவருடைய பாடல்களில் பாரதி பாடல்களைப் போன்ற துள்ளிக் குதிக்கும் சந்தம், ஜீவனுள்ள சொற்களின் பின்னல், உணர்ச்சி பெற்ற வேகம், இவையெல்லாம் பொருந்தியிருக்கின்றன. பாரதி தாஸனுடைய கவிதைகளில் சிலவற்றைப் படிக்கும் பொழுது, "இவை பாரதியின் கவிதைகளோ" என்றுகூட சந்தேகம் உண்டாகிறது. அவ்வளவு அழகாக பாரதியாரின் கவிகளைப் போலவே சொல்லழகு, கருத்தில் மின்வெட்டு முதலியன கவிகளில் பிரகாசிக்கின்றன. தன்னுள்ளத்தில் உண்டாகும் உணர்ச்சிகளை, தன் சிந்தனையில் உதிக்கும் மின்வெட்டுகளை, தமிழ் மொழியில் ஆவேசக் கவிகளாக அமைத்திருக்கிறார் கவிஞர் பாரதி தாஸன் இவருடைய கவிகளில் புதுமணம் வீசுகிறது; புரட்சிக் கொள்கைகள் நிறைந்திருக்கின்றன.

பாரதி தாஸனுடைய "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" என்ற காவியம் படிக்கப் படிக்கத் திவட்டாததொன்று. மக்களிடத்தில் ஏகாதிபத்ய ஆட்சி செலுத்தும் மூடக் கொள்கைகளை, சாட்டையடி அடிக்கிறார் இக்காவியத்தில்.

வடமொழி "பில்கணிய"த்தைத் தழுவி, இவர் எழுதியிருக்கும் "புரட்சிக் கவி" என்ற காவியம், தமிழர்களின் பொதுவுடைமைச் சொத்து. இதை அழியாமல் பாதுகாப்பது தமிழர்களின் கடமை.

நமது சமூகத்தில் பாய்ந்து புரையோடிப் போயிருக்கும் மூட நம்பிக்கைகளைப் பற்றி, இவர் பாடியிருக்கும் பாடல்கள் அநேகம். இந்த மூடநம்பிக்கைகளைக் களைந்தெறிய வேண்டுமென்பது இவருடைய அவா. நாம் உயர்ந்த நிலையிலிருந்து வழுக்கி வீழ்ந்திருப்பதற்கு முக்கிய மான காரணம், வெகு நாட்களாக நமது ரத்தத்தில் ஊறிப்போன மூடக் கொள்கைகளே. நமது புகழ்க் கோட்டை தகர்ந்ததும் இவைகளினாலேதான். இதையே கவிஞர், அடிக்கடி சுட்டிக் காண் பிக்கிறார். கணவனை இழந்தவர்கள் என்று, பெண்களில் சிலரை சமூகம் புறக்கணித்து வைப்பதை, கவிஞர் வெறுக்கிறார். இக் கைம்பெண்களைக் காணுந்தோறும் கவிஞரின் மனம் கொதிப்படை கிறது. அந்த இதயக் கொதிப்பு,

> "நாடப் படாதென்று நீக்கி வைத்தார்கள்
> நலஞ்செய் நறுங்கனியை—கெட்ட
> நஞ்சென்று சொல்லிவைத்தார் எழில்வீணை
> நரம்புதரும் தொனியை."

என்ற பாடலாக வெளிப்படுகிறது.

> "கைம்மை எனக்கூறி—அப்பெரும்
> கையினிற் கூர் வேலால்
> நம்மினப் பெண்குலத்தின்—இதய
> நடுவிற் பாய்ச்சுகின்றோம்.
> செம்மை நிலையறியோம்—பெண்களின்
> சிந்தையை வாட்டுகின்றோம்;
> இம்மை இன்பம் வேண்டல்—உயிரின்
> இயற்கை என்றறியோம்."

என்று கைம்பெண்களுக் கிழைக்கப்படும் அநீதியைக் கண்டு, மனம் புண்படுகிறார்.

நமது சமூகத்தில் இன்று என்ன நடக்கிறது? ஆணுக்கொரு நீதி; பெண்ணுக்கொரு நீதி. மனைவியை இழந்த ஒருவன், என்ன வயதானாலும் சரி, வேறொரு இளம் பெண்ணை மணந்துகொண்டு சுக வாழ்வு வாழலாம். ஆனால் கணவனை இழந்த ஒரு இளம் பெண், தன் வாழ்க்கை முழுதும் துறவியாகவே கழிக்கவேண்டும். உலகில் தன்னிஷ்டம்போல் வாழ்வதற்கு அவளுக்கு உரிமையில்லை. சமூகம் அவளை நஞ்செனா ஒதுக்கிவிடுகிறது. இயற்கையோடு அவள், தன் வாழ்நாள் முழுவதும் போராடி வெற்றிகொள்ளல் வேண்டும். போராட்டத்தில் தோல்வியுற்றால் "வழுக்கி விழுந்தவள்" என்று அவளை சமூகம் உடனே விலக்கிவிடுகிறது. பிறகு அவளுக்கு அடைக்கலம் அளிப்பது கடலோ, குளமோதான். இந்தச் செயலைத் தான் கவிஞர் கண்டிக்கிறார்.

> "துணைவி இறந்தபின் வேறு துணைவியைத்
> தேடுமோர் ஆடவன்போல்—பெண்ணும்
> துணைவன் இறந்தபின் வேறு துணைதேடச்
> சொல்லிடுவோம் புவிமேல்."

V3818

துணைவி இறந்தபின் வேறு மணம் செய்துகொள்ளும் ஆடவனைப் போல், துணைவர் இறந்தபின் வேறு மணம் செய்துகொள்ள, பெண் களுக்கும் உரிமையுண்டு என்று வாதாடுகிறார் கவி.

தமிழ் இலக்கியத் துறையிலே, பாரதியார் தமக்கென ஒரு தனி வழியை உண்டாக்கி, புரட்சி யுண்டுபண்ணிவிட்டார். தம் உள்ளக் கருத்துக்களை அதிகப் படிப்பில்லாத ஏழைப் பாட்டாளி மக்கள்கூட புரிந்துகொள்ளும்படி, எளிய அழகிய தமிழ் நடையில் கவிதைக ளாகச்செய்து வெற்றிகொண்டார். இனி, இன்றையத் தமிழ்க் கவிஞர் கள், அவருடைய வழியிலேதான் செல்லவேண்டும். அப்பொழுது தான், அவர்களுக்கு வெற்றி கிட்டும். எளிய நடையிலே கவிதை களைப் புனைந்தால்தான், யாவரும் படித்து இன்புறமுடியும். கவியில் வழக்கொழிந்த சொற்களை உபயோகித்து, வார்த்தைகளைக்கொண்டு அம்மானை யாடுவதில் பயனில்லை. இதையேதான் பாரதி தாஸனும் கூறுகிறார் :

" எளியநடையில் தமிழ்நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றிடவும் வேண்டும்
வெளியுலகில், சிந்தனையில் புதிது புதிதாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெலாங் கண்டு
தெளியுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்.
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்."

இது பாரதி தாஸனின் உள்ளத்திலிருந்து உதித்த ஆசை. இது நிறைவேற வேண்டும்.

ஒரு கவிஞன், தன் உள்ளத்தில் புதைந்து கிடக்கும் எண்ணங் களுக்குத்தான், கவி வடிவில் உருவமளிக்கிறான். கவிஞனுடைய உள்ளக் கருத்துகள்தான் அவனுடைய சிருஷ்டிகளில் ஒளிவிடும். இதுதான் இயற்கை. ஆகவே பாரதி தாஸன் அவர்களுடைய முற்போக்கான—புரட்சிகரமான கொள்கைகளில் சில, நமது கருத் துக்குப் புறம்பானதாக இருக்கலாம். ஆனால் நாம் கொள்கைகளை அலாதியாக ஒதுக்கிவிட்டு, கவியை ரஸிக்கவேண்டும்; கவிதைப் பண்பை ரஸிக்கவேண்டும். அப்படி ரஸிகக் கண்கொண்டு நோக்கி னால், பாரதி தாஸன் சிறந்த கவிஞர் என்பது புலனாகும்.

✲

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழுக்கு வாய்த் திருப்பது குறித்து, ஆந்திரனாகிய நான் பொறாமைப்படு கிறேன்; இந்தக் காவியங்களுக்கு ஒப்பானவை தெலுங்கு இலக்கியத்தில் இல்லை. மொழி பெயர்ப்பிலேயே இவை நெஞ்சை அள்ளுகின்றன; அப்படியெனில், மூலத்தில் எப்படி இருக்குமோ? —ஸி. ஆர். ரெட்டி.

சேவையில் இன்பம்

தி. கோ. அனந்தஸ்வாமி

நாற்பத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், எங்கள் அகத்திற்கு, ஆனந்தம் என்றொரு தெய்வீகப் பெண் வந்தார். அந்த அம்மையார் எனக்கு,

தன்னைமறந் தின்பமுற வெண்ணிலாவே ஒரு
தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலாவே!

என்று சொல்லிக் கொடுத்தார். அது அப்பொழுது அம்மையார் எனக்களித்த மந்திரம் என்று, இப்பொழுது தோன்றுகிறது. பின்னர் நான், திருவனந்தபுரம் சென்றிருந்த சமயம், ஒருவர் எனக்கு அம்மையாரின் வார்த்தைகளை மீண்டும் ஞாபகமூட்டினார். அப்போது பள்ளிக்கூடம் ஒன்றில் தமிழ்ப்பண்டிதராய் இருந்த, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை எழுதிய செய்யுள் ஒன்றைப் படிக்கலானேன். அதில்

தன் சுகம் பாராது, செய்கடன் செய்கவே!
தானே சுகம் வரும், செய்கடன் செய்கவே!

என்னும் அடிகள் என் மனதில் பதிந்தன.

பிள்ளைப்பிராயம் முதலே, ஓரளவு தன்னலம் மறந்து பிறர் நலம் நினைந்து, ஊருக்குழைத்து இன்பம் ஈட்டுவதே போதும், பொது ஜன சேவையே பொன்போன்ற மருந்து என்று, எனக்கு காணக் கிடைத்தது.

“ஊருக்குழைத்த பித்தா! உன் வீட்டை மறந்தனையோ?”

என ஏசிய உற்றார் உறவினர்—தான் என்றும், தனதென்றும் ஜபம் செய்யும் குழாம்—இத்யாதிகள் எத்தனையோ பேர்கள் உண்டு......

முப்பது வருஷங்களுக்குமுன் காடாறு மாதம் நாடாறு மாதமாய்க் காலங்கழித்த சமயம். வேனிற்காலம் சிம்லாவிலும், பனி காலம் டில்லியிலும் வாழ்ந்த காலம். சிம்லாவில் இரு தென்னாட்டுப் பெரியோர், நாடகம் போட்டு நம்மவரை மகிழ்விக்க எண்ணினர். தொடர்ந்து ஒத்திகைகள் நடந்தன. முன்னாளில் தபால் வண்டிகளுக்கு மாடுகள் மாற்றப்படுவதுபோல், நடிகர்களும் மாறினர். இராப் பகல் ஓய்வு ஒழிவில்லாத வேலை. எங்கள் கலைத்திறனோ சாதாரணம். ஆர்வமோ அதிகம். ஆடவர்கள் கூத்தாட, அணங்குகள் புன்முறுவல் பூக்க, ஆறும் மாதம் நாடகம் இன்னிசையுடன் நடந்தேறியது. எங்கள் நாடகம் கண்டு ஒரு சிலராவது மகிழ்ந்தனர் என்பதே, எங்கள் வேலைக்குக் கூலி. அன்று தன்னை மறந்து கூத்தாடியதாலன்றோ இன்று தலைநகரில் தமிழ்மணம் கமழ்கிறது!

பொதுஜன சேவை, சிலவேளை மனப்புண்ணுக்கு இடம் தரும். புண்ணும் நாளடைவில் ஆறும். 1932ம் ஆண்டு சிம்லாவில் ஒரே அமளி. தென்னிந்தியக் கழகத்தில் இரு கட்சிகள். ஒரு சாரார் "இஞ்சிதான் கழகத்தின் உடலுக்கு நலம் தரும்" என முழங்கினர். "தலைவரை நீக்குவது சாலவும் நன்று" என அறைகூவினர். படை திரட்டினர். தலைவர் கட்சியினரும் போருக்கு ஆயத்தமாயினர். விளைவு என்ன? தென்னிந்தியர் அனைவரும் கழகத்தின் உறுப்பினராயினர். கழகத்தின் விசேஷக் கூட்டம் நடைபெற்றது. போஷகர் ஸர். டி. விஜயராகவாச்சாரியார் தலைமை வகித்தனர் இஞ்சிக் கூட்டத்தினர் இரைச்சலிட்டு வெளியேறினர். எஞ்சி நின்றோர் உறுமினர். இஞ்சி நலமே செய்தது. போஷகர் அளித்த இனிப்புடன் கூடி, அது "முரப்பா"வாகி கழகத்தை வலுவாக்கியது. இருதரப்பினரும் சண்டையிட்டாலும், தம்மை மறந்து பிறர்க்காகவே உழைத்தனர். காரியதரிசியான எனக்கு, பொதுஜன சேவை, அந்த ஆண்டு, இன்னல் காட்டி இன்பம் ஊட்டியது.

1947-48ல் நான் 'அக்ஞாதவாசம்' செய்ய நேர்ந்தது. நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளி மக்களுக்கு, வசதிகள் செய்து கொடுப்பதற்காக நிறுவப்பட்ட ஒரு ஸ்தாபனத்தில் எனக்கு வேலை. பேசும் படங்கள் வாயிலாக, அவர்களுக்கு கல்வியறிவு ஊட்டவும், அவர்களது பெண்டு பிள்ளைகளுக்கு சுகாதார வாழ்க்கையைக் கற்பிக்கவும் முயற்சிகள் நடந்தன. நீல வானத்தடியில் ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும், பேசும் படங்களில் திரையில் தோன்றுவோருடன் ஒருமைப்பட்டு, அழுவதையும் சிரிப்பதையும் காண்பது ஒரு இன்பக்காட்சி. படம் காணவந்தோர், இடைவேளைகளில் எங்கள் ஸ்தாபனத்தைச் சார்ந்த சகோதரிகள் அளித்த தேநீரை அருந்தி, சுண்டலை அவாவுடன் தின்றது, ஒரு மறக்கமுடியாத சம்பவம். உடம்பில் கரி, உடுப்பில் மாசு; ஆயினும் உள்ளத்தில் களங்கமற்ற களிப்பு! இத்தகைய தூய இன்பம், மாளிகைகளில் காணக்கிடைக்குமா?

1950ம் ஆண்டின் துவக்கத்தில், அன்று காந்தியடிகள் நினைவு நாள். டால்கடோரா ஹரிஜன விடுதிகளினிடையே, ஒரு கூட்டுறவுக் கடை நிறுவுமாறு ஒரு அம்மையாரின் 'ஆக்ஞை' பிறந்தது. என் முயற்சி திருவினையாக்கியது. முதலில் பெரும் துன்பங்களைக் கண்டேன். சில எதிரிகளும் ஏற்பட்டனர். உழைப்பவர் இரண்டு மூன்று பேர். பயனடைபவர் பலர். அங்கத்தினரில் பலர் அறிவிலிகள். எதிரிகளின் பசப்பு வார்த்தைகளில் ஏமாந்தவர். இப்போதோ சங்கத்தின் கடையில், பாலர் முதல் கிழவர் வரை, அனைவரும் பண்டங்கள் வாங்கி மகிழ்கின்றனர். அவர்களுடைய முகத்தில் தோன்றும் பெருமிதக் குறிதான் என்னே!

நம்மிடையே பொதுஜன ஊழியர் பலர் உளர். பதவி வேட்டையில் ஈடுபடாமல், புகழை நாடாமல், தன்னலம் மறந்த தியாகிகள்

உளர். தம் கஷ்டங்கள் அனைத்தையும் சேவையில் மறக்கும் வீரர் உளர். ஜாதி மதம் பாராது பணியாற்றுவோரும் உளர். எழுத்தறிவிக்கும் இறைவன் போன்று, அநேகரைத் தாம் உயர்த்திவிட்டு தாம் நின்ற நிலையிலேயே இருப்போர் உளர். அவர்கள் மனக்கண்ணால் காண்பதெல்லாம் "அன்பே சிவம்" என்ற சீரிய தத்துவமே.

"கண்டவர் விண்டிலர்" என்று முக்தர்களைப்பற்றி கூறுவதுண்டு. சேவையின் இன்பத்தை, தானே கண்டுதான் அறியவேண்டும். ஆயினும் இந்த இன்பம் கண்டோர், விண்டதுண்டு. என் சொந்த அனுபவமும் இதுவே.

"தமிழுக்கும் பொதுஜன சேவைக்கும் என்ன தொடர்போ? ஆர்வத்தில் ஆசிரியரும் எல்லை மறந்தனரோ?" என ஐயுறுவோர் சிலர். தமிழனின் கலாசாரம், தொண்டு செய்தல். தமிழ்ப் பண்பின் அடிப்படை "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கொள்கை. பிறர்நலம் காத்தலே தமிழ்த்தாயின் மரபு. பொதுஜன சேவையே நந்தாவிளக்கு. அதன் சுடரில் விட்டில் போல் விழுவதே பேரின்பம்.

BY APPOINTMENT TO
DR. RAJENDRA PRASAD
PRESIDENT, REPUBLIC OF INDIA

BLISS & COTTON

DISPENSING & FAMILY CHEMISTS
12-E, CONNAUGHT PLACE
NEW DELHI
PHONE: 7176

FOR ALL
MEDICINAL & TOILET
REQUIREMENTS

ஆசாபாசம்

"அழகன்"

"இமயமலையின் உயரமென்ன?" என்று, பூகோள வாத்தியார் கேட்டார். வேலாயுதம் விழித்தான். "பெஞ்சி மேலே நின்னு உன் உயரத்தைக் காட்டு" என்றார் வாத்தியார். வேலாயுதம், தன் உயரத்தைக் காட்டுவதற்கு வருந்தவில்லை, தன் கிழிசல் வேட்டியைக் காட்ட வேண்டுமே என்றுதான் வருந்தினான். கணித வாத்தியார், நாலு குட்டு எண்ணிக் குட்டினார். தமிழ் வகுப்பில், வல்லோசை மிகுந்த வசவுகள். இங்கிலீஷ் வகுப்பில், இங்கிலீஷ் வசவுகள்.

கடைசிக்கிளாஸ், சரித்திரம். சரித்திர காலத்துக்கு முந்தைய காலத்தவர் போல் தோன்றிய சரித்திர வாத்தியார், கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டு, "தாஜ்மஹாலைக் கட்டியவர் யார்?" என்று கேள்வி கேட்டார். அப்போது வேலாயுதம், தான் வசிக்கும் சிறு வீட்டைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தான்.

வீடு மிகச் சிறியது. வெளிச்சமும் காற்றும் எட்டிப் பார்க்கப் பயப்படும் வீடு. ஓயாத வயிற்று வலியுடன் முனகிக் கொண்டிருக்கும் தாயார். தகப்பனார் ஆயுர்வேத வைத்தியர். வரும்படி நாடி அசதி. துடுக்காகப் பேசும் அண்ணன். மணிப்பயல் அம்பி. தங்கத்துக்கு ஒப்பான தங்கை. இவர்களோடு, தரித்திரம் ஒட்டுக் குடித்தனம். "அடேய் கழுதை, உன்னைத்தான் கேட்கிறேன். தாஜ்மஹாலைக் கட்டியவர் பெயர் என்ன?" என்று, வாத்தியார் மறுபடியும் கேட்டார்.

"ஹுமாயூன் சக்கரவர்த்தி, ஸார்!"

"இடியட் ஏறு, பெஞ்சு மேலே."

கிளாஸ் முழுவதும் ஒரே ஆரவாரம்! காரணம், வேலாயதம் ஏற்கனவே பெஞ்சி மேல்தான் நின்று கொண்டிருந்தான். வாத்தியாரும்கூடச் சேர்ந்து சிரித்தார். வேலாயுதமோ கண்ணீர் வடித்தான். அழுக்குச் சட்டையின் நுனியால் கண்ணீரைத் துடைத்துக் கொண்டான்.

கணகணவென்று மணியடித்தது. வேலாயுதம் வேகமாக மூன்றாம் வகுப்புக்குச் சென்று, தம்பியைக் கூட்டிக் கொண்டான். அண்ணனும் தம்பியும் கைகோத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார்கள். போகும் பாதையில், வேலாயுதம், தம்படி நாணயம் ஒன்றைக் கண்டெடுத்தான். வீட்டுக்குப் போனதும், "தங்கச்சி இந்தா ஒரு தம்படி இனும். மிட்டாய் வாங்கித் தின்னு" என்று தங்கையிடம் அதைக் கொடுத்தான். "தத்துப் பிள்ளை தம்படி கொடுக்குது டோய்" என்று அவள் கூத்தாடினாள்.

"என்ன தத்துப்பித்துன்னு உளர்றே?"

"அண்ணா, நீ தத்துப் பிள்ளை! தெரியுமா?"

"அப்படீன்னா?"

"அம்மாவும் அப்பாவும் சொல்லிக்கிட்டாங்க—நீ தத்துப் பிள்ளையாம்."

வேலாயுதத்துக்கு ஒன்றும் புரியவில்லை. "வேலாயுதம், என் கண்ணே" என்று அவனைத் தாயார் கட்டிக் கொண்டாள். "வேலா

யுதம் அதிர்ஷ்டசாலிதான்," என்றார் தகப்பனார்.

"ஆமாம்பா! வாப்போ ஒரு தம்படி கண்டெடுத்தேன்" என்றான் வேலாயுதம். தகப்பனார் சிரித்தார். ஆனால் தாயார் சிரிக்கவில்லை. வேலாயுதத்தை இறுக அணைத்துக்கொண்டு, விம்மி விம்மி அழுதாள். வேலாயுதத்துக்கும் அழுகை வந்துவிட்டது.

"ஏம்மா அழறே?" என்று கேட்டான். தகப்பனார் கோபித்துக் கொண்டார். "ஏ உன்னைத்தானே! ஏன் அளறே? சும்மா இருக்க மாட்டே? வேலாயுதம்! தெருவிலே போய் விளையாடு போ."

வேலாயுதம் தெருவுக்குப் போனான். ஆனால் விளையாடவில்லை. அண்ணன் எங்கே என்று தேடினான். "அண்ணா, உங்கிட்டே ஒரு பேச்சுப் பேசணும்," என்றான்.

"தத்துப்பிள்ளை டோ டோ!"

"அப்படியின்னா என்ன அண்ணா?"

"பட்டணத்துலே சரவண முதலியார்னு நமக்கு ஒரு சித்தப்பா இருக்காரும். அவர் ரொம்ப பணக்காரரும். ஆனா அவருக்குக் குழந்தைக இல்லையாம். அதனாலே, அவர் உன்னை பிள்ளையா வச்சுக்கிடறேன்னு சொல்றாராம்."

"இதுக்குத்தான் தத்துப் பிள்ளைன்னு பேரா?"

"ஆமாம். தத்துப் பிள்ளைன்னா என்ன? சொத்துப் பிள்ளைன்னு அருத்தம். அவரோடு சொத்தெல்லாம் உனக்குக் கிடைக்குமாம். அவுங்ககிட்டே ஒரு மோட்டார் கூட இருக்குதாமே?"

"நல்லதாப் போச்சு. சட்டுப்புட்டுன சொத்து, மோட்டார் எல்லாம், இங்கே வந்துடுச்சுன்னா, நாம் எல்லாம் ஷோக்கா இருக்கலாமே? அதுக்கு ஏன் அம்மா அளுவணும்?"

"போடா பைத்தியம், நீ அவுங்க வீட்டுலேயேதான் இருக்கணும். தத்துப் பிள்ளைன்னா அவுங்க வீட்டுப் பிள்ளைன்னு அருத்தம்."

"அப்படின்னா நான் அங்கே போகப் போறதில்லே."

"உன்னை தத்துக் கொடுக்கணும்னு நம்ம அப்பா என்ன பாடு படறாரு?"

"என்னை அப்பாவுக்குப் பிடிக்கலையா?"

"அப்பாவுக்கு இருக்கற கடனையெல்லாம் சித்தப்பா அடைக்கிறாராம்" என்று, அண்ணன் தம்பிக்கு, விஷயங்களை விளக்கிச் சொன்னான்.

"நம்ப சித்தப்பாவுக்குப் பிள்ளையில்லாட்டா என்ன?" என்று, வேலாயுதம் இன்னொரு கேள்வி கேட்டான்.

"ஓ! அது உனக்குத் தெரியாது? நான் ஒரு கதை படிச்சேன். அதிலே சொல்லி இருக்குது. 'புத்'துன்னு ஒரு நரகம் இருக்குதாம். பிள்ளையில்லாதவங்க அந்த நரகத்துக்குப் போவாங்களாம். நம்ம சித்தப்பாவுக்கு அந்த நரகத்துக்குப் போக இஷ்டமில்லையாம். என்ன, புரிஞ்சுதா?"

வேலாயுதத்துக்கு ஒன்றும் புரியவில்லை. வாடிய முகத்துடன் வீட்டுக்குப் போனான். தாயார் இன்னும் அழுது கொண்டிருந்தாள். தகப்பனார் அவளை சமாதானப் படுத்திக் கொண்டிருந்தார். வேலாயுதத்தைக் கண்டதும் பேச்சை நிறுத்திக் கொண்டார்.

* * *

சரவண முதலியாரின் ஸ்வீகாரப் புத்திரன் வேலாயுதம், சென்னையிலுள்ள "சம்பத் பவன"த்தில்

வசிக்கலானான். வீடு பெரிய வீடு. பகலில், சூரிய வெளிச்சமும், இரவில், மின்சார வெளிச்சமும் வீட்டின் அழகை எடுத்துக் காட்டின. கடற்காற்று அடிக்காத வேளையில், மின்சார விசிறி வீசிற்று. சிறுவனின் உடல், சம்பத் பவனத்திலும் உள்ளம் பழைய சிறு வீட்டிலும் இருந்தன. பெற்றோரையும் உடன் பிறந்தவர்களையும் நினைத்து உருகினான்.

சரவண முதலியாரும் அன்னபூர்ணியம்மாளும், அவன் மேல் தங்கள் உயிரை உருக்கி வார்த்து வளர்த்தார்கள். தாங்களே அவனைப் பெற்றெடுத்தது போல் பாவித்தார்கள். சரவண முதலியார் தமது வக்கீல் நண்பர்களையெல்லாம் விருந்துக்கு அழைத்தார். விருந்தாளிகள் எல்லாம், உண்ட மயக்கத்தில், வேலாயுதத்தைப் பிரமாதமாகப் புகழ்ந்தார்கள். "சரவண முதலியாரின் பெருமைக்கு ஏற்ற பிள்ளை," என்று கொண்டாடினார்கள். "மணியான பையனைப் பார்த்து ஸ்வீகரித்துக் கொண்டீர்கள்," என்று மெச்சினார்கள். வேலாயுதமோ "புத்" என்ற நரகம் எப்படி இருக்குமென யோசித்துக் கொண்டிருந்தான்.

எத்தனையோ வருஷங்களாக, அன்னபூர்ணியம்மாள் "குழந்தை இல்லையே" என்று தவித்துக் கொண்டிருந்தாள். அந்தத் தவிப்பைத் தணித்துக் கொள்வதற்கு வாய்ப்புக் கிடைத்தது. வேலாயுதத்தைக் 'கண்ணே' என்றும் 'கரும்பே' என்றும் கொஞ்சினாள். பாடித் தாலாட்டாதது ஒன்றுதான் பாக்கி. பச்சைக் குழந்தையைச் சீராட்டுவதுபோல் அவனைச் சீராட்டினாள். ஒரு பெரிய பீரோ நிறைய, சின்னச் சின்ன சட்டைகளும் ஆடைகளும் வாங்கி வைத்து, அவற்றை வேலாயுதத்துக்குத் தானே அணிவிப்பாள். அவனை விதவிதமாகப் படம் பிடித்து அந்தப் படங்களைக் கண்படும் இடங்களி லெல்லாம் மாட்டி வைத்தாள். அவனுக்கென்று சின்ன மேஜைகளும், நாற்காலிகளும், சோபாக்களும், இலவம் பஞ்சு மெத்தைகளும் தயார் செய்தாள். இரண்டு பெட்டி நிறைய விளையாட்டு சாமான்கள். அவன் லேசாகத் தும்மினால் கூட, டாக்டரைக் கூப்பிட்டு, கசப்பு மருந்துகளை வாங்கிக் கனிவுடன் கொடுப்பாள். அவனுக்கு சாதம் ஊட்ட வேண்டும் என்று கூட ஆசைப்படுவாள்.

அன்னபூர்ணி அம்மாளை "அம்மா" என்றுதான் வேலாயுதம் கூப்பிடுவான். ஆனால் அந்தச் சொல்லிலே பாவமில்லை, இசையில்லை. "அப்பா" என்றுதான், சரவண முதலியாரை அழைத்தான். தொனியில் மரியாதை இருந்தது; ஆனால் அன்பில்லை. தன்னைப் பெற்றவர்களை "அம்மா! அப்பா!" என்று மனசார அழைக்க வேண்டுமெனத் துடித்தான்; தூக்கத்தில் புலம்பினான்.

ஒருநாள் மத்தியானம், பள்ளிக்கூடத்திலிருந்து காரில் வந்து கொண்டிருந்தபோது, தம்பியின் ஞாபகம் வந்தது. "அவன் இந்த வேளையில் பொள்ளும் வெயிலில் நடந்து செல்வானே" என்று நினைத்தான். தங்கையின் முகம், கண் முன்னே நின்றது. துக்கம் தொண்டையை அடைத்துக்கொண்டது. வீட்டுக்கு வந்ததும் 'ஓ' வென்று கதறி யழுதான். "அம்மா அப்பா" வென்று புலம்பினான். முதலியாரும் அம்மாளும் கதி கலங்கிப் போனார்கள். "உன்னை வாத்தியார் அடிச்சாரா?" என்று, அன்னபூரணி அம்மாள் விசாரித்தாள்.

" நிஜ அம்மாவையும் அப்பாவையும்பார்க்கணும்போல இருக்குது," என்று விசித்தான் அவன். நிஜ அம்மாவும் அப்பாவும் என்றதும், இருவரும் வருத்தப்பட்டார்கள். தனியாகப் போய் ஆலோசித்தார்கள். பிறகு, கொஞ்ச நாள் ஊருக்கு அனுப்பிவைப்பது என்று தீர்மானித்தார்கள்.

மறுநாள், வீட்டுக் குமஸ்தாவின் துணையுடன் வேலாயுதம் புறப்பட்டான். அவனை ரயில் வரை அன்னபூர்ணியம்மாள் கொண்டு போய் விட்டாள். ரயில் புறப்படு முன், அவன் கன்னத்தில் முத்தமிட்டாள். ரயில் புறப்பட்டதும், வேலாயுதம் கன்னத்தைக் கைக்குட்டையால் துடைத்துக்கொண்டான்.

சின்ன வீட்டில் பெரிய அமளி. வேலாயுதம் நாக்குத் தழும்பேறும் படி "அம்மா அப்பா" என்று கூப்பிட்டுத் தொண தொணவென்று பேசினுன். தங்கையின் கன்னங்கள் சிவந்து போயின. தம்பிக்குப் பட்டணத்தின் ஜோரை வாய் ஓயாமல் எடுத்துச் சொன்னுன்.

இரண்டு நாள் கழித்து, குமஸ்தா, திரும்ப அழைத்துக் கொண்டு போகவேண்டும் என்று சொன்னுன். வேலாயுதம் தகப்பனுரிடம் முறையிட்டான். "நான் இன்னம் இரண்டு நாள் இருந்துட்டுப் போறேம்பா" என்று மன்றுடினுன். தாயாரும்சிபார்சுசெய்தாள். "அண்ணன் போகவே கூடாது" என்று, தங்கை அழுதாள் அந்த சமயத்தில், சென்னையிலிருந்து தந்தி வந்தது. "வேலாயுதத்தைக் காணுமல் என் மனைவி தவிக்கிறுள். உடனே அவனை அனுப்பிவைக்கவும்," என்று, சரவண முதலியார் தந்தியடித்திருந்தார். என்ன செய்வது! வேலாயுதத்தை மல்லுக்கட்டி அனுப்பி வைக்க வேண்டி நேர்ந்தது.

அதன் பிறகு, விடுமுறைதோறும், வேலாயுதம் தன் பெற்றேர்களையும் அண்ணன் தம்பி தங்கையையும் பார்க்க வரலானுன். ஒவ்வொரு சமயமும், அவர்களுக்குப் பரிசுகள் வாங்கி வருவான். வேலாயுதத்தின் அண்ணன், படிப்பை நிறுத்திக் கொண்டான். படிக்கப் பணமில்லை. அதே காரணத்தினுல் தம்பியும் படிப்பை நிறுத்த வேண்டி ஏற்பட்டது. இதை அறிந்து வேலாயுதம் மிகவும் வருந்தினுன். தங்கைக்குக் கலியாணம் செய்ய வேண்டிய வயசு வந்தது. கலியாணம் நடத்தப் பணமில்லாமல் பெற்றேர்கள் தவித்தார்கள். சரவண முதலியார் பண உதவி செய்யக் கூடிய நிலைமையில் இருந்தார். ஆனுல் உதவி செய்ய மறுத்துவிட்டார்.

"என்னப்பா எனக்கு என்ன வேணுமானுலும் செலவு செய்கிறீக. அவுங்களுக்கும் என் கூடப் பிறந்தவங்களுக்கும் கொஞ்சம் உதவி செய்யக்கூடாதா?" என்று, வேலாயுதம் கேட்டான். "நீ தத்துப் பிள்ளை, என் சொத்துக்கு உரியவன். உன்னிடம் காட்டும் அன்பை அவங்களிடம் காட்ட முடியாது." என்று சரவண முதலியார் சொல்லிவிட்டார்.

அன்னபூரணி அம்மாள் சொன்னுள்: "என் கண்ணு வேலாயுதம்! நீ அவங்களை யெல்லாம் பத்தி நினைக்காதே. நீ வேறே; அவுங்க வேறே. அவுங்க கஷ்டத்தை யெல்லாம், நாம் தாங்கறது முடியற காரியமா?"

அன்று இரவு வேலாயுதம் தூங்கவே இல்லை. இரும்புப்பெட்டியைக் கள்ளத்தனமாகத் திறந்து, தங்கை கலியாணத்திற்குப் பணம் அனுப்பி வைக்கலாமா என்று நினைத்தான்.

"பணத்தை எடுத்து அனுப்பிவிட்டு, குற்றத்தை ஒப்புக் கொள்ளலாம்" என்கிற முடிவுக்கு வந்தான். சரவண முதலியார் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். சந்தடி செய்யாமல், அவர் தலையணைக்கு அடியிலிருந்து சாவிக்கொத்தை எடுத்தான். பக்பக் என்று மார்பு அடித்துக் கொண்டது. நடுங்கும் கைகளுடன், இரும்புப் பெட்டியைத் திறந்தான். ஆனால் என்ன ஏமாற்றம்! இரும்புப் பெட்டியில் ரொக்கப் பணமே காணவில்லை. எல்லாம் செக்குகளாயும், தஸ்தாவேஜுகளாயும் இருந்தன. பாங்கிப் புஸ்தகம் ஒன்று இருந்தது. அதைத் திருப்பிப் பார்த்தான். முதல் நாள் தேதியில் 1500 ரூபாய் வரவு வைத்திருந்தது. தன் அதிர்ஷ்டத்தையும், தங்கையின் அதிர்ஷ்டத்தையும் நொந்து கொண்டான்.

* * *

இப்போது, வேலாயுதத்தை வெறும் வேலாயுதம் என்று சொல்வதற்கில்லை. ம-ா-ா-ஸ்ரீ வேலாயுத முதலியார், பி. ஏ. பி. எல். என்றுதான் சொல்ல வேண்டும். பெரிய குடும்பஸ்தராகி விட்டார். குடும்பம் பெருகியதால் பணம் குறைந்து விடவில்லை. பணமும் பெருகியே இருக்கிறது. உடன் பிறந்தவர்களை அவர் அறவே மறந்து விட்டார். அவர்கள் யாரேனும் கடிதம் போட்டால், பதிலே போடுவதில்லை.

தங்கை மிகவும் கஷ்டப்படுகிறாள் என்று தெரியும். தெரிந்தும் தெரியாதது போல் இருக்கிறார். மனத்தில் பாசமில்லை. முன்பு ஒரு சமயம், திருடியாவது அவளுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நினைத்தது, மறந்து போயிற்று.

கிளப்பில் சீட்டாடும்போது, வேலாயுத முதலியார் வேதாந்தம் பேசுகிறார். "பாருங்க ஸார். ஒரு குடும்பத்திலே ஒரு பிள்ளை மாதிரி இன்னொரு பிள்ளை இல்லை ஸார். ஒரு பிள்ளைக்கு அதிர்ஷ்டம் அடிக்கிறது. நல்ல செயல்லே இருக்கான். மத்தவங்க அதிர்ஷ்டக் குறைவினாலே அவதிப்படறாங்க. அதுக்கு யார் என்ன செய்ய முடியும்! எல்லாம் அவனவன் விதி போல நடக்குது ஸார். நல்ல செயல்லே இருக்கிறவன், மத்தவங்களைப் பத்தி நினைக்க ஆரம்பிச்சா, அவனுக்கும் சுகம் இல்லாமெப் போவுது. என்ன நான் சொல்றது? தனக்குப் போகத்தான் தானம் என்கிற பழமொழி இருக்குதே, அடடா அதிலே எவ்வளவு உண்மை பொதிஞ்சுகிடக்குது தெரியுமா?" —இவ்வாறு வேலாயுத முதலியார் வாழ்க்கையைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறார்.

காலச் சக்கரம் சுழன்று செல்லும்போது, மக்களின் மனசும் வேகமாக மாறிக் கொண்டே வருகிறது. வெகுநாள் வைத்த ஆசையும், வெகுநாள் வைத்த பாசமும், மாறிப் போகின்றன.

எல்லாப் பொருள்களிலும் கடவுள் நிறைந்து நின்று அவற்றை இயக்குகின்றான்; அவனுக்குப் பெயரில்லை, வடிவில்லை; சொல்லுக்கும் கருத்துக்கும், காலத்துக்கும் வெளிக்கும் அப்பாலானவன் அவன். இந்தத் தத்துவம், **கடவுள்** என்ற சாதாரணச் சொல்லிலே பொதிந்திருக்கிறது. எல்லாப் பொருள்களையும் கடந்தவன், எல்லாப் பொருள்களுக்கும் உள்ளே இருப்பவன், கடவுள். —**பி. அருணசலம்.**

தில்லித் தமிழ்ச் சங்கம்

தலைவர் : டாக்டர் கே. எஸ். கிருஷ்ணன்

சுடர்

பொறுப்பாளர்கள்

நிர்வாக ஆசிரியர்

தி. கோ. அனந்தஸ்வாமி

இலக்கியப் பகுதி

சுந்தா

அ. வே. கிருஷ்ணமூர்த்தி

பிரசுரக் காரியதரிசிகள்

ஜி. எச். ஜி. ராமன்

கே. நாராயணஸ்வாமி

சங்கக் காரியதரிசிகள்

இணைப்பாளர்கள்

ரா. அரங்கராஜன்

ஓ. என். நாகரத்னம்

✲

இந்த மலரில் எழுதியுள்ளோரில் பெரும்பாலோர் வட இந்தியாவில் வசிப்பவர்கள். விபரம் :

புனு

ஸ்ரீமதி ஹா. கி. வாலம்

கல்கத்தா

ஸ்ரீமான் ந. சிங்காரம்
,, ப. ந. தியாகராஜன்
,, அரங்க ஸ்ரீனிவாசன்
,, மு. ஸ்ரீனிவாசன்
,, கோபால சுந்தரம்

பம்பாய்

ஸ்ரீமதி லக்ஷ்மி ராஜேந்திர சங்கர்
ஸ்ரீமான் ரெ. முருகையா
,, கே. எஸ். எஸ். ராகவன்
,, "பாரதியன்"
,, "வேணு"
,, "சந்திரிகா"

தில்லி

ஸ்ரீமதி பாக்கியம் சங்கர்
,, மதுரம் பூதலிங்கம்
,, ஜயலக்ஷ்மி
ஸ்ரீமான் ஓ. வி. அளகேசன்
,, "திருக்குறளார்"
,, டி. கே. ஜயராம அய்யர்
,, எஸ். ஸ்ரீனிவாசன்
,, க. சி. கமலையா
,, ரா. அரங்கராஜன்
,, "கிட்டு"
,, பூர்ணம் விச்வநாதன்
,, "ராணு"
,, ச. மகாதேவன்
,, ஜி. எச். ஜி. ராமன்
,, சுந்தா
,, அ. வே. கிருஷ்ணமூர்த்தி
,, தி. கோ. அனந்தஸ்வாமி

இந்த மலர்

வண்ணச் சுடரை ஏற்றுவோம்
வண்ணத் தமிழைப் போற்றுவோம்.

✲ ஆண்டுக்கு ஒரு மலரான எங்கள் சுடரின் இரண்டாவது மலர் இது. முதல் மலருக்குக் கிடைத்த ஆதரவினால் ஊக்கம் பெற்று, இந்த மலரை, அதைவிடப் பெரிதாகவும், பல புதிய அம்சங்களுடனும் வெளியிட முயன்றுள்ளோம்.

✲ தலைநகரில் நாங்கள் தமிழ்ப்பணி செய்து வருவதைப் பாராட்டி, உப ராஷ்ட்ரபதி வரைந்துள்ள செய்தி, இந்த மலரின் முகப்புக்குச் சிறப்பு அளிக்கிறது.

✲ மத்திய அரசாங்க அமைச்சர் ஸ்ரீ ஓ. வி. அளகேசன், அவருக்கு உள்ள பெரிய பொறுப்புக்களுக்கு இடையே, எங்கள் வேண்டுகோளை மதித்து, கட்டுரை ஒன்று உதவி இருக்கிறார்.

✲ ஆஸ்தான கவியின் வாழ்த்துப் பாடலை, மிக்க பெருமையுடன் வெளியிட்டிருக்கிறோம்.

✲ ஸ்ரீ பி. ஸ்ரீ. ஆசார்யாவின் கட்டுரை, அரியதொரு உதவியாய் அமைந்திருக்கிறது.

✲ ஸ்ரீ தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான், அவருக்கே தனிச் சிறப்பான உத்தியுடன், சிற்பக் கட்டுரை ஒன்று எழுதி இருக்கிறார்.

✲ இசைவல்லார் ஸ்ரீ டி. கே. ஜயராம அய்யர் பண்களின் இயல்புகளை விளக்கியிருக்கிறார்.

✲ விசேஷப் பகுதியான கவிக்கோவைக்கு, புகழ்மிக்க கவிகளும் இளங்கவிகளும் பாடல்கள் உதவி இருக்கிறார்கள். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, நோயுற்றிருக்கும் நிலையிலும், வெண்பா ஒன்றை இயற்றி, அதைத் தமது மருமகனைக் கொண்டு எழுதச் செய்து அனுப்பிவைத்தார். அவர் விரைவிலே குணமடைந்து, நீடுழி வாழவேண்டும் எனப் பிரார்த்திக்கிறோம்.

✲ **செந்தமிழ் நாடெனும் போதினிலே** என்ற தலைப்புக்கு, அழகும், பொருளும், உணர்ச்சியும் நிறைந்த வர்ணச் சித்திரம் ஒன்றை அளித்திருக்கிறார், கலைஞர் **"சந்திரா"**.

✲ பாரதியார், காந்தி மகாத்மா உருவப் படங்களின் மூலம், புகழ் சூடிய ஸ்ரீ "ஆர்யா" சுடர்க் கதைகள் சிலவற்றிற்கு வண்ணப் படங்கள் வரைந்து தந்திருக்கிறார்.

✲ ஸ்ரீ என். ஆர். ராமாநுஜமும், ஸ்ரீ ஏ. எஸ். சேஷனும், உப ராஷ்ட்ரபதியின் படத்தை, இந்த மலருக்கென பிரத்யேகமாக எடுத்துக் கொடுத்தார்கள்.

✲ இந்த மலரில் எழுதியுள்ளோரில் பெரும்பாலோர், வட இந்தியாவில் வசிப்பவர்கள். மற்றொரு பக்கத்தில் ஊர்வாரியான விபரம் காணலாம். வட இந்தியாவிலுள்ள தமிழ் ஸ்தாபனங்களுக்கும், எங்கள் சங்கத்துக்கும் இடையேயுள்ள கூட்டுறவுக்கு, இது ஒரு அத்தாட்சி.

✲ சுடருக்கு விளம்பரங்கள் சேகரிப்பது, விளம்பரம் செய்வது, விநியோகத்துக்கு ஏற்பாடு செய்வது—ஆகிய பொறுப்புக்களை, ஸ்ரீ ஜி. எச். ஜி. ராமனும், ஸ்ரீ கே. நாராயணஸ்வாமியும் திறம்பட வகித்தார்கள்.

✲ ஸ்ரீ சுந்தா, விஷய-திட்டம் வகுத்து, கவிக்கோவையையும், கதை கட்டுரைகளில் பெரும்பாலானவற்றையும் சேகரித்துக் கொடுத்தார். ஸ்ரீ அ. வே. கிருஷ்ணமூர்த்தி, அவருக்கு இணையாகவும், துணையாகவும் பணி ஆற்றினார்.

✲ சங்கக் காரியதரிசிகளான ஸ்ரீ ரா. அரங்கராஜனும், ஸ்ரீ ஓ. என். நாகரத்னமும், மற்றப் பொறுப்பாளர்களுடன் கூட்டுறவு கொண்டு, எல்லா வசதிகளும் செய்துகொடுத்தனர். ஸ்ரீ நாகரத்னம் விளம்பர சேகரிப்பிலும், கட்டுரை சேகரிப்பிலும், விற்பனையிலும் அக்கறைகொண்டு உதவி செய்தார். நூல் நிலையப் பொறுப்பாளர், ஸ்ரீ ம. பால சுப்பிரமணியன் விற்பனைத்துறையில் உதவி செய்கிறார்.

✲ ஜூபிடர் அச்சகத்தார், எழுத்து மூலமே எங்கள் விருப்பங்களையெல்லாம் அறிந்து, வெகு நேர்த்தியாக, மலரை அச்சடித்துக் கொடுத்திருக்கிறார்கள்.

✲ சுடருக்கு உதவியுள்ள பெரியோர்கள், அறிஞர்கள், கவிகள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், சேவையாளர்கள் அனைவருக்கும் என் சார்பிலும், சங்கத்தின் சார்பிலும் நன்றி செலுத்துகிறேன்.

தி. கோ. அனந்தஸ்வாமி.

FOR YOUR

CLOTHING REQUIREMENTS

(DHOTIES, SAREES, VOILES, COATING & SHIRTING)

★

REMEMBER :

The West End Rehabilitation Co-operative Stores Ltd.

101, Baird Lane Market

NEW DELHI.

Phone . 45614.

Sundram Serves on Two Fronts !

To Ensure Domestic Felicity, Deal with the **Madras Stores, 96, Baird Road, New Delhi** for Grocery, Cloth, Oilman Stores, Cosmetics, Vessels, Journals and all

- South Indian Specialities -

When out of the House, Visit

THE EMPEE'S RESTAURANT — North Avenue

or

THE BROADCASTING HOUSE (A. I. R.) Canteens

To please your palate and keep your cheer.

N. SUNDRAM.

N. SUBRAMANIAM

MADRAS TIFFIN ROOM

Block No. 7. :: Supply Office.

கலியாண உபநயன விருந்துகள், டீ பார்டிகள்,
பிறந்ததினக் கொண்டாட்டங்கள், வன போஜனங்கள்
உங்கள் ஆர்டர்படி, மிகக் குறைந்த சார்ஜில், சிறந்த முறையில்,
கைதேர்ந்த வேலைக்காரர்களால் செய்து கொடுக்கப்படும்.
எடுப்புச் சாப்பாடும் வீட்டில் கொண்டுவந்து கொடுக்கப்படும்.

Life Insurance

Without Medical Examination

AND

Policies issued on Both Male and Female Lives

Upto Rs. 1,000

Bonus Declared Rs. 9 per Thousand Sum Assured per annum

★

Enquiries may be addressed to

The Secretary,

The United India Provident Assurance Co., Ltd.

"UNITED INDIA LIFE BUILDING"

Esplanade, MADRAS

OR

To

The Chief Agent,

The United India Provident Assurance Co., Ltd.

7-A/45, DASMESH NIVAS,

W. E. Area, Karolbagh, NEW DELHI

LOOK FOR CLOTH TO LAST LONG & CHOOSE YOUR TAILOR TO ENHANCE YOUR LOOK......

PERFECT FITTING, PROMPT SERVICE
AT MODERATE CHARGES

Under the Patronage of

MADRASI STORES, Ajmal Khan Road,
(PROP. N. VAIDYANATHA IYER)

NUTAN TAILORS

5/30, W. E. A. KAROL BAGH DELHI-5

WHEREVER YOU ARE

WE ARE ALWAYS AT YOUR SERVICE

ARNI SILK HOUSE

MYLAPORE, MADRAS

Head Office : **ARNI** *Branch :* **CONJEEVARAM**

Seasonal Branches at :

NEW DELHI, KANPUR, CALCUTTA
and BOMBAY

For

Light Luncheons, Heavy Dinners, Tea and Garden Parties and Picnics

In & Around Delhi

Call upon

S. S. MANI, Catering Specialist,
Block 4, Shajahan Road Buildings,
NEW DELHI

13818

CP/367

கவலையற்ற ஓய்வு நாட்களுக்கு

நீங்களும் வரப்போகும் ஓய்வு நாட்களைப்பற்றி சிந்திக்க வேண்டியதுதான். உங்கள் ஓய்வு நாள் எவ்வாறிருக்க வேண்டும்! மனநிம்மதியுடன், குழந்தைகளின் வாழ்க்கையை திட்டமிட்டு நிர்வகிக்க, உற்சாகத்துடன் உல்லாசப் பிரயாணம் செய்ய வசதிகள், மாதாந்திர சம்பளத்தை எதிர்பார்த்திராமல் மனதிற்குகந்த பணியில் ஈடுபட சுதந்திரம் இவை நிறைந்த ஓய்வுதான் யாவரும் விரும்புவது.

உங்கள் சம்பாத்தியத்தில் இதுவரை சேமித்தது எவ்வளவு? உங்கள் ஓய்வு நாட்களுக்காகவும், எதிர்பாராத சிக்கல்களை சமாளிக்கவும் தக்க சேமிப்புக்கு வழி செய்து விட்டீர்களா?

கவலைகளை களைத்தெரிந்து உங்கள் ஓய்வு நாட்களை லக்ஷ்யத்திற்கொப்ப உருவாக்க சிறந்த திட்டங்களுக்கு இன்றே பிருத்வி ஏஜண்டைக் கலந்தாலோசியுங்கள். பிருத்வி பரிபூரண பாதுகாப்பு அளிக்கிறது.

எல்லாவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்களுக்கும்

பிருத்வி இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

“பிருத்வி பில்டிங்ஸ்”, மதராஸ்—1

ஒவ்வொரு ஊரிலும் பிருத்வி ஏஜெண்ட் உள்ளார்

TELEPHONE: 24254
GRAM: SUNFLOWER, DELHI

A Reputed House

For

★ **PRINTING MACHINERY**

OFFSETS, WHARFEDALES, TREADLES & ALLIED MATERIAL

★ **PAPER**

WRITING, PRINTING, ETC.

J. Mahabeer & Co. Ltd.

JAMA MASJID, DELHI.

A VISIT SOLICITED SATISFACTION ASSURED

THE

ASIATIC GOVERNMENT SECURITY LIFE & GENERAL ASSURANCE CO., LTD.

(ESTD. 1913)

Head Office: **BANGALORE**

Paid-up Capital:	-	**Rs. 5 Lakhs**
Total Assets Exceed:	-	**Rs. 70 Lakhs**

Central Office:
"PRITHVI BUILDINGS"
364-66, NETAJI ROAD, MADRAS-1

Divisional Office:
8, AGARWAL BUILDINGS, CANNAUGHT PLACE, NEW DELHI

SHOW ROOMS:—

Phone: 23144
FATEHPURI,
DELHI-6

Phone: 40623
F. Block, Connaught Place,
NEW DELHI

- The South Madras Electric Supply Corporation Ltd., Tiruchi.
- The Mettur Chemical & Industrial Corporation Ltd., Mettur Dam, R.S.
- The Fertilisers & Chemicals (Travancore) Ltd., Alwaye.
- The Aluminium Industries Ltd., Kundara.
- The Travancore-Cochin Chemicals Ltd., Eloor-Alwaye.

DELHI OFFICE:

SESHASAYEE BROS. LTD.

SESHASAYEE BROS. (Travancore) LTD.

Tropical Insurance Buildings, H. Block

Connaught Circus, Post Box No. 89

NEW DELHI

Telegrams: KAMADHENU **Telephone: 40622**



THE NEW GUARDIAN OF INDIA
LIFE INSURANCE CO. LTD.

Head Office: MADRAS

(Estd. 1934)

(*Chairman:* Sri M. Ct. Muthiah)

★

SOME SALIENT FEATURES ABOUT THE COMPANY:

BUSINESS IN FORCE	**Exceeds Rs. 3 Crores**
LIFE ASSURANCE FUND	**,, Rs. 64 Lakhs**
TOTAL ASSETS	**Exceed Rs. 70 Lakhs**

Liberal Policy conditions, decent Bonus to Policyholders and prompt payment of claims are among the characteristic features of the Company's working.

A Policy in this sound Life Office is an excellent asset; its Agency is a valuable business connection.

Representative in New Delhi:
R. G. PARTHASARATHY,
Development Officer,
7-A/45, W. E. Area, Karolbagh,
New Delhi

Head Office:
"United India Life Bldg."
ESPLANADE
MADRAS

Visiting Delhi?

Then

Remember us for

Excellent Boarding and Lodging

In South Indian Style

THE SOUTH INDIAN BOARDING HOUSE

And for

European Style Refreshments, Dinners etc.

THE SUNNY COFFEE HOUSE

(Opp. Telephone Exchange)

CONNAUGHT CIRCUS, **NEW DELHI**

Tel. No. 7328 **Grams : SIBHouse**

For skin comforts—

COOLENE

POWDER

For

Prickly Heat, Sun Burn,
Bruises, Scars, Pimples,
Rashes, etc.

★ *A boon to humanity—*

KAKUL

Grows hair
and
removes baldness-
in certain cases
works instantaneously.

Write direct or ask your chemists

UNITED PHARMACY

GURUDWARA ROAD, DELHI-5

13818

For extra nourishment—Always insist on

" CHAMPION "

PRODUCTS

Corn Flakes - Ready to serve

White Oats - Quick Cooking

Pearl Barley - Best for Kitchen & Drinks

These products are manufactured in an up-to-date plant under ideal Hygienic conditions and expert supervision. Our Corn and Oat Flakes are made from best selected grains and are rich in Vitamins, Minerals, Proteins. Our Pearl Barley is ideally suited for use in the Kitchen as well as for refreshing drinks. These products are being made in India and therefore fresher & better than others.

Manufactured by:

THE HINDUSTAN

Breakfast Food Manufacturing Factory

NAJAFGARH ROAD—DELHI.

யாரோ ஒருவர்

பிரிட்டானியா

பிஸ்கோத்தை

சாப்பிடுகிறார்கள்

13818

சிறந்த பிஸ்கோத்து

பிரிட்டானியா

FBMI
FEDERATION OF BISCUIT MANUFACTURERS OF INDIA

.3598
MAHAMAHOPADHYAYA DR. U.V. SWAMINATHA IYER LIBRARY

Edited and Published by T. G. Anantaswami, for The Delhi Tamil Sangam, MC 1/3038, Parliament Street, New Delhi.
Printed by K. S. S. Rajan at The Jupiter Press Ltd.
16, Sembudoss Street, Madras 1.—Apr. 53.

The Ink With a Reputation

A famous National Product with international reputation. Manufactured according to highest quality specifications. Once tried always used.

THE PILOT PEN CO. (INDIA) LTD.,

RED HILLS . . . . . MADRAS.

office: CATHOLIC CENTRE, ARMENIAN ST.,
MADRAS-1.

தில்லித் தமிழ்ச் சங்கம்

★ தலைநகரில் வசிக்கும் தமிழ் அன்பர்களை ஒன்று கூட்டி, உரைகள், நிகழ்ச்சிகள் மூலம் முத்தமிழ்க் கலைகளை அனுபவிக்கச் செய்கிறது.

★ தமிழ் இலக்கியத்தின் சிறப்பை, பிறமொழியினருக்கு அறிவிக்கிறது.

★ தமிழ்க் கவிஞர்களையும், பெரியோர்களையும் விழாக்கள் மூலம் போற்றுகிறது.

★ பொங்கல், வருஷப் பிறப்பு போன்ற தமிழ் விழாக்களைக் கொண்டாடுகிறது.

★ ஸ்ரீ. சத்தியமூர்த்தி நூல் நிலையம், இலவச வாசக சாலை, இலவச ஹிந்தி வகுப்பு ஆகியவற்றை நடத்துகிறது.

★ ஸ்ரீ. வ. வெ. சு. அய்யர் ஆங்கிலத்தில் எழுதிய **'கம்பராமாயணம்—ஓர் ஆராய்ச்சி'** என்ற நூலை வெளியிட்டிருக்கிறது.

★ ஆண்டு தோறும், **'சுடர்'** மலரை வெளியிடுகிறது.